
கல்கி
புஷ்பா தங்கதுரை
எழுதும்
கடலுக்குள் ஜூலி
அடுத்த இதழில்
ஆரம்பம்
KALKI 30-12-79

தமிழ்நேசன் மின்நூலகம்
www.tamilnesan1981.blogspot.in


புஷ்பா தங்கதுரை
எழுதும்
கடலுக்குள் ஜூலி
புதிய தொடர்கதை
கல்கி 6.1.80 இதழில் ஆரம்பம்


JONAS FRIENDS CIRCULATION MADRAS-600044

புஷ்பா தங்கதுரை

[நகரங்கள், பிரதேசங்களின் பெயர்களை ஒரு Authenticity க்காக கதையோடு கலந்திருக்கிறேன். மற்றபடி கதையின் சம்பவங்களும், பெயர்களும் கற்பனையே எங்காவது ஒத்திருந்தால் அது எதேச்சையாக நிகழ்ந்ததே. கற்பனைக் கதை என்றாலும் அது நடக்கக் கூடிய சாத்தியங்கள் நிச்சயம் உண்டு.

—புஷ்பா தங்கதுரை]

....மாபார் (இந்த இடத்தில் தமிழ் நாட்டைக் குறிக்கிறது) முழுதிலும் தேர்ந்த தையற்காரரோ, உடை தயாரிப்பாளரோ கிடையாது. ஏனெனில் ஜனங்கள் வருஷம் பூராவும் வெற்றுடம்பாக இருக்கிறார்கள். காரணம், இங்கே பருவம் குளிரும் உஷ்ணமும் இல்லாமல் மிதமாக இருக்கிறது. அதனால் ஜனங்கள் தங்கள் மர்மஸ்தானம் நீங்கலாக (அங்கே சின்னத் துணிகளை அணிகிறார்கள்) வெற்றுடம்பாகவே இருக்கிறார்கள்.

—மார்கோ போலோ

[கி.பி. 1290ல் தமிழ் நாட்டில் பிரயாணம் செய்தவர்.]

# கடலுக்குள் ஊசி

# 1

அந்தப் பத்திரிகைத் துணுக் தேர்தல் கூப்பாடு களுக்கு நடுவில் இடுங்கி இருந்தது:

இராமநாதபுரம், செப். 8



கனிநாகலாபுரம் கிராமத்தில் மண் அரிப்பு ஏற்பட்ட தில் மூன்று எலும்புக் கூடுகளும், ஒரு உலோகக் குழாயும், உலோக பாட்ஜும் கண்டு பிடிக்கப்பட்டன. பாட்ஜில் எச்.எம்.எஸ்.ஜே. என்று எழுத்துக்கள் காணப்பட்டன.'

சாதாரண ஸ்பாட் விளம்பரங்களைப் போல் ஓடிவிட வேண்டிய துணுக்.

ஆனால் மல்லிக்கின் மனத்தில் கிரிச்சா வட்டம் அடித்தது.

என்ன காரணம்?

புரியவில்லை.

எலும்புக் கூடுகள் காரணமா?

இல்லை.

உலோகக் குழாய்?

இல்லை.

பாட்ஜ்?

டிட்டோ.

எழுத்துக்கள்....அந்த எச்.எம்.எஸ்.ஜே. அதுதான் நெஞ்சில் மணல் போல் கரகர.

இந்த எழுத்துக்களை எங்கே சந்தித்தோம்? எப்போது சந்தித்தோம்?

மூளையைக் கழற்றி ஆராய்ந்தான். விடை இல்லை.

எங்கேயோ எப்பவோ பார்த்ததாகத் தான் நினைப்பு! அது மேலேயும் வராமல் உள்ளேயும் போகாமல் சங்கடப்படுத்த,

அந்த எழுத்துக்களை ஓங்கி உச்சரித்தான். எச்.எம்.எஸ்.ஜே.

ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்..... இல்லை.

ஹெட் மாஸ்டர்..... இல்லை.

ஹிஸ் மெஜஸ்டி..... இல்....லய்!

ஹிஸ் மெஜஸ்டி'ஸ் ஷிப்!

வானத்தில் விழித்துக் கொண்டு, ஒரு வெள்ளிக் கிரணம் ஓடி வர,

மனம் எல்லாம் வெளிச்சம்.

ஜேம்ஸ் டில்லான் வொய்ட் ஞாபகத்துக்கு வந்தார். சென்னையில் கன்னிமாராவில் தங்கினர். அவனை அழைத்துப் பேசினர். (டூரிஸ்ட் கைட் வழியப் பிடித்திருந்தார்.)— மிஸ்டர், மல்லிக்! துலாஜீ ஆங்க்ரியா தெரியுமா?

—கப்பல் கொள்ளைக்காரன்!

—யு ஆர் ரைட்! கெல்ஸோ ஸீரீஸ் தெரியுமா?

—தெரியும்! நாவல்கள்! ஹச்சின்ஸன், லண்டன் பதிப்பு.

இங்கிலிஷ்காரர் சகல உடம்போடும் சுருட்டி எழுந்தார். புன்னகை தாங்க முடியவில்லை. முகத்திற்கு வெளியே ஒரு இஞ்ச் பீச்சியது. கால்களை அகல வைத்து அருகே வந்து பூதமான கைகளால் அழுத்திக் குலுக்கினர்.





—இந்தியர்கள் பெரிய அறிவாளிகள்! என்று குறிப்பிட்டு அவனோடு ஏக ஆசனத்தில் சமமாக உட்கார்ந்தார்.

[கெல்ஸோ ஸீரீஸ் அவர் எழுதிய நாவல்கள். (லண்டனில் ஹச்சின்ஸன் நிறுவனம் பதிப்பித்தவை).]

அவரது சமீபத்திய முயற்சிகளைக் கூட ஆறாயிரம் மைல்களுக்கு அப்பால் உள்ள அந்த ஏழை இந்தியன் தெரிந்து வைத்திருக்கிறானே!

—குடிப்பீர்களா (வொய்ட்)

—மாட்டேன்.

—ஸாஃப்ட்?

—ஆகட்டும்.

அதிகபட்சமாக ஒரு கோலாதான் உச்ச வரம்பு.

சாயலும் பெயரும் பழைய கோகா கோலா நினைவுப்படுத்த,

இந்தியர்களின் கெட்டிக்காரத்தன ஏமாற்றுத் திரவத்தை இருவரும் குடித்தார்கள்.

இங்கிலீஷ்காரரோ வேண்டாததைக் குடித்து விட்டவர் போல் கீழே வைத்தார். பிழைத்துக் கொள்ளத் தெரியும்.—வொண்டர்ஃபுல் ட்ரிங்க் என்றார், கூசாமல்.

தொடர்ந்தார். — சரித்திர ஆராய்ச்சி நடத்தறேன். ஈஸ்ட் இந்தியா கம்பெனி பற்றி. நாவல் எழுதத் திட்டம். வார்னர் பிரதர்ஸ் கூட ஸ்வாரஸ்யம் காட்டறாங்க. சார்லஸ் ப்ரான்சனையும், டலியா ஷைரையும் போட்டு, ராகெல் வெல்ஷை உங்க ராணியாக்கி...

வெல்ஷ் புடவை கட்டிக் கொண்டு ஆங்கிலத்தனமாக உட்கார்ந்து அவனுக்குக் காட்சி கொடுத்தாள்.

—உங்க சரித்திரம் தெரியணும்; உங்க கப்பல் பத்தி தெரியணும்; உங்க பழக்க வழக்கங்க!.... ஷூட்டிங் நடந்தா மலபார் கோஸ்ட்லே நடக்கணும். அங்கே அந்த தீயாஸ்..... தென்னிந்திய ஜாதிகளும் இனங்களும், எட்கார் த்ரஸ்டன் எழுதியது, படிச்சேன். தீயாஸ் இடுப்புக்கு மேலே துணி போடறதில்லே. பெண்களைச் சொல்றேன். நைன்டீன் டென்ஸ்லே எடுத்த போட்டோ பார்த்தேன். ஒவ்வொன்னும் எவ்வளவு பெரி....

ஹ ஹ ஹா என்று சுருதியோடு சிரித்தார். கையில் கோலா கிளுகிளுத்தது.

அவன் மனத் திரையில் அவரது படம் வழியாக இந்தியா மகோன்னத உயரங்களுக்கு வளர்ந்து கொண்டிருந்தது.

—தீயாக்கள் இப்போ அப்படியில்லை. (மல்லிக்)

—நம்ப கதை அப்போதானே (பழைய காலத்திலே) நடந்தது.

—ஈஸ்ட் இந்தியா கம்பெனிங்க நீங்க! கிழக்குக் கடற்கரையில் தானே கதை நடக்கணும் இங்கே எப்படி தீயாக்கள் வருவாங்க? அது மேற்கு....

—மிஸ்டர் மல்லிக்! (சிரிப்புக்குள் கொஞ்சம் சொருகிறார்) இங்கே கூட அப்போ நிறைய பேருக்கு ப்ளவுஸ் கிடையாது. உங்களைப் பத்தி எல்லாம் படிச்சிருக்கேன். மார்கோ போலோவே எழுதியிருக்கார்....

—தெரியும்! Divisament Dou Monde

—வெரி குட்! புத்தகப் பெயரைக் கூடத் தெரிஞ்சு வச்சுருக்கீங்க! நான் எதுக்கு தீயா வேணும்கிறேன்னு அந்த. .. (சிரிப்பில் டைவ் அடித்தார்)..... மேற்கத்திப் பெண்ணுங்க பொருமைப்படுவாங்க! படத்துக்குக் கவர்ச்சி!

ஒரு ஆயிரம் ரூபாய்க்கு அவருடன் மாமல்லபுரம், தரங்கம்பாடி, வந்தவாசி, சேர்வராய மலை எல்லாம் ஒரு சுற்றுச் சுற்றி....

(இரண்டே நாளில் முடித்து விட்டார்)

.....பிறகு மதராஸ் ஆர்கைவ்ஸில் ஒரு மாசம் டேரா.

அவரது ஆர்க்கைவ்ஸ் ஆராய்ச்சிகள் சர சரவென்று மாண்டேஜ்களாக அவன் நினைவுக்கு வந்தன.



"ஆசிரியர் சரியாய்ச் சொல்லிக் கொடுக்காததனால்தான் பெயில் ஆயிட்டேன்."

"சந்தேகங்களை ஆசிரியரிடம் கேட்பதுதானே?"

"கேட்டேன். பரீட்சை ஹாலில் பேசக் கூடாது என்று சொல்லிவிட்டார்."

மு. செல்வபாண்டியன்

கிழக்கத்திய கம்பெனி ரிக்கார்ட்ஸ்களை வொர்ய்ட் கேட்டது,

கவர்னர்களின் டயரிகளைப் பார்த்தது,

கப்பல்களைப் பற்றித் துருவிப் படித்தது,

டச்சு-பிரெஞ்சு காப்டன்களின் குறிப்புக்களைக் கேட்டது,

சென்னை கௌன்ஸில்-மேயர் நடவடிக்கைகளைப் பூரா வாசித்தது.....

அவரது அசுரத்தன நடவடிக்கை படிப்பு, குறிப்பு, எல்லாம் அவனை அப்போது அயர வைத்தன.

சென்னை முடிந்த பிறகு, பாண்டிச்சேரி. பிப்லியோதெக்கில் இரண்டு வாரம்.

அதுவும் முடிந்து போகும்போதுதான்...

மீனம்பாக்கத்தில் அவர் விடைபெற,

போயிங் போன கையோடு அவன் உள்ளே வர,

லௌஞ்சில் அவர்கள் உட்கார்ந்திருந்த இடத்தில் கறும்பச்சை டயரி ஒன்று கிடக்க..

லண்டன் போன பிறகு அந்த டயரியைப் பற்றி அவசரமாக அவர் கேட்டிருந்தார்.

தபாலில் உடனே அனுப்பி வைத்தான்!

இப்போது...

அந்த டயரி ஞாபகம் வந்தது.

அதில் வொய்ட் என்ன எழுதியிருந்தார்? பிரதானமாக தினசரிக் கணக்குகள், மிகச் சிறிய குறிப்பு வார்த்தைகள், உதிரிகளான பெயர்கள்!

அந்தப் பெயர்களில் ஒன்றில் அழுத்தமான அடிக்கோடு போட்டுப் பேனவை உழுதிருந்தார். (ஜன. 18ந் தேதியில்)

அந்தப் பெயர் சொடீர் என்று நினைவுக்கு வந்தது.. அடேடே!

ஹிஸ் மாஜெஸ்டீ'ஸ் ஷிப் ஜூலி காலண்ட்!

எச்.எம்.எஸ். ஜூலி காலண்ட்!

எச்.எம்.எஸ்.ஜே....

**—கொ**ஞ்சமாவது மூளையிருக்காடா?... கேட்டவன் கோபி.

கையில்லாத பனியன் பூண்டு, பருமனான முடிப்புக்களுடன் வேட்டி கட்டியிருந்தான்.

தலை இரு முன் பக்கமும் ஒரு சீக்கிர வழுக்கை. அதற்கான காரணங்கள் நாலும் ஒரு வருஷ இடைவெளி விட்ட வயதுகளுடன் உள்ளே துவம்சம் செய்து கொண்டிருந்தன.

....போன தடவை தங்கக் காசு தேடறேன்னு சேலம் போனே! போலீஸ் கிட்டே சண்டை போட்டதுதான் மிச்சம். உனக்கு ஏண்டா இந்தச் சொத்து வேட்டை? இருக்கிறதை வச்சிக்கிட்டு....

மல்லிக் பேப்பர்களுக்கு ஏஜென்ஸி எடுத்து அந்தப் பேட்டை முழுவதும் வினியோகம் செய்து கொண்டிருந்தான்.

கண்ணை மூடிக்கொண்டு வரும் வருவாய்!

இருந்தும் ஒவ்வொரு முறை திடீரென்று இந்த கு. யோசனை தோணும்போதும் வெளியூர் போவான். அந்த 'விசேஷ அலுவலு'க்காகப் போகும்போது கோபியிடம் சொல்லி விட்டுப் போவான்.

இந்தத் தடவை கனிநாகலாபுரம் போகலாம் என்று நினைத்தபோது... டோஸ் கிடைக்கிறது.

—எனக்கு ஒரு பெரிய துப்பு கிடைச்சிருக்கு, கோபி!

—போன தடவையும் அப்படித்தான் சொன்னே! ஆயிரம் நஷ்டமாச்சு!

—இப்போ அதிகம் செலவழியாது. கிடைச்சா பெரிய அதிர்ஷ்டம்.

—என்ன கிடைக்கும் சொல்லு!

—மூர்சை போட மாட்டியே!

—இந்த ஜன்மத்திலே இல்லே, சொல்லு!

—1090 தங்கப் பாளம்!

1200 வெள்ளிப் பாளம்,

1,70,000 ஸாவரின்கள். மொத்தம் என்னாச்சு?

—நீதான் சொல்லணும்.

—எல்லாம் சேர்த்தா 45 டன்!

அப்பவே பத்து லட்சம் பவுன் மதிப்பு. ஒரு சுமாரா சொல்றேன்! பவுன் விக்கிற விலை வச்சுப் பார்த்தா குறைந்த பட்சமானாலும் நூறு கோடி கிடைக்கும். ஒண்ணு போட்டு என்பது ஸைபர் போட்டுக்கோ.

கோபி வாய் திறந்தபடி. இரண்டு ஈக்கள் போனது போனபடி.

—என்னா வாயைப் பிளந்துட்டே?

—வேறே என்னடா செய்ய முடியும்? உம் புத்தியை நினைச்சுத்தான். ஆமா, ஏதாச்சியும் சொப்பனம் கண்டியா?

Next week

filmotsav'80

'CHALAN' Reports from BANGALORE

—நிஜம். நூறு சதவீதம்.

—இதெல்லாம் எங்கேடா இருக்கு? பூமிக்கு அடீலயா?

—இல்லே, கடலுக்கு அடியிலே!

—லாரியை எடுத்துட்டுப் போய்த் தூக்கிட்டு வர்றதுதானே?

வயிற்றுக்குக் கீழ் அவன் ஒரு சாண் அளக்கப் போக.....

மல்லிக் இடைமறித்தான்.

—இதப் பார்ரா! போட்டோஸ்டட்.

ஒரு பழைய பழுப்பேறிய காகிதத்தின் போட்டோ காப்பி அது. கிழக்கிந்தியக் கம்பெனி டைரக்டர்கள் இரகசியமாக சென்னைக் கவர்னருக்கு எழுதிய கடிதம். 1840 அக்டோபர் 12ந் தேதி இட்டது. எச்.எம். எஸ். ஜூலி காலண்ட் வருகிறதாகத் தெரிவித்து அதில் ஏற்றியிருக்கும் சரக்குகளின் ஜாபிதா கொடுத்திருந்தார்கள்.

கொட்டக் கொட்டப் பார்த்தான்.

நிச்சயமாக, மல்லிக் சொன்னபடியேதான் சரக்குகள்!

—கப்பல் புறப்பட்டு 130 வருஷம் ஆயிருந்துடா! இன்னுமா இந்தியா வந்து சேரல்லே?

—கிட்டத் தட்ட வந்துடுத்து.

—அப்புறம்?

—காணாமல் போயிடுத்து.

—யார் சொன்னா?

—கடிதங்கள் சொல்லுது. கவர்னர் எழுதியிருக்கார். கப்பல் வந்து சேரலேன்னு.

—எங்கே போச்சு?

—கடல் கொள்ளைக்காரங்க கொள்ளையடிச்சு மூழ்கடிச்சுட்டாங்கன்னு எல்லாரும் நம்பியிருக்கா. காப்டன் பால்மர்ஸன் கப்பலோடு தென் அமெரிக்கா ஓடிட்டான்னு சிலபேர் நம்பினாங்க. புயல்லே மாட்டி கப்பல் மடகாஸ்கர் பக்கம் மூழ்கிடுச்சுன்னு சிலபேர் சொன்னாங்க.

—இதெல்லாம் உனக்கு எப்படித் தெரியும்?

—ஆவணக் காப்பகம் போனேனே!

—ஆவணா?

—ஆர்க்கைவ்ஸ்! கவர்ன்மெண்ட் பழைய ரிக்கார்டுகள் எல்லாம் சேர்த்து வைக்கிற இடம். முந்நூறு வருஷ ரிக்கார்டெல்லாம் இருக்கு.

—உனக்கு அங்கேயிருந்துதான் இன்ஸ்பிரேஷனா? ஏண்டா, பைத்தியம் ஏதாவது பிடிச்சுடுத்தா?

—கோபி! இதிலே மட்டும் என் இஷ்டப்படி விட்டுடு. இதுலே நா இறங்கித்தான் ஆகணும். கொஞ்சம் பிஸினஸ்ஸைச் கவனிச்சுக்கோ.

இளம் காலையில் ஒன்பது ஒன்பதரைக்குக் குதிரை வண்டி கனிநாகலாபுரத்தில் அவனை இறக்கி வைத்தது. கையில் ப்ரீஃப் கேசுடன் அம்போ என்று நிற்க, குதிரை வெகு ஜோராகத் திரும்பி யார்ரா என்று ஒரு பார்வை அவனைப் பார்த்தது.

—அதோ பாரு, ஸார் ஊரு!

வண்டிக்காரன் சாட்டையை நீட்டினான். நீட்டின இடமெல்லாம் மணல் வெளி. எலும்பு வெளுப்பு! மெஷினில் அரைத்தது போல் ஒருபோல மணல்; பர்லாங்குகளுக்கு அப்பால் கொஞ்சம் பயிர் பச்சை போல் தெரிய, உத்தேசமாக அதுதான் ஊர் என்று தோன்றியது.

மாக்கு மாக்கு என்று நடந்தான்.

மண்ணில் இட்ட அடி புதைய, எடுத்த அடி வரமாட்டேன் என்றது.

காற்றில் உப்பு வாடை.

குச்சு நாய் ஒன்று சந்தேகத்தோடு பார்த்தது.

நெருங்கினால் கூரைகள் துலங்க ஒரு சின்ன ஊர் உற்பத்தியாகியது.

பழசாகித் துருப்பிடித்தது.

1800க்குள் வந்தது போன்ற நினைவு.

தெருவுக்குள் நுழைந்தான்

பாழ் எங்கே, வாழ்வது எங்கே தெரியவில்லே. பாகுபடுத்த முடியாத குடியிருப்புகள்! மருந்துக்கு ஆள் தென்படவில்லே.

முதல் வீட்டு வாசலில் கோலம் போட்டிருந்தது. நின்று உள்ளே பார்த்தான். கர்ப்பக்கிருக இருட்டு. கூப்பிடலாமா யோசனை. ஒரு நொடி பார்வை கீழே!

என்ன அழகான கோலம்!

சப்பரக் கோலம்!

சப்பரம் முழுதும் நெளி நெளியாய்ப் பின்னலிட்ட வரிகள்! துளி பிசகில்லே. துளி சாய்வில்லே. துளி கோணலில்லே.

நிமிர்ந்தான்.

அங்கு ஒரு கோலம்!

தூணைப்பிடித்துக்கொண்டு, நெளிவாகச் சாய்ந்து ஒரு புன்னகை பூகக விட்டிருந்தது அந்தக் கோலம்.

துளி மரு இல்லே. துளி மாசு இல்லே. பார்வையில் கிராமீயம் இழைய, தாவணி தழைய, அவள் நெஞ்சம் இரண்டும் இரு கொஞ்சல்கள்!

—வாங்க!

(தொடரும்)

# கடலுக்குள் ஜூலி



## புஷ்பா தங்கதுரை

### முன் கதை

கனி நாகலாபுரம் கிராமத்தில் மண் அரிப்பு ஏற்பட்டதில் மூன்று எலும்புக் கூடுகளும், ஓர் உலோகக் குழாயும், உலோக பாட்ஜும் கண்டு பிடிக்கப்பட்டன. பாட்ஜில் எச். எம். எஸ். ஜே. என்ற எழுத்துக்கள் மல்லிக்கின் மனத்தில் கிரிச்சா வட்டம் அடிக்கிறது. அவனுக்கு 'ஹிஸ் மெஜஸ்டிஸ் ஷிப்' நினைவு வந்தது, அதோடு கன்னிமரா ஹோட்டலில் சரித்திர ஆராய்ச்சியாளர் ஜேம்ஸ் டில்லான் வொய்ட்டைப் போய்ச் சந்தித்ததும் ஞாபகம் வந்தது. ஜேம்ஸ் டில்லான் வொய்ட்டின் டயரியில் இருந்த எச். எம். எஸ். ஜூலி காலண்ட் என்ற பெயர் அவன் மனத்தை உறுத்திக் கொண்டிருந்தது.

கோபி, மல்லிக்கின் நண்பன். மல்லிக் பேப்பர்களுக்கு ஏஜென்சி எடுத்து விநியோகம் செய்து கொண்டிருந்தான். மல்லிக் அடிக்கடி 'சொத்து வேட்டை' என்று பல இடங்களுக்குச் சென்று வருவது கோபிக்குப் பிடிக்கவில்லை. கனி நாகலாபுரம் போகவேண்டும் என்றும், அங்கே பதுங்கி உள்ள ஏராளமான நாணயங்களைப் பற்றியும் சொன்னான் மல்லிக். கோபி அதைக் 'கனவு' என்று கிண்டல் செய்தான். ஆனால் மல்லிக் கிழக்கிந்தியக் கம்பெனி டைரக்டர்களின் இரகசியக் கடிதத்தின் 'போட்டோஸ்டாட்' காப்பியையே காண்பித்தான். அதில் 1840 அக்டோபர் 12ந் தேதி எச். எம். எஸ். ஜூலி காலண்ட் என்ற கப்பலில் வந்த விலையுயர்ந்த பொருள்கள் பற்றிய ஜாபிதா இருந்தது.

கோபியிடம் தன் பிஸினஸை ஒப்படைத்து விட்டு மல்லிக் கனி நாகலாபுரம் வந்து அடைகிறான்.

குதிரை வண்டியில் மல்லிக் ஒரு வீட்டின் அருகில் வந்து இறங்குகிறான். அந்த வீட்டு வாசலில் சப்பரக் கோலம் இடப்பட்டிருந்தது. அதுமட்டுமல்ல, அந்தக் கோலமிட்ட இரு வண்ணக் கைகளுக்குரிய தாவணி கட்டிய இளம் மங்கை 'வாங்க' என்று அவனை வரவேற்றது அவனைத் தூக்கிவாரிப் போடச் செய்தது.

மேலே கதையைத் தொடர்ந்து படியுங்கள்.

### 2

*[கதை ஆரம்பிக்கு முன் மகத்தான வரவேற்பு அளித்த திருவாரூர் திருமதி ஆண்டாள் வரதராஜனுக்கு நன்றி.*
*—புஷ்பா தங்கதுரை]*

"If fortuned that John Drake going up into the top, descried her about three of the clock" The treasure ship contained great riches, jewels precious stones and silver and gold. The capture took place at Cape de San Francisco about 150 leagues south from Panama. The great seamen of Elizabeth -By BRYAN BEVAN

**—வா**ங்க!

அந்தப் பெண் பேசவில்லை. அவள் கண்ணில் இருந்த சிநேகம் அப்படி பாவனை கொடுத்தது. கிட்டத்தட்ட பேசியது—வாங்க! கொஞ்சம் உயர்த்திப் பார்த்தான்.

நல்ல கிராமீயம். ஒரு பாரதிராஜா படத்திலிருந்து இறங்கி வந்தவள் போல் இருந்தாள்.

கழுத்திலிருந்து கறுப்புத் தாவணியில் டாலர் தொங்கியது.

முடியை இழுத்து 'வாரி இருந்தாள். லாக்கெர் பொம்மை போல முகம்.

சின்ன சமிக்ஞை செய்தால் போதும் நீ யாரு எங்கிருந்துவந்தே எதுக்காக வந்தே ஏன் நிக்கறே என்ன வேணும்னு மூச்சு விடாமல் பொரிந்து விடுவாள் போல இருந்தது. அல்லது கநீ, கயா, கரு என்று காஞு பாஷையில்....

அப்படி ஒரு சுட்டித்தனம் கண்ணில் பதுங்கியிருந்தது.

அவன் பேசவில்லை. இரண்டடி வைத்தான். கால் மறுத்தது. திரும்பினான். நாக்கு முனையில் ஊறிய வார்த்தைகள் தொப்பென்று கொட்டின — இந்த ஊர்லே எலும்புக் கூடு கிடைச்சுதுன்னாங்களே!

அவள் இடுப்பைச் சின்னதாக ஒடித்து கண்ணைக் கொட்டினாள். அழகு சொட்டியது.

—நீங்க யாரு?

—போலீஸ் டிபார்ட்மெண்ட்....

மிளுக் என்று சிரிப்பு. அவன் கண்ணில் அது ஒரு மீனுகித் தண்ணீருக்குள் குதிப்பது போல.

—போலீஸ்ல வந்து, பார்த்து, ரிப்போர்ட் எழுதி முடிச்சாச்சு. எல்வி மாதிரி கடைசீல வர்றீங்களே.

கொஞ்சம் அசந்தான். கிராமம் 1800. இவள் 2000ல் இருப்பாளோ?

—நான் சொல்றத முழுசா கேட்கலியே ! போலீஸ் டிபார்ட்மெண்டிலே சொன்னாங்க; நான் ஆராய்ச்சியாளன்.

—ஆந்த்ரோபாலஜியா?

திரும்பியும் அசர்வு.

கிராமத்தில் சந்திரசேகரின் 'போதுமே', என். எம். ஈ. பி; ஐ. ஆர். 20 இவைகள் தான் தற்காலத்தை நிரூபித்தன. அரச மரத்தின் மேலே இரண்டு வாடிப்போன கொடி, தலைவர்களின் திருஷ்டிப் பரிகாரக் கரிப் படங்கள் இரண்டு, இப்போதைய பிற்சேர்க்கைகள்.

இங்கே படிப்பு எப்படி வந்து சேர்ந்தது?

—இல்லை. சொந்த ஆராய்ச்சி!

—அதோ அங்கே போங்க...

அவள் பார்வை எதிர் சாரியைத் தாண்டி சுமார் இரண்டு பர்லாங்கில் விழுந்திருக்கும்! வழியை, அதன் நீளத்தை விட, நீளமாகச் சொன்னாள்.

நடந்தான். (—கிழக்காலே போனும்.) போனுன்.
(—தெருவைத் தாண்டணும்.) தாண்டினுன்.
அவன் காதிலே அவள் சொன்ன திசைகள் இடது, வலது போட,
முன்னுல் ஒரு பிரும்மாண்ட ட்வெண்டியத் செஞ்சுரி ஃபாக்ஸ் காட்சி, அடிவானத்தி லிருந்து அடிவானம் விரிந்தது.
சோலை வனம்.
கண்ணில் பச்சையும் குளிரும் மோதின.
தென்னம் பிள்ளைகள், கிள்ளைகள், ஊர்ப் பிள்ளைகள்!
வானம் ஒரு துப்புரவான நீலம். கிழக்கு ஓரத்தில் ஒரு ஸிர்ரஸ் மேகம்.
பிரமித்து நிற்க,
ஒரு கொத்து கடல் வல்லூறுகள் மூக்கை நீட்டி ரொம்ப சொந்தமாக பறந்து போயின.
சோ என்று கடல் பேசியது.
எங்கேயோ இருக்கிறது கண்ணில் விழவில்லை.
.....இன்னும் நடக்கணும். வேலி வந்துட்டதா?....
வந்துடுத்து!
முள்வேலி.
அந்த லாண்ட்ஸ்கேப்பைச் சுற்றி பெல்ட் இறுக்கியது போல் மேற்காலே போய், கிழக்காலே வந்து சேர்ந்தது.
எதற்கு இந்த வேலி?
சின்ன விக்கெட் வாசலும் அருகில் 20 டிகிரி சாய்ந்த ஒரு மர போர்டும்.
அனுமதியில்லை (எட்டு காலம் தலைப்பு)
கனிநாகலாபுரம்
மண் அரிப்புத் தடுப்புப் பணி
பி. டபிள்யு....
மீதி எழுத்துக்கள் அரிப்பில் போய்விட்டன.
உள்ளே போகலாமா, கூடாதா? அந்தப் பெண் இன்னும் காதில் திசை சொல்லிக் கொண்டிருந் தாள். அவள் பார்வை விழுந்த இடம் இன்னும் கொஞ்ச தூரத்தில்தான்.
தைரியமாக உள்ளே போக, வெறும் காற்றிலிருந்து வெடி வெடிப்பது போல் பட படவென்று வசைகள்!
திடுக்கிட்டான். அவைகளின் சொந்தக் காரன் தலைப்பா கட்டி, காக்கி போட்டு, கணுக் கால் வேட்டியுடன் ஆவேசப் புறப்பாட்டில் வந்தான். மீசை வழியே கோபம் சொட்டியது.
குபீர் என்று மல்லிக் பின்னுக்கடித்து வேலியைத் தாண்டியதும் அவன் அர்ச்சனை ஒரு கத்தியால் துண்டித்தது போல் நின்றது.
அந்த வாட்ச்மேனின் 'வள்'களைக் கொஞ் சம் சீராக்கலாம் என்று எண்ணும்போது, அவன் அந்த வரிபோடும் நிழல் வெய்யி லூடே அவசரமாகத் தூரத்தில் மங்கிப் போனுன்.
....வேலி தாண்டிப் போனும்; சிவன் கோவில் வரும். அதுக்கு இடது பக்கம்... அந்தப் பெண் இன்னும் முடுக்கிக் கொண் டிருந்தாள்.
வேலி தாண்ட முடியலியே! மிஸ்... உங்க பேர் என்ன?
...உயரமான பாவாடை. அடுக்கடுக்காக அதன் மடிவுகள். ஒரு காலை ஊன்றி ஒரு காலை வேணு கோபாலனுக்க, அந்த விலகிய காலின் மேல் பருமன், ஆடைக்கு வெளியே புஷ்டியான பரிமாணங்களில் தெரிய....

**The Instant I see a girl, I see her naked**

யாரோ மகானுபாவன் சொன் னுரே! அது ஏன் இப்போது நினை வுக்கு வருகிறது?





கிணு கிணு என்று இரண்டு முணு முணு. வேலிக்குள்ளே தூரத்தில் இரண்டு பேர் பேசி வந்தார்கள். பாண்ட் சட்டைதாரிகள்!

இங்கிலீஷும் தமிழும் கலக்க, அநேகமாக சர்க்கார் உத்தியோகமாக இருக்கும்.

க்ளோஸ் அப்பில் வந்தபோது முகத்தில் முன்—நாற்பது தெரிந்தது. கெஜட் பதிவு பெற்றவர்களாக இருக்கும். நித்திய ஷேவ்.

பாக்கி, அவர்களது பாண்டும் டெரீன் ஸ்லாக்கும் ஆயிரம் கொடிகள் பார்த்து நொந்துபோனவை. இரண்டுபேர் கையிலும் ஒரு ஆர். எஸ். டி.. எஸ். கோவாபரேடிவ் கிரெடிட் சொஸைடி உபயம் அளித்த பிளாஸ்டிக் பைகள். ஒருத்தர் கையில் அது தலைகாணி! இன்னொருத்தர் கையில் டிபன் பாக்ஸ் கர்ப்பத்தோடு புடைப்பு.

—ஸார்!

ஒருத்தர் திரும்பினார். சந்தனக் கீற்று! பார்வை அடிக்காத குறை.

—கொஞ்சம் உள்ளே போய்ப் பார்க்கணும் ஸார்.

—நீங்க யாரு?

—நான் தனியாள். ஆராய்ச்சிக்காரன்.

பார்வை மூலம் அவன் உடம்பில் ஏறினார், இறங்கினார். —சீஃப் செக்ரட்ரிக்கு எழுதுங்க. பெர்மிஷன் கொடுப்பாரு.

மேலே நில்லாமல் சுருக்காகத் திரும்பி, விட்ட இடத்தைத் தொடர்ந்து கொண்டு போனார்கள்.

இங்கிலீஷும் தமிழும் வால்யூம் இறங்கிக் கொண்டே போய் மறைந்தன.

சீக்கிரத்தில் வேலி வழியே இன்னொருத்தர் தோற்றமானார். பெரிய கட்டம் போட்ட டெரீன் சட்டை. காற்றில் பெல்பாட்டம் துடுப்புகள் போட, வந்தார்.

—ஸார்!

நின்றார். கண்ணாடிக்குள் வயது உட்கார்ந்திருந்தது. காதோரங்களில் வெள்ளிகள்!

—நா மெட்ராஸிலேந்து வர்றேன். கோவில்களைப் பத்தி எழுதறேன். உள்ளே பார்க்கணும்.



## அட்டைப்பட விளக்கம்

பாகிஸ்தான் குழுவில் :

1. அஸீப் இக்பால் (காப்டன்)
2. இம்ரான்கான் (படம்: தில்லிராஜு)
3. ஜாவேத் மியான்தாத்.



இந்தியக் குழுவில் :

1. வெங்சர்க்கார்.
2. விசுவநாத்.
3. காப்டன் கவாஸ்கர்.

கண்ணுடியைப் புதியவர் கழற்றிஞர்.

—உங்களுக்குக் கோயிலைப் பத்தி என்ன தெரியணும்?

கேள்வி கெஜட் தோர ணத்துடன் வந்தது.

—இல்லே; சுவாமி பேரு, அம்பாள் பேரு...

—சுவாமி பேரு நாகலபுரீசுவரர். அம்பாள் சிற்றிடை நாயகி! மரக்கல நாயகின்னும் மற்ருெரு பேரு.

—உங்களுக்கு எப்படித் தெரியும்?

—நான் ஆர்கியாலஜிகல் டிபார்ட்மெண்ட்.

—கோவில் எந்தக் காலத்திலே ஏற்பட்டது?

—இப்பத்தான் கல்வெட்டைக் காப்பி எடுக்கிரும். கண்டு பிடிப்போம்.

—உத்தேசமாச் சொல்லலாமில்லே?

—அதெல்லாம் ஸ்காலர்ஸ் முன்னுலே சொல்லி அப்புறம்தான் பொதுஜனங்களுக்கு அறிவிப்பு நடக்கும்.

—இப்ப நான் போயி பார்க்கலாங்களா?

—யாரும் போக முடியாது. 'இது பாதுகாக்கப்பட்ட இடம்.

காலைப் பெரிதாக அகற்றி வைத்து, கையில் மார்டிமர் வீலரின் அரிகமேடு எக்ஸ்கவேஷன் படபடக்க, சீக்கிரமாக ஒற்றைப் பாதையில் மறைந்து போஞர்.

சோர்வு ஒரு டோஸ் அதிகமாக வர, ஒரு இலுப்பையின் நிழலில் ஒதுங்கிஞன். ஒரு நிமிடம் இருக்காது.

—பார்த்தீங்களா? என்று குரல்.

திரும்பிப் பார்த்தான்.

அந்தப் பெண் கையில் வெண்கலப் பாத்திரத்துடன் நின்று கொண்டிருந்தாள். பாத்திரத்தின் அடியில் கறி பூசியிருக்க, வாயில் ஒரு புராணத் துணி கட்டப்பட்டிருந்தது. தோளிலிருந்து ஒரு முழநீளத் துறவுகோல் தொங்கியது. சிறிசான புன்னகை விட்டுச் சிநேக பாவத்தில் இருந்தாள்.

புன்னகையுடன் எழுந்தான் —ஏப்பா! என்ன கிராக்கி பண்ணுறுங்க! வேலிக்குள்ளே விடமாட்டேங்கருங்களே!

—நிறுத்திட்டாங்களா? நினேச்சேன்! இப்ப என் கூட வாருங்க!

அவளைத் தொடர்ந்தான்.

அவள் பாதங்கள் வெள்ளியாகத் தெரிய, அவள் மிதித்த இடங்கள் எல்லாம் கவிதைகள் விழுந்தன.

காற்றில் மிருதுவான தைலச் சக்கை மிதந்து அவன் சுவாசத்தில் கலந்தது.

இடுப்பு மெல்லிய தண்டு போல் இறங்க, அந்தக் கடைசி 36 ஒரு பூ ஜாடியாக அதை ஏற்றுக் கொண்டது.

பேலே ஹுக்கில் சோளி கஷ்டப்பட்டு இணைந்திருக்க, அதன்மீது கனமான முன்புறங்கள் ஏற்படுத்திய மெல்லிசு சுருக்கங்கள்.

நடக்கவில்லே, நீந்திஞன்.

ஒரு மேடு ஏறி இறங்கும் இடத்தில் காவல்காரன் கோப மீசையுடன் இருந்தான்.

—எங்க சொந்தக்காரர்! என்று பெண் சொல்ல, அவள் பேச்சைக் கேட்கும் சுகத்தில் அவன் பொக்கை ஒரு பூக்கேயாக மாறியது.

—இதோ!

அந்தக் காட்சி அவன் மூச்சை எடுத்தது. கண்கள் ஒரு பெரிய ஆகாய விரிப்பு.

கீழ்நோக்கிக் கிடுகிடு பள்ளம். அதன் அடிவாரத்திலிருந்து வெள்ளேச் சிரிப்பு கொட்டிய கடல்! ஒரு ஹெலிகாப்டரிலிருந்து பார்ப்பது போல, நெடுந் தூரங்களேக் காட்டியது கடல். மேற்கே ஒரு கிராமப்புற நதி வந்து சேர, சேரும் இடம் கருநீல உப்பங்கழி! அதன் நடுவில் ஒரு இஞ்ச் படகை ஒரு இஞ்ச் மனிதன் ஓட்டிக் கொண்டிருந்தான்.

இறக்கத்தில் ஒரு பாசி மூடிய கோவில்! மேற்புறமும், இடப்புறமும் மதில்கள் நின்று கொண்டிருக்க, மற்ற இருபக்க மதில்கள் நீண்ட சரிவில் உதிர்ந்து கிடந்தன.

பயங்கரமான காட்சி.

—வாங்க!

இறக்கத்தில் கவனத்துடன் இறங்கிஞர்கள். கோவில் இருந்த இடம் சின்ன சமவெளி.

உள்ளே அவள் போகு முன், —இதோ, இதிலே போனுல் எலும்பு கிடைச்ச இடம் வரும் என்ருள்.

அவன் ஆவல் உச்சத்துக்கு ஓடியது.

—நான் போய் முதல்லே பார்த்துட்டு வரேன்,

என்று சொல்லி, அவள் பதிலுக்குக் கூடத் தாமதிக்காமல் அந்த ஒற்றையடித் தடம் எடுத்து, ஆள் உயர செடிகளிடையே புகுந்து, வெகு தூரம் நடக்க,

கடைசியில் 'பாதுகாக்கப்பட்ட இடம்' என்று அஞதை போர்ட்.

அதைத் தாண்டவும் புதிதாகப் புண்ணுக்கப்பட்ட பூமி.

தொக் தொக் என்று அதில் ஏதோ சத்தங்கள்.

செடிகளே விலக்கிக் கொண்டு பார்க்க, ஒரு மீசைக்காரன், மிக அவசரமாக அங்கே தோண்டிக் கொண்டிருந்தான்.

மல்லிக் அவன் கண்ணில் பட்டதும் அவசரமுடன் வேலே நிறுத்திய அவன், —யார்ரு நீ? என்று கேட்டு அவனே நோக்கி விறுவிறுப்பாக வந்தான். ஒரு ஆத்திரமான வேகம்.

(தொடரும்)

**ஒரு திருத்தம்**

இவ்விதழில் "கல்லூரியில் குவிஸ்" என்ற பகுதியில் பரிசு பெற்ற மாணவியின் பெயர் தவருக அச்சாகியுள்ளது. அவர் பெயர் **பிரமீளா**; கல்பஞ அல்ல. தவறு நேர்ந்ததற்கு வருந்துகிறேம். -ஆர்.



புஷ்பா தங்கதுரை

# கடலுக்குள் ஜூலி



அவனைச் சந்திக்கக் குளிர்ச்சியான கடல் விரைந்தது. அவனை மூடியது. கடலுள் அவன் அமிழும்போது, தன் ஸ்கீக்களை உதைத்தான், கண்களைத் திறந்தான், சுழியும் பாட்டில் — பச்சையான ஆழங்களுக்குள் மூழ்கினான்.

'லவ்வின்' ஒரு வாரத்தில் ஜேம்ஸ் லீஸர்.

## 3

அந்தத் தோண்டும் ஆசாமியைப் பார்த்து மல்லிக் ஒரு புன்னகை காட்ட விரும்பினான்.

ஆனால் மல்லிக்கின் நேர்த்தியான சமிக்ஞைகளுக்கு உட்பட அவன் விரும்பவில்லை.

குப்பென்று குதித்து மேடு ஏறி மல்லிக்கின் பக்கம் வந்தான். சகல கோபத்தையும் வைத்து அவன் மண்டையில் இரண்டு கும் கொடுத்து, துண்டைத் தோளில் போட்டு மறைந்து போனான்.

கண்ணில் இருட்டு பூச்க, மல்லிக் கீழே சாஷ்டாங்கமாக விழுந்தான். சீக்கிரம் மூர்ச்சையானான்.

நினைவு வந்தபோது, ஆச்சரியம், அந்தப் பெண் விசிறிக் கொண்டிருந்தாள். தைலவாடை மூக்கில் ஏறியது. எங்கிருக்கிறேன் என்று சினிமா பாணியில் கேட்க விரும்பினான். நாக்கு வரவில்லை.

மெள்ளப் புரண்டு மண்ணைத் தட்ட, தலையில் இரண்டு இடங்களில் சுத்தி அடித்துக் கொண்டிருந்தது.

எழுந்ததும், சிறிது உலாத்தியது. அந்தச் சுற்று வட்டாரம் ஒருதரம் குலுங்கிவிட்டுப் பிறகு சரியாகியது. —நன்றி, என்றான் பெண்ணைப்பார்த்து.

—நல்ல வேளை! ரொம்ப நாழி வரலேன்னு வந்து பார்த்தா மூர்ச்சையாகிக் கிடக்கிறீங்க.

கொஞ்சம் கண்ணைக் கசக்கி முகத்தைச் சரி செய்தான். நடந்ததைச் சுருக்கமாகச் சொன்னான்.

இருவரும் நடந்தார்கள். அவனுக்கு ஒரே யோசனை!

கோவிலை அடைந்ததும்

—இங்கே நிறையப் பேர் வராங்களா என்றான்.

—கோவிலுக்கா?

—இல்லை, எலும்பைப் பார்க்கிறதுக்கு!

—உங்களைச் சேர்த்து நாலு பேர் ஆகிறது.

அவன் மௌனம் சாதிக்க, —இந்த எலும்பிலே என்ன விசேஷமோ? என்றாள் அந்தரத்தைப் பார்த்து.

என்ன சொல்லலாம் என்று அவன் யோசித்தபோது, கோவில் நாயக்கர் காலத்து யாளி அவள் தோளுக்கு மேலாக முறைத்தது.

பதில் பேசவில்லை அவன்.

நேராக உள்ளே போனான்.

கர்ப்ப இருட்டில் நாகலாபுரீசுவரர் சந்தனப் பொட்டுடன் உட்கார்ந்திருந்தார். —உன்னை முதலிலே பார்க்காமல் போனது தப்பு! எனக்கு எடுத்த காரியத்தில் வெற்றி கொடு, என்றான்.

—அம்மன் சந்நதி எங்கே?

—வெளிப் பிராகாரம்.

பிராகாரத்தில் தும்பையும் நந்தியாவட்டையும் காடு உண்டாக்கி யிருந்தன.

—இங்க யாரும் வரமாட்டாங்களா?

—யாரும் வர மாட்டாங்க. கோவில் அனாதை! எங்க ஊரைப் போல!

—கோவிலுக்குச் சொத்து, கித்து?

—ஏக்கர் கணக்கிலே உண்டு. பக்கத்து ஊரிலே! இப்போ, இருந்த இடந்தான்!

—என்னாச்சு?

—எல்லாரும் வாயிலே போட்டாச்சு. கோவிலைப் பூஜ்யம் ஆக்கியாச்சு. அம்மனுக்கும் சுவாமிக்கும் நாங்க சாப்பாடு போடறோம்.

—நீங்களா?

—ஆமா; 'நாங்கதான் நைவேத்தியம் பண்ணறோம். ரெண்டு வேளை பூஜை பண்ணறோம்.

—பண்ணறோம்னு யாரு?

—எங்கப்பாவும் நானும். சும்மா, சம்பளம், கிம்பளம் இல்லாமா! பரம்பரையா கவனிக்கிறோம். விட்டுட்டுப் போக இஷ்டமில்லே.

...எலும்புக்கூடு எடுத்த இடத்தில் ஆசாமி எதற்குத் தோண்டினான்? என்னைப் பார்த்ததும் ஏன் அடிக்க வந்தான்? ஒருவேளை ஒரு புதையலைத் தோண்டியிருப்பானோ? நானும் தோண்டிப் பார்க்க வேண்டும். அப்படித்தான் திட்டம்...

அம்மன் சந்நிதி மிக உயரம்!

நிறையப் படிகள்.

ஏறி, அழிக் கதவுள் பார்த்ததும் முகம் பின்னுக்கு இழுத்தது.

அம்மன் ஒரு நிஜமான பெண் போல —இதோ இருக்கேன் என்று சொல்லும் சத்தியத்தில் இருந்தாள்

நகை நட்டுக் கிடையாது.

வெறுமனே குளித்து வந்தவள் போல் நின்றாள். ஒரு காவிக் கந்தல் ஒரு கிராமப் பெண்ணைப் போல் அரை குறையாய் அவளை மூடியது.

அவள் அழகின் அமோகம் அவன் மூச்சை அடைத்தது.

ஒரு கல்லுக்குள் உயிர் வந்திருக்கிறதே;

—நெற்றியைப் பார்த்தீங்களா?

பொட்டு இடும் இடத்தில் குழிவு! —அங்கே தான் சந்திரகாந்தம் இருந்தது.

—என்னது அது?

—நீலம். ராத்திரியிலே நீல வெளிச்சம் அடிக்கும். கன்னியாகுமரி மாதிரி எங்க அம்மனுக்கும் கதை உண்டு.

இருவரும் சாவகாசமாக ஒரு படியில் அமர்ந்தார்கள்.

—எனக்குச் சில விவரங்கள் தேவைப்படறது, சொல்ல முடியுமா? என்றான் அவன்.

—கேளுங்க.

—எலும்புக் கூடு எடுத்தாங்களே! அதை என்ன செஞ்சாங்க?

—ஒரு பெட்டிலே போட்டாங்க!

—அப்புறம்?

—மெட்ராஸ் கொண்டு போயிட்டான்னு நினைக்கிறேன்.

—பழைய காலத்து எலும்புக் கூடா?

—ரொம்பப் பழைய காலம் இருக்காது. முந்நூறு, நானூறு வருஷம் இருக்கும்னுங்க.

—எப்படிக் கண்டு பிடிச்சாங்க?

—பித்தளைக் குழல் கிடைச்சுதில்லே! அதிலேந்து.

—அதிலேந்து எப்படி?

—அந்தக் குழாய் ஒரு டெலஸ்கோப்னு கண்டு பிடிச்சாங்க. ஐ பீஸ் மட்டும் இருந்தது. அந்த மாதிரி டெலஸ்கோப்பை 200 வருஷத்துக்கு முன்னாடி பயன்படுத்தினதாகச் சொன்னாங்க.

—யார் பயன்படுத்தினாங்க.



—ராணுவத் தளபதிங்க.

—ஓ!

அவன் மனத்தில் அது உதைத்தது. கப்பல் தளபதி என்று சொன்னால் சந்தோஷப்பட்டிருப்பான்.

—அப்புறம் அந்த பாட்ஜ் இருந்ததே, அதில் என்னவோ எழுத்துங்க.... (மல்லிக்)

—எச். எம். எஸ். ஜே.

—அது என்ன?

—தெரியாது.

அவன் மௌனமாக இருந்தான்.

அவள் நிமிர்ந்து —இதெல்லாம் ஏன் கேட்கறீங்க? என்றாள்.

அவனுக்கு அந்தக் கேள்வி கொஞ்சம் திகைப்பாக இருந்தது.



—ஒரு ஆராய்ச்சி பண்றேன்.

—என்ன ஆராய்ச்சி?

—அந்த எலும்புக் கூடு யாருடைய எலும்புக் கூடுன்னு தெரியணும்.

—ஏன், நீங்க ஏதாவது கொலைக்குத் துப்புத் துலக்க வந்திருக்கீங்களா?

—கிட்டத்தட்ட அத மாதிரி வச்சுக்கயேன்.

—எப்போ நடந்த கொலைக்கு எப்போ துப்புத் துலக்கப் போறீங்க?

அவன் மௌனமானான்.

**மீ**னம்பாக்கத்தில் அந்த சார்ட்டர்ட் விமானம் பலரது கவனத்தை அழைத்தது. யுத்தத்தில் ஸப்ளைக்காகப் பயன்படும் போயிங்க்லிப்பர் விமானம் போல இருந்தது. நிறையத் தளவாடங்களுடன் இருபது கொழுத்த வெள்ளைக்காரர்கள் இறங்கினர்.

அவர்களது பெட்டிகள் பக்கவாட்டில் பருத்துக் கர்ப்பங்களாகத் தெரிந்தன.

விமானத்தின் வயிறு திறக்க, உள்ளிருந்து பல் உயரப் பெட்டிகளும், சாமான்களும் ஏராளமாகக் கீழே இறங்கின.

சோதனையில் அவர்கள் ஹாலிவுட் ஆர். எம். கார்ப்பரேஷனின் மூன்றாவது அவுட்டோர் யூனிட் என்றார்கள்.

முடிச்சுகள் போன்ற பல உபகரணங்களுடன் காமிராக்கள், பிறந்து பளபளப் போடு வெளிவந்தன.

இன்னும் லைட்கள், ஸவுண்ட் ரிக்கார்டிங் இயந்திரங்கள், டிராலிகள், எல்லாம் யாரும் பார்த்திராத கலையுடன் வந்து இறங்கின.

எல்லோரும் விமான நிலையத்தையும், சுங்கத்தையும் காலி செய்ய அரை நாள் ஆகியது.

தங்குவதற்கு பார்த் கொரமாண்டலின் வெவ்வேறு மாடிகளில் தொத்திக் கொண்டார்கள்.

382 அறைக்காரர் பெர்மிட் விஸ்கியைக் கொஞ்சம் அருந்தி இளைப்பாறி விட்டு, கொழும்புவுக்கு ஒரு கால் புக் பண்ணினர்.

வானிலை கோளாறு செய்ய, இரவு ஏழுக்குத்தான் கால் கிடைத்தது.

கண்டியன் ஹோட்டலைக் கூப்பிட்டு 209ம் அறைக்குப் போடச் சொன்னர்.

—மிஸ்டர், ப்ரமன்! ஆர்தர் பார்க்கர் கம்பெனி ஹியர்! 50 கேஸ் ஸிலோன் டீ அவசரமாக பாரீஸுக்கு அனுப்ப வேண்டும் என்றார்.

—உடனே அனுப்ப வழியில்லை. செவ்வாய்க் கிழமை அனுப்பப்படும் என்றது — பதில்.

இந்த இரண்டு வாக்கியங்களும் அவர்களுக்குச் சங்கேத வாக்கியங்கள், ஒருவரை ஒருவர் அறிந்து நிச்சயப்படுத்திக் கொள்ள. தன்னிடம் பேசுவது வெண்டல் ப்ரமன் என்று தெரிந்ததும், சென்னிக் குரலில் கொஞ்சம் விசேஷ சிநேகம் பற்றிக் கொண்டது.

—நாங்கள் இன்று வந்து சேர்ந்தோம். நெப்ட்யூனை உடனே அனுப்பவும் என்று சொல்லிப் போனை வைத்தார்.

மறு நாள் காலை அந்த அயல் நபர் ஒரு டாக்ஸியைப் பிடித்து மயிலைக் கோவில் முன் போய் இறங்கினார்.

டாக்ஸியை அனுப்பிவிட்டு, இரண்டு பிச்சைக்காரர்களை விரட்டி, மாடத் தெருவே திரும்பிப் பார்த்துக் கொண்டிருக்க, பெரிய கால்களை வைத்து நடந்து போனார்.

இரண்டு தெருக்களில் இடுங்கி, மூன்றாவதற்குள் வந்ததும் அந்த 78ஆம் கதவிலக்கம் கண்ணில் உறுத்தியது.

முறுவலுடன் மாடிப் படிகளில் ஏறி வரிசையாகக் கிடந்த மூன்று அறைகளில் இடது ஓர அறையைப் பார்க்க,

ஒன்பது லிவர் பூட்டு அதில் தொங்கி, அவருக்குத் திகைப்பைக் கொடுத்தது.

அப்போது இரண்டாம் அறைக் கதவு திறக்க, பாதி சோப் முகத்தில் பூசியிருந்த ஒரு ஒல்லி பனியன், அவசரமாக வெளியே வந்து —மல்லிக் ராமநாதபுரம் போயிருக்கான் என்றது.

—எதுக்கு?

—அங்கே கடற் கரையில் என்னவோ ஆராய்ச்சி பண்ணுறான். அவன் புத்திதான் உங்களுக்குத் தெரியுமே!

வெள்ளைக்காரரின் முகத்தில் சிவப்பு வந்தது. தலையை ஆட்டினார். பிரயாசையுடன் ஒரு புன்னகையை வரவழைத்து சர்க்கஸ் யானையைப் போல் ஒரு செயற்கை நமஸ்தே போட்டுவிட்டுப் படிகளில் இறங்கினார்.

"என்னண்டையும் வந்தான்!" என்றார் அந்த ஆர்கியாலஜிஸ்ட் மனிதர்.

சந்தனக் கீற்றுக்காரர் திரும்பினார்.

—கோயிலைத் தூக்கிட்டுப் போயிடப் போறான்.

—செஞ்சாலும் செய்வான்.

—ஜாக்கிரதையா இருக்கணும். வேணுமின்னா போலீஸ்லே சொல்லி ஒரு பாராப் போட்டுறணும்.

—எல்லாரும் சைலன்ஸ்! சம்பகா வரா.

கையில் காப்பிச் செம்புடன் வந்து திண்ணை மீது பாத்திரத்தை வைத்து முறுவலைக் கொட்டினாள் சம்பகா.

# "கவர்ச்சிக்காகவா கல்கி வாங்குகிறோம்?"



● புது வருடத்தில் முதலில் பெறுகின்ற கல்கியில் ஹேமமாலினியின் அட்டைப்படம். ஏதோ நாங்கள் எல்லாம் கவர்ச்சிக்காக கல்கியை வாங்குவது போல.

தலையங்கமோ அமைச்சர் வீரப்பனின் இசைப் புதுமைகளைச் சாடும் Satire. புத்தாண்டில் வாக்காளர்களுக்கு நல்லவிதமாக நாலு வார்த்தைகள் இல்லை. நீங்கள் எங்கேயோ போய்க் கொண்டிருக்கிறீர்கள்.

செம்பனார்கோயில் எம். ஜீ. கலியபெருமாள்

● ''சோஷலிஸ சங்கீதம்'' என்ற கல்கியின் தலையங்கத்தை மும்முறை படித்தேன். அத்தலையங்கம் வெளிப்படைப் பொருளைக் குறியாது குறிப்புப் பொருளை உணர்த்துகிறது. பொருளாதாரத்திலே இன்னும் சோஷலிஸ மலர் மணம் வீசவில்லை. அதற்குள் சங்கீதத்தில் சோஷலிஸம் மணக்க முடியுமா? கர்நாடக சங்கீதத்தைப் பாமரன் அனுபவிக்க வேண்டாமென யார் தடுத்தார்கள்? பாமரர் பாமரராகவே இருக்க வேண்டுமா? பாமரனின் பாமரத் தன்மை எத்தனாவது நூற்றாண்டில் நீங்கும்? கர்நாடக சங்கீதத்தைக் காட்டிலும் சிறந்தது வேறு இல்லை. அதனை அனுபவிக்கும்படி அனைத்து மக்கள் ரசனை உயரப் பாடுபட வேண்டுமேயன்றி சங்கீதத்தின் தரத்தைத் தாழ்த்திவிடக் கூடாது.

உத்தமபாளையம் தி.பொ. நாராயணசாமி பாரதி

● கல்கியின் ஒரு முழுப் பக்கத்தை, அதுவும் முதல் தலையங்கத்தை சோஷலிஸ சங்கீதத்துக்கு வீணாக்கி விட்டீர்களே. 20000 சினிமாப் பாட்டுக்களில் 20 மாதத்துக்கு மேல் எத்தனை பாட்டுக்கள் நிலைத்து நின்று இருக்கின்றன? என்று ஒரு வரி கேட்டால் போதாதோ?

ஒரே ஒரு ஆறுதல்: கடந்த 20 ஆண்டுகளில் கூவத்தில் எத்தனை ஆயிரமாயிரம் க்யூசெக்ஸ் ஆற்று நீர் போயிருக்கிறது என்று யாரும் நம்மைக்கேட்டுப் பிரமிக்க வைக்கவில்லை.

ஈரோடு சி.வி. கிருஷ்ணன்

● நேற்று பாராளு மன்றத் தேர்தல் முடிவைக் கேட்டதிலிருந்து தங்களுக்குக் கடுமையான குளிர் ஜுரம் ஏற்பட்டிருக்கும் என நினைக்கிறேன். தாங்கள் ஆதரித்த கட்சிகளின் தலைவர்களுக்கும் அதே நிலை ஏற்பட்டிருக்கும். நீங்கள் அவசியம் ஒரு நல்ல போர்வை வாங்கிப் போர்த்திக் கொண்டு படுத்துக் கொள்ளவும். உங்களுடைய அரசியல் விமரிசனத்துக்கும் போர்வை வாங்கிப் போர்த்தவும். நீங்கள் இனி அரசியல் விமரிசனம் எழுதாமல் இருந்தால் நன்றாக இருக்கும்.

சீர்காழி கே. ராஜாராமன்

● கடந்த கால நிகழ்ச்சிகளையும் வருங்கால சிந்தனைகளையும் பற்றிப் பல துறையைச் சேர்ந்த முன்னோடியாளர்களிடம் பேட்டி கண்டு எங்களுக்கு வழங்கியது மிக்க ஜோர். பாதுகாக்கப்பட வேண்டிய கருத்துக்கள்.

செங்கோட்டை வி. தர்மராஜன்

● கதை உலகம் பற்றி சுந்தா அவர்கள் கூறியுள்ள கருத்துக்கள் தீயைத் தீண்டினாற் போன்று சூடானவை. பாராட்டுக்களைப் படித்தே பழகிப்போன பலருக்கு, நியாயமாய்க் குறை சொல்லவும் தெரிந்த சுந்தா போன்றோர் வேடிக்கை மனிதராய்க் காண்பார்கள்.

திருச்சி என். மதுரம்

● கல்லூரியில் 'குவிஸ்' பாராட்டப்பட வேண்டிய ஒன்று. வாரா வாரம் தொடர்ந்து நடத்தலாமே. தற்போது வங்கிகள் போன்ற

ஊர் தேடி வந்திருக்கும் அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்குக் காப்பி மட்டும் சப்ளை செய்வது அவள் வழக்கம்.

—ஏன் லேட்? என்று கேட்டார் ஆர்கியாலஜிகல் கிருஷ்ணன்.

—ஒரு புது ஆள் வந்திருக்கார் இல்லே! அவரை யாரோ அடிச்சுட்டாங்க!

—எங்கே? என்று முகத்தைக் கோணி குதியங்காலைத் திருகினார் சந்தனப் பொட்டு.

—எலும்பு கண்டு பிடிச்சாங்களே, அங்கே!

கிருஷ்ணன் படக்கென்று எழுந்து உட்கார்ந்தார்.

—அங்கே ஏன் அவன் போனான்?

—பார்க்கணும்னார். அழைச்சிட்டுப் போனேன்.

கிருஷ்ணனுக்குக் கோபமாக வந்தது.

—அழைச்சுக்கிட்டுப் போகலாமா? தப்பு இல்லை. என்ன நடந்தது சொல்லு!

சொல்ல, எல்லோருக்கும் ஒரு வினோத ஆத்திரம் வந்தது.

காப்பியைச் சூடாகச் சாப்பிட்டு மேலும் சூட்டில் தோய்ந்தார்கள்.

—ஆள் எங்கிருக்கான், காட்டு! உடனே விரட்டணும்! என்று எல்லோரும் கருவி, படையாகத் திரண்டு புறப்பட்டார்கள்.

(தொடரும்)

---

## வட்டமேஜை

பல நிறுவனங்கள் நடத்தும் நவீன பாணி தேர்வுகளில் தேறிட உதவியாக இருக்கும்.

குடியாத்தம் நா. செந்தில் கரா

● குவிஸ் பகுதியில் ''களவனுக்கும், கள்வனுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?'' என்று வினா எழுப்பிவிட்டுப் பதிலாக ''களவன் என்றால் நண்டு'' என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். இலக்கியத்தில் 'நண்டு'க்கு அலவன் என்று தான் பெயர். களவன் அல்ல. வினாவே தவறாக இருக்கிறதே!

மதுரை பி. புஷ்பா

● ஹாப்பி நியூ இயர் ஜோக்ஸ் அத்தனையும் அருமை. புதுமை. ''இந்த ஜனவரி 1க்கு என்ன சக்தி பாருங்கள்! ஒரு வருஷமா தங்கி இருந்த 1979ஐ ஒரே நாளில் கழுத்தைப் பிடிச்சு வெளியே தள்ளிடிச்சு!'' என்ற ஜோக்கை எழுதியவரின் கையைப் பிடிச்சுக் குலுக்கிப் பாராட்ட வேண்டும் போலிருக்கிறது.

மதுரை ஜி. விசுவநாதன்

● புஷ்பா தங்கதுரையின் ''கடலுக்குள் ஜாலி'' எங்கள் உடலுக்குள் மின்சாரத்தைப் பாய்ச்சிவிட்டது என்றால் மிகையாகாது. நடையில் ஒரு கிளுகிளுப்பு, கதை சொல்லும் உத்தியில் ஒரு ஜிலுஜிலுப்பு! ஜெ...யின் படங்கள் வேறு படு அட்டகாசம்!

கரப்பாடி ப. முருகேசபாண்டியன்

● கல்கியை வாங்கியதுமே அதன் கனம் என்னைக் கவர்ந்து விட்டது. சிருங்கார ரஸம் ததும்பும் வண்ணம் புஷ்பா தங்கதுரையின் ''கடலுக்குள் ஜாலி'' தொடர் நவீனம்; போதாக் குறைக்கு செம்பியனின் குறுநாவல். 'கிரியா ஊக்கி'யை ஏழு முறை படித்தேன்! சபாஷ் செம்பியன்!

மேலகிருஷ்ணன்புதூர் ஆர்.கே. லிங்கேசன்

● புத்தாண்டுப் பரிசாக செம்பியன் வழங்கிய ''கிரியா ஊக்கி''யை ஐம்பது நிமிடங்களில் படித்து முடித்தேன். ஆனால் ஐம்பது வருடமானாலும் என் மனத்தை விட்டு அகலாது. வலிய வந்த இசை மேதையின் காதலைப் புறக்கணித்து விட்டு, பார்வை இழந்த ஒருவனுக்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட சரோஜாவின் பாத்திரப் படைப்பு அருமை. வெல் டன் செம்பியன் ஸார்!

வேலூர் வேணுகோபால்

● மனத்தை உருக்கும் கதைக் கரு. பண்பின் தழுவலோடு வரம்புகளை மீறாத அவரின் வர்ணனைகள் அபாரம். அத்தனைக்கும் சபாஷ் சொல்கிறேன். பாதுகாக்கவேண்டிய நாவல்!

குறிக்காரன்வலசு ந. இராமசாமி

● ''கிரியா ஊக்கி'' முழு நாவல் முத்தான உரையாடல், சத்தான கதை, நேர்த்தியான சம்பவங்கள் சேர்ந்து கதை முதல்தரமாக அமைந்துவிட்டது.

சென்னை—4 கே. ஆர். கல்யாணம்

● தாணுவின் 'வாஷிங்டனில் திருமணம்' என்ற பயணக் கட்டுரையின் மூலம் அமெரிக்க மக்களின் வாழ்க்கை முறையினைப் பற்றியும் அந்நாடு விஞ்ஞானத்தில் எவ்வளவு முன்னேற்றத்தை அடைந்துள்ளது என்பதையும் அறிந்து வியப்படைந்தோம்.

கோயமுத்தூர்-9 கே. கோபாலகிருஷ்ணன்

● ''இழப்புக்கள் .... எதிர்பார்ப்புக்கள்'', வழக்கமான மசாலாக் கதைகளிலிருந்து வேறுபட்டுப் புதுமையாக உள்ளது. இது போன்ற கதைகளைத் தாங்கள் மேலும் வெளியிடவேண்டும். இல்லை என்றால் 'இழப்பு' வாசகர்களுக்குத்தான்.

'தோல்வியில் வெற்றி'யில் ஜனமேஜயன், கால் பந்தாட்ட ரசிகர்கள் எவ்வாறு பேசிக் கொள்வார்கள், அம்பயர்கள், டோர்னமென்ட் கமிட்டியினர் கலெக்‌ஷனுக்காக எவ்வாறு மோசமான வழிகளைக் கையாளுகிறார்கள் என்பதை நடைமுறையில் உள்ளது போலவே அழகாகப் படம் பிடித்துக் காண்பித்துள்ளார்.

சென்னை—18 ''மதுரை மணியன்''

# "குளிர் ஜுரம் கண்டிருக்குமே!"

பிரிட்டனைச் சுற்றி கடலில் 1,50,000 கப்பல்கள் மூழ்கிக் கிடப்பதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது.

தி பீவர் புக் ஆஃப் தி ஸீஸைட்

# 4

## THE TREASURE HUNTING CRAZE

The B sh Government has paid out in one year more than £ 100,000 to treasure hunters whose finds of gold and silver have been kept by museums. Most of these discoveries made with the aid of electronic metal detectors are pouring in at the rate of 30,000 a year. Special magazines and treasure hunting clubs cater for the enthusiast's needs.

(நன்றி ஹிந்து 13-1-80)

மூவரும் புறப்பட்டார்கள். கார்ட்டூன் படம் போல விடுவிடுத்தார்கள். சோலைக்குள் ஓடினார்கள். கோவிலுக்குள் புகுந்தார்கள். இங்கே, அங்கே பார்த்தார்கள். கடைசியில் பாதுகாப்பு இடத்திற்கு விரைந்தார்கள். — இதோ!

பள்ளத்தில் ஆள் தோண்டிக் கொண்டிருக்கிறான். மல்லிக்!




—ஏய், நிறுத்து! (டிஷ்யூம்)

மல்லிக் நிமிர, மூவரும் ஒரு வெஸ்டர்ன் மூவியில் வரும் மூணு வக்கிரர்கள் போல நின்றார்கள்.

—ஏறு மேலே!

இப்போதான் போனார்கள், எப்படித் திரும்பி வந்தார்கள்? மேலே ஏறினான்.

மூன்று பேரும் ஏக மனதாக அவனை நோக்கித் திரும்பினார்கள்.

—யார் நீ?

-சொன்னேனே!

—பெயரைச் சொல்லு!

—மல்லிக்!

—இந்திக்காரனா?

—இல்லை. தமிழ்தான். மல்லிகேசுவரன்.

—அப்பா மல்லிகேசுவரா! உனக்கு இந்த வேலை எதுக்கப்பா?

—ஆராய்ச்சியாளன் சொன்னேனே?

—யாரு அனுமதி கொடுத்தது?

பெல்பாட்டம் பேசினார்.

அவன் பேசவில்லை.

—படிச்சவன் மாதிரி இருக்கியே, பெர்மிஷன் வாங்க வேணும்?

சந்தனக் கீற்று அதிகமாகச் சாடுகிறார். குறிப்பு எடுத்துக் கொண்டான்.

—அதுக்கு நேரமில்லே!

—அப்போ பொய்தான் சொல்றே!

—எதைத் தேட வந்தே? தங்கமா, புதையலா?

—எலும்புக் கூடு கிடைத்த மயான பூமியிலே புதையல் கிடைக்குமாய்யா?

—கிடைக்கும்னு நினைச்சிருப்பே!

—ஒருமையிலே பேசறீங்களே! மரியாதை வைக்க மாட்டீங்க போல இருக்கே!

-திருடனுக்கு என்னய்யா மரியாதை வேண்டிக்கிடக்கு?

பெல் பாட்டம் உடனே புகுந்து, —நான் மரியாதையோட கேட்கிறேன். ஐயா! பெரியவரே! தாங்கள் இங்கே தோண்டுவதன் காரணம் என்ன?

இளப்பப்பட்டவன் போல் மல்லிக் பார்த்தான். —ஆராய்ச்சின்னு எத்தனை தடவை சொல்றது?

—என்ன ஆராய்ச்சி?

—குடும்பக் கிளை ஆராய்ச்சி!

—என்னது?

—Family tree! genealogy!.... Roots படிச்சிருக்கீங்களா?

பெல் பாட்டத்தின் கண் சிறிது சுருங்கியது. அதில் அக்கறை அரும்பியிருந்தது. அவர் ரூட்ஸ் படித்தவர்.

—ரூட்ஸ்? என்றார் சந்தேகத்தில்.

—ஆமாம்; ரூட்ஸ்! அலெக்ஸ் ஹேலி எழுதியது.

—அதுக்கும் இந்த எலும்புக் கூட்டுக்கும் என்ன சம்பந்தம்?

—இருக்கு! புகழ் பெற்ற பிரிட்டிஷ் குடும்பம் பால்மர்ஸன் குடும்பம். இங்கிலாந்திலே அவங்களோட வம்சாவளி கண்டு பிடிச்சாச்சு. இந்தியாவிலே தொடரச் சொல்லி அவரோட வாரிசுக்காரங்க என்கிட்டே கேட்டிருக்காங்க. எட்டாவது பால்மர்ஸன் இந்தியாவுக்கு 1841ல் கப்பல் ஏறிப் புறப்பட்டதாகக்

கடைசிச் செய்தி. அப்புறம் எதுவும் தெரி யாது. அவரைத் தேடித்தான்...

—குழியிலே பால்மர்ஸன் கிடைப்பாரா?

சந்தனக் கீறல் கிண்டலாகக் கேட்டார்.

—நிச்சயமாகக் கிடைப்பார்! அந்த பாட்ஜ் இருக்கே, எச். எம். எஸ். ஜே....

-அது என்ன சொல்லுது?

கீற்றுக்காரரின் இடது பேசினார்.

—ஹிஸ் மெஜஸ்டீஸ் ஷிப்னு சொல்லலா மில்லே!

ஒரு கணம் தயக்கம்!

எனினும் சந்தனக் கீற்று ஓநாய்-ஆடு நியாயத்தில்தான் இருந்தார். —உங்க ஆராய்ச்சி யெல்லாம் உங்க வீட்லே வச்சுக்குங்க! இது சர்க்கார் பூமி! இதிலே எதுவும் செய்யக் கூடாது. முதல்லே இடத்தைக் காலி பண்ணுங்க! ஆமாம்!



அவரது இடது இங்கே புகுந்தார்.

அப்படி ஆராய்ச்சி செய்யணும்னு சீஃப் செக்ரடரிக்கு எழுதுங்க. பெர்மிஷன் கொடுப்பாரு.

கொடுப்பாரு என்பதைக் கொடுக்க மாட்டார் என்ற தொனியில் சொன்னார்.

பேச்சு, ஒரு கோடைத் தூறலைப் போல் படக்கென்று நின்று விட்டது.

மல்லிக் தோல்வி ஸார்ச்சியுடன் ப்ரீஃப் கேஸை எடுத்து நடக்க,

மூவரும் பேச்சில்லாமல் நின்றார்கள். ரொம்ப தூரம் போன பிறகு 'ரூட்ஸ்னு என்ன?' என்று இரண்டு பேர், பெல் பாட்டத்தைக் கேட்டார்கள்.

**1841** அக்டோபர் 11. சூரியன் இல்லாத வானம் ஒருகூடுபோல் மூடியிருக்க, கீழே எமரல்ட் அலைகள் ஆடிய, பரந்த கடல் வெளியில் அந்தப் பாய்மரக் கப்பல் நொண்டிக் கொண்டிருந்தது.

அந்தக் கப்பல் முக்காலும் ஒரு நோயாளி! காற்று, மழை, புயல், எல்லாம் பொசுக்கி எடுத்ததில் சீக்கிரத்தில் ஒரு வயோதிகம் அடைந்திருந்தது.

அதன் பாய்மரங்கள் அழுக்கேறி கிழிந்திருந்தன. நூலேணிகள் இற்றுப் போய் பலமில்லாமல் தொங்கின. அதன் உடல் முழுதும் கடல்பாசியும், செடிகளும் ஒட்டி பூஞ்சாளம் பூத்திருந்தன.

பாசி மூடிய ஒரு பிரம்மாண்ட அண்டா தண்ணீரில் மிதப்பது போல், அந்தக் கப்பல் நோயாளித்தனமாகத் தள்ளாடி மிதந்தது.

அதனது மாலுமிகளில் 88 பேர் ஸ்கர்வியால் பீடிக்கப்பட்டு கீழ் தளங்களில் க்ஷீணித்துக் கொண்டிருந்தார்கள். கிறிஸ்தவ முறையில் ஒரு பூமிப்புதைப்பை விரும்பிய 14 பேர்களின் சடலங்கள் நல்ல கித்தான் துணியில் தைக்கப்பட்டு, கீழ்த் தளத்தில் ஓரமாக முடங்கிக் கிடந்தன.

துவஜங்களும், விட்டங்களும் உடைந்து போனதில் துணைப் பாய்மரங்களை இழுத்துக் கட்டுவதற்கு வசதியில்லாமல் ஒரு கனத்திற்காக நான்கு சடலங்களை கித்தானோடு பாய்மர நுனிகளில் தொங்க விட்டிருந்தார்கள்.

மரணத்திற்கும் நோய்க்கும் போக எஞ்சிய எழுபது பேர்களும் கிட்டத்தட்ட நடைப்பிணங்களாக இருந்தார்கள். பாதி பேரிடம் ஸ்கர்வியின் ஆரம்ப அறிகுறிகள். மிதிப்பர் கப்பலின் எண்ணற்ற மனித



பலத்தைப் பெரிதும் எதிர்பார்க்கும் பணிகளில் ஈடுபட்டு தொய்ந்து போயிருந்தார்கள்.

கப்பல் முழுதும் நாற்றம் அடித்துக் கொண்டிருந்தது.

துவஜத்தின் மேலே காவல் பிளாட்பாரத்தில் இருந்த ஃப்ரட்ரிக் டோரி — தெற்குத் தென்கிழக்கே வானம் இருள்கிறது. புயல் புயல்! என்று கத்த,

அதை மேல்தளத்திலுள்ள யாரும் செவி கொடுத்துக் கேட்பாரில்லை. ஏனெனில் ஏற்கனவே ஒரு சீரான கோபக் காற்று அவன் வார்த்தைகளைப் பிடுங்கி ஓடிக்கொண்டிருந்தது. கடல் அலைகள் ஆத்திரமாகக் கப்பலை உருட்ட, அடிக்கடி கடல்நீர் தலைக் கொம்பை மூழ்கடித்து மேல் தளம் முழுவதையும் வெள்ளமாக்கிக் கொண்டிருந்தது.

ஸ்திர மற்ற கை, கால்களுடன், ஃப்ரட்ரிக் டோரி கயிறு வலையில் இறங்கி வர, திடீரென்று அவயவங்கள் இற்றுப் போய் பிடிப்பு இழந்து இருநூறு அடிகளுக்குக் கீழே விழுந்தான்.

-ஸார்! டோரி இறந்து விட்டான், என்று காப்டன் பால்மர்ஸனை எழுப்பி ஒரு மாலுமி அறிவித்த போது, கப்பல் வங்காள வளைகுடாவில் உழுது கொண்டிருந்தது.

மேஸ்திரிகளும் உதவியாளர் சிலரும் ஒரு கொத்தாக நிற்க, சந்தனச் கீற்று சரபேந்திரன் பிலிம்ஃபேரின் முகப்பு பொம்மை தெரியாமல் பாதியாக மடித்து, அன்றைய உபதேசங்களை வழங்கிக்கொண்டிருந்தார்.

அம்பது வயது மேஸ்திரியின் முகத்தை விட அவரது தலைப்பா ஜோராக ஆடியது.



அவரை ஒட்டி வந்திருந்த இதரத் தலைப்பாக்கள் அவரைப் போலவே அதே டிகிரியில் தலையாட்டினார்கள். அசப்பில் பார்த்தால் ஒரே உடம்பில் எல்லாரும் ஒட்டி யிருக்கிறார்களோ என்ற தோற்றம்.

அவர்கள் கலைந்து போவதும் ஆர்க்கியாலஜிகல் கிருஷ்ணன் சாவிக் கொத்தைச் சுழற்றிக் கொண்டு வர,

சம்பகா இடதுசாரி நிழல் வழியாகக் காப்பி எடுத்து வந்து கொண்டிருந்தாள்.

—பிரமாதம் என்று மூன்று பேரும் சொல்ல

—அந்த ஆள் என்ன ஆனார்? என்று கேட்டாள் சம்பகா.

—யாரைச் சொல்றே? என்றார் கிருஷ்ணன்.

—புது ஆசாமி வந்தாரே! அவர்!

—விரட்டியாச்சு!

சரபேந்திரன் துந்துபி முழங்கச் சொன்னார். —ராவே ஓடிட்டான். எத்துவாளி! கோவில் சாமி பத்திரமாக இருக்காரா பார்த்தாயா?

—அவரைத் தூக்க லாரியும் கிரேனும் வேணும்! இந்தூர் மணல்லே லாரி வராது.

—சொல்லாதே ஹெலிகாப்டர்லே வந்து எடுத்துட்டுப் போயிடுவான். களவாளிங்க. இப்படித்தான் திருநாபுரத்திலே! சுத்திச் சூழ வயலு....

சம்பகா டம்ளர்களையும் சொம்பையும் ஒரு கொத்தாக விரல் விட்டுக் கோத்துக் கொண்டாள்.

வீட்டை நோக்கிப் போகும்போது மனத்தில் ஒரு படம் வந்தது. அந்தப் புதிய ஆசாமி கையில் ப்ரீஃப் கேஸ் தூக்கிக் கொண்டு, தலையைத் தொங்கவிட்டவாறு போவது போல.

நான் ஏன் சொல்லிக் கொடுத்தேன்? என்னாலேதானே அவரை விரட்டினாங்க!

ஒருவேளை எத்துவாளியா இருப்பாரோ? முகம் அப்படியா இருந்தது?

**-கோ**பி, நான் சொல்றதை முழுக்கக் கேட்டுக்கடா! அப்புறம் கிராஸ் கேள்வி கேளு சொல்றேன்...

ஏற்கெனவே நொடிக்கு ஒரு நோணவட்டம் சொல்கிறவன். இதற்கு விடுவானா? கையைத் தூக்கிக் கட்கத்தைச் சொறிந்து கொண்டே, கேள்விகளால் துழாவினான்.—சொல்லுடா! ப்ராக்டிக்கலாச் சொல்லு!

—முதல்லே இந்த ரிப்போர்ட்டைப் பாரு. ஹிந்துவிலே வந்திருக்கு.

— The treasure hunting craze!

—ஆமா! இங்கிலாந்திலே நிறையப் பேர் இதிலே ஈடுபட்டிருக்கா. கிளப்கள் கூட வச்சிருக்கா! அதனாலே நான் என்ன சொல்றேன்னா...

-உன்னைப் பைத்தியம்னுசொல்லக்கூடாது.

—ஆமா, நம்ப நாட்டிலே இந்த மாதிரி ஹண்டிங் பரவ ஆரம்பிக்கலே! அதனாலே நான் சொல்லப் போறது புதுசா இருக்கும்.

—சரி, சொல்லு!

—இங்கிலாந்திலே புறப்பட்ட கப்பல் ஹிஸ் மெஜஸ்டீஸ் ஷிப் ஜூலி காலண்ட் கனிநாகலாபுரத்துப் பக்கத்திலே கடல்லே மூழ்கி யிருக்கணும்.

# கல்கி - சாரதா'ஸ்

## பட்டுப்புடவைகள் பரிசுத்திட்டம்

மகளிர் மட்டுமே கலந்து கொள்ளச் சுவையான எளிய வாசகர் பரிசுத்திட்டம்: முதல் பரிசு ரூ.750 பெறுமானமுள்ள சாரதாஸ் பட்டுப்புடவை. இரண்டாவது, மூன்றாவது சாரதாஸ் பட்டுப்புடவை பரிசுகளும் உண்டு. விவரங்களுக்கு கல்கி மகளிர் சிறப்பிதழ் காண்க.





**குமிலிராஜேஸ்வரி தயாரித்தளிக்கிறர்**

**தகவல் குறிப்புக்கள், நகைச்சுவைத் துணுக்குகள் முதலியன அனுப்பக் கடைசி தேதி: ஜனவரி 28**

**பெண்மணிகள் மட்டும் அனுப்பலாம்**

---

—எப்படிச் சொல்றே?

—ஒரு ஊகம்!

—ஆதாரம்?

—இருக்கே அந்த எலும்புக் கூடு! அதோட பாட்ஜ்! இப்ப நாகலாபுரம் போனேனே! அந்தப் பித்தளைக் குழாய் வயது 100க்கு மேலே இருக்கும்னு சொன்னுங்க! அது எனக்குப் பெரிய க்ளூ!

—அந்த பாட்ஜுக்கும் கப்பலுக்கும் என்ன சம்பந்தம்?

—அதிலே எச். எம். எஸ். ஜே.னு போட்டிருக்கே!

—வெறும் ஜே தானே இருக்கு. ஜூலி காலண்ட் இல்லியே!

—அதுதான் எனக்குக் கொஞ்சம் உதைப்பு.

—இதுவே பொருந்தல்லியேடா!

—அதைத்தான் ஆராயணும்னு என் விருப்பம். அந்த பாட்ஜ் என் கையிலே கிடைச்சா..

நிறுத்த, கோபியின் அந்த கேலித் தொனியும், அந்த மூக்குச் கோணலும் மல்லிக்கை நாராசமாகக் குடைந்தன. பேசாமல் இருந்தான்.

கோபி திரும்ப ஆரம்பித்தான்.

—சரி! அந்த பாட்ஜ் ஜூலி காலண்ட்டைச் சேர்ந்ததுன்னு வச்சுக்க! அதுக்கு மேலே உனக்கு என்ன தெரியப் போறது?

—வழி இருக்கு கோபி! அந்த பாட்ஜ் மட்டுமில்லே! ஒரு டெலஸ்கோப் குழல் கூட அங்கே கிடைச்சிருக்கு. இந்த இரண்டும் வச்சிருந்தவர் அந்தக் கப்பலுடைய காப்டனுகத்தான் இருக்கணும்.

—அப்படியே வச்சுக்க! ஜூலி காலண்ட் காப்டன் எதுக்கு கனிநாகலாபுரம் வரான்?

—அஞ்சு காரணம் இருக்கு!

—சொல்லு!

—ஒன்று, புயல், ரெண்டு கலகம், மூணு நோய், நாலு கொள்ளை, அஞ்சு, எதிரியின் தாக்கு.

கோபி கொஞ்சம் நிமிர்ந்தான். அவன் முகத்தில் எப்போதும் நையாண்டியின் சாயலாக ஒரு தசை வாயையும், மூக்கையும் சேர்த்து இழுத்துக் கொண்டிருக்கும். இப்போது திடீரென்று அது வேலை செய்யவில்லை. மல்லிக் சொல்வதில் சிறிது விஷயம் இருக்கும் என்று தோன்றியது. எதுவும் இல்லாவிட்டாலும் அவன் ஆராய்ச்சிக்காவது மதிப்புக் கொடுக்க வேண்டும்.

—நீ சொல்றதை ஒத்துக்கறேன். ஆனு ஒரு சின்ன விஷயம் (கோபி)

—சொல்லு!

—பிரிட்டிஷ் தளபதிங்க கப்பலைப் பெண்டாட்டி மாதிரி நினைக்கிறவங்க! ஆபத்து வந்தாலும் கடைசிவரை அதோடதான் இருப்பாங்க.

மல்லிக் நிமிர்ந்தான். —நான்தான் கப்பல் மூழ்கிடுத்து என்கிறேனே. அஞ்சு காரணத்திலே ஏதோ ஒண்ணு கப்பலை மூழ்கடிச்சுடுத்து. படகிலே தப்பி இருக்காங்க! அல்லது நீச்சல் அடிச்சிருக்காங்க! கரையிலே வந்து செத்திருக்காங்க!

கோபியின் உள் புலன் அதை ஆமோதித்தது.

அவன் மசிந்து விட்டான் என்பது மல்லிக்கிற்குத் தெரிந்ததும்,

—அது மட்டுமில்லேப்பா! இன்னும் விஷயம் இருக்கு!

என்று சொல்லித் தரையில் ஒரு பெரிய காகிதத்தை விரிக்க ஆரம்பித்தான்.

கோபியின் கண்கள் பெரிதாக விரிந்தன.

(தொடரும்)

# புஷ்பா தங்கதுரை



# கடலுக்குள் ஆவி

ஜலியைப் புயலின் ஆரம்பங்கள் தாக்க ஆரம்பித்தன.

கேப்டன் பால்மர்ஸன் தள்ளாடி எழுந்தார். திட்டுத் திட்டாகச் சருமம் வெளிறியிருந்தது. ஈறு கொழுத்து வீச்சம் அடித்தது. கால்கள் வீங்கி இருந்தன.

அவருக்கு ஸ்கர்வி பிடித்திருந்தது. துவக்கம்.

எழுந்தார். வெளியே வந்து பார்த்தார். க்ளாஸை (டெலஸ்கோப்) எடுத்து ஒருவன் கொடுத்தான். ஒற்றைக்கண்ணால் பார்த்தார். கிழக்கே இருண்ட அந்தகாரம். அலைகள் பயங்கரமுடன் வீங்கி ஓடி வந்தன, கப்பல் 'சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு!'

ஃப்ரட்ரிக் டோரியின் சடலம் முன்னால் கிடந்தது.

-கம் ஆன், என்றார் உத்தியோகக் குரலில், தளர்வு காட்டவில்லை.

....சடலத்தை எடுத்துப் போங்கள்! யார் பாய்களைக் கவனிப்பது? உடனே பாய்களை மூடுங்கள்! ராயல், டாப் காலண்ட், லோயர் காலண்ட் மூன்றையும்! சீக்கிரம் சீக்கிரம்.

தோரணை வந்த அளவுக்குச் செய்ய ஆட்கள் இல்லை.

மேலே ஏறுவது என்றால் ஆகாசத்தில் ஏறுவது போல.

அதற்கான சக்தி யாரிடமும் இல்லை. மனமும் இல்லை.

-கம்ஆன்! என்றார் உக்கிரமுடன்.-தோழர்களே! நிலத்தைப் பார்த்துவிட்டு இறப்போம்! கடலில் மூழ்க வேண்டாம்.

கப்பலுக்கு மூன்று துவஜங்கள்! 23 பாய்கள்:

காற்று விசையில் மேலே ஏறுவது கடினம். பாய்களைச் சுருட்டுவதற்கு ராட்சத பலம் தேவை.

மாலுமிகளிடம் அது இலை.

-கம் ஆன், ஆன்ஸன், கம்ஆன் சார்ல்ஸ்! நீங்கள் வீரமுள்ள இளைஞர்கள். சீக்கிரம்.

இளைஞர்கள் கிழவர்களாக இருந்தார்கள், பாதி மனத்துடன் திரும்பினார்கள்,

கப்பல் பயங்கரமாக ஆடியது. மேல் தளத்தில் அலைகள் பாய்ந்து ஓடின.

நான்கு பேர்கள் லொடக் லொடக் என்று நான்கு பம்புகளை அடித்துத் தண்ணீரை வெளியேற்றிக் கொண்டிருந்தார்கள்.

எந்த நிமிடமும் அவர்கள் வேலையை நிறுத்தி விடுவார்கள் போல இருந்தது.

எல்லோருக்கும் கேப்டன் மீது கோபம்,

கடவுளின் மீது கோபம்.

மேலே சிலர் ஏறினார்கள்,

கப்பல் மேலும் பயங்கரமாய் ஆட, அதன் பலகைகள் சத்தத்துடன் முணுமுணுத்தன.

அங்கங்கே ஆணிகள் கழல்வது போலவும் சேர்ப்புகள் உடைவது போலும் சத்தங்கள்,

காற்றின் விசை அதிகமாக,

வானம் இருட்டாக மூடி விட,

ஒரு துவஜக்கம்பத்தில் கால்வாசி ஏறிய ஒருவன் கீழே பார்த்து,-காப்டன், நீ ஒரு முட்டாள்! என்று சொல்லி, கடலுக்குள் காட்! ஸேவ் மீ சொல்லிக் குதித்தான்.

கப்பல் உருளத் தொடங்கியது,

## 5

*Arise, my soul, Arise,*
*Shake off thy guilty fears.*

*ஆளில்லாத் தென் அமெரிக்கத் தீவின் கரையில் தரை தட்டி உடைந்துபோன கப்பலில் எஞ்சிய கடைசி மூவர் உதவி கிடைக்காமல் பட்டினியால் இறப்பதற்கு முன் கோரஸாகப்பாடிய பாட்டு, அவர்கள் விட்டுப் போன டயரியிலிருந்தது.*

*நிகழ்ச்சி நடந்த கப்பல்—ஸ்பீட் வெல்,*
*நடந்த தேதி — 28 ஜுன் 1851*

மல்லிக் காகிதத்தை விரித்தபோது, ஒரு பதினேழாம் நூற்றாண்டு ஆசியக் கடல் வெளி, சோகையான கோடுகளுடனும், பழங் காலப் பூவேலை ஆங்கில எழுத்துக்களுடனும் தெரிந்தது. ஆஃப்ரிக்கா, அடி குறுகி, தலை பருத்து இருந்தது. இலங்கை ஒரு போண்டா! இந்தியா ஒரே ஒரு நதியுடன் கூடிய கைசூப்பி விரல்!

படம், மற்றொரு காகிதத்தின் மீது ஒட்டிக் கொண்டு இருந்தது.

படத்தின் பழைமையைப் பார்த்ததும் கோபியின் மனம் மல்லிக்குக்கு ஒரு சபாஷ் போட்டது.

—எங்கேடா கிடைச்சுது?

—மூர் மார்க்கெட்தாண்டா! தேடறதுக்குத் தனிக் கண் வேணும்.

படம் முந்நூறு ஆண்டுகளுக்கு முன் இத்தாலியில் உற்பத்தியாகி, நெடுந் தொலைவு காலத்திலும் இடத்திலும் கடந்து ஒரு தற்காலப் பிரஜையின் கையில் இருக்கிறது. அப்படி நினைக்கும்போது கோபியின் மனம் குளிரிட்டது. படத்தை லேசாகத் தொட்டான். அதன் மூலம் ஒரு பழைய காலத்தைத் தொட்டது போல உணர்ச்சி!

—இந்த அரை குறை பூகோளப் படம்தான் அந்தக் காலத்திலே புழங்கியது! இதப் பாரு! இப்படித்தான் ஜூலி வந்தா.

நீளமான விரலே இங்கிலாந்திலிருந்து இழுத்து மடீரா வழியாக ஆஃப்பிரிக்கா மண்டையைத் தாண்டி ஸெயிண்ட் ஹெலினுவில் வந்து நிறுத்தினுன். சுற்றிச் சூழ அட்லாண்டிக் கடல்.

—ஏண்டா நடுக் கடல்லே நிக்கறே!

—ஹெலினுத் தீவுடா! இதுவரைக்கும் ஜூலி வந்ததா ரீக்கார்ட் உண்டுடா!

—அப்புறம்?

அப்புறம் எங்கே போனு தெரியாது. அமெரிக்கா பக்கம் போயிட்டதுன்னு சில பேர் சொன்னுங்க! மடகாஸ்கர் வரை போய் அங்கே கடற் கொள்ளைக்காரங்க கிட்டே அகப்பட்டதுன்னு சிலபேர் சொன்னுங்க! ஆக மொத்தம் கப்பல் இந்தியா வந்து சேரலேன்னு நம்பிக்கை.

—உனக்கு மட்டும் ஞானேதயம் ஏற்பட்டதாக்கும்?

—ஞானேதயம் இல்லேடா! குருட்டு அதிர்ஷ்டம்!

—எப்படிச் சொல்லு!

—சொல்றேன். ஜூலி போன திசையைப் பாரு, இப்படிக் கீழே இறங்கி...

ஆஃப்பிரிக்காவின் தென் மூலையைத் தாண்டி மடகாஸ்கர் கீழே வழியாக மோரிஷியஸில் வந்து நின்றுன். சுற்றிவர இந்திய மகா சமுத்திரம் அலே மோதியது.

—இங்கே வந்ததா? (கோபி)

—ஆமாங்கறேன்.

—என்னடா ஆதாரம்?

—காரைக்கால் கலியபெருமாள் டயரிடா! தலே சுற்றியது. —யார்ரா அது கலிய பெருமாள்?

மல்லிக் நிமிர்ந்தான். —ஒரு கங்காணி. பத்தொன்பதாம் நூற்றுண்டு முன் பகுதியிலே வாழ்ந்தாரு. ஆனந்தரங்கம் பிள்ளை மாதிரி அவருக்கும் கியாதி அடையுணும்னு ஆசை. மோரீஷியஸ் தீவிலே இருந்தப்போ டயரி எழுதினுரு.

—அந்தத் தீவுக்குப் போனுரா?

—1835லே போனுரு. கரும்புத் தோட்டத்திலே கங்காணியா. பணம் சம்பாதிச்சு பெரிய மனுஷனுயி போர்ட் லூயியிலே பங்களா கட்டி வாழ்ந்தாரு. இருபது வருஷமா டயரி எழுதினுரு.

—அந்த டயரி உனக்குக் கிடைச்சுதா?

—ஆமாம்.

—யாரிட்டே ரீல் விடறே?

—ரீல் இல்லே, பாருடா மக்கு!

சடங்குகள் செய்து எடுப்பது போல் ஒரு துணிப் பையுள் கைவிட்டு அட்டை போன பழங்காலப் புத்தகத்தை சர்வ ஜாக்கிரதையாக எடுத்தான். —இதப் பார்ரு!

பார்த்தான்.

சென்னை கோமளீஸ்வரன் பேட்டை சுந்தர மனமோகன விலாசத்தில் 1888ல் அச்சிடப் பட்டிருந்தது. அரங்கசாமிப் பெருமாளால் பிழையற பரிசோதிக்கப்பட்டிருந்தது. அதன் தலைப்பு,

பிரத்தியேகமான
காரைக்கால் கலியபெருமாளுர்
தினப்படி சேதி குறிப்பு
சொஸ்த லிகிதம்

பிரித்தால் தாள் பொடியாகும். பூப் போலப் பிரித்தான்.



ஐப்பசி மீ 30க்கு நொவம்பர் மீ 11ல. சோமவாரம் (நொவம்பர் — பிரஞ்சு உச்சரிப்பு)

....இற்றை நாள் காலேயில் முக பிரக்ஷணம் பண்ணிக் கொண்டு பழயது சாப்பிட்ட பிறகு....

கோபிக்கு அந்த வார்த்தைகளும், புத்தகத் தோற்றமும் ஒரு மந்திரப் பிரயோகம் போல வேலே செய்தன.

அவற்றில் அமானுஷ்யமாக ஏதோ இருப்பதுபோல் நினேத்தான். உற்சாகமாகவும் திகிலாகவும் இருந்தது.

—ஏண்டா! உன்னே என்னமோன்னு நினேச்சேன். பெரிய ஆளா இருக்கியே! இன்னும் என்னெல்லாம் சேர்த்து வச்சிருக்கே!

—நிறைய இருக்கு. போகப் போகக் காண்பிக்கிறேன்.

—இந்தப் புஸ்தகம் எங்கே வாங்கினே?

—நீ சொன்ஞ நம்ப மாட்டே! மயிலாப்பூர் கோவில் வாசலிலே.

கோபியின் மூக்கில் விரல் வைத்தது வைத்தபடி!

—சரி, நம்ப ஆராய்ச்சியைக் கவனி. உலகத்திலே யாருக்கும் தெரியாத சமாசாரம் எனக்குத் தெரிஞ்சிருக்கு. அது ஒரு அதிர்ஷ்டம்டா!

கோபிக்கு எச்சில் ஊறியது.—சொல்லுடா!

—கோபி! கோடிக் கணக்கான மதிப்புள்ள தங்கம், வெள்ளியோடு ஜூலி மறைஞ்சு போயிட்டா! பிரிட்டிஷ் கவர்ன்மெண்ட் அதைத் தேடிக் கைவிட்டாச்சு. புதையலேத் தேடி அலேவாங்களே, அவங்க நூறு வருஷமா ஜூலியைத் தேடி அலுத்தாச்சு! லாயிட்ஸ் ரிஜிஸ்டர் ஆஃப் ட்ரெஷர் ஷிப்ஸ்லே, ஜூலி தீர்மானமாக் கிடைக்கவேயில்லேனு எழுதியாச்சு. இந்த நேரத்திலே ஜூலி இருக்கிற இடம் எனக்குத் தெரிஞ்சுபோச்சுடா!

கோபிக்கு கார்ட்டர் போல் வாயெல்லாம் பல்! —சரி, விட்ட குறைக்கு வாடா! என்று இழுத்தான்.

—வர்றேன். கலியபெருமாள் டயரியிலே ஜூலே மாசக் கடைசி வாரத்திலே ஒரு செய்தி இருக்கு! வாசிக்கிறேன் பாரு!

**உணவுப் பொருட்கள் அடைத்து வந்த டின்களேத் தூக்கி எறிவதால் சுற்றுப்புறம் அசுத்தமாகிறது. இதைத் தடுக்க ஓர் அமெரிக்க விஞ்ஞானி சாப்பிடக் கூடிய 'டின்'களேக் கண்டு பிடித்திருக்கிருர்! உணவுப் பொருட்களோடு இந்த 'டின்'னேயும் சாப்பிட்டு விடலாம்!**

**காரவானிலிருந்து —கோ. தீபா**



....வெல்லச் சிப்பம் கொண்டு போன தோணிகள் புயலிலே அலமாந்து போக, நயினுரப்பன் தோணி தாறுமாருகப் போய்க் கடலிலே வெகு தூரம் போய்விட, அவ்விடத்திலே மழை அடிச்சபடியினுலே எல்லாமே மூடி திசை தெரியாமல் போனவாறே நயினுரப்பனும், தோணியாட்களும் விசனப்பட்டுக் கொண்டு இருக்க, மற்றைய நாள் விடிந்தவாறே நாலு நாழிகைக்குப் பின்னுலே வானம் வெறிச்சு எல்லாம் நல்லபடியாச்சு. அந்த வேளேயிலே ரொம்ப சமீபத்திலே ஹெச் எம். எஸ். ஜூலிகா பெயரோடு ஒரு கப்பல் வடகிழக்கு நோக்கி ஓடிப் போனதாகவும், அதன் பாய்மரம், துவஜஸ்தம்பம், சுக்கான் எல்லாம் பழுதுபட்டுப் போனதாகவும், ஆள் இல்லாக் கப்பல் போல அது இஷ்டப்படி போனதாகவும் பார்த்து என்னிடம் வந்து சேதி சொன்னுன். கப்பலிலே எந்தச் சீமான்கள் போனுர்களோ, என்னென்ன கஷ்டப்பட்டார்களோ...

மல்லிக் தினப்படி சேதியை மூடினுன். —இந்த விஷயம் யாருக்கும் தெரியாத ஒரு சேதிடா! தமிழ்ல ஒருத்தர் எழுதினதாலே, நமக்குத் தமிழ் தெரியறதுனுலே இந்த விஷயம் நமக்குத் தெரிஞ்சுது. அதாவது மோரீஷியஸ் பக்கம் வழியாக வட கிழக்காலே ஜூலி போயிருக்கா!

கோபிக்கு விஷயம் சுறுசுறு என்று பற்றியது.

உண்மையிலேயே உலகத்தில் யாருக்கும் கிடைக்காமல் மறைந்த ஒரு மாபெரும் ரகசியம் அவர்கள் கையில் சிக்கி விட்டதா?

உச்சி குளிர, —அப்போ கப்பல் மோரீஷியஸ்ஸுக்குப் போகல்லேயா? என்று கேட்டான்.

-ஆமாம். அதன் மடியிலே கனம் இருந்தது. மோரீஷியஸ்லே பிரஞ்சு அனுதாபிங்க நிறைய! அங்கே போனு ஆபத்து! அதுனுலே நேரே இந்தியா நோக்கிப் போயிருக்கு.

கோபிக்கு மயிர்க்கூச்சல் எடுத்தது.

—இன்னெரு விஷயம்! இந்த டயரி சமாசாரம் மேனுட்டுக்காரன் யாருக்காவது தெரிஞ்சா, இந்நேரம் இந்திய சமுத்திரத்தைச் சலித்து எடுத்திருப்பான்.

—சரி, ஜூலி அங்கிருந்து நேரே இந்தியாவுக்கு வந்ததுக்கு என்ன சாட்சி?

—எலும்புக் கூடுடா! பாட்ஜ்! டெலஸ் கோப், எழுத்து! இதை வச்சுத்தான் இந்தியாவரை அந்தக் கப்பல் வந்திருக்குன்னு தீர்மானம் பண்ணிட்டேண்டா!

மூட்டை கட்டி எழுந்தான் மல்லிக். —இப்போ சொல்லு என்னேடு கனிநாகலாபுரம் வர்றியா, இல்லேயா?

சிட்டி சிட்டி பாங் பாங் என்று தாராள புகை விட்டு ஓடியது சல்தி கா நாம் காடி!

கிராமப்புறம் நடுங்கிக்கொண்டு இரண்டு புறமும் வழிந்தது.

மெக்கானிகல் சல்லடையில் பண்டங்கள் அகப்பட்டாற் போல் பிரயாணிகள் கிடுகிடுத்தார்கள்.

க்வாங் க்வாங் என்று உயிரை விட்டு ஹாரன் ஓரம்போ பாட, இரண்டு பக்கப்

படுதாக்கள் சிறகடிக்க, நாட்டுப்புற அமை தியைக் கடகட என்று பெயர்த்துக்கொண்டு ஒரு விசித்திரப்பிராணி போன்று பஸ் ஓடியது. நடன சபாபதி சர்வீஸ்.

கோபி தூங்கிக் கொண்டிருக்க, மல்லிக் எதிரே இருக்கும் இருவரின் தோள்களுக்கு இடையே, அதற்கு அப்பால் உள்ள ஸீட்டில் அடிக்கடி தெரிந்து கொண்டிருக்கும் புதிரான பெண்ணைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

அவள் தெரிந்து கொண்டிருக்கிருளா, தெரிய வைத்துக் கொண்டிருக்கிருளா?

கண்ணில் நம்பகமுள்ள மிளிர்வைக் காட்டி இடையே துளியான புன்னகையைச் சொட்டுகிருள்.

அவளது கறுப்பு ஒரு பழக்கமில்லாத கறுப் பாக இருந்தது. அசல் நாட்டுப்புறமோ? இல்லை; நெற்றியில் படிப்பு இருந்தது. ஸ்கை-புளூ பாலியிஸ்டர் ஸாரியும், சோளியும் அவளை உயர் வர்க்கத்துக்கு இழுத்தன.

கழுத்துக்குக் கீழ் எப்படி இருப்பாள் என்று பார்க்க அடங்காத அவா. ஆனுல் ஸீட் மறைத்தது.

இடையில் பஸ் ஏதோ ஒரு சாவடியில் நிற்க, பிரயாணிகள் கீழே உதிர்ந்தார்கள்.

பலர் பக்கத்திலிருந்த மேட்டில் ஏறி வாய்க்கால்களைத் திறந்துவிட,

பலர் இளநீர்க்காரியைச் சுற்றி மொய்த் தார்கள். 'இளநி இளநி' என்று இரண்டு சின்னவர்கள் அந்த சினிமா —இருபொருள் பாட்டைப் பாட, இளநீர்க்காரிக்கும் அந்த அசப்புத்தான்!

இளநீரைப் பெற்று ஸ்ட்ராவுடன் வெளி வர, கறுப்புப் பெண் பளீரென்று நின்ருள். கறுப்பு சொன்னுல் ரோஸ்வுட் கறுப்பு. மழ மழவென்று மினுக்க, கறுப்பு மார்பிளில் கடைந்தது போல.

உடம்பு ஒரு தேகாப்பியாச வனப்பைக் காட்டியது. வைரமான நெஞ்சுகள். இடுப்பு இரும்பான வார்ப்பு. தசைகள் முறுகிய மெழுகு போல் மெழுகிக் கீழே வழிந்தன.

தேகம் பார்த்த இடமெங்கும் குறு குறுவென்று அழகும் ஆரோக்கியமும்.

இளநீரை முழுவதுமாக உறிஞ்சு முன் இருமுறை பார்க்க, இரண்டாவது முறை யில் அவள் அவன் பார்வைக்குப் பதில் கொடுத்தாள்.

ஐந்து நிமிடத்தில் எல்லாச் சிதறல்களையும் சேர்த்து பஸ் ஏக ரூபமாகிப் புறப்பட,

மீண்டும் நாட்டுப் பாட்டையிலே சிட்டி சிட்டி, பாங், பாங்!

தென்னை வரிசைகள் வந்த பிறகு, கண்டக் டர் உச்சமாக, ரங்கூன் பங்களா என்று கத்தினன்.

பஸ் உதறல்களைக் குறைத்து, சீக்கிரம் அடங்கி, பெட்ரோல் சாப்பிடாமல் கொஞ்ச தூரம் ஓடி நின்றது.

அந்தப் பெண் இறங்கினுள்.

இரண்டடி தள்ளிப் போனதும் திரும்பி முழுசாக ஒரு பார்வை அவன் மீது அழுத் தினுள். இதயம் இறக்கை அடித்தது.

பஸ் மீளவும் புறப்பட்டது. திடீரென்று அது நிற்க வெளியே போலீசார்கள்.

(தொடரும்)


கல்கி-சாரதாஸ்

பட்டுப்புடவைகள் பரிசுத்திட்டம்

மகளிர் மட்டுமே கலந்து கொள் ளச் சுவையான எளிய வாசகர் பரிசுத்திட்டம்: முதல் பரிசு ரூ.750 பெறுமானமுள்ள சாரதாஸ் பட் டுப்புடவை. இரண்டாவது, மூன்று வது சாரதாஸ் பட்டுப்புடவை பரிசு களும் உண்டு. விவரங்களுக்கு கல்கி மகளிர் சிறப்பிதழ் காண்க.




குயிலி ராஜேஸ்வரி தயாரித்தளிக்கிறர்

# கடலுக்குள் ஜூலி

புஷ்பா தங்கதுரை



...."These common appearances are large discoloured spots dispersed over the whole surface of the body. swelled legs, putrid gums, and, above all, an extraordinary lassi tude of the whole body, especially after an exercise, however inconsiderable; and this lassitude at last degenerates into a proneness to swoon on the least exertion of strength or even on the least motion"

*ஸ்கர்வி நோயைப் பற்றி 1741ல் 'ஸெஞ் சூரியன்' கப்பலில் பிரயாணம் செய்த டாக்டர் வால்டர் எழுதியுள்ளது.*

கடலின் அமோக ஆர்ப்பரிப்பில் மாலுமி புதைந்து போக, பால்மர்ஸன் அயர வில்லை.

—கம் ஆன்! யாராவது மேலே ஏறுங்கள், சீக்கிரம்!

தளத்தில் எஞ்சியிருந்த மூன்று பாய்க்காரர்களும் மேலே ஏறத் தொடங்கினார்கள். அவர்கள் உடம்பும் துணிகளும் நனைந்திருந்தன, கைகளும் கால்களும் ஈரமாகி இருந்தன. காப்டனிடம் ஈரம் இல்லையே என்று மனத்தில் திட்டியவாறு ஏறினார்கள்...

பாயை மடக்குவதோ, பிரிப்பதோ எளிதல்ல! சோதனையான வேலை. சாதாரண காலங்களில் கூட ஒருத்தரது முழுத்திறனும் வேண்டியிருக்கும்.

இப்போது காற்று அடித்து. கப்பல் மூட்டோடு ஆடும் போது, அது ஒரு கிட்டத்தட்ட முடியாத வேலை. ஆபத்தானதும் கூட.

புயல் சீராக ஏறிக்கொண்டிருந்தது, கடல் பெரிய மேடு பள்ளங்களை ஏற்படுத்த, ஜூலி மலைகளில் ஏறுவதும் பாதாளத்தில் விழுவதுமாக இருந்தது. அதன் மரச் சட்டங்களும், பிணைப்புக்களும் இணைப்புகளும் பெருத்த ஓசையோடு கூச்சல் போட்டன.

அடிக்கடி மரங்கள் முறிவதுபோல் இடிச்சத்தங்கள்.

எல்லோரும் திடுக்கிட்டு என்ன நிகழுமோ என்று அஞ்சி அலமந்தார்கள்.

பால்மர்ஸனுக்குக் கோபம் வந்தது. எல்லா ஆட்களும் என்ன ஆனார்கள்? எல்லாருக்குமா ஸ்கர்வி வந்திருக்கிறது? சும்மா ஏமாற்றுகிறார்களா?

கீழ்த்தளத்திற்குப் போக விரும்பி, விறு விறு வென்று ஏணியில் இறங்கினார்.

பத்து படிகள் இறங்கியதும் ஆயாசம் பெரிய இறக்கையோடு அவரை மூடியது. கம்பிப்படியில் உட்கார்ந்தார்.

கப்பல் ஒரு முறை சாய்ந்து அவரை ஏணி இரும்பில் மோதியது.

தடுமாறினார். மூச்சு இரைத்தது.

ஆசுவாசம் அடைய நேரம் எடுத்தது.

பிறகு பழைய சீற்றத்தையும், வேகத்தையும் பிடித்துக்கொண்டு கீழே இறங்கத் தொடங்கினார்.

இறங்க இறங்க இதென்ன நாற்றம்.! இதென்ன அச்சம்!

கப்பலின் கர்ப்பத்துள் போவது போல இருந்தது.

ஒரே இருட்டு மயம்.

காற்றும் வெளிச்சமும் முதல் தளத்தோடு நின்று விட்டது.

கைக்குட்டையால் மூக்கை மூடி இருட்டில் இறங்கி, இரண்டாம் தளத்தை அடைய,

மெள்ள மெள்ள தளத்தின் காட்சி கண்ணில் உற்பத்தியாகியது.

தளம் முழுதும் தூளிகள். (ஹாம்மாக்) நெருக்கமாக அவை தொங்கின கப்பல் சட்டத்தின் படி ஒன்றுக் கொன்று இடையே பதினான்கு அங்குல இடைவெளி இருக்க வேண்டியவை

இங்கே ஒரு அங்குலம் கூட இல்லாமல் நெருக்கி அடிக்க, கப்பலின் ஆட்டத்தோடு அவையும் ஆட,

அதில் படுத்திருந்த நோயாளிகள் அனைவரும் உபாதையால் ஆ, ஊ என்று பயங்கரமாக அலறிக் கொண்டிருந்தார்கள்.

-எங்கே தச்சர்கள்? என்று கத்தினார் காப்டன்.

## 6

*போலீசார், வண்டியை நிறுத்திக் கனி நாகலாபுரம் யார் யார் போகிறார்கள், யார் வீட்டுக்குப் போகிறார்கள்? என்று விசாரித்தனர்.*

*மல்லிக்கும் கோபியும் கோயில் அர்ச்சகர் பெயரைச் சொல்லித் தப்பித்தார்கள்.*

*வண்டி மீண்டும் புறப்பட்டபோது அதைப் பற்றி ஒரு கசா முசா சத்தம் பஸ்ஸின் இரைச்சலை விட அதிகமாக இருந்தது.*

*—சொந்த வீட்டுக்குப் போறதுக்குக்கூட பாஸ்போர்ட் கேட்பாங்க போல இருக்கே! என்று கீச்சுக் குரலில் ஒருவர் கத்த, சிலர் மட்டும் புரிந்து சிரித்தார்கள்.*

*ஊர் வந்ததும் இறங்கினார்கள்.*

*வெளுப்பு மணலில் நடந்து, தெருவை அடைந்து உள்ளே நுழைந்ததும், திண்ணையில் அவள் உளுந்து புடைத்துக் கொண்டிருந்தாள்.*

*ஒரு காலைக் குத்தியிட்டு, ஒரு காலை மடித்து வைத்திருக்க, குத்தியிட்ட காலில் கத்திரிப்பூ பாவாடை அபிஷேகமாக வழிந்திருந்தது. கொஞ்சம் கோணலாக உட்கார்ந்து,*

*களைகைச் சளக் சளக்கென்று கோதிக் கொண்டிருந்தாள்.*

சுளகுக்கு ஒரு நாக்கு முளைத்தது போல் உளுந்து மேலே போய்ச் சுளகில் விழுந்து கொண்டிருந்தது.

அவர்களைப் பார்த்ததும் சுளகை நிறுத்தினாள். ஒரு புன்னகை மொட்டு மெள்ள உதட்டில் வந்து குறுகுறுத்தது. கண்கள் பழைய பரிச்சயத்தில், குசலம் கேட்க எத்தனித்தன.

அவர்கள் திண்ணைக்கு வந்தார்கள்.

....கோயிலையே தூக்கிட்டுப் போயிருவாங்க எத்துவாளிங்க....

இவர்கள் எத்துவாளிகளா, நல்லவர்களா?

—மிஸ்....

—என் பெயர் சம்பகா!

—தேங்க்யூ. எம்பேர் மல்லிக், இவன் பேர் கோபி. ஒரு காரியமா வந்திருக்கோம். உங்க வீட்டைச் சொல்லித்தான் தப்பிச்சோம். போலீஸ்காரங்க பிடிக்கறாங்க.

—ஆமா; ஊரைச் சுத்திக் காவல் போடச் சொல்லிட்டா.

—யாரு?

—தாசில்தார்.

—எதுக்கு?

—நிறையப் பேர் புதையல் தேட வராங்க. ஒரு வடக்கத்தி ஆளு கூட வந்துட்டாரு...

மல்லிக்குக்குச் சுருக்கென்று தைத்தது. தன்னைவிடப் புத்திசாலிகள் எவ்வளவோ பேர் இருக்கிறார்கள். ஆனால் வெறும் புதையலைத் தேடி வந்திருப்பார்களா? அல்லது கப்பலைத் தேடி....

நிச்சயம் கப்பலைத் தேடி வந்திருக்க முடியாது. பிரத்தியேக அறிவு வேணும் அதற்கு...

—இப்போ... நாங்க ஒரு காரியமா....?

வார்த்தைகளைக் கொஞ்சம் இழுத்தான்.

—என்ன காரியம்னு சொல்லுங்க, தயங்கறீங்களே!

குத்தியிட்ட காலைச் சுற்றிக் கைகளை வளையம் கோத்து மெள்ளத் தாலாட்டம் செய்தாள்.

அப்போது, அந்தக் கத்தரிப்பூக் கொசுவங்களில் ஏற்படும் பிரிவுகளைக் கவனித்து விட்டுக் கோபியின் நெஞ்சு படக் படக்கென்று அடித்தது.

—ஒரு விஷயம்! கொஞ்சம் ரகசியம், பெரிய ரகசியமும் இல்லே...

அவளுக்குச் சிரிப்பு ஓடி வந்தது. சிரமப்பட்டு அதை மூடிக் கொண்டு,—சொல்லுங்க, என்றாள்.

—நா ஒரு வம்சாவளியைத் தேடிட்டு வந்திருக்கேன்.

—சரி!

—பால்மர்ஸன்னு ஒரு கப்பல் தளபதி! அவனோட வம்சம்!

—சரி!

—நா அந்த பாட்ஜைப் பார்த்துட்டேன்னு ரொம்ப உதவியா யிருக்கும்.

—சரி!

—அதுக்கு வழி செய்ய முடியுமா?

—அந்த எலும்புக் கூடோடு கிடைச்ச பாட்ஜா?

—ஆமா!

—ஐயோ, அது கிருஷ்ணன் கிட்டே இருக்கு. என்னைத் தொலைச்சுடுவாரு.



அவன் முகம் அணைந்தது.

உதட்டை மென்று, அங்குமிங்கும் பார்த்தான். —இல்லே, மிஸ்...சம்பகா! அதைப் பார்த்துட்டோம்னு எங்களுக்குப் பெரிய சந்தேகம் தீர்ந்த மாதிரி.... நீங்க கொஞ்சம் தயவு வச்சா....



—தயவு வச்சா?

—கிருஷ்ணன் பாட்ஜைக் காண்பிப்பாரு.

—நிச்சயம் மாட்டாரு! அவர் சுபாவம் உங்களுக்குத் தெரியாது.

மல்லிக்குக்குச் சர்வ நாடியும் விழுந்தது. சிறிது நேரம் தயங்கினான்.

—அப்போ, உங்களாலே முடியாதா? என்றான் மெதுவாக.

—நிச்சயம் முடியாது.

அவன் தலை குனிந்து நடக்க, கோபி அவனுடன் சேர்ந்து கொண்டான்.

இருவரும் பஸ் ஸ்டாண்டை அடைந்த போது, —வேறு ஏதாவது வழி இருக்கிறதா? என்றான் கோபி.

—எதுக்கு?

—அந்த பாட்ஜைப் பற்றித் தெரிந்து கொள்ள.

—அதைத்தான் யோசிக்கிறேன். எனக்கு ஒரே ஒரு உதைப்பு. எச். எம். எஸ். போட்டவங்க ஜே யோட நிறுத்த மாட்டாங்க. முழுசாப் போட்டிருக்கணும். ஜே யிலே நிறுத்தினதாலே உதைக்கிறது. என் அனுமானம் எல்லாமே தப்பிதமோன்னு தோணுது.

—அப்படி ஒண்ணும் ஆகாதுடா!

—நீ சொல்றே, சரி! ஆயிடுத்துன்னா?

பஸ் ஸ்டாண்ட் என்பதற்கு எந்த அறிகுறியும் கிடையாது. இரண்டு வேப்பமரங்கள் பின்னிக்கொண்டு வளர்ந்து, கீழே பழங்களை உதிர்த்திருந்தன.

ஒரு துண்டு கட்டிய சிறுமி கொட்டாங் குச்சியில் பழங்களைப் பொறுக்கிக் கொண்டிருந்தாள்.

பக்கத்தில் அந்த ஒரே ஒரு 'மல்டி பர்பஸ் கடை' 'பன்'னையும் விற்றது; பத்திரிகையையும் விற்றது.

ஒரு கலரை வாங்கிக் குடித்து, —இப்போ என்ன செய்றதுடா? என்றான் கோபி.

—இரு... .!

கலரைக் கொஞ்சம் முகம் சுளித்துக் குடிக்க வேண்டி வந்தது.

....ஒரு காரியம் பண்ணுவோம்; ஊரிலே வயசானவங்க யாரையாவது தேடணும். பெரிய ஏப்பம் விட்டான்.

—கடைக்காரரே! ஊரிலே ரொம்ப வயசானவங்க யாராவது இருக்காங்களா?

—ரொம்பன்னா எத்தினி வயசு?

—ஒரு எழுபது வயசுக்கு மேலே...

—அண்ணாவி இருக்காரு!

—அவர் யாரு?

—பஞ்சாயத்து நாட்டாரோட அப்பாரு. தொண்ணூத்து மூணு வயசு. அந்தக் காலத்திலே திண்ணைப் பள்ளிக்கூடம் நடத்தினாரு.

—இந்த ஊர்லே இருந்தவர்தானே?

—இங்கயே பிறந்தாரு, இங்கயே வளர்ந்தாரு. பழைய கதையெல்லாம் சொல்லுவாரு.

அப்படித்தான் அவர் சொன்னார்.

மகாபாரதத்திலிருந்து ஆரம்பித்து வம்சாவளி நீட்டிக் கொண்டு வந்தார்.

அந்த ஊரிலே அர்ச்சுனன் வந்து வேட்டை ஆடினதாகவும், தண்ணீருக்காக பூமியை வெட்டப் போய் லிங்கம் வந்ததாகவும் கூறினார்.

புராணத்திலிருந்து மெள்ளத்தான் சரித்திரத்தைப் பிரித்து எடுக்க முடியும்.

—ஊரில் கடலும் கோயிலும் பிரமாதமா இருக்கே! ஏதாவது விசேஷம் உண்டா?

—ஆழித் தழசு நழக்கும் (ஆடித் தபசு நடக்கும்) என்றார் கிழவர். பொக்கை வாய் நிறைய ஞானக்களை கீழே கொட்டியது.

—அதச் சொல்லலே! கடல் பக்கம் இருக்கே! அந்த நாளிலே கப்பல் கிப்பல் வருமான்னு....

—அதெல்லாம் வராது. ஊரு குக்கிராமம். மேடு.

—புயல், கியல் வருமா?

—வர்ரும்! வந்தா அந்த நாள்லே கப்பல் கிப்பலைக் கொண்டு தள்ளுமாம். எங்க பாட்டனாரு சொல்லியிருக்காரு.

### சர்வமத சமரசக் கோவில்

கோவிலின் கர்ப்பக் கிரகத்தில் பிரதிஷ்டையாகி இருப்பது சிவலிங்கம். அர்ச்சகர்களோ வைணவர்கள்! கோவிலை நிறுவிப் பரம்பரை பரம்பரையாகப் பரிபாலனம் செய்பவரோ சமணர்கள். கோவிலுக்கு ஏராளமாக நேர்த்திக் கடன் செலுத்துபவரோ முஸ்லீம்கள் - கிறித்தவர்கள்! இத்தகைய சர்வமத சமரசக் கோவிலாய்த் திகழும் ஸ்ரீ மஞ்சு நாதஸ்வாமி கோவில் கர்நாடக மாநிலத்தில் உள்ளது. மங்களூரிலிருந்து ஐம்பது மைல் தூரத்திலுள்ள ஸ்ரீ தர்மஸ்தலாவிற்குச் செல்வோமானால் இப்படியொரு காணக் கிடைக்காத காட்சியைக் கண்டு களிக்கலாம்.

-என். எஸ். முத்துகிருஷ்ண ராஜா



—எங்கே தள்ளுமாம்! ஊர் கரையிலயா?

—அதெல்லாம் தெரியாது! அந்தாண்டை ஆத்துப் பக்கத்திலே இருக்கும்.

—வேறே என்ன சொன்னாரு?

—இவ்வளவுதான் சொன்னாரு.

—யோசிச்சுப் பாருங்க தாத்தா!

தாத்தாவுக்குக் கோபம் வந்தாப் போல. முகத்தைச் சிடுசிடுத்து, —எதுக்கு யோசிக்கணும்; தெரிஞ்சதைச் சொன்னேன். சொல்லியாச்சு. எங்க பாட்டனாரு பாய் மரத்திலே போய் இளநி விப்பாராம்! சொல்லியிருக்காரு. வெள்ளைக்காரன் கப்பல் வருமாம். இளநி, வேர்க்கடலை, காய்கறி எல்லாம் விப்பாராம். ஊரு செளிச்சதுடான்னு சொல்லியிருக்காரு. அவ்வளவுதான்! எல்லாம் ஆச்சு! போங்க.. .போங்க.

என்று அவ்வளவு வார்த்தைகளையும் ஒரு சின்னக் கோயில் மணி போல் முணு முணுவென்று முணுத்துவிட்டு, மெதுவாக உலைந்து வெகு நீளமான கால்களை நீட்டிப் படுக்க, அவரது கம்பு தொடக்கென்று கீழே விழுந்தது. ரொம்ப சுவாரசியமான கட்டத்தில் படம் 'கட்'டான மாதிரி.

கொஞ்சம் தயங்கி நின்று, இனிமேல் மசியாது என்று தெரிந்த பிறகு, மெள்ள வெளியே வந்தான் மல்லிக். வாசலில் கன்றுக் குட்டி அவனைப் பரிதாபமாகப் பார்த்தது.

புழுதியில் நடந்தார்கள்.

—நீ ரொம்ப அவசரப்பட்டுட்டே, என்றான் கோபி.

—அப்படியா சொல்றே? என்றான் மல்லிக்.

—ஒரே நாள்லே ஒரே இண்டர்வியூவிலே எல்லாத்தையும் கறந்துட முடியுமா? கிழவருக்கு ஒரு வாழ்க்கையிலே பல ஜன்மங்கள் இருக்கு! அவரோட ஒவ்வொரு பருவமும் ஒவ்வொரு ஜன்மந்தான். அதில் எதிலயாவது அவர் தோண்டி விஷயத்தை எடுக்கணும்னா நாம்ப டயம் கொடுக்கணும்! இதப் போல ஒரேயடியா ஒரே நேரத்திலே....

பூவரசு நிழல்களைப் பூசிக் கொண்டு நடந்தார்கள்.

மல்லிக்கின் மனம் யந்திர வேகத்தில் ஓடியது. ஒரு விஷயம்! அது போதும்! புயல் வருமாம்! கப்பல், கிப்பல்களை இங்கே கொண்டு தள்ளுமாம்! அடேடே! எவ்வளவு பெரிய செய்தி.... பெரிய செய்தி!—மனத்துக்குள்ளே ஒரு பெரிய மல்லிக் கையைத் தூக்கி வானத்தில் எறிந்து கூவினான்.

இருவரும் ஒரு மதகடிப் புல் தரையில் உட்கார்ந்துகொள்ள, மல்லிக் அந்த ஓடையில் துள்ளும் மீன் துணுக்குகளைப் பார்த்தவாறே சிந்தனைக்குள் பெரிதாக ஓடிக்கொண்டிருக்க, கோபி மெள்ள நழுவி, ஒரு பரந்த நெல்லி மரத்தை நோக்கி நடையைக் கட்டிக் கொண்டிருந்தான்.

சிறிது நேரமாகி, கொஞ்சம் சுய நினைவு வரும் வேளையில், அருகில் நிழல் வருவதைப் பார்த்து, —கோபி, எங்கேடா போயிருந்தே? என்று சொல்லி அவன் வேகமுடன் திரும்ப, அங்கே அந்தப் பெண் ஒரு கல் மீது, ஒரு கிராம தேவதை போல் நின்றிருந்தாள்.

கண் அவன்மீது தீவிரமாக விழுந்திருந்தது

(தொடரும்

# புஷ்பா தங்கதுரை



# கடலுக்குள் ஜூலி

**முன்கதைச் சுருக்கம்**

கனிநாகலாபுரம் கிராமத்தில் மண் அரிப்பு ஏற்பட்டதில் மூன்று எலும்புக் கூடுகளும், ஒரு உலோக பாட்ஜும், குழாயும் கிடைக்கின்றன. பாட்ஜில் எச். எம். எஸ், ஜே. என்று போட்டிருப்பது மல்லிக்கைக் கவர்கிறது.

எச். எம். எஸ். ஜூலி காலண்ட் என்ற பிரிட்டிஷ் கப்பல் 1841ல் ஏராளமான தங்கம் வெள்ளி சரக்குகளுடன் இந்தியாவுக்கு வரும் வழியில் காணாமல் போய்விட்டது அவனுக்குத் தெரியும். இதை டில்லான் வொய்ட் என்ற ஆங்கிலேயர் மூலம் அவன் அறிந்திருந்தான்.

இப்போது அந்தக் கப்பல் கனி நாகலாபுரம் அருகில் வந்து மூழ்கி இருக்க வேண்டும் என்று மல்லிக் நிச்சயம் கொள்கிறான்.

அந்த ஊரைத் தேடிப் போகிறான். கோவில் அர்ச்சகர் பெண் சம்பகா அவனுக்கு உதவி புரிகிறாள்.

ஆனால், மண் அரிப்பைத் தடுக்க வந்திருக்கும் அரசாங்கப் பணியாளர்கள் அவனிடம் விரோதம் காட்டுகிறார்கள்.

முதல் தடவை வெற்றி ஏதும் காணாமல் திரும்பிய மல்லிக் தன் நண்பன் கோபியுடன் கலந்து ஆலோசிக்கிறான்.

ஜூலி காலண்ட் கப்பல் இந்தியா வந்ததற்கான தடயங்கள் மேலும் கிடைத்திருப்பதை அவனிடம் கூறுகிறான்.

கோபிக்கும் ஒரு சுவாரஸ்யம் ஏற்பட்டு இருவரும் அந்தக் கிராமம் போகிறார்கள்.

அந்தப் பெண்ணின் உதவியை நாடுகிறார்கள். உலோக பாட்ஜைப் பார்ப்பதற்கு ஏற்பாடு செய்தால் நல்லது என்று தெரிவிக்கிறார்கள். அவள் உதவி செய்ய மறுக்கிறாள்.

சோர்ந்து போய் ஓர் ஓடைக் கரையில் மல்லிக் உட்கார, அந்தப் பெண் சம்பகா அவனைத் தேடி வருகிறாள்.

## இனி இவ்வாரக் கதை

எங்கே தச்சர்கள்? என்று பால்மர்ஸன் கேட்டபோது, — ஏன் எதற்கு வேண்டும்? என்றார் வில்லியம் எஸ்டன். அவர்தான் கப்பலின் மாஸ்டர், கேப்டனுக்கு அடுத்தபடியானவர்.

- இங்கே வெளிச்சமும் காற்றும் இல்லை; ஹல்லில் ஓட்டை போடுங்கள், என்றார் பால்மர்ஸ்ன்.

— காப்டன்! புயல் வருகிறது, கடல் கொந்தளிக்கிறது, இப்போது எதுவும் செய்ய வேண்டாம் ஆபத்து, என்றார் எஸ்டன்.

அதே நேரத்தில் ஸ்கர்வி நோயாளிகளில் ஒருவன்,- காப்டன் எங்களைக் காப்பாற்றுங்கள்! பட்டினி கிடக்கிறோம், செத்துக் கொண்டிருக்கிறோம், என்று கூவ,

எல்லோரும், - நாங்கள் சாகிறோம் காப்டன், என்று கோரஸ் கத்தினார்கள்.

கப்பலின் உணவு விரைவாகக் காலி ஆகிக் கொண்டிருந்தது.

குடிதண்ணீருக்கும் பஞ்சம்.

கப்பலை மோரிஷியஸ் தீவில் நிறுத்தி உணவு, தண்ணீர் யாவும் சேகரித்திருக்க வேண்டும்.

ஆனால் பால்மர்ஸன் அதை விரும்பவில்லை.

மோரீஷியஸில் நிறுத்தினால் பாதி மாலுமிகளும் கரையில் இறங்கி மறைந்து விடுவார்கள். அவ்வளவு களைப்பில் இருந்தார்கள் அவர்கள்.

இதனால் நிற்காமல் போக,

சேமித்திருந்த உணவும் குடிநீரும் குறைந்து விட்டது.

காப்டன் மேல் தளத்திற்கு ஏறினார்.

அப்போது அங்கே, ஹா, ஹம்மா என்ற அலறல்கள்.

நிமிர்ந்து பார்க்க, கப்பலின் பதினைந்து வயது மாலுமியை (அந்த நாளில் நிறையச் சிறுவர்கள் கப்பலில் வேலை செய்தார்கள்) ஒரு சவுக்கினால் காக்ஸ்வைன் அடித்துக் கொண்டிருந்தார். அவரைச் சுற்றிப் பலபேர் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

மார்பு மேல் கசைகள் வீசி விழ, பையன் கேவலாக ஏங்கிக் கதற,

பால்மர்ஸ்ன் அதைப் பொருட்படுத்தாமல் நடந்து போனார்.

அந்நாளைய ஆங்கிலேயர், மூட நம்பிக்கையில் மற்ற நாட்டினருக்குச் சளைத்தவர்கள் அல்ல.

கப்பலில் ஒரு சிறுவனை நிறுத்தி அவன் மார்புக்கு மேல். கசையடி கொடுத்தால் புயல் நின்று போகும் என்று அவர்கள் நம்பினார்கள்.

கசையடி கொடுக்க,

பையன் துடித்துக்கொண்டிருந்தான்.

## 7

*—கடலா? நான் மாட்டேன். நிச்சயம் கப்பலில் போக மாட்டேன். என்றால் அந்த உணவைச் சகித்துக் கொள்ள முடியாது. அவர்களது ரொட்டி வெறும் பாறை! பல்லில் ஒரு எந்திரம் கட்டித்தான் அதை அரைக்க வேண்டும். இறைச்சியில் இருக்கும் உப்போ, கடவுளே, நாக்கு பத்து நாளைக்கு வேலை செய்யாது.—*

*—பதினாறும் நூற்றாண்டில் ஜான் லில்லீ எழுதிய 'கல்லதியா' என்ற நாடகத்தில் ராபின் என்ற பாத்திரம் கூறுவது.*

அந்தப் பெண் கல்மேல், பாண்டுரங்கன் பாணியில் இடுப்பில் கை வைத்து நின்றாள். மெல்லிய ஏழைத் தாவணி.

*வாழ்க்கையில் நல்ல மனைவி - தெய்வத்தின் அருள் — கெட்ட மனைவி— ஒரு சாபம்.*

**—ஸிமோ பைத்**

ஏழைப் பாவாடை.

உடம்பில் இயற்கை அளித்த செழிப்புகள் அந்தத் துணிகளைத் தாண்டி இரு விழிப்புகள்.

அவள் கண், காமத்தையும் தந்தது, கைவல்யத்தையும் தந்தது.

—வாங்க என்றான்.

வந்தாள்.

உட்கார்ந்தாள்.

ஏழைத் துணிக்கு முரப்பு இல்லை. கால் இடுக்குகளில் ஓடை வழிந்து ஓட, அதைப் பார்க்கும்போது சோகமும் வந்தது, மோகமும் வந்தது.

—எம்மேலே கோபமா? என்றாள் அவள்.

—இல்லையே என்றான் அவன்.

அவள் கை மண்ணைக் கிள்ளியது. —நீங்க வருத்தத்தோடு போனீங்க! எனக்கு என்னவோ போல இருந்தது. வந்துட்டேன். நீங்க அந்த பாட்ஜைத்தானே பார்க்கணும்கிறீங்க? எங்க வீட்டுலே கொண்டு வச்சிருக்கேன். வந்தாப் பார்க்கலாம்; என்றாள்.

சுருக்கென்று நிமிர்ந்தான். ஒரே பரபரப்பு!

—உங்க வீட்டிலயா?

—ஆமாம்.

—எப்படிக் கொண்டு வந்தீங்க?

—பாட்ஜ் ஓரத்திலே பூ டிசைன் போட்டிருக்கு. அதைக் காப்பி பண்ணணும்னு கேட்டேன். கிருஷ்ணன் கொடுத்திட்டாரு. நீங்க வேணும்னு சுருக்க வந்து பாருங்கோ!

விருட்டென்று எழுந்தான். கோபி போன திசையைப் பார்த்தான். காத தூரத்துக்குக் காணவில்லை.

அவளுடன் நடையைக் கட்டினான்.

ஒற்றையான நடம்.

இருபுறமும் பச்சை விநோதங்கள்.

நடுவில் தெம்மாங்கு போல் அவள் மிதந்து போக, அவன் பின்பற்றினான்.

வீட்டை அடைந்தார்கள்.

—வாங்க, உள்ளே, என்றாள்.

செருப்பைக் கழற்றி உள்ளே போனான்.

ரேழியில் சாம்பல் பூசிய வெளிச்சம். கீழே ஊஞ்சலைப் படுக்க வைத்திருந்தது. அதில் கரை வேட்டியைப் பரப்பி, அர்ச்சகர் சயனித்திருந்தார். எழுபது இருக்கும். அதைவிட அதிகமாகக் காட்டினார். கஷாயமும் கஞ்சியும் வியாதி நெடி வீசின.

—உட்காருங்கோ.

அர்ச்சகர் அவனைப் பார்த்துக் கொஞ்சம் குசலம் காட்டிக் கண்களை மூடினார்.

உள்ளே பாவுளுக்குள் சென்று அவள் ஒரு துணி மூட்டையைக் கொணர்ந்தாள்.

மெள்ளப் பிரிக்க, மல்லிக்கின் நாடி டபடபவென்று பேசியது.

கடைசி மடக்குகளை நீக்கியதும் அந்த ஐந்து அங்குல பாட்ஜ் உற்பத்தியாகியது.

மல்லிக்கின் உச்சி பறந்தது. குளிர் பிய்த்து ஓடியது. பரபரப்புடன்-கொண்டாங்க, என்று கையில் வாங்கினான். கண்கள் பூத்து வெளியே வர, ஆராக் காதலுடன் அதை உற்று நோக்கினான்.

அது ஒரு எபாலெட். தோளில் அணிவது. பித்தளையில் செய்திருந்தது.

ஒரு நூற்றாண்டுக்கு மேல் கடலில் ஊறியதில் அரிப்பு எடுத்திருந்தது.

ஆச்சரியம்!

அதன் பார்டரும் அதைச் சுற்றிய பூக்கொடி வேலையும் இன்னும் துல்லியமாகக் காட்டின.

பாட்ஜுக்குள் அந்த எழுத்துக்கள்!

எச். எம். எஸ். ஜே. ..

'ஜே'யைத் தாண்டிக் கிட்டத்தட்ட மூன்றரை அங்குலம் வெற்றிடம். அதில் ஏதோ



ஒரு பெண் நாணத்தோடு தன் அழகை மறைக்கும் போதுதான் தன் முழுமையான அழகை வெளிப்படுத்துகிறாள்! —மூர்

எழுத்துக்கள் இருந்து, அழிந்துவிட்டன. என்ன எழுத்துக்களாக இருக்க முடியும்?

நிச்சயம் ஜூலி காலண்டின் ஜே நீங்கலாக உள்ள மீதி எழுத்துக்கள்தான்.

மகிழ்ச்சி மீறி, கண்களில் ஒரு வைரமான ஈரம் பளபளத்தது.

—சம்பகா! என்றான்.

அவளைப் பெயர் சொல்லி அழைத்த முதல் தடவை. அந்த அழைப்பில் பிறந்த உற்சாகமும் ஆனந்தமும் அவளை மெள்ளக் குழைத்தன.

முகம் சிவந்து, கண்கள் நட்சத்திரமிட்டன.

—ஒவ், என்றாள் வெட்கம் பின்னிக்கொண்டு.

—உங்களை வாழ்நாளிலே மறக்க மாட்டேன்....

அவன் இழைப்புடன் நிறுத்த, அவள் இதயத்தில் ஒரு கொத்துப் புறாக்கள் சடசடத்துப் பறந்தன.

....இது பெரிய கண்டுபிடிப்பு, சம்பகா! தலையைப் பிய்த்துக் கொண்டு கத்தலாம் போல இருக்கு....

எழுந்திருந்தான்.

...இந்தாங்க! வச்சுக்குங்க! ரொம்ப ரொம்ப நன்றி....

அந்த உணர்வு வெள்ளத்தில் அவளுக்கும் அவளது தந்தைக்கும் ஒரு குழறல் கும்பிடு போட்டு வெளியே வந்தான்.

தெரு வரை வந்திருக்க மாட்டான்.

அவள் குரல் பின்னால் ஓடிவந்து —ஒரு விஷயம்! என்றது.

திரும்பினான்.

திண்ணைத் தூணைக் கொடி சுற்றியது போல் நின்றாள், —நீங்கள் ஒரு நல்ல காரியத்துக்குத்தானே வந்திருக்கீங்க?

—என்னைப் பார்த்தால் தெரியவில்லையா? என்றான் அவன்.

—எனக்கு யாரைப் பார்த்தாலும் நல்லவங்கன்னுதான் தோணும்.

அந்த வார்த்தை சுத்த வெளுப்பாக வந்தது. அவன் முகம் சிறிது குன்றியது. சில விநாடிகள் தயங்கினான்.

—நான் ஒரு நல்லதுக்காகத்தான் வந்திருக்கிறேன்.

—உங்க நல்லதுக்கா? ஊர் நல்லதுக்கா?

அவள் வார்த்தைகளில் என்ன ஆழமான சூடு!

சில நொடிகள் தயங்கினான். —சம்பகா! என்றான். —என் சொந்த நல்லதுக்கும், ஊர் நல்லதுக்கும் வித்தியாசம் தெரியல்லே. அதனாலே....

—நீங்க அன்னிக்கு எதையோ தோண்டினீங்களே! அது போலத் தோண்டிக் கிடைச்சதைச் சுருட்டிக்கிட்டுப் போவீங்களா அல்லது.....

கேள்வி இரும்பு போல விழுந்தது.

அவள் துணிச்சலுக்கு உள்ளூற மெச்சினான்.

—அதைப் போல இல்லே! என்னுடைய காரியமே வேறே!

—என்ன காரியம்? சொல்லுங்கோ! வம்சாவளி இல்லேன்னு எனக்கு அப்பவே தெரிஞ்சு போச்சு.

திடுக்கிட்டான் அவன். —சம்பகா, என்று சொல்லி, விசேஷ அக்கறையுடன் பக்கத்தில் வந்தான். மனத்துக்குள் ஒரு உணர்ச்சி மயமான மல்லிக் உடனே எல்லாவற்றையும் அவளிடம் சொல் என்று கட்டளை இட்டான்.

—சொல்லுவேன்! உங்க மனசுக்குள்ளேயே வச்சுப்பீங்களா? என்றான்.

—ஒவ், என்றாள்.

—சுவாமி சத்தியமா?

—சத்தியமா!

—சொப்பனத்திலே கூடச் சொல்லக் கூடாது.

—எனக்குச் சொப்பனமே வராது.

சிரித்தான்.

—நான் ஒரு கப்பலைத் தேடி வந்திருக்கிறேன்.

அவள் விழித்தாள்.

—இங்கே ஏது கப்பல்?

—நூறு வருஷங்களுக்கு முன்னாடி வந்தது.

—அடே அம்மாடி! இங்கே எதுக்கு வந்தது?

—தெரியலே! இந்தப் பக்கம் வந்திருந்தாலேதான் இந்த பாட்ஜ் இங்கே கிடைச்சிருக்கு.

—பாட்ஜ்லே என்ன இருக்கு?

—எச். எம். எஸ். ஜே.ன்னு இருக்கு. நான் தேடற கப்பல் அந்த இனிஷியலோடதான் இருந்தது. அதனாலேதான் இந்தக் கரைப் பக்கம் வந்து அது மூழ்கியிருக்கணும்னு என் நம்பிக்கை. அதிலேயிருந்து தப்பிச்சு வந்தவங்கதான் இந்தக் கரையிலே வந்து செத்துப் போயிருக்கணும். அவங்களோட எலும்புக் கூடுங்கதான் இங்கே இப்போ கிடைச்சிருக்கு.

ஸ்தம்பித்து நின்றாள் அவள்.

—சார்! அந்தக் கப்பல் இங்கே வந்திருக்குன்னு தெரிஞ்சா உங்களுக்கு என்ன லாபம்?

அவன் தயங்கினான். —அந்த ஒரு கேள்வி மட்டும் கேட்டுடாதீங்க. நான் உடனே நிஜம் சொல்லிட முடியாது. பின்னாலே

---

"நேற்று டி. வி. யிலே திருட்டு எப்படி எல்லாம் நடக்கிறதுன்னு ரொம்ப சுவாரஸ்யமா நாடகம் போட்டுக் காண்பிச்சாங்க!... பிரமாதமா இருந்தது...!"

"அதுக்கு ஏன் இப்படி வருத்தமா இருக்கே?"

"அந்த நாடகத்தை சுவாரஸ்யமா பார்த்துக்கிட்டு இருக்கிறப்போ தோட்டப்பக்கமா எவனோ நுழைஞ்சு பாத்திரங்களைத் திருடிக்கிட்டுப் போயிட்டான். கவனிக்காமல் இருந்துட்டேன்!"

—ரமணி ரங்கநாதன்



முடிஞ்சாச் சொல்றேன். இப்போ எனக்குத் தெரிய வேண்டியது அந்தக் கப்பல் இங்கே வந்திருக்கு என்கிற சேதிதான். இனிமே நான் வேறே வழிகளைப் பார்த்துக் கொள்ளுவேன்.

அவன் நாலு அடி தாண்டியிருக்க மாட்டான். சின்னக் கை தட்டிக் கூப்பிட்டாள் அவள்.

அவன் திரும்பி வந்தான்.

—நீங்க பணக்காரங்களா? என்றாள்.

—அப்படி ஒண்ணுமில்லே! பணக்காரனைப் பார்த்துக்கிட்டிருக்கிறேன். ஏன்? பணக்காரன்னு என்னை கேட்டீங்க?

—பணம்தான் கேட்டேன். நான் உதவி செய்தேன்னு அதுக்குக் கூட கூலி கேட்கும்படி ஆகிவிட்டது காலம். அப்படி இருந்தாத்தான் பிழைக்கமுடியும். கிராமத்திலேயிருந்துகிடைக்கிற ஈகை, இரக்கம், தர்மத்துக்கு எல்லாம் கூட நாங்க கூலி கேட்க வேண்டிய நிலைமை ஆயிட்டது. இல்லாட்டி பட்டினத்துக்காரங்க எங்களை ஏமாத்திடுறாங்க

சுரீர்க் கூர்உடன் வார்த்தைகள் வந்தன. அவன் அடிவாரத்தையே அது கலக்குவது போல.

—சம்பகா! நீங்க கூலி கூடக் கேட்பீங்களா!

—என்ன ஆச்சரியம்? நான் மூனு ஜீவன்களைக் காப்பாற்ற வேண்டியிருக்கு!

—மூணு ஜீவனா?

—ஆமாம், எங்க அப்பா, நாகலாபுரிசுவரர் அவர் மனைவி, மூன்று பேரையுந்தான்

மீளவும் உணர்வில் திடீர் ஆர்ப்பரிப்புகள்: சின்னச் சின்ன நுண் உணர்ச்சிகள் அவள் எளிய வார்த்தைகளில் எப்படித் தெறிக்கின்றன? இவள் தன்மையில் பெரியவள்தான் என்று நினை

இவளிடம் எல்லாவற்றையும் சொல்லி விடலாம் என்று அருகில் வரும் நேரத்தில்,

—டேடே, அதே ஆள் வந்திருக்கான், போலீசைக் கூப்பிடு

என்ற வார்த்தை சுள்ளென்று விழ, எதிரே சந்தனக் கீற்று சரபேந்திரன் உத்தியோக ஹோதாவில் பிரமாத ஸில்லௌட்டுடன் நின்றார்.

அதே சமயம்

நாகபட்டினத்துக்குக் கிழக்கே நெப்டியூன் தாவாட, அதில் டில்லான் ஒய்ட் மேல் தளத்தில் நின்று கொண்டு, நடவடிக்கைகளைக் கவனித்துக் கொண்டிருந்தார்.

இரண்டு முழ்கி நிபுணர்கள் தண்ணீரில் மூழ்குவதற்குத் தயாராக இருந்தார்கள்.

வொயிட் ... பெரிய வரைபடத்துடன் தம் சகாவான ... டார்வினிடம் பேசிக் கொண்டிருந்தார்.

—இந்த இடத்தில்தான் ஜமலி காலண்ட் இருக்க வேண்டும் என்றார்.

அடுத்த சில நிமிடங்களில் அந்த நீர்மூழ்கி நிபுணர்கள் தண்ணீரில் குதித்து மறைந்தார்கள். (தொடரும்)

---

## வெற்றிகரமான இல்லத்தரசி – பதினைந்து அம்சத் திட்டம்!

1. எப்பொழுதும் சுறு சுறுப்பாகவும் சிரித்த முகத்துடனும் இருங்கள் (ஓவராகச் சிரிக்கக் கூடாது)

விட்டுக்கு வருபவர்களை வாய்நிறைய மகிழ்ச்சியோடு 'வா' எனக் கூப்பிடுங்கள்.

3. விட்டைச் சுற்றியுள்ளவர்களை நன்கு தெரிந்துக் கொண்டு நட்புறவுடன் இருங்கள்.
4. எந்த விஷயத்தையும் நுணுமறிந்து பேசுங்கள். (உதாரணம் கணவர் அவசர அவசரமாகக் காரியாலயம் புறப்படும்போது எலக்டிரிக் பில் வந்தது பார்த்தீர்களா எனக் கேட்காதீர்கள்)
5. திருமணமாகி எத்தனை ஆண்டுகள் சென்றிருந்தாலும் சரி, கணவர் விட்டாரைப் பற்றிய உங்கள் அபிப்ராயங்களைச் சட்டென்று சொல்லி விடாதீர்கள்.
6. எப்பொழுதும் இளமையாகத் தோற்றமளியுங்கள். (எனக்கெதற்கு இன்னும் அலங்காரம் எனச் சொல்லி விடாதீர்கள். ஆனால் ஒன்று, உங்கள் அலங்காரம் வேஷம் போட்டாற் போல் இருக்கக் கூடாது)
7. கணவரின் முன், உடல் நலம் சீராக இல்லை என அடிக்கடி புகார் பெய்து படுத்து விடாதீர்கள். அதற்காக உண்மையாகவே உடம்பு சரியில்லை! என்றாலும் மறைக்காதீர்கள். சதா தூங்குவது மற்றொரு மைனஸ் பாயிண்டு.
8. மற்ற ஆண்களைக் கணவர் எதிரிலேயே உணர்ச்சி வசப்பட்டுப் புகழ்ந்து விடாதீர்கள்!
9. சமயம் கிட்டும்போது, அவர் காதில் விழுவது போல் லேசாக மற்றவர்களிடம் அவரைப்பற்றி புகழ்ந்து பேசுங்கள். (என்ன செய்வது? மணந்து கொண்டு விட்டீர்களே! புகழத்தான் வேண்டும்!)
10. கணவர் ரொம்பக் கோபமாக ஏதாவது பேசினால், காதில் போட்டுக்கொள்ளாமல் எதிர்வாதம் செய்யாமல் மௌனமாக இருந்து விடுங்கள்.
11. கணவருடை அபிப்பிராயம் ஒத்து வரவில்லையென்றால், தருணம் பார்த்து நாசுக்காக தனிமையில் அதைச் சொல்லுங்கள்.
12. பலர் முன்னிலையில் கணவரின் குற்றங்களை, குறைகளை எடுத்துக் காட்டாதீர்கள்.
13. உண்மையில், உங்கள் கணவர் நீங்கள் சொல்வதுபோல் கேட்க வேண்டும் என நீங்கள் விரும்பினால், பிறர் முன்னிலையில் அவருக்கு அதிக மதிப்பு தாருங்கள்.
14. கணவர் போட்ட பட்ஜெட்டுக்கு நான்கைந்து ரூபாய் குறைவாகவே உங்கள் உடையைத் தேர்ந்தெடுங்கள். 'எதற்காக அவ்வளவு ரூபாயைக் கொட்டுவது என்று சற்று குறைவாகவே வாங்கி விட்டேன்' என கம்பீரமாக ஒரு போடு போடுங்கள் (சும்மா இருந்து விட்டால் மார்க் போய்விடும்!)
15. எல்லாவற்றுக்கும் மேலாக, வாய்க்கு ருசியாக நன்றாக சமைக்கத் தெரிந்து கொள்ளுங்கள். அவருடன் சேர்ந்து உட்கார்ந்து ஒருவருக்கொருவர் எடுத்துப் போட்டுக் கொண்டு சாப்பிடலாம். ஆனால் அவருக்கு உணவு பரிமாறும் வேலையை இன்னொருவரிடம் மறந்தும் கொடுத்து விட்டு வேறு வேலையில் கவனமாயிராதீர்கள்! அது என்ன தலைபோகிற அவசரக் காரியமாயினும் சரி.



# கடலுக்குள் ஜூலி

## புஷ்பா தங்கதுரை



சிறு பையன் அடிபடுவதைப் பொருட்படுத்தாமல் புயல் வந்து கொண்டிருந்தது.

முதலில் கப்பலின் உச்சிப் பாயான ராயலைப் பிடுங்கிக் கொண்டுபோய், வெகு தூரம் தள்ளிக் கடலில் போட்டது.

லோயர் காலண்ட் பாயைத் திருகி, மிஸ்ஸன் கம்பத்தின் விட்டத்தை உடைத்தது.

ஜிமே ஸ்டே பாய்கள் அறுந்து போய், பயங்கரமாக உதறிக் கொண்டிருந்தன.

-சீக்கிரம், என்றார் காப்டன் எல்லாப் பாய்களையும் மடக்குங்கள்.

நின்றிருந்த பலர் பிரதானப் பாய்களின் கயிறுகளை அவிழ்க்க ஓடினார்கள்.

கப்பல் நிலையில்லாமல் ஆட, அலைகள் அடிக்கடி உள்ளே வீசி அடித்தன.

பகல் மறைந்து எங்கும் அந்தகாரம் சூழ்ந்து கொண்டிருந்தது.

பால்மர்ஸன் விக்கித்து நின்றார். திரிகோணமலைக்குப் போகாதது தப்பு என்று நினைத்தார். இலங்கையைத் தாண்டி விட்டோமா தெரியவில்லை. க்ரோனோமீட்டர் உடைந்து விட்டது. காம்பஸில் ஜிம்பால் உடைந்து, கண்ணாடியும் உடைந்து, முள் திருகிவிட்டது எங்கு இருக்கிறோம்! எங்கே போகிறோம்! தெரியவில்லை.

கப்பலின் தலைப்பில் உள்ள லாண்டர்னைக் கொளுத்தப் போய்த் தோல்வி அடைந்தான் ஒரு மாலுமி,

காப்டன் உடனே அவனை நோக்கி, யாரங்கே? எச்சரிக்கைக் கொடு, என்று கத்தினார்.

அவனும் இருட்டை நோக்கி, -அஹோய்! அஹோய்! ஒரு கப்பல் வருது! அஹோய்; அஹோய்; ஒரு கப்பல் வருது என்று அடிக்கொரு தரம் கத்தினான். கத்திக் கொண்டே இருந்தான். அவன் புத்தி பேதலித்து விட்டது. பாதி ராத்திரி ஆகியும் நிறுத்தவில்லை.

## 8

*ஒரு கப்பல் பழசானால் அதில் துருவும், தண்ணீர், எண்ணெய் ஒழுகல்களும், பிராணவாயுக் கரைசலும் பெருநாசத்தை உண்டு பண்ணுகின்றன. —'லைஃப்' ஜேம்ஸ் பார்லோ*

—ஏன் மிஸ்டர்? ஊருக்குள்ள வரக்கூடாதுன்னு ஏதாவது சட்டம் இருக்கா? உங்க பாதுகாக்கப்பட்ட இடத்துக்கு வந்தால் சொல்லுங்க! மற்றபடி இந்த நிலே கண்டிக்கிறதுக்கு உங்களுக்கு உரிமை கிடையாது, என்று படபடப்புடன் பேசி, 'ஹோய்' என்று ஒரு பார்வையை அந்தச் சந்தனக் கீற்று சரபேந்திரன் மீது போட்டுவிட்டு குஷாலாகக் கம்பியை நீட்டினான் மல்லிக்.

—பத்தியா, பொன்னாறு! பத்தியா, பத்தியா? என்று சரபேந்திரர் அந்தப் பெண்ணிடம் நியாயம் பேசிக் கொண்டிருக்கும் சத்தம் சிறிது தூரம் அவனுடன் ஓடிவந்தது.

மல்லிக் மேற்கே போய், ஒரு முடுக்கைத் தாண்டி. விரைவில் மறைந்து, மதகுக்கரையை அடைய, —எங்கேடா போனே? என்று ஒரு குமிழ் நெல்லிக்காயைக் கொடுக்கென்று கடித்துக் கொண்டு கேட்டான் கோபி.

—நான் சொன்னேன்'லே? என்று ஆரம்பித்து அந்த ஊரில் அதிகாரி காட்டும் கெடுபிடியைச் சொல்லி, பிறகு பாட்டைப் பார்த்த செய்தியைப் பரபரப்புடன் சொன்னான் மல்லிக்.

கோபியின் முப்பத்திரண்டும் வெளியே தெரிந்தன. —கை கொடுடா!

அவனுக்குத் திடீரென்று மார்க்கோ போலோ, கொலம்பஸ், ட்ரேக் போல உலகப் புகழ் பெறப் போகிறோம் என்று தோன்றியது. —இனிமே என்ன செய்யப் போறோம்டா மல்லிக் யோசித்துக் கொண்டிருந்தான்.

—இனிமேதாண்டா கவலே! என்றான்.

—என்ன கவலே?

—ஜூலி எங்கே மூழ்கியிருக்கான்னு கண்டு பிடிக்கணும்.

—அதான் தெரிஞ்சு போச்சே, இங்கே தான் கடல்லே...

சிரித்தான் மல்லிக்.

—கடல்லே கப்பலைத் தேடறது வைக்கப் போரிலே ஊசியைத் தேடற மாதிரி. அதை அப்புறம் கவனிப்போம். இப்போ எனக்கு இன்னொரு விஷயம் தெரியணும்.

—என்னது?

—அந்தக் காப்டன் கரைக்கு வந்தான்னு ருசு கிடைச்சுப் போச்சு. கப்பல் இந்தப் பக்கம் மூழ்கியிருக்கான்னு ருசு வேணுமே!

—காப்டனே கிடைச்சுட்டாரே!

—காப்டன் படகிலே வந்திருப்பாரு வேறே ருசுவும் வேணும். என் சுபாவம் உனக்குத் தெரியுமே கோபி, இன்னொரு ருசு நிச்சயம் வேணும்.

—கிடைக்குமா?

—கிடைக்கணும்.

கனிநாகலாபுரத்தை மையமாக வைத்துப் பத்து மைல் தூரம் கடற் கரையைத் துழாவ நினைத்தார்கள்.

இருவரும் மறு நாள் காலை புறப்பட்டார்கள்.

தெற்கே ஐந்து மைல் தொலைவு போய்த் திரும்பி வந்தார்கள்.

கடற் கரை அருகில் புள்ளி இட்டிருக்கும் குடிசைகளையும், ஜனங்களையும் ஆராய்ந்தார்கள். மணற் பகுதிகளைத் தீவிரமாகக் கோதினார்கள். கட்டையோ, உலோகமோ எது கிடைத்தாலும் கையில் எடுத்துச் சோதித்தார்கள்.

மறுநாள் வடக்குப் பக்கம் போக முடிவு.

அந்த உப்பங்கழி அவர்களைத் தடுத்ததால் செம்படவப் படகில் ஒரு ரூபாய் கொடுத்து அக்கரை அடைந்தார்கள்.

இப்போது எதிர்க் கரையில் தெரிந்த நாகலாபுரீஸ்வரர் கோயிலைப் பார்த்தபோது அது மூச்சு நிறுத்தும் காட்சியாக இருந்தது. மேலே அந்த ஆலமரம் எவ்வளவு சின்னதாக இருந்தது!

மல்லிக் யோசித்தான். இந்தக் கனிநாகலாபுரம் பகுதி மட்டும் எப்படி இவ்வளவு உயரமாக இருந்து விட்டது? இயற்கையின் விசித்திரங்களில் ஒன்றாக இருக்குமோ? இந்த இடத்தில் மேடிட்ட பூமி, பிறகு இரண்டு திசைகளிலும் வழிந்து ஓடி, கிட்டத்தட்ட ஒரு மைல் தூரத்தில் கடல் மட்டத்துக்குச் சமமாக வந்துவிடுகிறது.

இருவரும் மேடு ஏறி, மறு பக்கம் பூமியுடன் இறங்கினார்கள்.

மல்லிக்கின் கண்களில் அந்த வெறி புகுந்திருந்தது. வேட்டை வெறி. இங்கே எங்கேயாவது நிச்சயம் ஏதாவது கிடைக்கும்.

அரை மைல் தூரம் இறங்கிய பிறகு, கடல் அவர்களை மீண்டும் வந்து சந்தித்தது.

வெள்ளை மணல் ஏக்கர் கணக்கில் பரவி, பளீர் என்று கண்களைப் பிடுங்கின.

இருவரும் பங்கு போட்டுக் கொண்டு, கோபி, கரை ஏறி குடியிருப்புக்களைத் தேடிப் போக,

மல்லிக் அந்த மணல் வெளியில் தீவிரமாக நடக்கத் தொடங்கினான்.

காலடியில் மணல் நுட்பங்களில் கோடி சூரியர்கள் பளிச்சிட,

எண்ணமும் ஏக்கமுமாக அவன் நடந்து போனான்.

இதென்ன?

மணல் மேட்டில் ஏறி இறங்கும்போது, திடீரென்று காட்சியில் 70 எம்எம் விரிந்தது.

மஞ்சட் பழுப்பில் உடம்புடன் பலபேர் அந்தக் கடல் வீதியில் உலாவினார்கள்.

ஆண்களும் பெண்களும் நிரவலாக இருந்தார்கள்.

அந்த இடத்தில் கடல் வளைகுடாவாக மாறி, அலைகளை மெள்ளக் கரை ஓரம்வரை இழுத்து வந்தது.

ஓகோ, இது ஒரு உல்லாசக் குளிப்பிடமோ?

அருகில் வரும்போது குளிப்பவர்கள் வெளிநாட்டவர்கள் என்று தெரிந்தது.

பத்து ஜோடிகள் இருப்பார்கள்.






''ஒரு டாக்டர் அறியாமையால் தன் ''நர்ஸிங் ஹோம்'' வாசலில் ''மீண்டும் வருக'' என்று எழுதி வைத்தார். அவரிடம் வைத்தியம் செய்து கொண்ட நோயாளி கோபமுற்று ''மீண்டு வருக'' என்று அதைத் திருத்தினர்.''

-ஆடலரசன் நாயகி

பாதிப்பேர் குளித்துக் கரை சேர்ந்திருக்க' பாதி தண்ணீரில் துளைந்து கொண்டிருந்தார்கள்.

ஒரு கண்ணாடிப் பச்சைக் கடல் சோம்பலாகச் சோ பாடியது.

ஹிப்பிகளோ?

அவர்களைத் தாண்டி அப்பால் செல்ல அங்கே திடீரென்று குறுக்கிட்ட அந்தத் தோற்றம் அவனைக் குலுக்கியது.

அந்தக் கறுப்பு அழகி குளிச்சல் துணியில் வந்து கொண்டிருந்தாள்.

இரண்டு துண்டு பிகினி சிக்கனத்துடன் அவள் புள்ளிகளை மூடியிருந்தன.

ஈர முத்துக்கள்

வயிற்றின் இளைப் பரப்பில் உரோமங்கள் பின்னிக் கொண்டிருந்தன.

விழிகள் துறுதுறுவென்று துறுவ, அவனைப் பார்த்ததும் துறுவலை நிறுத்தி, ஒரு பரிச்சயத்தைக் காண்பித்துவிட்டு ஓடின.

வேகமாகக் கரை சென்று வஸ்திரத்தைக் கொத்தாக எடுத்து மார்பில் புதைத்து, ஒரு தென்னம்பிள்ளைக்குப் பின்னால் மறைந்தாள் அவள்.

அவனுக்கு எந்த விதமான விலாச எண்ணங்களும் வரவில்லை.

அவனுக்கு ஒரே குறி! ஜூலியின் பிசிறுகள் எங்கேயாவது ஒட்டிக் கிடக்குமா?

''டில்லியில் ஏகப்பட்ட குளிர். காலையில் பேஸ்டைப் பிரஷ்ஷில் வைத்து வாயில் வெறுமனே வைத்துக் கொண்டால் போதும். மீதி வேலையைப் பல்லே பார்த்துக் கொள்ளும்.''

— ராமு



நினைவில் தன்னை இழந்து, கெட்டுப் போன ஊசியை மணலில் தேடுபவன் போல் போனுன்.

அந்தப் பெண் மெல்லிய ஸாரித் துணியில் தனது தண்டு போன்ற ஈர உடலை மெள்ளச் சுற்ற ஆரம்பித்தாள்.

மல்லிக் அப்பால் போய் யோசித்தான். இந்த மணலில் ஏதாவது அகப்படுமா? 140 வருடங்கள் ஆகிவிட்டன. எவ்வளவோ மண் வந்து சேர்ந்திருக்கும். ரசவாதங்களைச் செய்திருக்கும். அப்படிப்பட்ட இடத்தில் ஜூலியின் மரத் துண்டோ, வேறு ஞாபகச் சின்னமோ ஒளிந்து கொண்டிருந்தால், இதற்குள் உருமாறி, வேறு ஏதோ பொருளாக மாறியிருக்கும்.....

ஜூலி, நீ எங்கிருக்கிருய்?

கடலைப் பார்த்தான்.

மல்லிக் உன் சக்திகளை நம்புகிறவன். மனோ பலத்தில் விசுவாசமுடையவன். அழைத்தால் வரும், விழைந்தால் கிட்டும், தேடினுல் கூடும் என்று சித்தாந்தம் கொண்டிருப்பவன். நமது அழைப்பு, விழைவு, தேடல் மூன்றின் அழுத்தத்தைப் பொறுத்துப் பலன்கள் சித்திக்கும் என்று நினைப்பவன்.

கடலை நோக்கி உள் மனத்தால் கூவினுன்.

ஜூலி, நீ எங்கிருக்கிருய்?

கண்களை மூடினுன்.

ஒரு பெரிய பறவை இறக்கைகளுடன், கடலில் குந்தி தாலாடுவதுபோல் ஜூலி அவனுக்குத் தோன்றினுள்.

சித்திர வேலைப்பாடுகளுடனும், ஒரு பறவை முகத்துடனும், ஜூலியின் முகப்பு அவன் கண்ணில் விழுவதாகப் பிரமை. ஜோ ஜோ ஜோ.... ஜூலி நீ ஜோ ஜோ!

—மிஸ்டர், என்ற குரல் கேட்டதும் கண்ணைத் திறந்தான். அருகில் ஆச்சரியக் கண்ணுடன் ஆர்க்கியலாஜிகல் கிருஷ்ணன். தலையெல்லாம் பரந்து, அதிக நரை தெரிய, மீசையில் புன்னகை காட்டி நின்ருர். —ஏது ரூட்ஸை ரொம்பத் தேடுறாப்பலே இருக்கு!

மல்லிக் தத்தளித்து, சுயத்திற்கு வந்தான்.

—ஆம்மாங்க, ஆமாம்...

மல்லிக்கின் கண்ணும், உடம்பும், தலைக் கலைசலும் அவனைப் பெரிய லட்சியவாதியாகக் காட்டின.

—அன்னிக்கு உங்களைக்கவனிச்சுக்கிட்டேன். என் சக ஆபீசருங்க உங்களை நம்பலே! உங்களை விரட்டினத்துக்காக வருத்தப்படறேன். அப்புறம் என்னென்ன கண்டு பிடிச்சீங்க! என்னென்ன தெரிஞ்சுது?

—எதுவும் தெரியலே, ஸார்! உங்களுக்குத் தெரிஞ்சாச் சொல்லுங்க! உதவியா இருக்கும்.

—நாங்க பல இடங்களிலே தோண்டிட்டோம். ஆர்கியாலஜிகல் இண்ட்ரஸ்ட்! எதுவும் கிடைக்கலே! அன்னிக்குக் கிடைச்சதுதான் கிடைச்சுது! உங்களுக்கு என்ன விஷயம் வேணும்?

—எனக்கு என்ன வேணும்? பால்மர்ஸன் பத்தி,.... அவர் கப்பலைப் பத்தி....

—நீங்க ரங்கூன் பங்களாவிலே கேட்டீங்களோ?

—ரங்கூன் பங்களாவா?

—தெரியாதா? அதோ பாருங்க!

பார்த்தான்.

புல் தரிசைகள் தாண்டி, வயல் பசுமைகளைத் தாண்டி, ஒரு மரக் கூட்டத்தின் நடுவில் ஒரு வெள்ளைக் கட்டிடம் சிமிட்டிக்கொண்டு இருந்தது.

—சம்பந்தசாமின்னு ஒருத்தர் அங்கிருக்காரு! மகா ரசிகர்! நிறைய விஷயங்கள் சேகரம் பண்ணி வச்சிருக்காரு! கடல் சமாசாரமே ஒரு வண்டி இருக்கு.. ...அங்கே போ(ய்)..

அவர் முடிக்கவில்லை. —ஸார், ஸார், ஸார், என்று மல்லிக் துள்ளிக் குதித்தான்.

—இந்த ஒரு சமாசாரம் போதும் ஸார். ஆயுசுக்கும் மறக்க மாட்டேன், இதோ போயிடறேன் ஸார்,—

என்று கிடுகிடுவென்று தாவி நடக்கப்போக

—அடேடே இருங்க, நானும் வர்றேன்; என்றார் கிருஷ்ணன்.

—நீங்களா? என்றான் மல்லிக்.

—ஆம்மா! அங்கே ரசிக்கும்படி நிறைய விஷயம் இருக்கு... ஆள் மகா ரசிகர்னு சொன்னேனில்லே! அந்த ஊடு இல்லாட்டி இந்தக் கிராமத்திலே நான் ஒரேயடியா டேராப் போடுவேன்னு நினைக்கிறீங்களா என்றார் கிருஷ்ணன்.

இருவரும் வயற்காட்டு வரப்பில் [illegible] கினார்கள்.

—எனக்கு இரண்டு ஆசை, மிஸ்டர் [illegible]லிக்!

—சொல்லுங்க!

—இங்கே ஹிப்பிங்க வந்துட்டா[illegible]! கோவா மாதிரி தங்க ஆரம்பிச்சுடட்டாங்க ஒரு ஹிப்பிப் பொண்ணோட ஒரு ராவு [illegible] தோஷமா இருந்துடணும்...

மல்லிக் திரும்பிப் பார்த்தான்

....இரண்டாவது, அந்தச் சம்பகாவை எப்படியும் அனுபவிச்சுடணும் கோவில் பூசாரி பொண்ணு...

கிருஷ்ணன் பச்சையாகக் கூறியது உயிர்க் குறுத்தில் குத்துவது போல இருக்க,

தளுக்கென்று ஒரு பொ[illegible]டு. அவன் கண்ணில் குதித்தது.

இந்த ஆளை விட்டுவிட்டுப் போ[illegible] [illegible]டு வோமா? [illegible]

# ஓசியில் பார்க்கும் 'சர்க்கள்'



ஆகா! ரொம்பப் பிரமாதம்!
அற்புத மான வாக்குவாதம்!
ஓகோ! எனவே வெளிநடப்பு!
ஒருவருக் கொருவர் கைகலப்பு!

பேடா! வாடா! எனக்கூச்சல்!
புஜத்தைக் காட்டி வாய்ஜாலம்!
ஏடா கூடமாய்த் தினம்கிண்டல்
எத்தனை? கண்கொள் ளாக்காட்சி!

உச்ச ஸ்தாயியில் ஒரேசப்தம்!
ஊய்! ஊய்! எனவே விசில்சத்தம்!
பச்சை கொச்சை யாய்ப்பேச்சு!
பார்க்க அசிங்க மாய்ஆச்சு!

நேற்று வரையில் ஒருகட்சி!
நினைத்தால் உடனே மறுகட்சி!

சீற்றம் மிகுந்தால் [illegible]
சில்லறை சேர்க்கக் [illegible]

எல்லாம் எங்கே? நமக்கா
எம்.எல். ஏக்கள் ஆனவர்கள்
உள்ள சட்ட சபையில்தான்
ஒவ்வொரு நாளும் இதேகாட்[illegible]

ஓட்டுப் போட்ட பொதுமக்
ஓசியில் உங்கள் புதுசர்க்க[illegible]
கேட்டும் பார்த்தும் ரசிக்கின்றார்!
கிடைத்ததை எண்ணி வியக்கின்றா[illegible]

நடக்கட் டும்! திரு விளை[illegible]
ரசிக்கட டும்! தினம் பெ[illegible]
கிடைக்[illegible] டும்! பல [illegible]
கிளம்பட டும்! புது





# கடலுக்

புஷ்பா தங்கதுரை

'அறோய் கப்பல் வருகிறது' என்ற எச்சரிக்கை [illegible]ட்டு வேளைகளில், கப்பல்கள் நடமாடும் இடங்களில், இரைவது அந்நாளைய வழக்கம்..

பால்மர்ஸன் எதையோ கண்டு சந்தேகித்து அப்படி எச்சரிக்கை கொடுக்கக் கூறி இருந்தார்.

ஆனால் மாலுமியின் புத்தி பேதலித்துப்போக, அவன் அந்த எச்சரிக்கையைக் கூவிக்கொண்டே இருந்தான்.

[illegible] சொல்லியும் நிறுத்தவில்லை.

அவன் தொண்டை கரைந்து பாறையாகி சப்தத்தை [illegible]றதும் நிறுத்தவில்லை.

[illegible] ஏறியது. கடலும் கப்பலும் வித்தியாசம் [illegible]வில்லை.

கப்பலின் தலைப்பில் இருந்தால் பின் பக்கம் தெரியவில்லை.

பால்மர்ஸனுக்குச் சந்தேகம்.

[illegible] நெருங்கி விட்டோமா?-நகரி [illegible]றதா, பார், என்றார் எஸ்டனிடம்.

அந்நாளில் நகரி மூக்கில் தினம் தீ எரித்து ஒரு [illegible]மாகக் கப்பல்களுக்கு வழி காட்டுவார்கள்.

([illegible] கோர்ட் தீபஸ்தம்பத்திலிருந்து பார்த்தால் நகரி [illegible] தெரியும்)

**9**

பம்பு அடித்து நம் மாலுமிகள் களைத்தார்கள்! பலன் உண்டோ, சொல்லுங்கள்! கடலும் புயலும் கொந்தளிக்க, மீண்டும் கப்பல் உள்ளே அலைநீர்! மாலுமிகளின் செவிகள் மரத்துவிட்டன. அவை உயிர்த்திருந்தாலும் பயனில்லை. ஏனெனில் தகுந்ததைப் பேச அங்கே யாருமில்லை,

—ஜான் டான் எழுதிய 'புயல்' என்ற கவிதை

கிருஷ்ணன் அந்த ஆசைகளைக் கூறியதும் மல்லிக்குக்கு எவ்வளவு வெறுப்பு வந்தது?

அதுவும் சம்பகாவை எப்படியாவது.... என்று சொன்னபோது!




கிருஷ்ணனை உதறிவிட்டு அவன் போயிருப்பான். ஆனால் அவரால் காரியம் ஆக வேண்டும்.

அவருடன் நடந்தான். வரப்பில் போன போது அந்த பங்களா விஸ்தரித்து வந்தது.

முகப்பை அடைந்தார்கள்.

பழைய காலத்து வெள்ளைக்காரன் பங்களா!

வாசல் மேலே பெரிய காட்டெருமைத் தலை. பாடம் பண்ணியதா, பொம்மையா தெரியவில்லை.

சுவரின் இடது புஜத்தில் சம்பந்தசாமி என்று ஒரு பித்தளை ஸைன்.

உள்ளே போனால் —வாங்க! என்று குரல்!

முதலில் அசரீரியாக இருந்தது. பிறகு மேஜை நாற்காலி சோபா குவிபாடுகளுக்கு இடையே பார்த்தால்,

ஒரு பாட்டனார் — ஈஸி சேரில் சம்பந்த சாமி சயனம்.

கால்களைப் பரத்தி காம்பஸ்போல் விரித்திருக்க,

எழுபது இருக்கும். வெள்ளி முடிகள் பழுத்த பழுப்பு. வெள்ளி ஃபிரேம் கண்ணாடி. மல் வேட்டி, மல் ஜிப்பா, தங்கச் செயின் கடிகாரம்.

பதினெட்டாம் நூற்றாண்டு பாதிரிமார் டிக்ஷனரியைக் கையில் வைத்திருந்தார்.

இருவரும் உட்கார்ந்தார்கள். அறிமுகத்திற்குப் பிறகு மல்லிக்கைக் காட்டி —நம்ப ஸார் ஒரு ஆராய்ச்சியாளர். உங்க கிட்டே பேசணும்னு இஷ்டப்படறார் என்றார் கிருஷ்ணன்.

புத்தகத்தை மூடினார்.

—பேசட்டுமே.

மல்லிக் தம் வம்சாவளி ஆராய்ச்சியைச் சொல்லி, பால்மர்ஸனைப் பற்றி ஏதாவது தடயம் கிடைக்குமா என்று கேட்டான்.

—என்ன மாதிரித் தடயம்?

—கடற்கரைத் தடயம் ஏதாவது...

—வா இப்படி.

அடுத்த ஹாலுக்குள் போனார்கள்.

உள்ளே பற்றாக்குறை வெளிச்சம்.

பார்த்தால் மூச்சை நிறுத்தும்படி காட்சி! ஒரு மியூஸியம் போல் பழங் காலப் பொருள்கள் டிரில் வரிசையில் நின்றன. சிலைகள் முதல் சிப்பிகள் ஈறாக....

—இப்படி வா!

சிக்கிடங்களில் நுழைந்து போனான்

—இதப் பார்த்தியா?

கையில் எடுத்தார். வெறும் மரத் துண்டு.

—Drift wood

—ட்ரிஃப்ட் வுட்? என்றான் மல்லிக்.

—ஆமாம்! கடல்லே மிதந்து வருமே அது! கரையிலே அதுவா ஒதுங்கும். என்னை மாதிரி பயித்தியங்கள் அதை எடுத்து வச்சுப்பாங்க!

—இதிலே என்ன விசேஷம்?

—விசேஷமா! இதப் பாரு! இது என்ன கட்டை தெரியுமா?

—தெரியாது.

—செவ் அகில் மரம்! ஜாவா அகில்! இது எப்படியோ கடலில் மிதந்து இங்கே வந்திருக்கு.

—ஜாவாவிலிருந்தா?

—ஆமாம்.

சம்பந்தசாமி மேலும் போனர் — இது ஒரு செதுக்கப்பட்ட கட்டை! கருவாலி மரக் கட்டை. ஏதாவது கப்பல்லேர்ந்து வந்திருக்கும்.

—கப்பல்லேர்ந்தா?

—ஆமாம்! போன நூற்றுண்டிலே கப்பல் லாம் இந்த மரத்திலேதான் செஞ்சாங்க. ஓக் மரம்!

மல்லிக் பல்லைக் கடித்தான். கடவுளே, இது ஜாலி காலண்டின் கட்டையாக இருக்குமா?

—இதப் பாரு. இதென்ன தெரியுமா? அல்பட்ராஸ்.

ஒரு மர உருவம். பறவை வடிவத்தில். அல்பட்ராஸ் பறவை! இது போன்ற உருங்களைக் கப்பல் தலைப்பில் செதுக்கியிருப்பார்கள். படங்களில் பார்த்திருக்கிறன்.

மல்லிக்கிற்குப் பரபரவென்று உடம்பு ற்றியது.

—இன்னும் இங்கே இருக்கிறதெல்லாம் கப்பல் மரங்கள்தான் பார்த்துக்க.

பார்த்தான். ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதம். சிலவற்றில் பூவேலை. சிலவற்றில் பொம்மை வேலை. சிலவற்றில் புராண உருவங்கள்.

ட்ரிஃப்ட் வுட்டை அடுத்து சீசாக்கள்! ரோதங்களானவை! ப்ரஷ்ஷியன், மாலட், ப்வகைகளில் எத்தனை வித சின்னச்சின்ன முதல்களுடன் சீசாக்கள்! —இதெல்லாம் ல்லேர்ந்து கிடைச்சதுதான். சிலது மிதக்கும். சிலது ஒதுங்கும்.

இன்னும் கயிறு வகைகள், ராட்டினங்கள், பார்ட்ஸ் நெஸ்டின் கைப்பிடிகள், எல்லாம் அங்கே அணிகளாக இருக்க,

தலை சுற்றியது.

எதைப் பார்ப்பது, எதை விடுவது?

—வாங்க, என்று சீக்கிரமாக அழைத்து உள்ளே போனர். —அம்மா, ரீடா! காப்பி கொண்டுவா! என்றர்.

அவ்வளவு சீக்கிரமாக அழைத்துப்போனது அவனுக்குப் பிடிக்கவில்லை.

சந்தேகம் தட்டியது.

ரீடா வந்தாள். ஆச்சரியம் இந்தப் பெண் அந்த பஸ்ஸில் வந்தவள் அல்லவா!

கறுப்புப் பெண். கூந்தலில் நிறைய நெளி. உடம்பின் அபாரங்கள் இதுவரை அவன் பார்த்ததில் ரிகார்ட்.

ட்ரேயை நாசூக்காக வைக்க நான்கு பிரெஞ்சுக் கிண்ணங்களில் காப்பி சின்னதாக நலுங்கியது.

—கம் ஆன்! ஹெல்ப் யுவர்ஸெல்ஃப்.

...ஆள் ரொம்ப அவசரப்படுத்துகிருரே! காரணம் இருக்கும்...

—நீங்க சாப்பிடும் கோப்டையில் மரி அந்த்வானத் டீ குடித்தாள். பிரஞ்சு பெண் மணி! அட்டகாசி. போன நூற்றுண்டில் வாழ்ந்தவள். எனக்கு சரித்திரம் உயிர். நான் இறந்த காலத்தில் வாழ்கிறவன். குடியுங்கள். ரீடா கையால் போட்ட காப்பி!

சம்பந்தசாமி அவசரப்படுத்தினர்.

ரீடா காப்பியில் மணந்தாள். அவன் பருகும்போது இரண்டு முறை பார்த்தாள். அவனுக்குப் பிடிக்கவில்லை. ஒரு பெண் சீக்கிரமாக முன்னேறினல் அவனுக்கு வெறுப்பாக இருந்தது.

—சாப்பிட்டுட்டீங்களா?

...அவசரப்படுத்துகிருரே! உள்ளே அந்த ஹாலிலிருந்து அவசரமாகக் கொணர்ந்தாரே, அதற்கும் அந்தச் சீசா வரிசையில் கடைசியாக அவன் பார்த்த சீசாவுக்கும் தொடர்பு இருக்குமோ...

சுருக்கென்று முடித்தான்.

அந்த்வானத் கோப்பையை மிக ஜாக்கிரதையாக வைத்தான்.

ரீடா எழுந்து நளினங்கள் செய்து, ஒவ்வொரு கோப்பையையும் சடங்குகளோடு தூக்கி, அவனை நோக்கி கடைசிப் பார்வையைத் தூக்கிப் போட்டாள்.

—போயிட்டு வரீங்களா! அடிக்கடி வாங்க.



....நிச்சயம் அந்த டிகேன்டர் சீசாவில் ஏதோ இருக்க வேண்டும். நான் பார்த்த போதே அது புது மண்ணோடு எடுத்து வந்த சாயல் தெரிந்தது. மண் பொடிகள் ஒட்டி, தெரிந்தது. அந்த அல்லுவியல் மண்; அதை என்னால் கண்டுபிடிக்க முடியும்...

வெளியே வந்தார்கள்.

விடை பெற்றார்கள்.

அவனும் கிருஷ்ணனும் புறப்பட, சம்பந்த சாமி அவசரமாக உள்ளே போனார்.

—திருப்திதானே! எல்லாம் பார்த்தீங்களா என்றார் கிருஷ்ணன்.

—ம்; பார்த்தேன்.

...அந்த டிகேன்டர் சீசாவை இன்னும் பார்த்திருக்க வேண்டும். கரும் பச்சைக்கலர். மேலே மண் ஒட்டியிருந்தது....

—நான் பழம் பொருள்களை மட்டும் சொல் லல்லே. எல்லாத்தையும்னு ரீடாவையும்.

மல்லிக் மௌனமாக அவரைப்பார்த்தான்.

—ஆமாம் மல்லிக், ரீடா கிட்டே பார்க் கறதுக்கு நிறைய இருக்கு.

மல்லிக் அவர் சொன்னதைக் கேட்டதாகத் தெரியவில்லை. எட்டத்தில் டங்களாவை நோக்கிப் போய்க் கொண்டிருந்த மற்றொரு பாதையில் பார்வை விழுந்தது.

அங்கே போவது யார்?

திடுக்கிட்டான் அவன்.

**டா**ர்வினிடம் வொய்ட் பேசிக் கொண் டிருந்தார். நெப்டியூன் மோட்டார் படகு நாகப்பட்டினக் கடலில் தாலாடியது.

—என்னுடைய ஆராய்ச்சி என்னன்னா, 1841 அக்டோபர்லே நாகப்பட்டினத்திலே புயல் வீசியிருக்கு. தஞ்சாவூர் மான்யூவல்லே இந்தச் செய்தி இருக்கு. அதனாலே இலங்கை யைத் தாண்டி ஜூலி வந்திருந்தா இந்தப் புயல்லே சிக்கி இங்கே சமீபங்களில்தான் மூழ்கியிருக்க வேண்டும்.

டார்வின் தம் மூக்குக் கண்ணாடிக் காம்பால் மூக்கைச் சொறிந்தார்.

—வொய்ட்! புயல் எத்தனை மைல் வேகம் தெரியுமா?

—அறுபது மைல்!

—அப்படிப் புயல் வீசினா ஜூலியோட பாய் மரமெல்லாம் கிழிஞ்சு போயிருக்கும்.

—ஒத்துக்கறேன்.

—கப்பல்லே ஸ்டியரிங் வேலை செய்யாது. ஸ்டீரிங் பிடிச்சவனை ஸ்டியரிங்கின் அசுர மான இயக்கம் தூக்கிப் போட்டுடும்.

—ஒத்துக்கறேன்.

—அப்படிப்பட்டபட்சத்திலே, கப்பல் புயல் வசம் சிக்கியிருக்கும்.

—சரி.

—புயல் நீங்க சொன்னபடி வந்தா கப் பலைத் தரையிலே கொண்டு போய் இடிச் சிருக்கும். அது மூழ்கி இருக்காது.

—இடிச்சதா தெரியலே. புயல்லே கப்பல் இரண்டா உடைஞ்சு மூழ்கியிருக்காதா?

—அதுக்கும் சந்தர்ப்பம் உண்டு. ஆனா ஜூலி பதினாறு ட்ரிப் இந்தியா போய் வந் திருக்கு. பலமாத்தான் இருக்கும். அந்த நாளைய கப்பல் 50, 60 ட்ரிப் கூட இந்தி யாவுக்கு அடிக்கும்.

வொய்ட் யோசித்தார்.

—ஒருவேளை, உடைஞ்சு போச்சு வச்சுக் குங்க, என்றார் வொய்ட்.

—உடைஞ்சா நீங்க சொல்றபடி மூழ்கி இருக்கணும். முதல்லே இந்த டைவர்ஸ் வரட்டும். கீழே கடலுக்கு அடியிலே நிலைமை எப்படி இருக்குன்னு கேட்கலாம்.

இருவரும் பிரிந்தார்கள்.

வொய்ட் தமது காபின் நம்பர் ஒன்றுக்கு வந்தார்.

கதவை அடைத்ததும் ஜிலுஜிலு என்று ஏர் கன்டிஷன் குளிர் அவரை அணைத்தது. மிருது வெளிச்சம். உயர்ந்த நேர்த்தியில் ஜோடிப்புச் செய்திருந்த அந்த அறையின் வலது ஓரம் அந்த நவீனக் கட்டிலில் கேட ரீனா ஆவலோடு காத்திருந்தாள்.

—கம் ஆன் ஹனி! என்றார் வொய்ட்.

—எவ்வளவு லேட்?

என்று சிணுங்கல் கொடுத்து எழுந்தாள்.

ஒரு மார்ட்டினியை ஊற்றி அவளும் அவரும் எடுத்துக் கொண்டார்கள்.

—உங்கள் ஆராய்ச்சி எவ்வளவு தூரம்? (கேடரீனா).

—எனக்கு நம்பிக்கை எப்போதும் உண்டு.

—எவ்வளவு தங்கம் என்றீர்கள்?

—டௌனிங் தெருவை விலைக்கு வாங் கிடுவேன்.

—ரொம்பப் பீற்றிக் கொள்ளாதீர்கள். கிடைத்தால்தானே!

—நிச்சயம் கிடைக்கும். நாங்கள் நாலு பேரும் பணக்காரர்கள் ஆகிவிடுவோம். நீ ஒரு பெரிய பிஸினெஸ் சாம்ராஜ்யத்துக்கு ராணி ஆகிவிடுவாய்.

மூன்று க்ளாஸ்கள் இறங்க, கேடரீனா மெத்தையில் சாய்ந்தாள். மல்லாந்தநிலையில் அவள் உருவம் வரவேற்புக் காட்டியது. ஜாடையாக வொய்ட்டைப் பார்த்தாள்.

வொய்ட் எழுந்தார். ஆஜானுபாகுவான தேகம்.

மெத்தையில் அமிழ, மெத்தை பெரிதாக நைந்தது.

மீதிகளை மார்ட்டினி கவனித்துக் கொண் டது.

காபின் கதவு அப்போது தட்டப்பட, —பாஸ்டார்ட் என்று விலகினார் வொய்ட்.

(தொடரும்)

''என்ன சார் கல்யாணம் எப்படி...?''

''என்ன கல்யாணம் போங்கோ வாசல்லே ஒரு செருப்பு கூட புதுசா இல்லே...!'' —கண்ணன்



திருப்பதிக்கு அருகிலுள்ள அந்த நகரி மூக்கில் தீபம் தெரிகிறதா என்று பால்மர்ஸன் கேட்டார்.

இந்தியக் கடற்கரைக்கு அருகில் அவரது கப்பல் வந்திருக்கும் என்று அனுமானம்.

எஸ்டன் கண்கள் வலிக்க எல்லாத் திசைகளையும் பார்த்தார். மை இருட்டு, பொட்டு வெளிச்சம் இல்லே. ஊமை மினுப்பு கூட வானில் இல்லே. கப்பலும் கடலும் அந்தகாரத்தில் கலந்திருந்தன.

எத்தனையோ வித ஆபத்துக்களை அனுபவித்திருந்த எஸ்டனுக்குப் பீதி ஏற்பட்டது.

-காப்டன்! நாம் ஒரு பெரிய ஆபத்தில் மாட்ட போகிறோம் என்று கூறினார்.

-எஸ்டன் என்றார் காப்டன். -தைரியம் இழக்காதே கேப் ஹார்னை விட உலகத்தில் அட்டூழியமான இடம் கிடையாது! அதையே இரு முறை கடந்திருக்கிறேன், என்றார், நிதானமாக.

மேல் தளத்தில் நிற்க முடியவில்லே.

காற்று அவர்களைப் பிடுங்கி வெளியே எறிந்துவிடும் போல.

உள்ளே அலேச்சாரலும், முழு அலேகளும் தாராளமாக வீசின.

-காப்டன்! பெரிய ஆபத்து! காற்று விசை அதிகமாகிறது. கப்பல் கொம்பு சுற்றுகிறது என்றார் எஸ்டன்.

காற்றில் பேரோசை வந்துவிட்டது.

கப்பலும் மாறி மாறிச் சுழன்றது. அதை உணர முடிந்தது, பார்க்க முடியவில்லே.

-வாருங்கள், கீழே போகலாம், என்றார் எஸ்டன் ஆத்திரத்துடன். மேலே நிற்க முடியவில்லே.

காப்டன் பதில் பேசவில்லே.

காபின் கைப் பிடியைப் பிடித்து வெறியுடன் இருட்டைப் பார்த்தார்.

அவர் கண்களில் தெரிவது என்ன?

அது என்ன ஜோதி?

## 10

"The clouds gathering thick upon us and the winds, singing and whistling most unusually.... day turned into night, the blackness of the heaven......"

-வில்லியம் ஸ்ட்ராசியின் அனுபவங்கள். 'எலிசபெத் கால கப்பல் பிரயாணங்கள்' என்ற நூலில் இருந்து.

மல்லிக் பார்க்க, பிரத்தியேக வழியில் ரங்கூன் பங்களாவை நோக்கிப் போய்க் கொண்டிருந்தவன் அந்த மீசைக்காரன். பாதுகாக்கப்பட்ட இடத்தில் மல்லிக் பார்த்த அதே ஆசாமி! சொல்லப் போனுல் அவன் தலேயில் கும் கொடுத்தவனும் அவன் தான்!

இவனு!

அந்த ஆள் நீள நடந்து போனுன். திரும்பவில்லே.

மல்லிக் யோசித்துக் கொண்டே கிருஷ்ணனுடன் நடந்தான்.

புஷ்பா தங்கதுரை



இந்த மீசைக்காரனுக்கும் இந்தச் சம்பந்த சாமிக்கும் தொடர்பு உண்டா?

சம்பந்தசாமி சொல்லித்தான் மீசைக்காரன் அந்தப் பாதுகாக்கப்பட்ட இடத்தில் தோண்டினா?

அந்த டிகேன்டர் சீசா பார்த்தோமே, அது அங்கேதான் கிடைத்ததோ?

கிருஷ்ணனும் அவனும், சிறிது தூரம் போன பின், இருவரும் ரொம்ப இதமாக விடைபெற்றுப் பிரிய

கிருஷ்ணன் கடற்கரைப் புதுப் பசுமைகளைத் தேடிப் போனார்.

—டிகேண்டர் பாட்டில்! அது என்னடா? என்றான் கோபி.

அவர்கள் ஐந்து ரூபாய் அறையில் இருந்தார்கள். ருக்மிணி விலாஸ் என்று ஓட்டலின் பெயர். ஊர் பூந்தளம். கனிநாகலாபுரத்திலிருந்து ஐந்தாவது மைலில் இருந்தது.

நகரத்தின் ஆரம்ப லட்சணங்களுடன் இருந்தது ஊர். அங்கிருந்துதான் இனி மேற்கொண்டு காரியத்தைக் கவனிப்பது என்று தீர்மானித்திருந்தார்கள்.

—மது வைக்கும் சீசாடா அது! வண்டலை வடிகட்ட ஏதுவாக இருக்கும் சீசா! அது



அந்தச்சம்பந்தசாமி வீட்டிலே இருந்தது, அலுவியல் மண்ணோட.

—அது என்னடா மண்ணு?

—பாதுகாக்கப்பட்ட இடத்திலே இருந்த மண்ணு அந்த ரகம்தான். அதனாலே அந்தப் பாட்டில் அங்கேதான் கிடைச்சிருக்கணும்.

—அந்த பாட்டில்லே என்ன விசேஷம்?

—அது கரும் பச்சைக் கலர் பாட்டில்! கழுத்தோரம் இரண்டு சதுர அங்குலத்துக்கு வேறு விதமா கலர் தெரிஞ்சது. உள்ளே ஏதுவோ ஒட்டிண்டிருக்குன்னு அர்த்தம்.

—என்ன இருக்கும்?

—கடிதம். அந்த நாளிலே பாட்டில்லே மெஸேஜ் வச்சுக் கடலிலே மிதக்க விடுவாங்க.

கோபி திகைத்தான்.

—எதுக்கு?

—உதவி கிதவி வேணும்னு செய்வாங்க! இங்கே இந்த பால்மர்ஸன் அது போல ஏதோ எழுதித் தன்னோட வச்சிருக்கணும். உதவி கிடைக்காம இறந்துட்டா பின்னாலே யாராவது அவரைப் பற்றிய விஷயங்களைப் புரிஞ்சுக்கிடணும்னு கடிதம் எழுதி வைச்சிருப்பார்.

கோபிக்கு அவன் சொல்வது ஆச்சரியமாக இருந்தது. —என்ன எழுதியிருப்பார்னு நினைக்கிறே?

—கப்பலுக்கு என்ன நேர்ந்தது, அது எங்கே போச்சு இதப் போல பல விஷயம் எழுதியிருப்பார்.

பளிச்சென்று கோபிக்கு வெளிச்சம்.

—பலே ஆராய்ச்சிடா! இப்போ அந்தப் பாட்டிலைப் போய்ப் பார்க்கணும்கிறயா?

—ஆமாண்டா. பார்த்தா ஏதாவது விஷயம் தெரிய வரும்.

—சம்பந்தசாமிகிட்டயே கேளேன்.

—ஐயோ! அவருக்கு நான் வந்ததே பிடிக்கலை. இதைப் போய்க் கேட்கப் போனா ஆபத்து. முக்கியமா ஜூலி விஷயம் அவருக்குத் தெரியக் கூடாது.

இருவரும் யோசித்தார்கள்.

இரண்டு நாட்கள் எதுவும் தோன்றவில்லை.

மூன்றாம் நாள் மல்லிக், —கோபி! இதுக்கு நியாயமான வழி கிடையாது. அநியாயத்திலே இறங்க வேண்டியதுதான்.

—என்ன வழி?

—திருட்டுத்தனமாப் பார்க்க வேண்டியதுதான்.

—முடியுமா?

—முடியும். ராத்திரி வீடடுக்குள்ளே புகுந்துட வேண்டியது.

—ஐயோ, சட்டப்படி குற்றம்டா!

—இருந்தாலும் செய்யத்தான் வேணும்,

இரவின் சில்க் இருட்டு. வானத்தில் நட்சத்திரங்களால் ஒரு பால்-வழிவு! சுத்தமான கண்ணாடிக் காற்று! மல்லிக்கும் கோபியும் வயல் வரப்பில் நடந்தார்கள்

எட்டத்தில் பங்களா தெரிந்தது.

கீழ் வரிசை சன்னல்களில் வெளிச்சம் கொளுத்தி இருந்தது.

## 'பெண் பார்த்த' பின்னர்



என் நிறம் மட்டு என்றுராம்,
என்னைப் பார்க்க வந்தவர்,
என் கல்வி குறைவு என்றுராம்,
எதையும் எடைபோடும் அவர் அப்பா.
என் நகை போதாதாம் -
என் மாமியாய் வர இருந்தவர் குறை,
எண்ணி, நிறுத்து, அளக்கும்
இவர்க்கெல்லாம் தெரியாதவை :
ஏன் எண்ணத்தின் ஒளி,
லட்சியத்தின் கனம்,
கனவுகளின் வண்ணம்,
இன்னும்,
இவர்களை ஏற்கும் என் இங்கிதம்,

—அ. ஆசிர்வாதம்

நெருங்கினுர்கள்.
ஐந்தடிக் காம்பவுண்ட்
—நீ இருந்துக்கோ! நான் போயிட்டு வர்றேன்.

மல்லிக் காம்பவுண்டை ஏறிக் குதிக்க உள்ளே அயல் சங்கீதம் ஜிகிஜம் ஜம்ஜா, ஜிகிஜம் ஜம்ஜா என்று தாளம் போட்டுக் கொண்டிருந்தது.

பங்களாவின் பின்புறம் அது! எங்கும் இருட்டாகிக் கிடக்க, சில வெண்டிலேட்டர் இடுக்குகளில் வெளிச்சம் கசிந்து கொண்டிருந்தது.

உள்ளே எல்லோரும் என்ன செய்கிறுர்கள்?
எம்பிப் பார்ப்பதற்கு வசதியாக சன்னல் வெளி விளிம்புகள் இருக்க, மெள்ள ஏறினுன்.
வெண்டிலேட்டரை விண்டு பார்த்ததும் உள்ளே ஒரு மெல் வெளிச்சம் மரத்துக் கிடந்தது.

அநேகர் விமரிசையாகக் குடித்துக் கொண்டிருந்தார்கள். சில பெண்கள் பற்று ஆடைகளுடன் மது வகைகளை வழங்கிக் கொண்டிருந்தார்கள்.

ஒரு மேஜையில் விநோதச் சீசாக்களில் வர்ணத் திரவங்கள் பல உயரங்களில்!
பெண்கள் இருபதுக்கு அந்தப்புறமும் இந்தப்புறமும் இருக்க,

உடம்புகளில் மதனனின் அழைப்புக்கள் பளீர் பளீர் என்று துள்ளின.
சம்பந்தசாமி மகா ரசிகர் என்றுரே, கிருஷ்ணன். ரசிகர்தான்!
இப்படியே அடுத்த அறையும் டிட்டோ!

மல்லிக்கிற்கு அது நல்ல சமயம் என்று தோன்றியது.

அந்த அரும்பொருள் ஹால் எங்கிருக்கிறது என்று தெரியும்.

அதன் வெண்டிலேட்டர் தனியாக ஒதுங்கி இருந்தது.
உயரத்தில் ஏறி, பல பிரயத்தனங்கள் செய்த பின், வெண்டிலேட்டர் சிக்கலைத் தவிர்த்துப் பிரித்தான்.

நடுக் கம்பியில் கயிற்றைக் கட்டி உள்ளே குதித்தான்.
இருட்டில் முதலில் எதுவும் தெரியவில்லை,

பிறகு அந்த அரும்பொருட்கள் திட்டுத் திட்டான உயரங்களில் தெரிய, மனம் படபடத்தது.

ட்ரிஃப்பட் வுட்கள் தாண்டி, சீசாக்கள் பகுதி வந்து அந்த டிகேன்டர் பக்கம் வந்தான்.

இதயம் உடம்புக்கு வெளியே அடித்தது.
அவசரமாகச் சீசா மீது கை வைத்து அதை எடுத்தான்.

ஒரு அலாரம் திடீரென்று பொழிந்தது. அந்த ஹால் எங்கும் வெளிச்சம் சுரீர் என்று விழுந்தது.
திடுக்கிட்டு நிமிர்ந்தான் மல்லிக்,

## 20 அம்சம்!

எங்களது கப்பல்
மூழ்கிக் கொண்டிருக்கிறது.
புன் முறுவலுடன்
கேப்டன் வந்தார்.
'சக பாடிகளே!
பிரயாணிகளே!
முத்துக் குளிப்பதற்கு,
இதுவே தருணம்.
நமது கப்பலின்
ஓட்டைகளை,
முத்துக்களாலேயே
அடைப்போம்.
எல்லோரும் கடலில் குதியுங்கள்.
ஜெய்ஹிந்த்,

—மு. கோசலைராமன்


ONAS FRIENDS
CIRCULATION

வொயிட் கதவைத் திறந்து வெளியே வந்தார். டார்வின் பெரிய லாரல் (ஹார்டி) புன்னகையோடு நின்ருர். வாய் ரொம்ப தூரம் கிழிந்திருந்தது.

—என்ன? என்ருர் வொய்ட், அரை குறை உடுத்தலில் பொத்தான்களை மாட்டிக் கொண்டு. அவர் கைகளில் இன்னும் கேட ரீனுவின் ஸ்பர்சம் ஒட்டியிருந்தது.

—லைஃப் லைன்லே நாலு இழுப்பு இழுத் தாங்க!

—ஓ! என்ருர் பரபரப்புடன் வொய்ட். —அதற்குள் ஏதாவது சிக்கி விட்டதா?

—இருக்கும்.

முக்குளிப்பவன் நம்பர் ஒன்று இப்போது சமிக்ஞை செய்துவிட்டு மேலே வந்துகொண்டிருந்தான்.

வொய்ட்டுக்கு ஆவல் கூடியது. தளத்தில் இருப்புக் கொள்ளவில்லை. நேராக டைவிங் பிளாட்பாரத்துக்குப் போனுர். கடலுக்குள் உற்று நோக்கினுர். லைஃப்லைன், ஏர்—பைப் இரண்டும் ஜோடிகளாகத் தண்ணீருக்குள் ஓடியிருந்தன. அவை இப்போது அசைந்து கொண்டிருந்தன.

கடலில் முக்குளிப்பவன் விரைவாக மேலே வந்துவிட முடியாது.

முப்பத்து மூன்று அடிக்குக் கீழே உள்ள ஆழத்தில் இருப்பவன் மேலே வரும் போது நிறைய எச்சரிக்கைகளைக் கடைப் பிடிக்க வேண்டும். மேலே ஏற ஏறத் தண்ணீரின் அழுத்தம் குறைவதால், அந்தத் திடீர் அழுத்தக் குறைவுகள் அவனது உடம்பில் பெரிய உபாதைகளை ஏற்படுத்தும். சிலர் இறந்துகூட விடுவார்கள். எனவே ஒவ்வொரு பத்துஅடி ஆழத்திலும் அவர் பல நிமிடங்கள் நின்று நின்று வரவேண்டும்.

எனவே ஆள் மேலே வர 45 நிமிஷம் ஆகும் என்று வொய்ட்டுக்குத் தெரியும்.

நேரத்தைப் பொறுமை யிழந்து போக்க, காற்றுக் கொப்புளங்கள் மேலே வர ஆரம்பித்தன.

—இதோ, இதோ, என்று டார்வின் கத்தினுர். (தொடரும்)

"பார்த்திபனுடைய புதல்வன் விக்ர மன் சுதந்திர சோழ நாட்டின் சிம்மாதனம் ஏறியபோது அடைந்த மகிழ்ச்சியை நானும் அடைந்தேன்" என்று "கல்கி" குறிப்பிடு கிருர் என்ருல் 'அது எந்தச் சந்தர்ப்பத்தில்?' என்று அறிந்து கொள்ள உடனே ஆர்வம் உண்டாவது இயல்பு.

ஸ்ரீ கே. வி. ரங்கசாமி ஐயங்காரிடமிருந்து பார்த்திபன் கனவு நாவலுக்கு ஒரு பாராட்டுக் கடிதம் பெற்றபோதுதான் "கல்கி" அவ்விதம் மகிழ்ந்தார். சென்னை பச்சை யப்பன் கல்லூரி துணைப் பேராசிரியராகவும், பின்னர்; திருவனந்தபுரம் மகாராஜா கல்லூரி, காசி மத்திய ஹிந்து கல்லூரி, திருப்பதி ஓரியண்டல் ஆய்வு நிலையம் ஆகியவற்றில் முதல்வராகவும் விளங்கிப் புகழ் பெற்ற பேராசிரியர் கே. வி. ரங்கசாமி ஐயங்கார், சரித்திரம், பொருளாதாரம், நீதி சாஸ்திரம் ஆகிய வற்றில் நிகரில்லாப் புலமை வாய்ந்த நிபுணர்; ஆராய்ச்சியாளர்.

இந்த வருஷம் அவருடைய நூற்ருண்டினை அவரால் பயனுற்ற எண்ணற்ற மாணவர்கள் நன்றியோடு கொண்டாடுகின்றனர்.

பார்த்திபன் கனவுக்குப் பெற்ற பாராட்டு, "கல்கி"யை சிவகாமியின் சபதத்துக்கு முன்னுரை எழுதித் தருமாறு அவரைக் கேட்கத் துணிவை அளித்தது. அவரும் ஒப்புக் கொண்டு ஆங்கிலத்தில் எழுதித் தந்த முன்னுரை, சரித்திரக் கதை எப்படி அமைய வேண்டும் என்பது பற்றிய ஓர் அற்புத ஆராய்ச்சிக் கட்டுரையாகவே திகழ்கிறது! "தனி நூலாகவே வெளியிடத் தகுதி வாய்ந்தது; வருங்காலத்தில் தமிழில் சரித்திரக் கதைகள் எழுதப்போகும் அனைவருக்கும் வழிகாட்டி" என்கிருர் "கல்கி" தமது நன்றியுரையில்.

பழைய வடமொழி நூல்களில் மதிப்பு மிக்க பலவற்றைத் தேடிப் பிடித்து, திருத்தம் செய்து பதிப்பிப்பதிலும் தம்முடைய ஆராய்ச்சிகளைத் தொடர்ந்து உரைகள் நிகழ்த்துவதிலும் அவர் காட்டிய ஆர்வத்துக்குப் பல விருதுகளைப் பெற்றவர் கே.வி. ரங்கசாமி ஐயங்கார். நாமும் நமது நினைவஞ்சலியைச் செலுத்தி ஒரு தவப் புதல்வனைக் குறித்துப் பெருமிதம் கொள்வோம்.

▫ கே. வி. ரங்கசாமி அய்யங்கார்



எஸ்டன் கீழே போக, விடாப்பிடியாக மேலே நின்ற பால்மர்ஸன் கண்களில் அந்த ஜோதி தெரிந்தது.

அதன் பூச் சொரிவுகளில் மதிமயங்கி நின்றார்,

அவர் பார்த்தது நிஜமான ஜோதி அல்ல,

இதுபோன்ற கொந்தளிப்பான கடல்களில் எத்தனையோ மாலுமிகள் கண்ட ஜோதிதான் அது.

சித்தப் பிரமை என்று பலர் சொல்வார்கள்.

கீழே போன எஸ்டன் அரை மணியில் மேலே வர, கொட்டும் மழையில் நனைந்து கொண்டு பால்மர்ஸன் அப்படியே நிற்பதைப் பார்த்தார்.

அவரை / வலுக்கட்டாயமாகப் பிடித்து இழுத்து உள்ளே கொண்டு போனார்.

அவர் காபினுக்குள் அவரைத் திணித்துப் படுக்கையில் அமர்த்திய போது, பால்மர்ஸனின் இரண்டு பற்கள் தாமாகக் கீழே உதிர்ந்தன.

ஸ்கர்வி நோய் முற்றிவிட்டது.

உள்ளே இருந்த ஹரிகேன் விளக்குக் குதியாய்க் குதித்து சீக்கிரத்தில் அணைந்தது.

பலமாகப் பூகம்பம் போல் இரண்டு முறை கப்பல் ஆடியது.

கப்பல் ஸ்டார் போர்ட் பக்கம் சாய்ந்து விட்டதாக எஸ்டன் உணர்ந்தார்.

பிரதானக் கொடி மரம் டபீர் என்று இரண்டாக ஒடிந்தது.

## 11

அந்நாளில் ஸ்கர்வி நோயைப் பற்றி யாருக்கும் தெரியாது. கடல் விபத்து, யுத்தம் இந்த இரண்டையும் விட அதிகமான உயிரை இந்நோய் பலி கொண்டது. கடலில் மனிதன் போகக் கூடாது என்பதை அறிவிக்க, கடவுள் இந்நோயை ஏவி விட்டிருக்கிறார் என்று மாலுமிகள் எண்ணினார்கள்.

ஸ்கர்வி என்பது விடமின் ஸி குறைவால் ஏற்படும் நோய். எலுமிச்சை அல்லது ஆரஞ்சுகளைத் தின்றால் நோய் மறைந்துவிடும்.

—'தி பிளண்ட் ஹார்ன்ஸ் ஹேட்'ல்
ரிச்சர்ட் ஹாக்

***

வெளிச்சம் அடித்தவுடன் திடீரென்று அம்மணமான உணர்ச்சி.

சுற்றும் பார்த்தான்.

அலாரம் அணைந்தது. அதே நேரம் ஹாலின் கதவு டக்கென்று திறந்தது.

திடுக்கிட்டுப் பார்க்க, உள்ளே வந்தாள் ரீடா.

மல்லிக்கின் தைரியம் திரவமாகிக் கீழே ஓடியது. மயிர்க் கால்கள் எழுந்து நின்றன. கண்களில் பஞ்சு பறந்தது. பொறியில் அகப்பட்ட உணர்வு அவனைப் பற்றியது.

—மன்னிச்சுடுங்க, ரீடா! தப்பிதம் செய்துட்டேன், என்றான்.

அவள் பேசவில்லை. ஒரு ஸ்தம்பனப் பார்வை பார்த்தாள். முகம் நலுங்கவில்லை,



குரல்வளைக்குள் வார்த்தைகள் உருவாகி அழிவது தெரிந்தது.

—ரீடா, எக்ஸ்க்யூஸ் மீ! இங்கே இனி வரவே மாட்டேன்.

அவன் போக முற்பட அவள் கையை நீட்டி நிறுத்தினாள்.

—ப்ளீஸ், விட்டுறுங்க! திருட வரல்லே! ஒரு விஷயம் தெரிஞ்சுக்க வந்தேன். ஊரைக் கூட்டிடாதீங்க! மானம் போயிடும்.

இடுப்பிலிருந்து அவள் ஒரு பாக்கெட் நோட்டை உருவினாள். மார்பிலிருந்து பால் பாயிண்டை எடுத்தாள். எழுதினாள். —உங்களுக்கு என்ன விஷயம் தெரியணும்?

திகைப்புடன் அவளைப்பார்த்தான்.

அவளோ திரும்ப நோட்டைக் காட்டி என்ன விஷயம் என்று கேட்டாள், சைகையில்.

அவன் பேசவில்லை. கண்ணில் ஈரம் வந்தது. ஊன்றிப் பார்த்தான். இவள் ஊமையா?

அவள் கண் வெகுளியாக இருந்தது. ஆனால் உள்ளே பாப்பாவின் ஓரங்களில் தீற்றியது போல் ஒரு சோகம். நிரந்தர சோகம்.

—அந்தச் சீசாவைப் பார்க்கணும், ரீடா!

(வாங்க)

அழைத்துப் போனாள்.

டிகேண்டர் சீசாவைத் தூக்கினாள். பயத்தில் அவன் மூச்சு எக்கியது. அலாரம் அடிக்குமோ! அடிக்கவில்லை.

அவனிடம் அதைக்கொடுக்க, வாங்கினான். உடம்பு கை உதறியது. விளக்கு வெளிச்சத்தில் தூக்கிக் காட்டினான்: நிச்சயம் அது காகிதந்தான். சூட்சுமப் பார்வைக்குத்தான் தெரியும். சம்பந்தசாமி பார்த்திருக்க மாட்டார். பார்வை பற்றுது. சீசாவின் கீக்கிடமான தோள் பட்டையில் காகிதம் ஒட்டி இருந்தது.

—இதை எடுக்கணும்.

ரீடாவிடம் புன்முறுவல்.

(இருங்க இதோ வரேன்.)

போனாள். நீளக் குடைக் கம்பியை எடுத்து வந்தாள்.

மல்லிக்குக்கு உற்சாகம் தாங்கவில்லை. சீசாவுள் கம்பியைச் செலுத்தி எச்சரிக்கையோடு துழாவினான். காகிதம் அகப்படவில்லை. பிறகுகம்பியை வளைத்துத் துருவ, கடிதம் இடம் பெயர்ந்தது. சீசாவின் வாய் சிறியது. வெளியே எப்படி எடுக்க? காகிதமோ பழசு! பொடிந்து போனாலும் போகும்.

கம்பியை மெள்ள உள்ளே துருவிக் கடிதத்தைத் தாஜா செய்து வெளியே எடுத்ததும் அவனுக்கு உற்சாகம் உச்சந்தலையில் அடித்தது. கையும் காலும் நடுங்கின. என்ன செய்ய வேண்டும் விளங்கவில்லை.

—ரீடா! இதை எடுத்துட்டுப் போய்க்கொண்டு வர்றேன்.

(சரி).

—என்னைத் தப்பிதமா நினைக்க மாட்டியே?

(மாட்டேன்.)

நோட்டை எடுத்தாள், எழுதினாள். —சனிக்கிழமை வாருங்க.

—வரேன்.

பூந்தளத்துக்கு வந்து இரவு பத்து மணிக்கு அறைக் கதவைச் சாத்தி, அறுபது வாட்டை எரித்து, காகிதத்தை மிக மெள்ள மெள்ளப் பூப்போலப் பிரித்துப் பார்க்க,





# கல்கி-சாரதா'ஸ்

## பட்டுப்புடவைகள் பரிசுத்திட்டம்



இந்த வாரத்திய கேள்வியும் விடைகளும்:

கேள்வி **பெண்ணை வெற்றி பெற வைப்பது எது?**

விடைகள் **பக்தி - உழைப்பு - வாய்ப்பு.**

[குறிப்பு: அந்நாளில் வழங்கும் ஆங்கிலத்தில் சில ஸ்பெல்லிங்குகள் வித்தியாசமானவை]

(எச். எம். எஸ். ஜூலி காலண்ட்டின் தளபதி எட்வர்ட் ஆர். பால்மர்ஸன் அறிவிப்பது என்னவெனில் மேற்குறித்த கப்பலை இத்துடன் இணைத்துள்ள சார்ட் பிரகாரம் கண்டுபிடித்துக் கொள்ளலாம்.

எட்வர்ட் ஆர். பால்மர்ஸன்)

அவனுக்கு அழுகை வராக் குறை!

அந்தச் சார்ட்டைத்தான் காணவில்லை.

**வொ**யட் கைக் கடிகாரத்தைப் பார்த்தார். சரியாக 25 நிமிடத்துக்குப் பிறகு டைலர் ராப்ஸன் மேலே வந்தான்.

அவனைத் தண்ணீரிலிருந்து மேலே தூக்க கிரேன் வேண்டி வந்தது.

கிரேனின் கொக்கி அலக்காகத் தூக்கி அவனை மேல் தளத்து ஸ்டூல் மேல் வைக்க, இருவர் அவசரமாக வந்து அவனது ஹெல்மெட்டையும், கார்ஸலெட்டையும் கழற்றினார்கள்.

காலில் அந்த முப்பத்திரண்டு பவுண்டு பூட்ஸையும், முதுகின் 40 பவுண்டு கனத்தையும் கழற்றிய பிறகுதான் ராப்ஸன் தன்னைச் சுவாதீனமாக்க முடிந்தது.

எல்லாம் முடியும்வரைக்கும் வொயட்டுக்குப் பொறுமை இல்லை. —ராப்ஸன் என்ன விஷயம்? என்றார்.

—கீழே பீட்டர் எதையோ எடுத்திருக்காரு. ஷாட் ரோப்பை மேலே தூக்குங்க!

தூக்க உத்தரவு கொடுக்கப்பட்டது.

—நீங்க கப்பலைப் பார்த்தீங்களா ராப்ஸன்?

—இல்லை.

—பின்னே எக்கோ ஸவுண்டரில் தெரிந்தது என்ன?

—அது வெறும் மேடு. 20 அடி உயரம் இருக்கும்.

—நான் சொன்னேனே, என்றார் டார்வின். எக்கோ ஸவுண்டரில் கடலுக்குள் உள்ள தரை மட்டத்தைக் கணித்துக் கொண்டே வந்தபோது திடீரென்று ஒரு வித்தியாசமான மட்டம் தெரிய வந்தது. அதை கப்பல் என்று வொயட் சொல்ல, வெறும் மேடு என்று டார்வின் சொல்லியிருந்தார்.

அவர் சொன்னது இப்போது நிரூபிக்கப்பட்டு விட்டது.

—நீங்க சொன்னதை ஒத்துக்கறேன், டார்வின். ஆனா மேடு இருந்தா அதன் காரணம் என்ன', அதையும் கண்டு பிடிக்கணும் இல்லே.

—வெறும் பவழப் பாறையாக இருக்கும்.

—பார்ப்பமே! பீட்டர் எதையோ அனுப்பறாரே, பார்ப்போம்.

ஷாட் ரோப் என்பது முக்குளிப்பவரைக் கீழே இழுத்துச் செல்லும் கயிறு. அதை மேலே ஏற்றிக் கொண்டிருந்தார்கள். ஒரு விஞ்ச் மெதுவாகச் சுழல, தண்ணீர்ச் சொட்டுக்களுடன் கயிறு மேலே வந்து கொண்டிருந்தது.

கடைசி அடிகள் வந்தபோது விஞ்ச் மெதுவாக்கப்பட்டது,

கடலுக்கு மேலே நைலான் வலை தலை காட்டியது. அதில் சிக்கி இருப்பது என்ன? கறுப்பாக, களிம்பு ஏறி....

தளத்தில் அந்தப் பொருளை வைத்ததும் நைலான் வலை அவிழ, இரண்டு லாப்ஸ்டர்கள் சாவகாசமாக வெளியே நடந்தன.

அந்தக் களிம்பு ஏறிய வஸ்து மூன்றடி நீளமும் இரண்டரை அடி அகலமுமாக இருந்தது. மேற்புறம், கீழ்ப்புறம் எது, உச்சி எது என்று தெரியவில்லை. நன்றாகக் கனத்தது.

வஸ்துவின் மீது கடற் பூச்சிகளும், பூண்டுகளும் கிளைத்து மூடியிருந்தன. பெரும் பகுதிகளில் பவழ இனங்கள் படிந்து பாறையாக்கி இருந்தது.

—என்ன நேர்த்தியான கண்டுபிடிப்பு? என்றார் வொயட்.

டார்வின் உதட்டைப் பிதுக்கினார்.

சீக்கிரம் அந்தக் கண்டுபிடிப்பு என்ன என்று அறிய உளி, சுத்தியல், கெமிகல்கள் சகிதம் இருவர் உட்கார்ந்தார்கள்,

கீழே இருந்த பீட்டரை —மேலே வா என்று சமிக்ஞை காட்டிவிட்டு, வொய்ட் டார்வினை அழைத்துக் கொண்டு சார்ட்டர் அறைக்குப் போனார்.

—இந்த இடத்தின் ஆழம் என்ன? என்றார் வொய்ட், அங்கிருந்த காப்டனை நோக்கி.

—நூற்று இரண்டு அடி.

—கரையிலிருந்து எவ்வளவு தூரத்தில் இருக்கோம்?

—பன்னிரண்டு மைல்.

—இன்னும் கொஞ்சம் கரைப் பக்கமாகப் போகலாமா? என்று கேட்டார் டார்வின் இடைமறித்து.

—போகலாம். ஆனா வீணா இந்தியன் கோஸ்ட் – கார்ட் நம்பளைச் சந்தேகப்படுவாங்க!

—இவ்வளவு தூரம் வராங்களா?

—இதுக்கு மேலும் வராங்க.

டார்வின் யோசித்தார். — மிஸ்டர் வொய்ட்! நூறு அடியிலே தேடிப் பிரயோசனமில்லே. கப்பல் புயல்லே சிக்கியிருந்தா இன்னும் கரைப் பக்கமா ஒதுங்கியிருக்கும்.

—எவ்வளவு ஆழத்திலே?

—அம்பது அடியிலிருந்து இருபது அடி ஆழத்துக்குள்ளே ஒதுங்கி இருக்கும். நாம்ப அங்கேதான் ஸவுண்டிங் எடுக்கணும்.

—மிஸ்டர் டார்வின்! என் பேச்சுக்கும் கொஞ்சம் மதிப்பு வையுங்க! புயல் வந்த போது இந்தக் கடல்லே நீரோட்டம் எப்படிப் போயிருக்குன்னு நினைக்கிறீங்க?

—பால்க் ஜலசந்தி பக்கமாத்தான்.

—ஓகே! நீரோட்டம் கரை ஓரமாப் போயிருக்க முடியாது. ஒத்துக்கிறீங்களா?

—ஒத்துக்கிறேன்.

—நீரோட்டத்திலும் அலையிலும் சிக்கி ஜூலி மூழ்கியிருக்கும். காற்று அதை ஒண்ணும் செய்திருக்காது.

—இல்லே; காற்று அதைக் கரையோரம் கொண்டு தள்ளி யிருக்கும் என்கிறேன்.

—நிச்சயமாக இருக்காது. நீரோட்டப் பாதையிலே அலையிலே அடிபட்டு ஜூலி மூழ்கியிருக்கணும். அதனாலே இந்தப் பக்கம்தான்....

—மிஸ்டர் வொய்ட்! மான்ஸூன் போது இங்கே வீசற புயலே நீங்க பார்த்திருக்கீங்களா? என்றார் டார்வின்.

—நீங்க பார்த்திருக்கீங்களா?

—மான்ஸூன் ஆராய்ச்சிக்கே நான் இங்கே வந்தவனுச்சே. ஜூலி நிச்சயமா...

மீதி அவர் வார்த்தையை உடைத்துக் கொண்டு இரு சிப்பந்திகள் அந்தக் கடல் வஸ்துவைத் தூக்கிவர — ஓ காட்! என்று இருவரும் கூறி ஆச்சரியத்தில் ஸ்தம்பித்தார்கள். (தொடரும்)


# சிதம்பரம் நடராசர் கோயில் திருப்பணிக் குழு

**[சென்னை கிளை]**

அலுவலகம் : 23, பால்பர் ரோடு, சென்னை – 600 010 தொலைபேசி : 611527



சிதம்பரம் நடராசர் கோயில் திருப்பணிக்காக சென்னையில் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. இத்திருப்பணிக்கு அளிக்கப்படும் நன்கொடைகளுக்கு வருமான வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது. சுமார் நாற்பது இலட்சம் ரூபாய்கள் இத் திருப்பணிக்குச் செலவாகும் என கணக்கிடப்பட்டுள்ளது. சென்னையிலுள்ள இத் திருப்பணிக் குழு சுமார் ஐந்து இலட்சம் ரூபாய்கள் நிதி திரட்ட திட்டமிட்டுள்ளது. எனவே தாங்கள் அருள் கூர்ந்து நிதி உதவி அளித்திடுமாறு இக் குழுவின் சார்பாக வேண்டுகிறோம். இந்து மதத்தைச் சேர்ந்த ஒவ்வொருவருக்கும் தமிழில் "கோயில்" என்றாலே **சிதம்பரம் நடராசர்** கோயிலைக் குறிப்பதால், அத்தகைய சிறப்புமிக்க கோயிலை நாம் எல்லோரும் நம் மாலியன்ற அளவில் பொருளுதவி செய்து செப்பனிட்டு நல்ல முறையில் வைத்திருக்க வேண்டியது நமது கடமையாகும். **Lord Nataraja Temple Renovation Committee** என்ற பெயருக்கு செக் அல்லது டிராப்ட் வாங்கி மேற்கண்ட விலாசத்துக்கு அனுப்பலாம்.

தலைவர் :

**டாக்டர் இரத்தினவேல் சுப்ரமணியம்**

துணைத்தலைவர் :

**திரு. R. சதாசிவம்**

**திரு. V. S. தியாகராச முதலியார்**

செயலாளர் & பொருளாளர் :

**டாக்டர் M. நடராசன்**

**ஸ்டார் போர்ட் பக்கமாக ஜூலி உருள, கப்பலுக்குள் தண்ணீர் குபுகுபு என்று ஏறியது.**
**கப்பல் சாயத் தொடங்கியது.**

## 12

The wings of man's life are plumed with the feathers of death. —Sir Humphrey Gilbert
*16 ஆம் நூற்றுண்டின் கப்பல் தளபதி*

மேலே அந்தப் பொருளை வைத்ததும், வொய்ட்டும் டார்வினும் ரகளையோடு தாவினுர்கள். அவர்கள்அதிசயத்துக்கு இலக்காக இருந்த விஞேதப் பொருள் — ஒரு புத்தர் சிலை.

பத்மாசனம்.

யோக நித்திரை.

வரி வரி யோக வேஷ்டி.

பிரமிட் ஜடை.

நல்லவகை பாடிஞ மூடியிருந்ததால் நூற்றுண்டுகளுக்கும் அவர் அதிகம் கரையவில்லை.

தங்கமாக இருக்கும் என்று அபிப்பிராயம். சொன்னவர் வொய்ட்.

—ஜூலியைத் தேடி வந்திருக்கிறேம்; புத்தரைஅல்ல, என்ருர் டார்வின்.

அதைத் தொடர்ந்து ஒரு விவாதம்!

—நீங்க ரெண்டு பேரும் எப்பப் பார்த்தாலும் வாதாடறீங்களே! வாங்க இப்படி! என்று லாரென்ஸ் என்பவர் குறுக்கிட்டு அவர்களை காபின் மூன்றுக்கு அழைத்துப் போனுர்.

வொய்ட்டின் கூட்டாளிகளில் லாரென்ஸ் ஒருவர். அவ்ருக்குத் தெரியும் வொய்ட்டும் டார்வினும் ஏன் சண்டை போடுகிருர்கள் என்று.

காரணம் இப்போது ஏற்பட்டதல்ல.






ஒன்பது மாதங்களுக்கு முன்னால் தொடங்கியது.

அப்போது மூவரும் மற்றொரு பங்குதாரரும் சேர்ந்து பழைய கார்களை வாங்கி விற்றுக் கொண்டிருந்தார்கள். சந்தேகத்துக்கு இடமான சில காரியங்களையும் செய்தார்கள். சுலபப் பணம் கிடைத்துக் கொண்டிருந்தது.

சுலபப் பணம் பல ரகசிய வழிகளில் அவர்களை ஈடுபடுத்த, இப்போது பெரிய அளவு சாகஸம் செய்ய வந்திருப்பது ஜூலி காலண்டைத் தேடி! பொன் வேட்டை ஆசையில்! வொய்ட்டுக்கு ஜூலியைப் பற்றி எப்படித் தெரிந்தது? அது ஒரு கதை!

பல மாதங்களுக்கு முன் லண்டன் டைம்ஸ் பத்திரிகையில் ஒரு கடிதம் வெளியாகியது.

இந்தியாவிலிருந்து எஸ். எஸ். சாமி என்று ஒருவர் எழுதியிருந்தார். விலாசம் குறிப்பிடவில்லை.

ஐயா,

எனது ஹாபி பழைய பொருள்களைச் சேகரிப்பது. சமீபத்தில் ஒரு பர்கண்டி பாட்டிலில் கிடைக்கப் பெற்றேன். உள்ளே ஒரு பழங்காலச் சார்ட் இருந்தது. என் அனுமானப்படி அது 150 வருட காலத்திய காகிதமாக இருக்க வேண்டும். அதில் ஒரு கப்பலின் இருப்பிடத்தைக் காட்டும் குறியீடுகள் இருந்தன. என்னுடைய ஊகத்தின்படி அது ஒரு பழைய பிரிட்டிஷ் கப்பல் மூழ்கிய இடமாக இருக்கவேண்டும். ஏனெனில், அதில்,

ஹியர் லைஸ் ஹர் மெஜஸ்டிஸ்... என்ற வார்த்தைகள் இருந்தன. கப்பலின் பெயர் இருக்க வேண்டிய இடத்தில் வெறும் பொத்தல் இருந்தது. கீழே எட்வர்ட் ஆர். பால்மர்ஸன், காப்டன் என்று கையெழுத்துப் போட்டிருந்தது. யாருக்காவது இந்தக் கப்பலின் விவரங்கள் தெரிந்தால் அதைத் தங்கள் பத்திரிகைக் காலம் மூலம் விளக்கம் தருமாறு வேண்டுகிறேன். அவசியம் ஏற்பட்ட பின் நான் சார்ட்டைத் தந்து உதவ விரும்புகிறேன்.

எஸ். எஸ். சாமி

இந்தக் கடிதம் வொய்ட்டிடம் பெரிய கிளர்ச்சியை உண்டாக்கியது. பால்மர்ஸன் குடும்பம் கிழக்கிந்தியக் கம்பெனி காலத்தில் பெரும் பதவிகளை வகித்தது என்று படித்திருக்கிறார்.

ஒரு குருட்டு யோசனை! பால்மர்ஸன் ஏதாவது வியாபாரக் கப்பலில் ஏறிப் போயிருந்தால், நிச்சயம் இந்தச் சார்ட் பெரிய உதவியாக இருக்கும்.

எந்தக் கப்பலில் போனார்? அந்தக் கப்பலில் என்னென்ன இருந்தன?

இங்கிலாந்தில் உள்ள ரிகார்டுகளை அலசிவிட்டார். விவரம் கிடைக்கவில்லை. இந்தியாவுக்கு ஒரு நடை போய் வர விரும்பினார். சென்னை 'ஆர்கைவ்' ஸில் கிழக்கிந்தியக் கம்பெனி தஸ்தாவேஜு நிறைய பாதுகாக்கப்படுகின்றன என்பது தெரியும். நண்பர்களின் உதவி பெற்று இந்தியா வந்தார். ஆராய்ச்சியில் இறங்க, அந்தக் கப்பலில் ஏராளத் தங்கமும் வெள்ளியும் லண்டனிலிருந்து பிரயாணமானது தெரிய வந்தது.

வாழ்க்கையில் இது திடீர் அதிர்ஷ்டம் என்று கருதினார். மற்ற நண்பர்களை தாஜா செய்து இந்த ப்ராஜக்டில் ஈடுபடும்படி செய்துவிட்டார்.

வொய்ட்டுக்கும் டார்வினுக்கும் இந்தியா வந்த பிறகு தகராறு.

கப்பல் மூழ்கியிருக்கும் இடத்தை அறிந்த பிறகுதான் மீட்பு வேலையில் இறங்க வேண்டும் என்று டார்வின் கூறியிருந்தார்.

—இல்லை, போய்ப் பார்த்தால் விவரம் தெரிகிறது! என்று டார்வினை இங்கிலாந்திலிருந்து இழுத்து வந்து விட்டார் வொய்ட்.

இங்கே இந்தியக் கடலில் ஒரு வாரம் தேடிய பிறகு கிடைத்த ஒரே பொக்கிஷம் புத்தர் சிலை.

—இன்னும் ஐந்து நாள் கெடு! அதுவும் கிடைக்காவிட்டால் திரும்பிவிட வேண்டியதுதான் என்று கூப்பாடு போட்டுக் கத்தினார் டார்வின்.

லாரென்ஸ் அவரைச் சமாதானப் படுத்திக் கொண்டிருந்தார்.

**சா**ர்ட் எங்கே?

அதுதான் மல்லிக்கின் பிரச்னை.

சார்ட் இருந்தால் போதும். ஜூலி எங்கே ஒளிந்திருக்கிறாள் என்று கண்டுபிடித்து விடலாம்!

ஒரு தீர்க்க ரேகையும் ஒரு அட்ச ரேகையும் வெட்டுமிடத்தின் ஆழத்தில் தூங்கிக் கொண்டிருப்பாள் அவள்.

அது எந்த தீர்க்க ரேகை?

எந்த அட்ச ரேகை?

கடவுளே, சார்ட் சீக்கிரம் கிடைத்துவிடக் கூடாதா?

கடலில் ஒரு மிதக்கும் படகைத் தேடுவது கூடக் கஷ்டமான காரியம். மூழ்கிப் போயிருப்பதைக் கண்டுபிடிப்பது என்றால்...

சரி, சார்ட் யாரிடம் கிடைக்கும்?

சார்ட் வைத்திருக்கிறேன் என்று வெளிப்படுத்தும் கடிதம் அந்த டிகேண்டர் பாட்டிலில் இருந்தது. அப்படியானால் சார்ட்டும் அதே பாட்டிலில் இருக்க வேண்டும். இந்தச் சம்பந்தசாமி அதை வைத்துக் கொண்டு....

அல்லது அந்த எலும்புக் கூடு கிடைத்த இடத்தில் இன்னும் ஒரு புதை பொருளாகவே அது இருந்து கொண்டு...

மனைவி: ''கொஞ்சம் நில்லுங்க, நீங்க இழுத்துக்கிட்டுப் போறது நம்ம பையன்! இங்கே இருக்கு உங்க ஜிம்மி!''



## சிவப்புக் கன்னி

சிவந்த உடை உணர்த்தும்
சிலே வடிவத் தோற்றம்;

சிவந்த இதழ்களேச் சுட்டும்
சிவப்புரோஜா;

'சிக்'கான காதணி அசைய
செம்மைச் சிரிப்பு;

சிங்காரப் பார்வையிடை
சித்திரப் பொட்டு;



சிவப்பு நிறம் ரொம்பப் பிடிக்கும் போலிருக்கிறது **குமாரி ரஞ்சினி விசுவநாதனுக்கு**. அத்துடன் எளிமையும் பிடிக்கும் என்பதை சோழிச் சங்கிலி உணர்த்து கிறதல்லவா?

**வண்ணப்படம் எடுத்தவர்: எம். கே. ராமமூர்த்தி**

ஒரு விடையைக் கிட்டத்தட்ட நெருங்கியபோது, அது அவனே விட்டுப் பறந்திருப்பது போல் தெரிந்தது.

இரண்டு நாள் உளம்பிய பிறகு, சம்பகாவின் நினைவு திடீரென்று வந்தது.

அவளேப் பல நாள் பாராதது தவறு என்று நினைத்தான்.

இந்தக் கிராமம் வந்ததிலிருந்து அவளது நினைவு ஒரு ஊறுகாய்—சுகமாக அவனுக்கு இருந்து வந்திருக்கிறது. மற்ற விவகாரங்கள் திகட்டும்போதெல்லாம் அவள் நினைவை அவன் தொட்டுக் கொண்டிருக்கிறுன்.

சமயங்களில், அவளேப் பற்றிய ஓர் உற்சாகமான நினைவை மனத்தில் விளையாட விட்டு வேடிக்கை பார்த்திருக்கிறுன்.

அவளேச் சிநேகிப்பது போலவும், அவளுடன் ஒரு சமீபத்திய சினிமாப் பாட்டை டூயட் பாடுவது போலவும் நினைத்துக்கொண்டிருக்கிறுன்.

ஜூலி வேட்டையின் தீவிரத்தில் அவளது நினைவைச் சிலசமயம் விலக்கி வைத்தாலும், சீக்கிரமே அது ஒரு பழக்கப்பட்ட வீட்டு மிருகம் போல் குழைந்து கொண்டு ஓடிவருவதைக் கண்டிருக்கிறுன்.

நான் ஏன் அவளே நினைக்க வேண்டும்? நான் ஒரு பட்டணத்து ஆசாமி. எத்தனையோ ஜில்கள் பட்டணம் பூராவும் உலாவ, போயும் போயும் இவளிடமா....

**க**னிநாகலாபுரத்தை அடைந்ததும் கால்கள் அவனே இழுத்து அவள் வீட்டு முன்னுல் நிறுத்தின.

—சம்பகா! என்றுன்.

பதில் இல்லாமல் போக, மெள்ள அடி எடுத்து உள்ளே போனுன்.

அங்கே அந்த ரேழியின் பற்றுநிலே மினுமினுப்பில் சம்பகா சுவர் ஓரமுடன் ஒட்டி மெல்லிய துஷிப் துஷிப் என்ற மூக்கு உறிஞ்சல்களுடன் படுத்திருந்தாள்.

சுற்றும் பார்க்க, அந்த ஊஞ்சல் பலகை துப்புரவான வெறுமையுடன் இருந்தது. அதன் பித்தளேப் பூண்கள் சோகமாக அவனேப் பார்த்தன.

ஒரு திடீர் நினேப்பில் அவன் அங்குமிங்கும் பார்க்க, எங்கே அந்த அர்ச்சகர்? எங்கே?

சம்பகா, சம்பகா!

மெள்ள முனுப்புடன் நிமிர்ந்தாள். முகம் ஜலம் தோய்ந்து பருமனுகி இருந்தது. கண்கள் திடீரென்று மூப்பு அடைந்திருந்தது.

அவனேப் பார்த்ததும் கண்கள் உடைந்து விட்டன.

—அப்பா போயிட்டார், என்றுள்.

சுருக்கென்று முள் பாய்ந்தது.

—உங்களேப் பார்த்தேன். காணலே. சுகத்தையும் துக்கத்தையும் யாராவது பங்கு போட்டால்தான் இதமாக இருக்கும். உங்களே ஏன் எதிர்பார்த்தேன் தெரியாது. எதிர்பார்த்தேன்.

அந்தக் கணத்தில் மல்லிக்கின் மீதிருந்த நாகரிகப் போர்வை கழன்று விட்டது. ஜூலியைக் கூட மறந்து, அந்தக் கிராமத்து நாடோடி ஆகிவிட வேண்டும் என்ற நினைவு வெகு ஆசையுடன் வந்தது. கிராமியமாக மாறி ஒரு கிராமப் பாங்கில் அவளுக்கு ஆறுதல் கொடுக்கவேண்டும்என்று நினைத்தான்.

—சம்பகா, எழுந்திரு சம்பகா! எனக்கு ரொம்ப வருத்தமா இருக்கு. விஷயம் தெரிந்திருந்தா ஓடி வந்திருப்பேன். தெரியாது. நான் எங்கேயோ இருந்துட்டேன். அப்பா எப்போ போனுர்? நீ எப்படி காரியமெல்லாம்.... அழாதே சம்பகா! பெரியவர் நல்ல பதவிக்குப் போயிட்டார். நீ இனிமே நல்லா இருக்கணும். உனக்குக் கடவுள் ஒரு பலமா இருப்பார். அழாதே!

வெகு நேர ஆறுதலுக்குப் பிறகு, சம்பகா ஒருவித இதம் அடைந்து கண்ணீர் வழித்து, மூக்கைத் துடைத்து, எழுந்து ஒரு தாற்காலிக சுபாவமாகி, —அப்புறம் உங்க முயற்சி என்ன ஆச்சு, என்று பளிச்சென்று கேட்டாள்.

—நடந்துட்டுருக்கு சம்பகா! இப்போ அதுக்குத்தான் உன் உதவி கேட்டு வந்திருக்கேன்....

மெள்ள அவன் இழுக்க, —என்ன உதவி, சொல்லுங்கோ! என்றுள்.

அவன் சார்ட்டைப் பற்றிய விவரம் சொல்லி, அது இருக்கும் இடத்தைக் கண்டு பிடிக்க வேண்டும். என்று கூறினுன். —கிருஷ்ணன் உதவி செய்வாரான்னு பார்க்கணும், சம்பகா, உன்னுலே கேட்க முடியுமா?

—முடியும்! என்றுள்

அந்தக் கோவில் பூசாரி பெண்ணே ஒரு நாள் அனுபவிக்கணும்.

அந்த வார்த்தைகள் அசரீரியாக அவன் காதில் விழுந்தன.

(தொடரும்)



## புஷ்பா தங்கதுரை

# கடலுக்குள் ஜூலி

Sweet heart,

I can yet write unto you but with a weak hand, for I have suffered the most violent calenture that ever man did and lived,

*தளபதி ராலே தமது காதலிக்கு டெஸ்டினி என்ற கப்பலிலிருந்து எழுதியது. (1584)*

## 13

ஜூலி நொண்டியாகிச் சரிந்து அந்த இரவில் ஒரு ஆத்திர கடலின் கோபத்துக்கு ஆளாகிக் கொண்டிருந்தாள். உயரமான அலைகள் அவளது ஹல்லைச் சிதற அடித்துக் கொண்டிருந்தன.

வெறும் கருவாலி மரத்தால் ஆன அந்தக் கப்பல் இயற்கையின் சீறலில் தன் கட்டுக் கோப்பை விடத் தொடங்கியிருந்தது.

இதற்குள் கீழ்த் தளங்களில் அடைபட்டுக் கிடந்த நோய் பிடித்த மாலுமிகள் வெறியுடன் கத்திக் கொண்டு, இருட்டில் தள்ளாடி மேலே ஏறத் துணிந்தார்கள்.

மிகுந்த நோயுள்ளவர்கள், குறைந்த நோயாளிகளின் கையைத் தோளைப் பிடிக்க, எல்லாரும் தடுமாறி ஏணியை அடைந்து மேலே ஏறத் தொடங்கினார்கள்.

கப்பலின் சாய்வும் ஆட்டமும் அவர்களது தடுமாற்றத்தை அதிகப்படுத்தின. கடைசி நேர தைரியங்களுடன் மேல்தளத்துக்கு ஒவ்வொருவராக ஏறிக் குதியத் தொடங்கினார்கள்.

பசியும், நோயும், தண்ணீரின்மையும், கடின உழைப்பும், அவர்களிடம் இருந்த கடைசி மனிதத் தன்மைகளை உறிஞ்சி விட்டிருந்தன.

சிலர் வெறியாகிக் கத்தினார்கள், சிலர் பாடினார்கள், சிலர் முணுமுணுத்தார்கள்.

சிலர் கிராதிகளைப்பிடித்து, மிக உருக்கமாகப் பிரார்த்தித்தார்கள்.

எல்லோர் கண்களிலும் மனங்களிலும் இங்கிலாந்தில் வாழும் அவர்கள் குடும்பங்களோ, தாய்களோ, மனைவிகளோ, காதலிகளோ, அடிக்கடி வந்து கொண்டிருந்தார்கள்.

கண்ணீர் ஒரு மழை போல் வழிய, எல்லோரும் இன்னது செய்ய வேண்டும் என்று தெரியாமல் நொடிக்கு ஒரு காரியம் செய்து கொண்டிருந்தார்கள்.

—இரவிலா இந்தப் புயல் வரவேண்டும்? பகலில் வரக்கூடாதா, கடவுளே இது ஒரு சோதனையா? என்று வாய்விட்டுப் புலம்பினார்கள்.

இதற்குள் எஸ்டன் நிலைமையை ஊகித்து, பதறாமல் யோசனை செய்தார்.

—சகோதர மாலுமிகளே! பீதி அடையாதீர்கள்! கனமான பொருளை எல்லாம் ஸ்டார் போர்ட் பக்கம் கொண்டாருங்கள், என்று கத்தினார்.

எல்லோரும் யந்திரகதியாக கட்டளைக்குக் கீழ்ப்படியத் தொடங்கினார்கள்.

*ரங்கூன் பங்களாவில் சம்பந்தசாமியின் தர்பாரை நீங்கள் பார்ப்பதற்குள் அவரைப் பற்றிய சிறு குறிப்பு:*

*சம்பந்தசாமிக்கு ரங்கூன் சம்பந்தசாமி என்று அலையஸ் உண்டு. இரண்டாவது யுத்தத்தின்போது ரங்கூனிலிருந்து கால் நடையாகத் தாய்நாடு வந்தவர். வெறும் துண்டு மட்டும் போட்டு வந்தவர். சென்னையில் தங்கிய அமெரிக்கத் துருப்புக்களுக்கு இளநீர் விநியோகம் செய்தவர். பிறகு கஞ்சாவும் வியாபாரம் செய்தவர். யுத்தம் முடியும்போது ஒரு பங்களா, ஒரு பேபி ஆஸ்டின், ஒரு ஆங்கிலோ – இண்டியன் பேபி, அவளுடைய பேபி எல்லாவற்றுக்கும் சொந்தமானவர்.*

*கடைசி இரண்டு பேபிகளும் சில வருஷங்களில் எங்கு அஸ்தமித்தார்கள் என்று தெரியாது.*

*சம்பந்தசாமி சில பின்புற நடவடிக்கைகள் உள்ளவர்.*

*யுத்தம் முடிந்து சுதந்திர ஆண்டுகளில் மிகவும் தாராளமாகக் கடத்தலில் ஈடுபட்டவர். அபின் அவரது ஏகபோகம். கொஞ்ச நாட்கள் சொந்த யாட் கூட வைத்திருந்தவர்.*

*பின் வருடங்களில் பெரிய மனிதன் வேடத்தில் டில்லித் தலைவர்களுடன் விருந்தும் சாப்பிட்டவர்.*

*அபினில் சங்கடங்கள் ஏற்பட்டதால் சிலை கடத்தலில் ஈடுபட்டவர். பத்திரிகைகளில் அவை பிரபலமாகு முன்பே இந்தியாவிலிருந்து ஏராளமான சிலைகளை அப்புறப்படுத்தியவர், அவர் இந்தத் தொழிலில் இறங்கிய நாட்களில் அப்படி ஒரு வியாபாரம் நடக்கிறது என்றுகூட யாருக்கும் தெரியாது. அப்பாவி இந்தியர்கள்.*

*ஈட்டிய பொருளை பாரிஸ், ஆம்ஸ்டர்டாம், லண்டன், நகரங்களில் ஆனந்தமாகச் செலவு செய்தவர். பாரிசில் ஒரு ஆண்டு தங்கி பிரெஞ்சு சுகங்களைப் பூரணமாக அனுபவித்தவர். பிரெஞ்சு கீழ் உலகங்களில் நன்றாகப் பரிச்சயமானவர்.*

*கடைசியில் அடியாட்கள் சிலர் அவரை ஏமாற்றிப் பெரியாட்களாகிவிட, கொஞ்சம் நொடிந்து ஊட்டியில் மேனாட்டு ருசியோடு வாழ்ந்தவர். கூடவே பிரெஞ்சுக்காரி நான்ஸியையும் அழைத்து வந்தவர்.*

*புலன்களும் ஓய்ந்து போய்ப் பின்னுக் கடிக்க, சில சில்லறைக் கடத்தல்களுடன் தமது தலைநகரைக் கனிநாகலாபுரத்தின் பத்து ஏக்கர் விஸ்தீரண நிலத்துக்கு மாற்றியவர்.*

*இங்கே இந்த ரங்கூன் பங்களாவில் நித்திய வாசத்திற்கு வந்தபோது அவரது பிரெஞ்சு மனைவி மரணம் அடைய, அவள்*

விட்டுச் சென்ற பெண் ரீடாவைக் கருத்தும் கண்ணுமாக வளர்ப்பவர்.

பணத்திலும், உடலிலும் க்ஷீண திசை ஏற்பட, பழைய சுவர்க்கங்களை நினைத்துச் சோகமாக வாழ்வதுடன், விட்ட குறை தொட்ட குறையாகச் சில சில்லறைக் கடத்தல் வேலைகளை — சாமி சிலைகள் அவர் ஸ்பெஷாலிடி — செய்து ஓரமாக ஒரு சின்ன அளவு உல்லாச வாழ்க்கை வாழ்பவர்.

—அந்த ஆளு யாரப்பா! மல்லிக்னு பேர் சொன்னான். ஏதோ சோப்ளாங்கின்னு நினைச்சா மடி மேலே கை வைக்கிறானே.

(தர்பார் நடக்கிறது. எதிரே லக்குவும் மீசைக்கார சோமுவும் நிற்கிறார்கள்.)

—என்ன செஞ்சான் தலைவரே!

கேட்டவன் லக்கு. இலக்குமணன் தூய பெயர். கர்லாக் கட்டையாக இருந்தான். அடியாளின் சகல குணாதிசயங்களும் பிரசன்னம். எண்ணெய் உடம்பு. மஸில்ஸ் பம் என்று வீங்கி, மார்பு ரிவெட் அடித்த இரண்டு இரும்பு ப்ளேட்கள்.

—டைம்ஸுக்கு லெட்டர் எழுதியிருந்தேன்லே?

—ஆமா,

—காப்டன் பேரு பால்மர்ஸன்னு எழுதியிருந்தேன். அதே பால்மர்ஸனைப் பற்றி வம்சாவளி கேட்க வந்துட்டான், இந்த ஆளு!

—விஷயம் புரிஞ்சிருப்பானா?

—தெரியாது. நம்பளை ஆழம் பார்க்கணும்னு டூப் அளக்கிறானோ என்னவோ? நான் சார்ட்டைக் காண்பிக்கல்லே!

—எனக்கு ஒரு சந்தேகம் தலைவரே!

—கேளு!

—கப்பல் விஷயம் இவனுக்குத் தெரிஞ்சிருக்குமோ?

—இவனுக்கா? நீ ஒண்ணு! வெள்ளைக்காரனுக்கே தெரியலே! தெரிஞ்சிருந்தா டைம்ஸிலே லெட்டர் பார்த்துட்டு இதுக்குள்ளே ஓடியாந்திருக்கமாட்டான்?

—ஒருவேளை தெரிஞ்சிருந்தான்னு வச்சுக்குங்க!

—அந்தச் சந்தேகம் எனக்கும் தோணிச்சு! அதனாலேதான் உன்னைக் கூப்பிட்டேன். அந்த ஆளு பூந்தளத்திலே இருக்கான். நம்ப ஊருக்கு அடிக்கடி வரான்னு கிருஷ்ணன் சொன்னாரு. கொஞ்சம் கவனிக்கணுமே!

—கவனிக்கிறேனுங்க!

லக்கு போக, சோமு பின்தொடர, சம்பந்தசாமி எழுந்திருந்தார். நீளநடந்து அரும் பொருள் ஹாலைத் திறந்து உள்ளேபோனார். அந்த டிகேண்டர் சீசா பக்கம் வந்து நின்றார். அதன் அருகிலே அந்தப் பர்கண்டி பாட்டிலும் இருந்தது. இரண்டும் அந்த எலும்புகிடைத்த பிரதேசத்திலிருந்து கிடைத்தவை. அதிகாரிகளுக்குத் தெரியாமல் அடியாட்களை அனுப்பி அங்குள்ள மண்ணைத் தோண்டியபோது கிடைத்த பாட்டில்கள் அவை. அதில் அந்தப் பர்கண்டி பாட்டிலில்தான் சார்ட் கிடைத்தது.

பாட்டிலை எடுத்தார். ஒற்றைக் கண்ணை அதன் வாயில் வைத்து உள்ளே பார்வையால் துழாவினார். எதுவும் தெரியவில்லை. இப்படி ஒரு துரதிர்ஷ்டம் உண்டா, என்று நினைத்தார். சார்ட் முழுசாக இருக்கிறது. அந்தக் கப்பல் பெயரைக் குறிக்கும் இடம் மட்டும் அரித்துப் பொத்தல் விட்டிருக்கிறதே! உள்ளே அதன் துணுக்குகளாவது இருக்கின்றனவா? இல்லை.

அடுத்து டிகேண்டர் பாட்டிலை எடுத்தார். உள்ளே பார்த்தபோது காலியாக இருந்தது. இருபத்தி நாலுமணி நேரம் லேட் என்று அவருக்குத் தெரியாது. முந்திய தினம் மல்லிக் அதிலிருந்து அந்தக் கடிதத்தை எடுத்துப் போயிருந்தான். பாட்டிலில் கழுத்தோரம் காகிதம் ஒட்டியிருந்ததை அவர் ஆரம்பத்தில் சரியாகக் கவனிக்கவில்லை. அது மல்லிக்கின் அதிர்ஷ்டமாகப் போயிற்று.

—கழுலி, காலி என்று சொல்லிக்கொண்டே திரும்பி வந்தார். பிறகு, மர பீரோ பக்கம் போனார். கதவின் ஒன்பது லீவர் பூட்டைத்திறந்து ஆவலோடு ஒரு பெரிய மடிப்பு அட்டையை எடுத்தார். மேஜை மீது பிரித்தார்.



அந்தப் பழங்கால சார்ட் பலவித ரேகை களோடு விரிந்தது.

பட்த்தின் பழைமையும் நெடியும் அவரைக் கொக்கி போட்டன.

அட்ச, தீர்க்க ரேகைகளின் குறியீடுகள் ஒரு ஜாலம் போல் கண்ணில் வேலை செய்தன.

பழைமை எழுத்துக்களும், அவை எழுதப் பட்டிருந்த முறையும் மனத்துக்குள் விநோ தங்களைக் கிளப்பி விட்டன.

அதன் மொத்தத் தோற்றமும் ஒரு பர வசமான கவர்ச்சியை அவர் மீது ஏற்படுத்தி விட்டன.

ஹியர் லைஸ்.... அந்த எழுத்துக்களைப் பார்த்தார். அங்கே ஓர் அம்புக் குறி ஓடி யிருந்தது.

ஒரு பெயர் தெரியாக் கப்பல் இந்த இடத்தில் மூழ்கியிருக்கிறது. பேப்பரின்



எழுத்தாளர்: துணுக்கு எழுதறதை விட்டுட்டு ஏன் தொடர்கதை எழுதச் சொல்லறே?
மனைவி: தொடர்கதை திரும்பி வந்தா பேப்பர் காரனுக்குப் போட்டா காசு நிறைய கிடைக்குமே!
- லலிதா செல்லப்பா

பழைமையைப் பார்த்தால் நூற்றாண்டுக்கு முன்னால் உள்ள கப்பலாக இருக்க வேண்டும்

கப்பலுக்குள் என்ன இருக்கும்?

விலை மதிப்பில்லா வெள்ளி, தங்க நாண யங்கள், பழங்காலக் கலைப் பொருட்கள், பாத்திர வகைகள் எல்லாமே இருக்கலாம். யார் கண்டார்கள்?

இவைகளுக்குப் பழைமையினால் ஏற்பட்ட மகிமை இருந்தாலும் இருக்கும்.

மேனாடுகள் இதுபோன்ற கப்பல்கள் பல வற்றைக் கண்டுபிடித்துப் பொருள்களை எடுத்திருக்கிறார்கள். எடுத்த பொருள்கள் விற்பனையில் பல மில்லியன் பவுன்களைத் தந்திருக்கின்றன.

இந்தக் கப்பலிலும் நிறையப் பொருட்கள் இருக்குமோ?

ஆசை கொஞ்சம் கொஞ்சமாகக் கனத்து எழுந்தது.

கப்பல் விஷயங்களில் அவர் இதுவரை அதிகம் சிரத்தை செலுத்தியதில்லை. அது ஒரு தப்பிதம்.

ஸ்பர்சம் பட, திரும்பினார்.

ரீடா நிசப்தமாக நின்றாள். கண்ணால் வினவினாள்.

—எல் எத் யூன் கார்த்! கார்த் த லா பதேர் ஆன்ஸியான்! என்றார் பிரெஞ்சில். (இது ஒரு சார்ட். ஒரு பழங்காலக் கப்ப லுடையது).

அதிசயத்துடன் பார்த்தாள் அவள்.

(எங்கே கிடைச்சுது?)

—தான் ஸெத் பூதெய்யி (அந்தப் பாட்டி லுக்குள்)

(ஓ!)

ரீடாவின் கண்ணில் மல்லிக்கும், அவன் பயம் கலந்த வேண்டுதலும் தோன்றிவிடப் புன்னகை அழகாகப் பூத்தாள்.

சம்பகா மல்லிக்கிடம் விடை பெற்றுப் போனாள்.

அதே நேரம் மல்லிக்குக்கு ஆர்கியால ஜிஸ்ட் கிருஷ்ணனின் விபரீத ஆசை நினை வுக்கு வந்தது.

சொல்ல வாயெடுத்தான். முடியவில்லை. சம்பகா புன்னகை பரப்பிக் கொண்டு புறப் பட்டுப் போனாள்.

—சார்ட்டா? என்றான் கிருஷ்ணன் ஆச் சரியப்பட்டு, சம்பகாவை வீட்டில் பார்த்த தும்.

அவர் அப்போது ஷேவ் பண்ணி முடித் திருந்த நேரம். ஆஃப்டர் ஷேவ் லோஷனைத் தடவி அறையை மணக்க விட்டிருந்தார்.

சம்பகா அருகில் வந்தபோது பல புலன்கள் சுரீர் என்று வேலை செய்தன. பல உணர்வுகள் துந்துபி வாசிக்க அவளை நெருங்கி நின்று —என்ன சார்ட்? என்று ஒரு கேள்வி கேட் டார்.

—அதுவா? என்று சம்பகா நீட்டி நிறுத்தி னாள். என்ன சொல்லலாம் என்று யோசனை. —எலும்புக் கூடு கிடைச்சப்போ டெலிஸ் கோப் கிடைச்சுதே! நிச்சயம் அங்கே சார்ட் கிடைக்கணுமே! ஏதாவது சார்ட்! ஒரு தளபதினுடைய சார்ட் இருக்காது?

—இருக்கும், இருக்கும். ஆனா இதுவரை கிடைக்கல்லே. நான் வேணும்னு அங்கே தோண்டச் சொல்றேன்... நல்ல பொண்ணு! பாவம்! நல்ல பொண்ணு!

என்று சொல்லி அவள் தோளில் கை வைத்து இரண்டு முறை தட்டி மூன்றாம் முறையில் நிரந்தரமாக வைக்க,

அது எந்த இனத்தைச் சேர்ந்த ஸ்பர்சம் என்று தெரியாத சம்பகா சிறிது சங்கடப் பட்டு, பிறகு தனது அறியாக் குழந்தைத்தன வகையில் வழுவிக் கொண்டு போக,

கிருஷ்ணன் நிறைய ஊசி உணர்வுகளில் தேகம் பெருவாரியாகப் பொங்க, நாக்கைக் கடித்து நின்றார். லோஷன் எரிச்சல் கொடுத் தது.

(தொடரும்)

# கடலுக்குள் ஜூலி

## புஷ்பா தங்கதுரை



FRIENDS CIRCULATION, MADRAS-600

அந்தக் குட்டி ராட்சத யந்திரத்தை ஒருசேர முடுக்கி, தண்ணீருக்கடியில் போல்ட் போட்டு மாட்டி, நீருக்குமேல் நான் வீங்கி எழுந்து, ஹாச் நுனியில் சப்பளாமிட்டு, ஸ்விட்ச்சைச் சுண்டும்படி மேயரைத் தூண்டினேன். நேர்த்தியான, சீரான வீஈஈஈஈங் குடன் யந்திரம் படகின் அழுக்கான அடித் தண்ணீரைக் களைந்தது.

ஏ டான் அண்ட் ஸாண்டி ஸைலன்ஸில்—
ஜான் டி மக்டஹுல்ட்

## 14

இருள் மயம். விளக்குகள் அவிந்துவிட்டன. பூமியின் வயிற்றுக் குடைசல் போல் கடல் ஓசை.

மாலுமிகள் கப்பலின் போர்ட் ஸைட் பக்கம் சுவ களையும் கனங்களையும் கொணர்ந்தார்கள்.

ஒற்றுமையாக வேலை செய்தார்கள். ஆபத்து அ களை ஒன்றுபடுத்திக் கடைசித்திறன்களை அளித்திருந்தது.

கப்பலின் ஆட்டம் பலமாக இருந்தது. கப்பலுக்கு என்ன நேர்ந்தது என்று இருட்டில் நிச்சயம் செய்ய முடியவில்லை

ஒவ்வொரு அரைமணிக்கும் ஒரு பெரும் ஓசை கேட்டு, கப்பலின் ஒவ்வொரு பலகையாகக் கழன்று ஓடிக்கொண்டிருந்தது.

புயலில் அகப்பட்ட ஒரு தீப்பெட்டி போல் ஜூலி சுறுகுகளாக உடைந்து கொண்டிருந்தாள்.

சில மணி நேரங்களில் எல்லோரது இயக்கங்களும் நின்றுவிட்டன.

எல்லோரும் விதி கையில் தங்கள் உயிரை ஒப்படைத்து விட்டார்கள்.

அவரவர் பீதியான மனங்களுடன் கடைசி நேரங்களை எதிர்பார்த்து இருந்தார்கள்.

அது நெருங்கியது

நாவல் மரத்தண்டை பூஞ்சை வெய்யிலில் மல்லிக் ஆவலாயிருக்க,

சம்பகா வாய்க்காலைத் தாண்டிக் கீற்றுப் புன்னகையுடன் வந்தாள்.

தலையில் இரண்டிரண்டு மயிரிழைகள் காற்றில் மெள்ளாடின.

அரும்பு உதடுகள் படபடக்க, —இங்கே தானே இருக்கிறீங்க? என்றாள்.

—ஆமாம், உடனே விஷயத்தைத் தெரிஞ்சிட்டுப் போகலாம்னு இருக்கேன். கிருஷ்ணனைப் பார்த்தீங்களா? என்று.

ஆவல் பறக்கக் கேட்டான் மல்லிக்.

—பார்த்தேன். சார்ட்டைப் பத்தித் தெரியாதுன்னுட்டார்.

—நிஜமாத்தானு?

—நான் நம்பறேன்.

மல்லிக் முகவாயைத் தடவினன்.

—வேணும்னு தோண்டறேன்னர்; என்றாள் அவள் தொடர்ந்து.

—பாதுகாக்கப்பட்ட இடத்திலா?

—ஆமாம்.

—வேண்டாம் வேண்டாம் வேண்டாம்.

நாவல் நிழலுக்கு இருவரும் போனார்கள். விளிம்பில் ஜாலர் வேலைகள் செய்த ஒரு குடை நிழல். பட்டுப்போல் பரவித்தணுப்பாக இருந்தது.

உட்கார்ந்தார்கள்.

சம்பகாவைப் பார்த்தான்.

சுத்த இயற்கை உட்கார்ந்திருப்பது போல் இருந்தது.

மெல்லிய கைகளை நீட்டி, முழங்காலைப் பூட்டி இருந்தாள். சிற்றாடை. கொஞ்சம் கீழே சிந்தி இருந்தது. விலாப்புறத்தில் சோளியில் குழல் வரிகள்! உடம்பின் செழிப்புக்கு ஆடை ஈடு காட்டவில்லை

—என்ன செய்யலாம்னு யோசிக்கிறேன், சம்பகா! அந்த சார்ட் ரொம்ப முக்கியம்! அந்த இடத்திலேதான் அது இருக்கணும்!

—நீங்களே தோண்டுங்க....

—அப்படித்தான் செய்யணும். முதல்தரம் செஞ்சது வீணாயிட்டது.... அந்த ஆபீசருங்க வேறே நாய் மாதிரி....

—அவங்களுக்குத் தெரியா ...

—எப்போ முடியும்?

—சாயங்காலம் ஆறுக்கு மேலே! ஈக்காக் காய் இருக்காது. நானும் கோயிலே முடிச்சுட்டு வந்துடுவேன்,

மல்லிக் பளிச்சிட்டான்.

—கூடை கிடைக்குமா சம்பகா

—மம்மட்டி., கூடை எல்லாம் எடுத்துட்டு வர்றேன்.

**மா**லை ஆறரை.

அந்தப் பிரதேசம் சீக்கிரம் இருட்டாகி விடுகிறது: சோலைகளும், தோப்புகளும் சுருக்கத்தில் கரிந்து விடுகின்றன. அந்தகாரம் ஜீயோடெஸிக் அளவுகளில் மூடி போடுகிறது.

மல்லிக் காத்திருக்க, சம்பகா ஒரு முட்டை விளக்குடன் வந்தாள்.

அது முணுமுணுக்க இடுப்புக்கு மேல் மட்டும் வெளிச்சம் விழுந்து, பாதி உடம்பில் ஒரு யட்சிணி போல் மிதந்து வந்தாள்.

விளக்கை ஒரு கல்மேல் வைத்ததும், பக்கத்துப் பலாச மரங்களில் மெல்லிசான மஞ்சள் முலாம்.

—மல்லிக், மல்லிக்!

இரண்டு சிதார்த் துண்டங்கள் அவள் வாயினின்றும் பிரயாணம் செய்து, உலாவி மல்லிக்கைத் தேடின.

—வந்துட்டேன் சம்பகா!

இருட்டுக்குள்ளிருந்து இன்னொரு இருட்டாக எழுந்தான்.



இரட்டைத் தாவலில் அவள் பக்கம் வந்தான். கூடை, மண்வெட்டி, விளக்கு, அவள் எல்லாம் பிரமிப்பையும், இரக்கத்தையும் அவனிடம் உண்டாக்கின.

அவள் தொடர் முறுவலில் இருந்தாள். என்ன சொல்லப் போகிருன் என்று அவனது முகத்தைப் பின்பற்றிக் கொண்டே இருந்தாள்.

—சம்பகா, ரொம்ப நன்றி! உனக்குச் சிரமம் கொடுக்கிறேனில்லே?

—இல்லேயே! என்று முறுவலே முழுசாகக் கீழே கொட்டினுள். —எனக்கும் பொழுதும் போகணும். துக்கத்தையும் மறக்கணும்.

அவன் தோண்ட ஆரம்பித்தான். கூடைகளே அவள் வாங்கி மண்ணே அப்பால் குவிக்க ஒரு சின்ன அம்பாரம் வளர்ந்து வந்தது. இருவரும் சீக்கிரம் வியர்வையுடன் களேப்பாகி விட, மல்லிக் மண்வெட்டியைக் கடாசி விட்டு மேடு ஏறி ஹப்பா என்று உட்கார்ந்தான். இழைத்தது.

அவள் மண்டி போட்டு உட்காரவும், வெளிச்சம் இருவரையும் கனவுகள் போல் காட்டியது.

—இவ்வளவு பாடுபட்டும் வியர்த்தமாய்ப் போனு என்ன செய்வீங்க? என்ருள் அவள்.

நீண்ட மூச்சு விட்டான் அவன்.

—எதுவும் செய்ய முடியாது! விதி!

—அப்போ ஏன் தோண்டறீங்க?

மண் பூசிய விரல்களால் முகத்தின் தினவு ஒன்றைச் சொறிந்தான்.

—ஏதாவது செஞ்சிட்டு இருக்கணுமில்லே, வாழ்க்கையிலே! இல்லாட்டா அது சுமையாயிருக்கும். சிலர் வியாபாரம் பண்ணுவாங்க, சிலர் உத்தியோகம் பார்ப்பாங்க! நான் தோண்டறேன். ஆனு எல்லாருமே தேடருேம்! புதையலே! பெரிய புதையலே! அது கிடைச்சுதுன்னு தேடறதை நிறுத்தி வாழ்க்கை பூரா நிம்மதியா இருக்கலாம்னு பார்ப்போம். அப்பவும் நிம்மதி வரப் போறதோ ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம். இருந்தாலும் ஒரு மாயமான லட்சியத்தை மனத்தில் போட்டுக்கிட்டுத் தேடிக்கிட்டேதான் இருக்க வேண்டி இருக்கு.

அவள் கொஞ்சமாக முறுவலித்தாள்.

—இதை மாதிரி எத்தனே இடத்திலே தோண்டியிருக்கீங்க?

—இது நாலாவது இடம். ஆனு இங்கே ஆண்டவன் என்னே நிறையப் பச்சை விளக்கு காட்டியிருக்கான். அதனுலேதான் முனேஞ்சு—

திடுக்கென்று எழுந்தான். அவன் பார்வை மண் பகுதியின் நடு வரிகளில் விழுந்தது. விளக்கின் வெளிச்சம் ஆடும்போது அங்கே காந்தமான மினுமினுப்பு?



என்னவாக இருக்கும்?

குழிக்குள் குதித்து, ஒரு குச்சி வேரை எடுத்து அந்த மினுமினுப்பைத் தோண்ட ஒரு உலோகத் துண்டு கரணங்களுடன் கீழே உதிர்ந்தது. கையில் எடுத்துக் கரையில் ஏறி, வெளிச்சத்தில் பார்த்ததும்,

—சம்பா, லாக்கெட்! என்றான்.

பக்கத்தில் வந்தாள்.

கண்ணாடிச் சட்டமிட்ட ஹெக்ஸகனல் லாக்கெட் அது. உள்ளே —ஐ லவ் யு, லிஸா— என்று எழுதியிருந்தது.

—ஒரு காதல் தூது, என்றான் அவன்.

அவள் கண்கள் வெளிச்சமிட்டன. வெட்கமான முறுவல் உதட்டில்.

தனிமை இடம், இருட்டு வேளை, ஒரே ஒரு ஆடவன் மூன்றின் நெருக்கமும் அந்த ருசிகரமான நாணத்தை ஏற்படுத்தியிருக்கும் என்று நினைத்தான்.

—சம்பகா!

—ஹாம்

—மௌனமாயிட்டியே!

அவளது உண்மை நிலையைக் கண்டுபிடித்து விட்டதால் ஒரு குழைவு ஏற்பட்டது.

—இல்லே, என்று இழுத்தாள் சமாதானம் காட்ட — யாரை யார் காதலிச்சாங்கன்னு யோசிச்சேன்.

-எலிஸா என்கிறது பால்மர்ஸனின் மனைவி. லிஸான்னு அவ செல்லப் பேரா இருக்கணும்.

—மனைவியே கணவனைக் காதலிக்கிறதாக எழுதிக் கொடுப்பாங்களா?

—மேனாட்டிலே அப்படிச் செய்வாங்க!

அவள் பேசவில்லை. லாக்கெட்டை முன்னும் பின்னும் புரட்டினாள்.

—நீயே வெச்சுக்க சம்பகா! இந்த இடத்தைத் தோண்டினதுக்கு ஞாபகார்த்தமா....

ஒவ்வொரு இரவிலும் அவர்கள் அங்கே சந்தித்து மண்ணைத் தோண்டினார்கள். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு அடியாகக் கீழே இறங்கிக் கொண்டிருந்தது. பின் நிலா நாட்கள் அவை. முன் இரவுகள் சுருண்டு சுரு ,நிருக்க, இருவரும் ஒரு பொதுவான தேடலில் ஈடுபட்டார்கள். இருவருக்கும் அது குஷியாக இருந்தது.

சின்ன இடைவெளியில் அவள் கிளுக் கிளுக்குகள் காற்றில் மெல்ல அவிழ்ந்து கரைந்தன அவன் அவளைப் பார்க்கும்போது நிரந்தரமான புன்னகை காட்டினான். இருவர் அயர்வுகளும் ஒருவரை ஒருவர் பார்க்கும் போது மாயமாய் மறைந்தன.

குழி ஐந்தடி கீழே இறங்கியதும், அவளும் உள்ளே இருந்து அவனுடன் வேலை செய்ய வேண்டி வந்தது.




பெட்ரோலுக்கு பதில் சாராயத்தை உபயோகப்படுத்தலாம்! —செய்தி

மேலே அம்பாரத்துக்கு அப்பால் முட்டை வெளிச்சம் அம்போ என்று எரிந்து, வேண்டாத இடங்களை மஞ்சளாக்கி இருக்க, குழியின் ஐந்தடி இருட்டில் இருவரும் ஒரு லட்சியத்தில் அன்யோன்யமாக ஈடு கொண்டிருந்தார்கள்.

குறித்த ஒரே விஷயத்தைப் பற்றி எப்போதும் பேசுவது மறைந்து, பல விஷயங்களில் அவர்கள் பேச்சுப் பரவ, அவை ஒவ்வொன்றிலும் அவர்கள் கருத்துக்கள் தாமாக இணைந்து கொண்டிருந்தன.

சமயங்களில் அந்தக் குழியில் ஏறவோ, இறங்கவோ திணறும் வேளையில் அவனது ஒரு கரம் அவளுக்கு உதவி கொடுக்க, அந்த ஏற்ற இறக்கங்கள் சிரிப்பும் களிப்பும் கலந்த ஒரு இனிய தொடர் கதையாக மாறி வந்தது.

**வொ**ய்ட்டின் விருப்பப்படி கடலுக்கடியில் உள்ள அந்த இருபதடி மேடு பரிசோதிக்கப்பட்டது. இரண்டு அடிக்குச் சகதியும் அதற்கு அடியில் பவழப் பாறையும் தென்பட்.,

—நான்தான் சொன்னேனே, அது வெறும் மேடாக இருக்கும்னு, என்றார் டார்வின்.

—மிஸ்டர் டார்வின்! கடலுக்கு மேல் உள்ள பருவக் காற்று பற்றி உங்களுக்குத் தெரியலாம். ஆனால் கடலுக்குள்ளே இருக்கும் விஷயத்தைப் பற்றி உங்க அறிவு பூஜ்யம்! மற்ற இடம் பூரா சமதளமா இருக்கும் போது ஒரு இடத்தில் மட்டும் உயரமா பவளப் பாறை இருந்ததுன்னா என்ன அர்த்தம்? என்று கோபமாகக் கேட்டார் வொய்ட்.

—என்ன அர்த்தம் சொல்லு! என்றார் டார்வின்.

—கப்பலோ கிப்பலோ உடைந்து கிடந்திருக்கும் அங்கே! அதுக்குமேலே பவழப் பூச்சி கூடு கட்டியிருக்கு. அதுதான் அர்த்தம்.

—கப்பல்னா இருபது அடி உயரம்தானா இருக்கும்?

—ஏன், உடைஞ்சு போய்ச் சிதறி இருக்காதா?

—நிச்சயமாய் ஜூலியில் ஒரு புத்தர் சிலை இருக்கிறதுக்கு நியாயமில்லே!

—இந்தச் சிலையை நான் ஒரு அமெரிக்கக் கோடீசுவரருக்குப் பத்தாயிரம் டாலருக்கு விற்பேன், தெரியுமா? இதமாதிரி வேறு ஏதாவது கூடக் கிடைக்கலாமில்லே?

அவர்கள் அந்தப் பிரதேசத்தில் ஒரு வாரம் உலாவினார்கள். முயற்சிகளில் எந்தப் பலனும் கிடைக்கவில்லை.

பிறகு ஸவுண்டிங் எடுத்துக் கொண்டு, தெற்கு நோக்கிப் பிரயாணம் செய்தார்கள்.

நாகப்பட்டினத்துக்குத் தென் கிழக்கே பத்து மைல் தூரம் சென்றதும் எக்கோ ஸவுண்டர் ஒரு குறிப்பிடத் தகுந்த வித்தியாசத்தைக் காட்டிக் கொடுக்க,

இரு டைவர்கள் மூழ்கினார்கள்.

முதல் கண்டுபிடிப்பை அவர்கள் மேலே அனுப்பவும்,

—ஆகா! ஒரு பீரங்கி! அநேகமா இது ஜூலிதான்! என்று இரைந்தார் வொய்ட்.

(தொடரும்)

# கடலுக்குள் ஜூலி

புஷ்பா தங்கதுரை

## பழைய கதை

கனி நாகலாபுரத்தில் மூன்று எலும்புக் கூடுகள், ஒரு டெலஸ் கோப், ஒரு உலோக பாட்ஜ் ஆகியவை கிடைக்கின்றன.

இந்தச் செய்தியைக் கேள்விப்பட்ட மல்லிக் உஷாராகிறான்.

140 வருடங்களுக்கு முன் ஏராள தங்க, வெள்ளிப் பாளங்களை ஏற்றி வந்த எச். எம். எஸ். ஜூலி காலன்ட் என்ற கப்பலுக்கும் அந்த எலும்புக் கூடுகளுக்கும் தொடர்பு உண்டு என்று நம்புகிறான்.

ஏற்கெனவே அந்தக் கப்பலைத் தேடி வொய்ட் என்ற ஆங்கிலேயரும் வந்து அவனிடம் பேசியது நினைவுக்கு வருகிறது.

தனது நண்பன் கோபியை அழைத்துக் கனி நாகலாபுரத்தை ஆராய, சம்பந்தசாமி என்ற பழம் பொருள் சேகரிப்பாளர் வழியே சில துப்புகள் வெளியாகின்றன.

மல்லிக்கிற்குக் கிராமத்தில் உதவி புரிபவள் சம்பகா என்ற பெண். கோவில் அர்ச்சகர் மகள்.

கப்பல் மூழ்கிய இடத்தைப் பற்றிய சார்ட்டைத் தேடி, மல்லிக் அலைய சம்பகா அவனுக்கு உதவி புரிகிறாள்.

சம்பந்தசாமியின் ஊமைப் பெண் ரீடாவும் சிற்சில உதவிகள் செய்கிறாள்.

இதே நேரத்தில் வொய்ட் தமது சகாக்களுடன் நெப்ட்யூன் என்ற கப்பலில் வந்து நாகப்பட்டினத்தின் கிழக்கே உள்ள கடலுக்குள் ஜூலியைத் தேடுகிறான்.

## பழைய பழைய கதை

எச். எம். எஸ். ஜூலி காலன்ட் கப்பல் இலங்கை தாண்டிச் சென்னையைக் குறியாக வைத்து வர, புயலில் சிக்குண்டு மெதுவாகத் தண்ணீரில் அமிழ்கிறது. மாலுமிகளும் அதன் காப்டன் பால்மர்ஸனும் கடைசி நேர யத்தனங்களில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

காப்டன் பால்மர்ஸன் தமது மனைவி எலிஸாவைக் காபின் கூரை மேல் ஏற்றி இருந்தார்.

அவள் கப்பலின் மூழ்கும் காட்சியைப் பார்த்து உயிர்வரை உறைந்து கொண்டிருந்தாள்.

பால்மர்ஸன் தமது சரிந்து போன காபினிலிருந்து இரண்டு பெட்டிகளை வெளியே கொணரப் போயிருந்தார்.

ஒன்று அவரது ஏழு வயது மகனின் சவப்பெட்டி. பிரயாணத்தின்போதுதான் அவன் இறந்திருந்தான். அவனுக்கு ஒரு பூமிப்

* * *

I am wind,
Flaming, rivering firmaments-
My enraged alphabets of Thrills
Wombing billion, trillion worlds
In fractured universe.....
....
In Tamil Nad....
My unleashed storms
....rehearse Destruction-

'விண்ட்ஸ்'ஸில் டாக்டர் கிருஷ்ண ஸ்ரீநிவாஸ்

## 15

போது விடியும்போது ஜூலி கடலுள் பாதி போயிருந்தாள்.

ஆச்சரியமான முறையில் சில காற்று மண்டலங்கள் உள்ளே அகப்பட்டு, அதன் மூழ்கலைப் படிப்படியாக்கிக் கொண்டிருந்தன.

பூதாகார மேகங்கள் இன்னும் வானில் சஞ்சரித்தன.

கரையும் தெரியவில்லை. வானும் தெரியவில்லை. எங்கும் இருண்டிருந்தது.

மாலுமிகளில் பலர் பாலன்ஸ் இல்லாமல் தண்ணீரில் விழுந்து மறைந்தார்கள்.

பலர் கிராதிகளைப் பிடித்து மேலே வர எம்பிக் கொண்டிருந்தார்கள்.

பலர் கப்பல் மேல் தளத்தில் உள்ள படகுகளை அவிழ்த்து மிதக்கவிட யத்தனங்கள் செய்து கொண்டிருந்தார்கள்.

ஏற்கனவே பல படகுகளில் மாலுமிகள் இறங்கத் தண்ணீரின் சுழற்சியில் அவை இரண்டே நொடிகள் அகப்பட்டு மாயமாய் மறைந்துவிட்டன.



புதைப்பை அளிக்க வேண்டும் என்று பால்மர்ஸன் தம்பதிகள் விரும்பியிருந்தார்கள்.

இரண்டாவது, சில உபகரணங்களும், தஸ்தாவேஜுகளும், டெலஸ்கோப்பும் வைத்துள்ள பெட்டி. உள்ளே விழுந்து கிடந்த இடிபாடுகளுக்கு இடையே இரு பெட்டிகளையும் நகர்த்தி, முக்கி, முனகி வெளிவந்து, காபினின் தற்போதைய கூரை மேல் அவைகளைத் தள்ளிச் சுற்றும் பார்த்த போது கப்பல் மூழ்குவதற்கு இன்னும் ஐந்தடிகள் தான் இருந்தன.

விரிந்த கடலைப் பார்த்தார். காற்று இன்னும் ஒரு புயலாக இருந்தது. எலிஸபெத் ரிக் கயிற்றைப் பிடித்து அழுது கொண்டிருந்தாள். அவள் கவுனும் தலையும் நனைந்து உடலோடு ஒட்டியிருந்தன.

பால்மர்ஸன் தடுமாறி உட்கார்ந்து நாற்புறமும் பார்த்தார். அநேகமாக எல்லா மாலுமிகளும் போய்விட்டார்கள். படகிலோ, கடலுக்கு அடியிலோ! மீதி இருப்பவர்கள் அவர்கள் மூவர்தான். பால்மர்ஸன் தனது மகனை இறந்தவனுக்குக் கருதவில்லை. என் அருமை மகனே! உன்னை எப்படியும் பூமிக்கு அழைத்துச் செல்வேன் என்றார் அவர்.

ஒரு அலை அவர்களை மூடியது.

சம்பகா நிறையப் பேசினாள். துப்புரவான கிராமக் கொச்சை! வார்த்தை ஓரங்களில் தெம்மாங்கு கொஞ்சம்! நாட்டுப்புறக் காற்றின் சுத்தம் அவள் எண்ணங்களில்.

தினமும் தோண்டும் வேலையை முடித்து மல்லிக்கும் அவளும் கோயிலண்டை உட்காருவார்கள். கிராம இருட்டு அதிகமாக ஒட்டிக் கொள்ளும்.

மல்லிக் ஒற்றை முழங்காலில் கை கோத்து ஈஸிச் சேர் ஆடுவான்.

பாவாடையும் தாவணியும் படிகளில் ஒழுக, அவள் ஒரு உள்ளங் கையால் முக வாயைத் தாங்கி இருப்பாள்.

பேசுவார்கள். சின்னச் சின்ன விஷயங்கள், சராசரி வாழ்க்கையில் சாதாரணமாக ஒதுக்கி விடக் கூடியவை. ஆனால் அவர்களுக்கு அவை என்ன முக்கியமாகத் தோன்றின!

ஒவ்வொருவர் பேச்சும் மற்றவர்க்கு ஒரு புதுக் கண்டுபிடிப்பு. ஆச்சரியமாகி விடுவார்கள். மேலும் மேலும் அதைப் பற்றியே பேச ஆசை கொள்வார்கள்.

இந்த சுவாரஸ்யமான நாட்களில் தான் அவள் தனது விருத்தாந்தங்களைக் கூறினாள். சொல்வதற்குக் கூட எதுவும் இல்லை. அவ்வளவு எளிமையாக இருந்தாள். அவளது குடும்பக் கிளைகள் அநேகமாக அங்கங்கே பட்டுவிட்டன. தந்தை தான் மிஞ்சி யிருந்தார். தந்தையின் மரணத்துக்குப் பிறகு அவள் அநேகமாக ஒரு அனாதை! கல்கத்தாவில் அவளது சித்தப்பா பிள்ளைகள் வேலையில் இருக்கிறார்கள். அவர்கள் ஆளுக்கு நூறு அனுப்பக் குடும்பம் ஓடுகிறது.

தோண்டல் வேலைகள் அநேகமாக நிறுத்த வேண்டும் என்ற நிலை ஏற்பட்டபோது மல்லிக்கிற்குப் பெரிய தவிப்பு வந்தது. சம்பகாவை எப்படி இனிமேல் சந்திக்க முடியும்? என்ன காரணத்தைக் கூற முடியும்?

தோண்டல் நிறுத்திய முதல் நாள் பல்லைக் கடித்துப் பூந்தளத்தில் இருந்துவிட்டான். இரண்டாம் நாள் முடியவில்லை. சம்பகா அவனைச் சுற்றி வந்து சிரித்தாள். தாவணியைத் திருகிக் கொண்டு பேசினாள். கிட்டத்தட்ட அவள் குரலைக் கூட அந்த அறையில் கேட்க முடிந்தது.

மனம் ஏன் இப்படிப் பிரமிக்கிறது? என்று நினைத்தான் அவன். அவள் அவனை ஊடுருவி நிற்பது போல் ஒரு கற்பனை. அது உண்மையா என்று தன்னையே சந்தேகப் பட்டுக் கேட்டுக் கொண்டான்.

இரண்டாம் நாள் மாலை, அந்தக் கிராமத்தில் போய் இறங்கி, கடற் கரை மணலில் நடக்கும்போது மனம் அவளை நிச்சயம் பார்க்க வேண்டும் என்று சொல்லியது.

தெருப் பக்கம் திரும்பலாமா என்று யோசித்தபோது கைத்தட்டல் அவனை இழுத்தது. திரும்பிப் பார்த்தால், மணலில் கால்கள் புதைய ரீடா ஓடி வந்துகொண்டிருந்தாள். அவள் கையில் நைலான் பை இறக்கை போல் அடித்தது. பாப் முடிகள். துள்ளித் துள்ளிக் குதித்தன.

—சௌக்கியமா ரீடா? என்று அவன் குழற ஆரம்பிக்கு முன், சிலுக்கென்று நோட்டை உருவி, —சனிக் கிழமை வரேன் என்று சொன்னீர்கள்! என்று எழுதிக் காட்டினாள்.

—வேலை இருந்தது ரீடா!

(நம்ப மாட்டேன்.)

—நிஜம்மா! சிநேகிதனோட வெளியிலே போயிட்டேன்.

(ரெண்டு சனிக் கிழமை போயிடுத்து.)

—ஸாரி.

(ஏதாவது கண்டு பிடித்தீர்களா?)

—இல்லை.

(சார்ட்?)

—இல்லை.

(நான் ஒரு ரகசியம் வைச்சிருக்கேன்.)

—என்னது ரீடா!

ஓரக் கண்ணால் பார்த்தாள். குறும்பும் குழந்தையும் அதில் இருந்தன.

—என்ன வச்சிருக்கே சொல்லு ரீடா!

பிகு பண்ணினாள்.

—சொல்லு ரீடா!

(சார்ட்).

அந்த வார்த்தையைப் படித்ததும் யூனிவர்ஸலின் பெரிய டைட்டில் மியூசிக்குடன் ஒரு குளோப் அவன் முன்னால் சுழன்றது. இந்து சமுத்திரம் பிரம்மாண்டமாக விரிந்தது. அதன் கொந்தளிக்கும் அலைகளில் பழைய கிழக்கிந்தியக் கப்பல் பாய்மரங்கள் பரக்க ஆடுவது கண்ணில் பட்டது. அதன் தலைப்புப் பகுதியில் எச். எம். எஸ். ஜூலி காலண்ட் என்ற பழைய எழுத்துக்கள் ஜாலமாக மின்னுவது தெரிந்தது.

—ரீஈஈஈஈடா! என்ன சொல்றே நீ? ஆவலை மூட முடியாமல் பொங்கிக் கேட்டான் அவன்.

(சார்ட்! பழைய கப்பலின் சார்ட்)

தன்னை அடக்கிக் கொள்ள முடியவில்லை. உற்சாகம் தீபாவளி பாணங்கள் போல் கண்ட திசைகளில் சிதற,

மெய் மறந்து கைநீட்டி அவள் வலது கையைத் தேடி எடுத்துக் குலுக்கினான்.

—ரீடா! பெரிய விஷயம் இது! ரொம்பப் பெரிய சமாசாரம்! உன்னை மறக்கவே மாட்டேன்! ரொம்பப் பெரிய உதவி எனக்குப் பண்ணிட்டே!



ரீடா அந்தக் கைகுலுக்கலின் நினைவில் இருக்க வேண்டும். கண்கள் குழைந்து மெல்லிய ஒளிகள் அதற்குள் ஆனந்தமாய் நீந்தின.

இருவரும் இருட்டும் வரை காத்திருந்தார்கள். பிறகு அவள் மல்லிக்கை அழைத்து பங்களாவை நோக்கிப் போனாள்.

பங்களாவுக்கு விலாப்புற வயலில் பம்பு செட் பக்கம் திக் திக்கென்று அவன் காத்துக் கொண்டிருக்க, ரீடா பங்களாவுக்குள் போய்ச் சிறிது நாழிகைக்குப் பின்னரே திரும்பி வந்தாள்.

அருகில் வந்து பிரவுன் அட்டையை எடுப்பதற்குள் அவன் மூச்சு நின்றுவிட்டது.

—இதுதானா?

(ஆமாம்.)

மல்லிக் வானத்தைப் பார்த்தான். வெளிச்சம் இல்லை. சற்று எட்டத்தில் குடியானத் தெருவின் வெளிச்சக் கம்பம் ஒன்று குப்பை மேட்டில் ஒதுங்கி நின்று கொண்டிருந்தது.

அதை நோக்கி அவசரமாய்ப் போய் அவன் அந்த அட்டையைப் பிரித்துப் பார்க்க,

மீண்டும் சுவர்க்க கீதங்கள் எங்கும் முழக்கமிட்டன. மிஸ்டிக் அழகுடன் ஒரு இந்து சமுத்திரக் காட்சி விரிந்து அதில் ஜூலி வீங்கி இறங்கி, அலைகளில் நர்த்தமிடும் காட்சி தெரிந்தது.

கண்களில் நீர் துளிர்த்துக் கீழே சொட்டியது. —ரீடா, என்றான் குரல் மழமழக்க. கண்களில் பார்வையில் அவள் ஒரு ஜல பிம்பமாகத் தெரிந்தாள். —என்ன கைம்மாறு செய்வேன், ரீடா! இதுதான் நான் தேடியது! என்னாலே உணர்ச்சியை நிறுத்த முடியலயே!

திவலைகள் நிறையக் கீழே விழ, அவை ஆனந்தங்கள் என்பதை ரீடா உணர்ந்தாள்.

பீரங்கியைப் பார்த்ததும்வொய்ட் அகலக் காலை வைத்து, —ஸ்மாஷர்! என்று கத்தினார். மற்றவர்கள் ஓடி வந்தார்கள். டார்வின் மெதுவாக வந்து எட்ட நின்று தமது 555 ஓரத்தைப் பல்லால் அரைத்தார்.

'ஸ்மாஷர்' 19ம் நூற்றாண்டின் பீரங்கி. 68 பவுண்டு குண்டுகளைத் தூக்கி எறிவது.

கிழக்கிந்தியக் கம்பெனி இந்த ஸ்மாஷர் வர்க்கங்களைப் பெரும்பாலும் உபயோகித்தது அவருக்குத் தெரியும்.

—நிச்சயம், மூழ்கிக் கிடப்பது கிழக்கிந்தியக் கப்பல்! மேலும் ஆராய வேண்டியது தான்! என்றார்.

இரண்டாவது டைவர் தண்ணீருக்குள் மூழ்கினார். முக்கால் மணிக்குப் பிறகு அவரிடமிருந்து சமிக்ஞை வர மேலே உள்ள மூன்றாவது லைன் இழுக்கப்பட்டது.

அந்த லைனில் கட்டப்பட்டிருந்த கான்வஸ் பையை வெளியே இழுத்துப் பார்த்ததும் விக்டோரியா கால பவுன் நாணயங்கள் கலகல என்று உதிர்ந்தன. மட்கிப் போய்க் களிம்பு பிடித்திருந்தாலும் அவற்றின் உள் வெளிச் சத்தை அடையாளம் காண முடிந்தது.

வொய்ட்டுக்குச் சந்தோஷம் தாங்க முடியவில்லை. - ஹுர்ரா என்று சொல்லி லாரென்ஸைக் கட்டிக் கொண்டார்.

மூவரும் ஆலோசனை நடத்தினார்கள். டைவர்களை மேலே வரும்படி சமிக்ஞை கொடுத்தார்கள்.

ஒரு மணி நேரம் பொறுமையாக இருந்து, டைவர்கள் மேலே வந்ததும் காபினில் கூடினார்கள். —ராப்ஸன், கப்பல்தானே அது? என்று கேட்டார் வொய்ட்.

—நிச்சயமாகப் பழைய கப்பல்! என்றார் ராப்ஸன்.

—பெயர் தெரிந்ததா? என்றார் லாரென்ஸ்.

—தெரியவில்லை.

—கப்பல் எப்படிக் கிடக்கிறது?

—தலை கீழா.

வொய்ட் திடுக்கிட்டார். அதை அவர் எதிர்பார்க்கவில்லை.

—சாய்மானம் உண்டா?

—இல்லை மிஸ்டர் வொய்ட்! ஒரு கவிழ்த்திய பாத்திரம் போல் தலை கீழாக இருக்கிறது. கப்பல் மூழ்கியபோது துவஜங்கள் உடைந்து போயிருக்க வேண்டும். கப்பலின் அடி முதுகு தான் ஒரு திமிங்கில முதுகு போல் மேலே இருக்கிறது.

—அடிப்புறத்தில் இடைவெளி தெரிகிறதா?

—இல்லை, மிஸ்டர் வொய்ட்! கொஞ்சம் கூடக் கிடையாது. கப்பலின் விளிம்பு மணலுக்குள் பூத்துக் கொண்டிருக்கிறது.

—தோண்ட முடியுமா?

—யந்திரம் வேண்டும். கையால் முடியாது.

—ஸ்டர்னைச் சுற்றி வரப் பார்த்தியா? பெயர் தெரியணுமே!

—ஊஹூம். கப்பலைப் பாசியும், கடற் செடியும், பவளக் கூடும் மூடியிருக்கின்றன.

யோசித்தார்கள்.

—மிஸ்டர் லாரென்ஸ்! இந்தக் கப்பல் ஜூலியாக இருக்க வேணும். காரணம், இதிலே தங்கம் இருந்ததினாலேதான் கப்பல் விழுந்த நிலையிலே இன்னமும் இருக்கு என்றார் வொய்ட்.

—தங்கம் இருந்தால்தான் அப்படி இருக்குமா? என்றார் டார்வின்.

—தங்கம் என்று சொல்லவில்லை. கனமானது இருந்தாலும் அது ஒரு நங்கூரம் போலக் கப்பலை விடாப் பிடியாகப் பிடித்துக் கொண்டிருக்கும்.

வொய்ட்டின் ஆராய்ச்சி மற்றவர்களுக்கு வலுவாகத் தோன்றியது.

லூயி அந்தப் பிரயத்தனத்திற்கு டெக்னிகல் அட்வைஸராக வந்திருந்தார்.

—கப்பலைத் தூக்கணும், அல்லது ஹலை உடைக்கணும் என்றார்.

—தூக்க முடியுமா? என்றார் லாரென்ஸ்.

—கப்பல் ஹல் மட்டும் உடையாம முழுசா இருந்தா, கீழே கப்பலின் விளிம்பு வழியா ஹோஸ் பைப்பைத் துருத்தி அது வழியாகக் காற்று அடிச்சு, கப்பல் முழுசையும் ஒரு பலூன் போல ஆக்கி மேலே தூக்கலாம். ஆபத்து அதிகம். நினைச்சபடி முடியாமக் கூடப் போகும்.

—அப்போ ஏன் அதைச் சொல்றீங்க! என்றார் டார்வின்.

—எனக்கு அதிலே ஒரு குறுகிய லட்சியம்! ரெண்டு மூணு அடி தூக்கிட்டாக் கூட, கப்பல் உள்ளே இருக்கிற பொருள் பக்க வாட்டிலே சரிஞ்சு சிதறும். அதிலே தங்கப் பாளம் ஒண்ணு கிடைச்சாலும் இது ஜூலி, இதுக்குள்ளே தங்கம் இருக்குன்னு நிச்சயிச்சுக்கலாம்.

லாரென்ஸ் கொஞ்சம் விஷயம் தெரிஞ்சவர்.

—அதிலே நிறைய ஆபத்து, மிஸ்டர் லூயி!

—ஆபத்தை நான் ஒத்துக்கறேன்! என்னுடை ரெண்டாவது திட்டம் ஹல்லிலே ஓட்டை போட்டு உள்ளே இறங்கணும். அதிலேயும் நிறைய ஆபத்து. தங்கம் கனத்திலே கீழே போயிருக்கும். கப்பல் துவாரத்திலேயிருந்து முப்பதடி நாற்பதடி ஆள் இறங்கணும்.

—இந்த ரெண்டாவதைச் சோதிச்சுப் பார்ப்பமே! அதிகச் செலவு இல்லே! என்றார் வொய்ட்.

—துவாரம் போடுவோம். உள்ளே ஆளை இறக்க வேண்டாம். ஹூக் போட்டுத் தூண்டிலை அனுப்புவோம். கிடைச்சதை மேலே இழுத்துப் பார்ப்போம். தங்கம் கிடைச்சா அதிர்ஷ்டம்....

—துவாரம் வேண்டாம். டைனமைட் வைத்து ஹல்லைத் தகர்த்து விடுவோம் என்றார் லூயி.

கடைசியில் டைனமைட் வெடிக்கும் தீர்மானமுடன் டைவர்கள் கடலுக்குள் இறக்கப்பட்டார்கள். (தொடரும்)





புஷ்பா தங்கதுரை

# கடலுக்குள் ஜூலி

பகல் தன் வழியே வருகிறது. எழுந்து நில். நிமிர்ந்து நில்; நீ நேராகச் செல்வதற்காக.

ஒரு ஸ்பானிஷ் கவிதை

## 16

அலை வழிந்து போவதற்கும், பால்மர்ஸன் நிமிர்வதற்கும், அதிசயமாக ஒரு சிறு படகு கப்பலிலிருந்து விடுபட்டு அவரை நெருங்குவதற்கும் சரியாக இருந்தது.

கைப்பெட்டியையும், சவப்பெட்டியையும் அதனுள் தூக்கிப்போட்டு எம்பி உள்ளே குதித்தார் அவர்.

அப்போது எலிஸா கைப்பிடியை வழுவவிட்டு, தண்ணீரில் மிதந்த நேரம். துடுப்பை இழுத்து, அவளை நோக்கி விரைந்து, ஒரு கையைப் பிடித்து மேலே தூக்கினார்.

சிலநேரத் தத்தளிப்புக்குப் பிறகு, மேலே எலிஸாவை இழுத்து விட்டார்.

அடுத்து அந்த இடத்தைவிட்டு உடனே ஓடவேண்டும்.

ஜூலி மூழ்கினால், அது தண்ணீரில் ஏற்படுத்துகிற உறிஞ்சும் சக்தி, எதையும் உள்ளே இழுத்துவிடும்.

இந்த ஆபத்தைத் தவிர்க்க அவர் உடனே ஓட வேண்டும்.

தம் திறன்களைச் சேகரித்துத் துடுப்பை வேகமாகப் போட்டு அலைகளில் தத்தளித்து அடிஅடியாக வெளியேறினார். எங்கே போகிறோம்? என்ன செய்யப் போகிறோம்? என்பதைப்பற்றி யோசிக்கவில்லை.

வெறியுடன் துடுப்பை வேகத்தில் சுழற்றி, அலைப் போக்கை அறிந்து அதனுடன் கலந்து 15 நிமிடத்தில் ஒரு பர்லாங் போய்விட்டார்.

இனி ஆபத்து அதிகமில்லை என்று திரும்பியபோது, ஜூலி உள்ளே மூழ்க, பெரிய நுரைத்திரள் எழும்பிக் கடல் வெள்ளை வெளேர் என்று ஆவதைக் கண்ணுற்றார்.

அதேநேரம் வானத்தில் மேகம் விலகி சூரியன் தெரிய, அவசரமாகப் பெட்டியைத் திறந்து அஸ்ட்ரோலாபை எடுத்து சூரியனைக் குறிவைத்து, கோணத்தைக் குறித்துக் கொண்டார்.

பின்னர் எதிர்ப்புறம் திரும்ப, தூரத்தில் கரையில் சின்னமாக ஒரு கோபுரத்தின் விமானம் சிறு புள்ளியாகத் தெரிவதைக் கணித்துக் கொண்டார்.

சிலநொடிகளில் களைத்துப் போய்ப் படகில் அப்படியே சாய்ந்தார் அவர்.

*அஸ்ட்ரோலாப் உதவியால் வரைந்திருந்த படம் அது.*

*ஜூலி மூழ்கிய இடத்தை அட்ச, தீர்க்க ரேகை சுத்தமாக வரைந்திருந்தார்கள்.*

*பரவசத்தில் மல்லிக்கிற்கு வார்த்தை வரவில்லை. உணர்ச்சி கொள்ளாமல் பிண்ட வார்த்தைகளைச் சிதறினான். மீண்டும் ரீடாவின் கையைப் பிடித்து, —ரீடா, உன்னை மறக்க மாட்டேன். இன்னும் ஒரு உதவி. இதை இன்று ராத்திரி என் அறைக்கு எடுத்துப் போக அனுமதி கொடு. நாளை கொண்டு வந்து சேர்க்கிறேன்.*

*யோசித்தாள். ஹூம் என்று தலை அசைத்தாள்.*

*சுருக்கென்று அவன் கையை எடுத்துக் கூர்மைப்படுத்திய உதட்டால் கொத்தினாள். —குட் லக்! என்றாள்.*

*கையில் அவள் கொடுத்த மின்சாரம் இரவு முழுதும் வாட்டியது. மேனாட்டுத்தனமுள்ள ரீடாவின் முகம் ஒரு கோணத்தில் அவனை மிகவும் வசீகரித்திருந்தது.*

*—உதவி வேண்டுமானால் வரச் சொன்னாள்! என்ன உதவி? என்று முணு முணுத்தான் அவன்.*

*அரசாங்க சிறு தொழில் கடன் உதவியில் அதிசயமாகப் பெரியவன் ஆனவன் ராம்சந்த். பூர்வீகத்தில் ராமச்சந்திரன். இந்தத் தலைகீழ் யு மீசையும் வடக்கத்திப் பெயர்க் குறுக்கலும் உலக ரீதிக்காக. பதினெட்டு டிராலர்களும், நாலு பாங்குகளில் ஏழு எண் தொகைகளும் வைத்திருப்பவன். சும்மா இருக்க முடியாது அவனால். புதிது, புதிது, புதிது என்று ஏதாவது செய்து கொண்டிருக்கவேண்டும்.*

*சொந்த வாழ்க்கை ஒரு பெரிய விபத்து. ரொம்பப் பிரியம் வைத்த மனைவி இறந்துவிட்டாள். எட்டு வயதுப் பையனை ஊட்டியில் படிக்க வைத்துவிட்டு, தனியாக வாழ்வைக் கழிக்கிறான்.*

*மனைவிக்கு இணையாகச் சுகம் கிடைக்காத தாபத்தினாலோ என்னவோ புதுமையிலும் புதிது கண்டு பிடிப்பதிலும் புதியதைத் தேடுவதிலும் ஓர் ஆராய்ச்சி அறிவு விபரீத அளவுக்கு ஓடியிருந்தது.*

*அவனது சாட்சாத் சன்னிதானத்தில் நின்று கொண்டிருந்தான் மல்லிக்.*

ராம்சந்தின் விலாசத்தை ஒரு எக்ஸ்போர்ட் ஜர்னலில் பார்த்திருந்தான் அவன்.

திருவான்மியூர்ப் பகுதியில் கடலை நோக்கி சின்ன பங்களா! வாசலில் ஒரு வீனீ பெயருடன் இத்தாலியக்கார்.

அங்கேதான் மல்லிக் புது மாணவன் போல் நிற்க,-வெல், என் நேரத்தை வீணடிக்காதீங்க! என்று ஆரம்பித்த ராம்சந்த் நான்கே நிமிடங்களில் எல்லாவற்றையும் விவரமாகக் கேட்டு விட்டு—இண்ட்ரஸ்டிங்! என்றான்.

மல்லிக்கின் தாளம் போடும் கை, அந்த போட்டோஸ்டட் வரைபடத்தை டீபாய் மீது பரத்தியது.

ஒரு ப்ரேம் கண்ணாடியை நெற்றியில் அழுத்திக் கனமான வெள்ளர் நீல ஜீன்ஸுடன் ராம்சந்த் சற்றே குனிந்தான்.

—உங்க மேலே நம்பிக்கை வைச்சு இதைக் காட்டறேன். வேறே யாருக்கும் செய்திருக்க மாட்டேன், என்றான் மல்லிக்.

முகவாயில் இப்படியும் அப்படியுமாகக் கை வைத்து யோசித்து, —அப்புறம் சந்திக்கலாம்; என்று சொல்லி வழியனுப்பினான் ராம்சந்த்.

சாயந்திரம் வரை மல்லிக்கின் மனம் கொந்தளித்தது. படத்தை வேறு காட்டி விட்டோமே என்று நினைத்தபோது, வாசலில் புதிய ஹாரன் சத்தம் அவனை இழுக்க, வீனீ அங்கே நின்று கொண்டிருந்தது.

நேர்த்தியான செக் ஷர்ட்டில் ராம்சந்த் இறங்கி, மேலே வந்து மல்லிக்கை அழைத்துப் போனான்.

-மிஸ்டர் மல்லிக்! பெரிய ஆராய்ச்சி பண்ணி இருக்கீங்க! நம்ப நாட்டிலே இதப்போல மூளைகளைத்தான் தேடறேன். சுபிட்சம் குயுக்தி மூளைகளாலேதான் உற்பத்தியாகும். கன்வென்ஷனல் மூளைகளில் அல்ல. நாம்ப ரெண்டு பேரும் இதிலே பார்ட்னர்ஸ்! செலவு பூராவையும் நான் ஏத்துக்கறேன். புதையல் கிடைச்சா அம்பது அம்பது பங்கு போட்டுக்கறோம். ஓகே! என்றான்.

10.00 வடக்கு அட்சம். 79.51 கிழக்கு தீர்க்கத்தில் வந்ததும் ரூபாவின் துடிப்புகளை அணைத்து, மல்லிக்கைப் பார்த்துப் புன் சிரிப்புப் பெய்தார் ராம்சந்த்.

காபின் வலது ஓரம் கண்ணாடிச் சட்டத்தின் சன்னல் முன்னே திக்பிரமையுடன் நின்று கொண்டிருந்தாள் சம்பகா.

வெளியே ஓவியம் போல் கடல். இருள் பச்சையில் வெகு தொலைவுகளுக்கு ஓடி, ஆகாயத்தை ஒட்டிக்கொண்டிருந்தது. வானப்



குமுலஸ் மேகங்களுடன் கண்ணுடி நீலத்தில்! —என் போட்தான் என் மனைவி. சொல்லப்போனு ரூபா என் மனைவி பேரு. அவ பேரையே படகுக்கும் வச்சுட்டேன்.

மீன் பிடிப்புப் படகு ஒன்றை ஒரு நவீன யாட் அந்தஸ்துக்கு அவர் மாற்றியிருந்தார்.

உள்ளே நாகரிகமும் உல்லாசமும் விஞ்ஞானமும் போட்டிபோட்டு நிரம்பியிருந்தன.

ராம்சந்தின் விஸ்தாரமான நவீன மோடஸ் தர்படகின் காபினில் அவர்கள் இருந்தார்கள்.

முன் பகுதியில் ஒரு பிளேனின் காக்பிட் போல் நிறைய டயல்கள் பரிமளிக்கும் டாஷ் போர்ட். அவைகளுக்கு அடுத்து பைலட்டின் ஸீட். பின் பகுதியில் லவுஞ்ச் போன்ற விஸ்தாரப் பகுதி. சோபா மேஜை இத்யாதிகளுடன்.

சம்பகாவுக்கு எல்லாம் விநோதங்களாக இருந்தன. கனிநாகலாபுரம் கடற்கரைக்கு வந்தது, கணுக்கால் நனைய நடந்து போய் லாஞ்சில் ஏறியது, லாஞ்ச் சக்கரவட்டம் அடித்து டுபுடுபு என்று ஓடியது, அலை அடிக்கடி தூறல் அடித்தது, எட்டத்தில் அந்தப் பெரிய கப்பல் (அவளுக்கு எல்லாமே கப்பல்கள்தான்) ஒரு வெள்ளைக்காரக் குட்டி போல் சொகுசாக ஆடியது, அதன் அடிவாரத்தில் அந்த லாஞ்ச் ஒரு கன்னுக்குட்டி போல் ஒதுங்கியது, அந்த ஆடும் ஏணியில் ஆடிக்கொண்டே ஏறியது, அந்த ராம்சந்த் விஞ்சின் விசையைத் தட்டி லாஞ்சை அலக்காக மேலே தூக்கியது, பிறகு 'கப்பலி'ல் ஒரு மணி நேரம் பிரயாணம் செய்தது. கடைசியில் இங்கே ஆற அமர நின்று, ஜகம் முழுவதையும் அச்சச்சோவாகப் பார்த்துக் கொண்டிருப்பது,

இதெல்லாம் என்ன அதிசயம்!
—மிஸ் சம்பகா இங்கே வாங்க!
அழைத்தது ராம்சந்த்.

காபினை அடுத்த சின்ன அறை. அங்கே சுடச் சுட நெஸ்கஃபே தயார் செய்திருந்தார். சமையல் கூடம் அதுதான்.

# "ராஜாஜி" வாழ்கிறார்!

"முதலில் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன். டிசம்பர் மாதமே நான் வந்திருக்க வேண்டும். அப்போது எனக்கு ஆயுள் முடிந்து விட்டது என்று எல்லோரும் நினைத்தார்கள். படுத்த படுக்கையாகக் கிடந்த என்னைப் பார்க்க, பேரக் குழந்தைகளும் அவர்களின் குழந்தைகளும் கூடிவிட்டார்கள். சென்ற நவம்பர் மாதம். நானோ, 'முடியாது. இப்போது சாக முடியாது' என்றேன். ''எனக்கு இந்தியாவில் ஒரு வேலை இருக்கிறது. ராஜாஜி நினைவு அறக் கட்டளையின் முதல் சொற்பொழிவு நிகழ்த்த வேண்டும். அதற்குப் பிறகு வேண்டுமானல் இறந்து போகிறேன் என்றேன்.''

இப்படிக் கலகலப்பாகத் தொடங்கினார் லார்ட் பென்னர் பிராக்வெல், இரண்டு நாள் சொற்பொழிவை. பாரதத் தலைநகரில். முதல் நாள் குடியரசுத் தலைவரும் இரண்டாம் நாள் துணைத் தலைவரும் தலைமை வகிக்க, ஆளும் கட்சி அமைச்சர்களும், எதிர்க் கட்சியாளரும் ஒரே மேடையில் கூடியிருக்க, தில்லி நகரின் அறிவார்ந்த புள்ளிகள் நிரம்பிய கமானி அரங்கில் நடந்தது. 92 வயது உற்சாகி பிராக்வெல் தமது வெண்கலக் குரலில் சுருக்கமான உரையில் ஆழமான கருத்துக்களை நகைச்சுவை மிக்க உதாரணங்களுடன் கூறியபோது ராஜாஜி அறக் கட்டளை உரையாற்ற ஏற்றவர்தான் என்பது தெரிந்தது.

சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன்பு தமது தள்ளாத வயதில் ராஜாஜி இங்கிலாந்துக்கும் அமெரிக்காவுக்கும் போனுரே, அணு ஆயுதப் பரிசீலனை முயற்சிகளைக் கைவிடும்படி வேண்டிக்கொள்ள — அப்போது இங்கிலாந்தில் இதே முயற்சியில் ஈடுபட்டிருந்தார் பிராக்வெல், நோபல் பரிசு விஞ்ஞானி நோயல்—பேக்கர் போன்றவர்களுடன். அப்போது ராஜாஜியைச் சந்தித்ததை உணர்ச்சியுடன் நினைவுகூர்ந்தார் பிராக்வெல்.

எப்போதும் இந்தியாவின் நண்பரான இவர் ஐம்பது ஆண்டுகளாக பிரிட்டிஷ் பார்லிமெண்ட் உறுப்பினர். தொழிற் கட்சியைச் சேர்ந்தவர். காந்தி குல்லாய் வைத்திருந்த ஒரே காரணத்துக்காக ஆயிரம் ஆயிரம் பேரை இந்தியாவில் கைது செய்த போது இவர் பிரிட்டிஷ் பார்லிமெண்டில் ஒரு காந்தி குல்லாயைக் கொண்டு வந்து பிரித்துக் காட்டி, ''இந்தத் துணிக்கு நமது அரசாங்கம் ஏன் இப்படிப் பயப்படுகிறது? இதோ நானும் இதை அணிகிறேன். என்னைக் கைது செய்யுங்கள்'' என்றாராம்!

இந்த நிகழ்ச்சியைத் தமது வரவேற்பின் போது நிதி அமைச்சர் வெங்கடராமன் கூறியதும், பிராக்வெல் தமது கோட்டுப் பையிலிருந்து ஒரு காந்தி குல்லாயை எடுத்து, அணிந்து கொண்டார்! உடனே பலத்த கரவொலி. தமது உரையை குல்லாயைக் கழற்றாமலே நிகழ்த்தினர். அப்படியே ரோஜா மாலையையும் கழற்றாமல் நிகழ்ச்சி முடியும்வரை மாலையை ரசித்தபடி மணக்க மணக்க நின்றார்!

காரியம் சாதிக்க முடிந்தவர்களைக் குறிப்பிட 'அவருக்கு நல்ல வாய்ஸ்' என்பார்கள்,

—இந்த அடுப்பு பார்த்தியா! ஜிம்பால் அடுப்பு! போட் ஆடினு அதுவும் தானே ஆடி அட்ஜஸ்ட் ஆகிக்கும், என்ருர்.

கோப்பைகளை அவளிடம் கொடுக்க, மூவரும் காபினின் சோபாக்களில் தொய்வாக அமர்ந்தார்கள்.

மல்லிக்குக்கும் கூட அந்தக் காட்சி ஒரு மாயமாக இருந்தது. கடல் நடுவில் தாலாடிக் கொண்டு ஒரு நவீன அறையில் சூடாகக் காப்பி குடிப்பது.

சம்பகாவை அடிக்கடி திரும்பிப் பார்த்தான்.

—இந்த போட்லே நாம்ப மூணு பேருதான் இருக்கோம்.

டம்ளரைச் சூப்பிவிட்டு ராம்சந்த் சொன்ஞன்.

—ஏன், யார் உதவியேனும் வேண்டாமா? என்று கேட்டான் மல்லிக்.

—ஒருத்தனை வைச்சுக்கிட்டாக்கூட அவனுக்கு விஷயம் தெரிஞ்சிரும். அவசியம் இருந்தால் ஒழிய நான் யாரையும் கூட்டுச் சேர்ப்பது கிடையாது.

இரண்டாம் முறை சூப்பினன். —தன் கையே தனக்குதவி, மல்லிக்! வெள்ளைக்காரன் என்னடான்னு ஒருத்தனுகவே அட்லாண்டிக்கைக் கடக்கருன், இமய மலை மேலே ஏறருன். நாம்பதான் பயந்து பயந்து சாகரோம். தன்னம்பிக்கை இல்லாம அடிச்சுட்டாங்க நம்பளை! ஆரம்பத்திலே நான் ஒரு ஷீஃபுட் கம்பெனியிலே குமாஸ்தாவாத்தான் இருந்தேன். அமெரிக்கங்க அங்கே வருவாங்க! ஒவ்வொருத்தனேயும் பார்த்து ஏங்குவேன். ராட்சதன் மாதிரி, உயரம், பருமன், கண்ணிலே நம்பிக்கை, எதையும் சாதிப்போம்னு உறுதி, பேசினன்னு வியாபாரம், நம்பிக்கை சாகசம் எல்லாம் சிதறும். பிரமை பிடிச்சுப் போயிடுவேன். அப்போ எழுந்த வைராக்கியம்தான் என்னை மேலே போக வச்சுது. இப்போ, இஷ்டப்பட்டா எதையும்

பிராக்வெல்லுக்கு இரண்டு அர்த்தத்திலும் நல்ல வாய்ஸ்தான். அவர் தமது ஒவ்வொரு வாக்கியத்தையும் அனுபவித்து உரையாற்றினர். ஒவ்வொரு சொல்லுக்கும் அழுத்தம் கொடுத்தார். ''ராஜ்ஜஜ்ஜி'' என்று இரண்டு நாள் சொற்பொழிவில் பலநூறு முறை கூறியது இன்னும் காதில் ஒலிக்கிறது. ஒரே ஒரு முறை ''சக்—கர்—வர்ட்டி-ராஜ்—கோப்—லாச்-சாரி'' என்று தட்டுத் தடுமாறி உச்சரித்து, கை தட்டல் வாங்கிக் கொண்டார்!

முதல் நாள் ராஜாஜியின் வாழ்க்கையையும் இரண்டாம் நாள் அவரது கொள்கைகளையும் விவரித்த பிராக்வெல் மொத்தத்தில் ராஜாஜி ஒரு நிறைவு பெற்ற மகான், நற்பண்புகள் நிறைந்த மனிதர், உலக மகாபுருஷர் என்பதை ஆதாரபூர்வமாக விவரித்தார். ''அவரது நிறைவு எங்கே, எனது இயலாமை எங்கே!'' என்று உண்மையான அடக்கத்தோடும் சொல்லிக் கொண்டார்.

ராஜாஜி தமது மனைவியின் இறுதி நாட்களைப் பற்றி நாற்பது ஆண்டுகளுக்குப் பின்பும் நெகிழ்ச்சியோடு கூறியதை வெளியிட்டபோது பிராக்வெல்லே நெகிழ்ந்து விட்டார். அறிவுக் கடலான ஒரு மேதை அன்பு வெள்ளமாகவும் இருந்ததை விளக்கினர். காந்திஜியிடம் அவர் மரியாதையும் காட்டினர், அவரது பெரு மதிப்புக்கும் உரியவராக நடந்து கொண்டார். அரசியல் வாழ்வில் தார்மீக உணர்வு நிலவ வேண்டும் என்று ராஜாஜி பாடுபட்டதை நினைவு கூர்ந்தார் பிராக்வெல்.

இடையிடையே, கடந்த காலப்பெருமக்களின் உண்மையான உணர்வைக் காட்டுவதற்கே போல இன்றைய கட்சி மாறிகளைப் பற்றிக் குறித்த போது சபை ஏளனமாகச் சிரித்தது. ''இப்படிப்பட்ட சில கட்சி மாறிகளை எங்கள் நாட்டிலும் பார்த்ததுண்டு. இப்போது உங்கள் நாட்டிலும் காண்கிறோம். மக்களின் நம்பிக்கைக்கு உரிய ஜனநாயக அரசு நிலைக்க வேண்டுமானல் தேர்ந்தெடுக்கப்படும் வேட்பாளர்கள் நாணயமானவர்களாயும் கொள்கைப் பிடிப்பு உள்ளவர்களாயும் இருக்க வேண்டும்'' என்றபோது சபையினர் கொடுத்த வரவேற்பு, அப்பப்ப! ராஜாஜி தமது கருத்துக்களால் இன்றும் நம்முடன் வாழ்கிருர் என்பதைக் காட்டிய குறிப்பு அது.

இந்தச் சொற்பொழிவுக்கு பிரதமர் இந்திரா காந்தி வரக்கூடும் என்று மக்கள் எதிர்பார்த்தார்கள். ஆனல் அவரிடமிருந்து ஒரு வாழ்த்துச் செய்திதான் வந்தது. அதில் ஒரு ''ஷொட்டு''. 'ராஜாஜி நமது அறிவியலாளரில் ஒரு பெருந்தகைதான், வயது வந்தோருக்கு வாக்குரிமை வழங்கியதில் அவருக்கு நம்பிக்கை இல்லாதபோதும்' என்று ஒரு வாசகம் அந்த வாழ்த்துரையில் இருந்தது.

பிரதமரின் இந்த நெருடலை எடுத்துக் காட்டினர் திரு சி. சுப்பிரமணியம், தமது நன்றியுரையில். ராஜாஜியைப் பற்றி இவ்வாறு கூறுவது விஷமமான அவதூருகும் என்ருர். உண்மைக்குப் புறம்பானது. அவர் எதிர்த்தது, இன்றைய தேர்தலின் தன்மையை — பண பலம் உள்ளவர்களுக்கே வாய்ப்பாக இருக்கும் தன்மையைத் தானே தவிர, தேர்தல்களையே அல்ல என்று விளக்கினர், ராஜாஜி நூற்றாண்டு விழாக் கமிட்டித் தலைவர்களில் ஒருவரான திரு சி. எஸ்.

—அ. ஆ.



✕ பிராக்வெல்

சாதிப்பேன்னு நம்பிக்கை எனக்கு வந்துடுத்து! எனக்கு ஒருத்தனுக்கு மட்டும் வந்து பிரயோசனமில்லே, நாடு முழுக்க வரல்லியே...

பீப் பீப் பீப் என்று டாஷ் போர்டில ஒரு சின்ன யந்திரம் கத்தியது. ராம்சந்த் எழுந்தான். இரண்டு பட்டன்களை அழுத்த ராடார் ஸ்க்ரீனில் சங்கேதக் கோடுகள் வந்தன. அதை அணைத்து ஒரு சின்ன உருளையைத் திருகி, ஒரு ஐ-பீஸில் கண்களை வைத்துப் பார்த்தான். —ரெண்டு மைல் தூரத்தில் ஒரு கட்டு மரம் போகுது. நம்ப ராடார் நமக்கு எச்சரிக்கை கொடுக்கிறது என்றான்.

—அப்படியே ஜூலி இருக்கும் இடத்தைக் குறிச்சு எச்சரிக்கை கொடுத்தா ரொம்ப உதவியாயிருக்கும். என்றான் மல்லிக் வேடிக்கையாக.

ராம்சந்த் காலை அழுத்தமாக வைத்து வந்தான்.

-ஜூலி பக்கம்தான் நாம்ப இருக்கோம் என்றான் அவன்.

மல்லிக் திடுக்கிட்டு எழுந்தான்.

—ஒருவேளை ஜூலிக்கு மேலாகக் கூட நாம்ப இப்போ மிதந்துக்கிட்டு இருப்போம்.

**வொ**யிட், லாரென்ஸ், டார்வின், லூயி ஆகியோர் மேலே காத்திருக்க, டைவர்கள் நீருக்குள் அமிழ்ந்தார்கள். 45 நிமிடத்திற்குப்பிறகு சமிக்ஞைகள் செய்து மேலே வந்தார்கள்.

டைனமைட்களைப் பொருத்தி விட்டதாகத் தெரிவித்தார்கள்.

லூயி கணக்குகள் போட்டார். டைனமைட்டின் வெடிக்கும் பலன் எதுவரை பரவும் என்று வரைபடத்தில் பார்த்தார். பிறகு நெப்ட்யூனை நகர்த்தி நூறு கஜ தூரம் அப்பால் போகச் சொன்னார்.

அவர் சைகை கொடுக்க விசை அழுத்தப்பட்டது.

எல்லோரும் ஆவல் துளும்பக் கடல் வெளியைப் பார்த்தார்கள். சில விநாடிகளில் நெப்டியூனில் உள்ள எக்கோ ஸவுண்டர் துள்ளிக் குதித்தது. அடுத்து திமு திமு என்று ஊமை நடுக்கம் நீர்ப் பரப்புக்குள் ஓடியது. கண் கொள்ளாக் காட்சியாக நூறு கஜத்துக்குத் தள்ளி ஒரு பெரிய பூ வாணம் போல் தண்ணீர் மேலே வெகு உயரம் எழும்பி, கீழேஅருவிபோல் விழுந்தது! பிரளயம் ஒழுகியது போல் காட்சி! அதன் பிரதிபலனில் கடல் திடுக்கிட்டு ஆட, நெப்டியூன் பலமாகத் தத்தளித்தது.

எல்லோரும் காட்சியில் அதிசயித்த பிறகு சகஜ நிலை ஏற்படுவதற்காகக் காத்திருந்தார்கள்.

பின்னர் இரு டைவர்களும் நீருள் எச்சரிக்கையுடன் மூழ்கி வெகு நேரம் சென்ற பின்னர் முதல் கண்டுபிடிப்பை மேலே அனுப்பினார்கள்.

அவர்கள் அனுப்பிய பின்னல் வலையை மேலே தளத்தில் பிரித்துக் கொட்டியதும் எல்லோருமே ஆகா என்றார்கள்.

(தொடரும்)




Dr. S. R. சிவராஜ்

**வாலிபர்கள் !** **மணமானவர்கள் !!**

**வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள பலஹீனங்களை நீக்கி, தாம்பத்திய வாழ்வை இன்பமுடன் அனுபவித்து மகிழ, இன்றே புகழ் பெற்ற 'ரகசிய வியாதி நிபுணர்' ஆண்மைக் குறைவு நீக்கும் 'அரிய வைத்திய மேதை'**

**'கவிராஜ்' டாக்டர் S. R. சிவராஜ், R.I.M.P.**

அவர்களிடம் சிறந்த முறையில் சிகிச்சை பெற, அவர் சுற்றுப்பயண முகாம்களில் நேரில் சந்தித்து வாழ்வில் மகிழ்ச்சி காணுங்கள். நேரில் சந்திக்க முடியாதவர்கள், குறைகளை விபரமாகத் தலைமை அலுவலகத்துக்கு எழுதவும். (கடிதங்கள் ரகசியமாகப் பாதுகாக்கப்படும்.) மருந்துகள் விரிவான விளக்கங்களுடன் வி.பி.பி. மூலம் அனுப்பி வைக்கப்படும்.

❋ **குழந்தை பாக்கியம் (கர்ப்ப அணுக்கள்) இல்லாதவர்கள்**
❋ **கல்யாணமாகி பல ஆண்டுகளாகக் குழந்தை பாக்கியமே இல்லாதவர்கள்**

சிறந்த முறையில் சிகிச்சை பெற்று, கர்ப்ப அணுக்கள் தேவையான அளவு உற்பத்தியாகி குழந்தை பாக்கியம் பெற்று மகிழ்ச்சியடையவும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். 25 வருட சுற்றுப் பயணத்தில், அவரிடம் சிகிச்சை பெற்றுப் பலன் அடைந்தவர்கள் பல்லாயிரம் பேர்கள். அவர்களைப் போல் நீங்களும் பலன் அடைய வேண்டுமல்லவா?

**விரைவில் பலன் காண விசேஷ 1 மாத சிகிச்சை ★ குறைந்த ஸ்பெஷல் 1 மாத சிகிச்சை**

| A-வகுப்பு | B-வகுப்பு | C-வகுப்பு | மீடியம் | ஸ்பெஷல் | 1-ம் நெம்பர் | நேரில் பெறலாம் |
|---|---|---|---|---|---|---|
| ரூ. 350-00 | 250-00 | 175-00 | 115-00 | 90-00 | 75-00 | V.P.P.யிலும் பெறலாம் |

**தலைமை அலுவலகம் :**

**சிவராஜ் சித்த வைத்தியசாலை**

**C-56, தமிழ்ச் சங்கம் ரோட் பின்புறம்**

(சென்ட்ரல் டாக்கீஸ் வடபுறமுள்ள ஏரியின் முன் பக்கம்)

**காந்தி ஸ்டேடியம் - சேலம்-636007**

*இநதிய சமுத்திரம் 7,50,00,000 சதுர கி. மீட்டர் பரப்புடையது. உலக நீர்ப்பரப்பில் இது ஐந்தில் ஒரு பாகம். இருந்தும் உலகில் அதிகம் ஆராயப் படாமல் இருக்கும் கடல் இந்திய சமுத்திரந்தான்.*

*அலெக்ஸாண்டர் கோன்ட்ராடோவ்*

*'தி ரிடில்ஸ் ஆஃப் த்ரீ ஓஷன்' னில்*

## 17

பால்மர்ஸன் ஏறிய சிறு படகு அலைகளில் அடிபட்டு, பல முறை மூழ்கும் நிலைக்கு வந்தது.

ஆனால் அதிசயமாக அதன் நுனி மேலே எழுந்து அலையில் பிரயாணம் செய்தது.

பால்மர்ஸன் எந்த யத்தனமும் செய்யாமல் ஓய்ந்து விட்டார்.

புயல் இன்னும் வடியவில்லை.

சிறிதே திறந்த வானம் மீண்டும் மூடிக் கடல் இருட்டாகிவிட்டது.

இனி எதுவும் செய்வதற்கில்லை கடவுளின் கருணை தான் துணை என்று நினைத்தார்.

எலிஸா பாதி உயிராகி, படகின் அடித்தண்டில் தண்ணீரோடு தண்ணீராகப் படுத்து விட்டாள்.

அவளால் வேறு எதுவும் செய்யமுடியவில்லை.

வெகு நேரத்திற்குப் பின்னர் பால்மர்ஸன் கண்ணை விழித்தார்.

அவர் முன்னால் அந்தக் கோபுரம் மேலும் கிழுமாக ஆடியது.

கரைக்குச் சமீபங்களில் வந்து விட்டதை உணர்ந்தார்.

கரை நெருக்கத்தால் அலைகள் அதி வேகமாகப் புரண்டுகொண்டிருந்தன.

அந்தக் கோபுரத்தை வெறித்துப் பார்த்தார். கடவுள் எந்த உருவில் இருந்தால் என்ன!

இந்தக் கோபுரத்தில் இருக்கும் கடவுள் என்னைக் காப்பாற்றுவாரா!

நினைக்கும் போது பளிச் பளிச் சென்று கரையில் ஏதோ மின்னியது.

கோவிலிலிருந்து வரும் மின்னலா அது?

படகு அரைமணியில் கரையில் ஒதுங்கியது.

**ரா**ம்சந்த் சொன்னதைக் கேட்டு மல்லிக் கொந்தளிப்பானான். —கீழே ஜூலி இருப்பாளா? என்று சந்தோஷம் குதிக்கக் கேட்டான்.

—வா, இப்படி, என்று காபின் முன்னால் போனார் ராம்சந்த். நிறையக் கடிகார முகங்கள். வெவ்வேறு கோணங்களில் முட்கள், குரோமியம் பிடிகள், ஸ்விட்ச்கள், ராடார் ஸ்கிரீன், வயர்லஸ் டிரான்ஸ்மிட்டர்கள். எல்லாம் களேபரமாக



அடைந்து ஒரு மாய பிரமிப்பை உண்டாக்கின.

—இது எக்கோ ஸவுண்டர். இதை இயக்கினு கடலுக்கு அடியிலே ஏதாவது இருக்கான்னு தெரியும்.

—இயக்குங்க! என்று சீறினன் மல்லிக்.

ராம்சந்த் விசைகளைத் தட்ட, ஒரு கண்ணாடி முகப்பில் முள் நகர்ந்து, அத்துடன் ஒரு கிராஃப் மெள்ள இடம் பெயர்ந்தது.

கிராஃபை வெளியே ஆவலுடன் ராம்சந்த் எடுத்தார்.

அவர் முகத்தையே மல்லிக் பார்த்தான்.

சம்பகா சின்னக் குழந்தை போல் இருவரையும் பார்த்து நின்ருள்.

ராம்சந்தின் முகம் வெறுமை காட்டியது.

—என்ன? என்று திடுக்கிட்டுக் கேட்டான் மல்லிக்.

—இதப் பாரு! கீழே எதுவும் இல்லை. வெறும் தரைதான் இருக்கு.

படம் அவன்கையில் வந்தது. வரிசையாகக் கிராதி வளைவுகள். அதுதான் தரை என்ருர். வளைவுகளில் எந்த மாறுதலும் இல்லை.

—எக்கோ சவுண்டர் எதிரொலித் தத்துவத்தில் இயங்குவது சமதளமாக இருந்தா இந்த மாதிரிதான் எதிரொலி பதிவாகும். சமதளம் இல்லாம, தரையிலே ஏதாவது கிடந்தா எதிரொலியில் அது வித்தியாசம் உண்டாக்கிடும்.

-அப்போ ஜூலி இல்லைன்னு சொல்லுங்கோ.

—இந்த 10.00 டிகிரி வடக்கு, 79.51 டிகிரி கிழக்குலே இல்லை.

—அங்கே இருக்கிறதாத்தானே சார்ட்லே குறிச்சிருக்கு.

—இருக்கலாம். ஆனு கப்பல் மூழ்கி 140 வருஷம் ஆச்சு. இந்த இடைவெளியிலே புதுசா மண் வந்து அதை மூடியிருக்கலாம்.

—அப்படியா? என்று திகைத்தான் மல்லிக்.

—இல்லாட்டி கப்பல் உடைஞ்சு சிதறிப் போயிருக்கலாம். அல்லது கப்பலை நீரோட்டம் இழுத்துப் போய் எங்காவது தள்ளியிருக்கலாம்.

—அது முடியுமா?

—நிச்சயம் முடியும். நீரோட்டம் பெரிய பெரிய மலைகளையே புரட்டும்.

மல்லிக்கிற்குக் கிட்டத்தட்ட அழுகை வந்தது. —அப்போ என்ன செய்யலாம்?

—சுற்று வட்டாரத்தைத் தேட வேண்டியதுதான்.

**''என்னய்யா கைரேகை பார்க்கச் சொன்ன என் கன்னத்தையே பார்க்கறே?''**

**''நடிகை 'ஜமாய்ஸ்ரீ'யின் கைரேகை உங்க கன்னத்திலே எப்படி வந்தது?''**



மல்லிக்கின் முகம் வெளிச்சம் போட்டது.

—முடியுமா?

—முடியும். ஆனு கஷ்டம்.

எவ்வளவு கஷ்டம் என்பதை ராம்சந்த் விவரித்தார். படகுக்கும் நேர் கீழாக உள்ள பகுதியைத்தான் எக்கோ ஸவுண்டர் கணித்துக் கொடுக்கிறது. படகுக்குச் சில அடிகள் தள்ளி இருந்தாலும் அது கணிப்பில் எடுத்துக் கொள்வதில்லை. ஒரு இரண்டு மைல் சுற்றளவில் ஜூலியைத் தேட வேண்டுமானால், படகு கிட்டத்தட்ட ஒரு வயல் காட்டை உழுவது போல் வரி வரியாக உழ வேண்டியிருக்கும். கடலில் அப்படி உழுவதானல் எவ்வளவு சிரமம்?

மல்லிக் சோர்ந்து உட்கார, ராம்சந்த் அந்தச் சார்ட்டின் போட்டோஸ்டட் காப்பியை விரித்து வைத்து யோசனை செய்தார்.

—இன்னொரு விஷயம் மல்லிக்! அந்த நாளிலே இப்போ இருக்கிறதைப் போல நுண்ணிய கருவிகள் எல்லாம் கிடையாது. கப்பல் இருக்கும் இடத்தைக் குறிக்க அஸ்ட்ரோலாப், ஸெக்ஸ்டண்ட் ரெண்டுந்தான் உண்டு. இதிலே நிறையத் தவறு வர்றதுக்குச் சந்தர்ப்பம் இருக்கு. இந்தச் சார்ட்டை பால்மர்ஸன் எப்படித் தயார் பண்ணினரோ தெரியாது. ஆனு அவர் குறிச்சிருக்கிற இடம் இதுதான். என் கருவிகள் எல்லாம் அதைக் கரெக்டாகக் காட்டுகின்றன. இருந்தாலும்....

என்று சொல்லிப் படகை இயக்கி ஒரு குறுகிய அளவு வட்டமடித்து எக்கோ ஸவுண்டரில் ஆழங்களைப் பதிவு செய்தார்.

இருவரும் ஆவலுடன் பார்க்க, கிராஃபில் வெறும் சம தளந்தான் தெரிந்தது.

—சரி ஒன்று செய்வோம் என்ருர் ராம்சந்த். மல்லிக் அவரை ஏறிட்டான்.

-இந்தப் படகிலே ASDICனு கருவி இருக்கு அதைப் பெரும்பாலும் மீன் கூட்டத்தைக் கண்டுபிடிக்கப் பயன்படுத்தறோம். படகைச் சுத்தி ஒரு மைல் வட்டாரத்திலே ஏதாவது சின்ன வித்தியாசம் இருந்தாக்கூடக் கண்டு பிடிச்சுச் சொல்லிடும்.

எக்கோ ஸவுண்டரையும் அஸ்டிக்கையும் உபயோகித்து இரண்டு நாள் கடலைக் கோதினர்கள். சின்ன அளவு வித்தியாசங்கள் தெரிந்தன தவிர,வேறு எதுவும் தெரியவில்லை.

கரை வந்ததும் சம்பகாவுக்குப் பிரமையாக இருந்தது. மூன்று நாள் கடலில் உலாவியது கனவு போல் இருந்தது. படகா அது? மாளிகை! மாய மாளிகை! பட்டனை அழுத்தினல் சமைக்கிறது. காப்பி போடுகிறது. பாடுகிறது. சூடு கொடுக்கிறது.

என் மனைவி என்ருரே! மனைவியேதான்! எத்தனை வேலை செய்கிறது!

வீட்டுக்கு வந்ததும் கால் பாவவில்லை. மனம் பாவவில்லை. மிலுமிலு என்று தேகத்தில் ஒரு பறப்பு. அயர முடியவில்லை. உள்ளே சங்கீதமாகக் கேட்கிறது.

ஒரே ஒரு வருத்தம். நாகலாபுரீசுவரரை மூணு நாள் பார்க்கவில்லை. அவருக்கு உணவு படைக்கவில்லை. எவ்வளவு பெரிய தப்புஅது!

மாலையின் சாய்வுக் கிரணங்கள் இறங்கும்போது அவள் கோயிலில் இருந்தாள்.

சுவாமிக்கு அன்னம் படைத்துவிட்டு, ஈஸ்வரி முன் போனபோது அழுகை குபுக்கிட்டது.

நாலா நாள் போட்ட அரளி சுருண்டு கறுத்திருந்தது.

—உன்னைக் கவனிக்காமல் போயிட்டேன் இல்லே! ரொம்ப வருத்தப்பட்டேன்! ஆனா, நான் என்ன செய்யறது? எனக்கு வாழ்க்கை வறட்சியாகிட்டு வருது. வருமானம் இருந்தாத்தானே வாழ்க்கை! என்னை உதவிக்குக் கூப்பிட்டாங்க. பணம் தரேன்னுங்க. போனேன். ஒரு ஆம்பிளையை நம்பிப் போகலாமான்னு கேட்பே நீ! அவரைப் பார்த்தா நம்பும்படியா இருக்கார். தனிமையிலே எத்தனை நாள் அவரோட இருந்திருக்கேன். ஒரு நொடி கூட என்கிட்ட அசம்பாவிதமா நடந்துக்கல்லே. அதனாலேதான்....

சன்னதியைவிட்டுத் திரும்பியதும் மல்லிக் மேலே நோக்கிஅவளைப் பார்த்துக் கொண்டிருந்தான். ஏன் இவ்வளவு சோர்ந்திருக்கிறான்? ஒவ்வொரு படியாக இறங்கினாள். கடைசிப் படியில் நிற்க, அவன் முதலில் உட்கார, அவளும் உட்கார்ந்தாள்.

—களைப்பா இருக்கீங்க... என்றாள், குரலில் அக்கறை துளும்ப.

—ஏமாத்தமா இருக்கு சம்பகா!

—எது?

—ஜூலி கிடைக்காமல் போனது...

இரக்கமுடன் பார்த்தாள். —இனிமே பிரயோசனமே இல்லையா?

—சந்தேகம்தான் எனக்கு.

—அவர் என்ன சொல்றார்?

—ராம்சந்தா?

—ஆமாம்.

—முயற்சி இன்னும் பண்ணணும்கிறார்.

—எப்படி முடியும்?

—கடலுக்குள்ளே முக்குளிச்சுப் பார்க்கணும் கிறார்.

—ஐயோ!

ஆச்சரியத்தில் கண்களை விரித்தாள் அவள். —நீங்களா முக்குளிப்பீங்க?

—நான் மட்டுமில்லே! அவரும்கூட! முடிஞ்சால் உனக்கும் கத்துக் கொடுக்கணுங்கறார்.

—முக்குளிக்கவா?

—ஆமாம்.

அச்சோ என்று கண்ணில் ஒரு ஆச்சரியம். வாய் சின்னதாகத் திறந்தது.

—நீஞ்சுவியா நீ?

—நீஞ்சத் தெரியும். இந்தக் கிராமத்திலே எல்லாருக்கும் தெரியும்.

—அதுவே பெரிசு. இப்போ ராம்சந்த் மெட்ராஸ் போயிருக்கார். வந்ததும் நமக்குப் பாடம் ஆரம்பமாகும். பயமா?

—பயமில்லே! ஆபத்து இல்லே?

—ஆபத்துத்தான். ஆனா வாழ்க்கையிலே எதிலேதான் ஆபத்து இல்லே?...

அவள் மௌனமானாள்.

....ஆபத்திலே இறங்கி, சாகசம் பண்ணினாத்தான் பெரிய லட்சியங்களைச் சாதிக்கலாம். ராம்சந்த்தைப் பாரு. நம்மை மாதிரி இருந்தவர். பணத்திலே மிதக்கிறார்.

—நீங்க ரெண்டு பேருந்தான் இருக்கீங்களே! நானும் முக்குளிக்கணுமா?



''வண்டிங்களைச் சாராயத்திலே ஓட்டப்போறாங்களாம்! ஆண்டவனே, என்னை அடுத்த ஜன்மத்திலே லாரியாகப் பொறக்க வெச்சுடு!''

—டார்ன் போடணும் சம்பகா! வெளிலேர்ந்து ஆளை அமர்த்தலாம். ஆனா இது எவ்வளவு ரகசியமான விஷயம்!

அவள் கண்கள் வளரும் இருட்டைப் பார்த்திருந்தன. விரல்கள் படிமீது ஸரிகம வாசித்தன.

—சரி.

டைவர்கள் மேலே கொண்டு வந்தது மதுபுட்டிகள். கழுத்து நீண்டு, வயிறு பருத்திருந்தன. சீல் இன்னும் கிலம் ஆகவில்லை. கருநீலத் திரவம் உள்ளே தாலாடியது.

வொய்ட்டும், லாரன்ஸும் ஆளுக்கொரு பாட்டில் எடுத்தார்கள்.

முகத்தில் மகிழ்ச்சி வந்தது. ஆனால் எதிர்பார்த்த பரவசம் வரவில்லை.

—இதுதான் கண்டுபிடிப்பா? என்றார் டார்வின் ஏளனத்துடன்.

– இதுவும் கண்டுபிடிப்புத்தான். இது ஜூலியாகவும் இருக்கலாம்; என்றார் வொய்ட்.

வழக்கமான முறையில் வாக்கு வாதம் அவர்களைத் தொடர்ந்தது.

லாரென்ஸ் அவர்களைச் சமாதானப்படுத்த மிகவும் சிரமப்பட்டார்.

நாள் முழுதும் டைவர்கள் சிறு சிறு சாமான்களை மேலே அனுப்பினார்கள். அரித்துப்போன வாள்கள், காலிப் பெட்டிகள், குண்டுகள், தளவாடங்கள்...

சென்ற நூற்றாண்டு யுத்தக் கப்பல் அது என்று அவர்கள் அனுமானிக்க வெகு நேரம் ஆகவில்லை.

வொய்ட்டுக்கு கஷ்டமாக இருந்தது.

லாரென்சும் அவரும் தனியாக விவாதித்தார்கள்.

வெறும் கடலை இப்படி உத்தேசமாகக் கோதுவதில் பயனில்லை என்று லாரென்ஸ் தெரிவித்தார்.

வொய்ட்டுக்கு அது சரியாகத்தோன்றியது.

அவருக்கு இப்போது தம் முயற்சியில் ஒரு வெறுப்புத் தோன்றியிருந்தது.

இரவு முழுதும் யோசித்தார். மல்லிக்கின் நினைவும், அவன் ராமநாதபுரம் கடற்கரைக்குப் போயிருப்பதாக அவனது நண்பன் சொன்ன செய்தியும் நினைவுக்கு வந்தன.

இப்போது அந்தச் செய்தி முற்றிலும் புதிய கோணத்தில் தெரிந்தது. —ஒருவேளை அவன் ஜூலியைத் தேடித்தான் போயிருப்பானோ?

மறுநாள் அவர் லாஞ்சில் கரை நோக்கி விரைந்தார். (தொடரும்)

*'மூன்று டஜன்களுக்கு அதிகமான கப்பல்களும் ஆயிரம் மனிதர்களும் ஐந்து மாதங்களாகக் கடலுக்கடியில் கோதி எடுத்த வண்ணம் இருக்கிறார்கள். 8400 அடி ஆழமுள்ள இந்தப் பகுதியில் தான் த்ரெஷ்ஷர் மூழ்கியிருக்கிறது!*

*அமெரிக்கக் கப்பற்படை காரியதரிசியின் அறிக்கை, (1963) (த்ரெஷ்ஷர் நியூக்ளியர் சப்மரின், கடலுக்குள் மறைந்ததை ஒட்டி எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பிரசித்தமானவை)*

## 18

**பால்மர்ஸன் கண்களுக்குப் பளிச்சிட்டது என்ன?**

**படகை நேரே கரையோரம் செலுத்திச் சென்றார்.**

**அலை அலம்ப, படகு, கரையில் மோதியது**

**பாதி உயிரில் முனகும் எலிஸாவை எடுத்துக் கரையில் படுக்க வைத்தார்.**

**அடுத்தது தம் மகனின் சவப் பெட்டியை எடுத்தார்.**

**கடைசியில் தாம் கொண்டுவந்த பெட்டியையும் அப்புறப் படுத்தினார்.**

**எல்லாம் கரை ஏறியதும் அந்தப் படகை முத்தமிட்டார்**

**மண்டியிட்டுக் கோபுரத்தை நோக்கி நன்றி செலுத்தினார்.**

**கோவிலில் கர்ப்பக்கிருகத்தில் வைக்கப்பட்ட அகண்ட ஜோதிதான் கடலுள் வீசி அவர் கண்ணுக்குப் பட்டது என்பது பால்மர்ஸனுக்குத் தெரியாது.**

**இனி தெரியவும் போவதில்லை.**

**அவர் மட்டும் அந்த வெளிச்சத்தைத் தெய்வ அருள் என்று நம்பினார்.**

**கரையின் மேலே மேலே ஏறி, மெள்ள எலிஸாவை ஒரு மேட்டில் படுக்க வைத்தார்.**

**அடுத்து இரு பெட்டிகளை மேலே ஒவ்வொன்றாகக் கொண்டு போய்ப் பார்த்தபோது,**

**எலிஸாவின் கண்கள் சொருகிக் கொண்டிருந்தன.**

**அருகில் உட்கார்ந்தார். அவள் தலையைத் தம் மடி மீது எடுத்து வைத்தார்.**

**'எலிஸா! என்று தீனமாக அவர் அழைக்கும் வேளையில், அவள் கண்களை மூடினாள்.**

மூக்கையும் கண்ணையும் மூடி மாஸ்க் போட்டு ஸ்நார்கல் சொருகி, காலில் செதில் சொருகி, நீர் மட்டத்திற்குச் சற்றே அடியில் நீந்தும்போது ஒரே சிரிப்பும் கும்மாளமும் நுரைத்தன.

ராம்சந்த் வாத்தியாராகிக் கற்றுக் கொடுத்துக் கொண்டிருந்தான்.

தன்னுடைய அனுபவத்தை விட சம்பகா நீந்தும் பாடங்களை ஏற்றுக் கொள்வது ஒரே வேடிக்கையாக இருந்தது மல்லிக்கிற்கு.

அவள் அந்த ஸ்விம் ஸூட்டுக்குள் இறங்கி, தனது பெரும்பாலான தேகத்தை வெளிப்புறத்துக்குத் திறந்தபோது, மாஸ்கில் முகத்தை மறைத்துக் கண்ணைக் கொட்ட விழித்தபோது,

காலை பலமாக அடித்து, செதிலைத் தண்ணீரோடு விட்டபோது,

ஸ்நார்க்கல் குழாய் வழியாக மூச்சு விடுவதில் தண்ணீரைக் குடித்துத் தும்மிய போது,

எல்லாமே அவர்கள் இருவருக்கும் அழகான விநோதங்கள்.

கனிநாகலாபுரம் சமுத்திர ஓரங்களில் அலை அதிகமில்லாத உப்பங்கழிகளில் அவர்கள் முதல் பாடங்களைக் கற்றுக் கொண்டார்கள்.

ஏற்கனவே நீந்தத் தெரிந்ததால் புதுப் பாடங்கள் பூப்போல எளிதாக வந்தன.

ஆழமில்லா இடங்களில் நீந்திய பிறகு ஆழங்களைத் தேடிச் சென்றார்கள்.

சம்பகாவுக்கு மேலும் மேலும் புதிய உலகங்கள் திறந்து கொண்டிருந்தன.

முதலில் ஆரம்பக் கூச்சங்கள் போன பிறகு; இரண்டு துண்டு நீச்சல் துணிகளைத் தரித்து, மீதி உடம்புகளை வெளிக் காட்டுவது எவ்வளவு சுலபமாகப் போய்விட்டது!

எவ்வளவு இயல்பாகவும் போய்விட்டது?

மாஸ்க் போட்டுக் கண்ணாடி வழியாகத் தண்ணீருக்குள் பார்த்ததும் சின்ன மீன்கள் கூட எவ்வளவு பருமனாகத் தெரிந்தன!



எவ்வளவு அருகில் தெரிந்தன! கையை நீட்டிப் பிடிக்கப் போனல்தான் அவை எட்டத்தில் இருப்பது புலனாகியது.

—குட், சம்பகா! நீ பெரிய டைவர் ஆகி விடுவே! என்றான் ராம்சந்த் ஒரு நாள்.

எல்லோரும் கடற் கரையில் நீண்ட நேர நீச்சலுக்குப் பிறகு பிஸ்கட்டும் காப்பியும் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள்.

—நாம்ப எப்போ காரியத்தில் இறங்கறோம்? என்றாள் சம்பகா!

—அவ்வளவு தூரம் வந்தாச்சா? நாளைக்கு இறங்கறோம்; என்றான் ராம்சந்த்.

டம்ளரை இரண்டு மடக்கில் அரவாக்கி வைத்துவிட்டு, —ஆனு சம்பகா? நீ முதல்லே போகல்லே! நாங்க ரெண்டு பேரும் போறோம். நீ படகில் இருந்து வெளிப்புறத்தைக் கவனிச்சுக்கணும்.

—ஓ, ஈஸி! என்றாள் சம்பகா.

சிரித்தான் ராம்சந்த்.

—நங்கூரம் பிடிச்சுக்கிட்டிருக்கிற வரைக்கும் எல்லாம் ஈஸிதான்.

—பிடிப்பு விட்டுடுமா? என்று கலவரத்தோடு கேட்டாள் சம்பகா.

—சங்கிலி அறுந்து போச்சுன்னு?

—போகுமா!

—போகும்.... பயப்படாதே! நான் என்ன செய்யணும்னு எல்லாம் சொல்லித் தரேன்.

மறு நாள் காலையில் படகு ரூபாவில் ஏறி அந்த 79.51 தீர்க்கத்தை அடைந்து நங்கூரம் பாய்ச்சினார்கள்.

எக்கோ ஸவுண்டரில் பார்த்து, ஆழம் அறுபத்திரண்டு அடி என்றான் ராம்சந்த்.

அவளும் மல்லிக்கும் ஒரு முழு நீள டைவிங் சூட் அணிந்து முதுகில் அக்வாலங்குகளைத் தரித்திருந்தார்கள்.

—இறங்கலாமா? என்று அவசரத்துடன் கேட்டான் மல்லிக்.

—இன்னும் ஒரு விஷயம் பாக்கி, என்றார் ராம்சந்த்.

—என்னது? என்றான் மல்லிக்.

—தண்ணிக்குள் நாம்ப பேசறது எப்படி?

—பேசணுமா?

—சந்தர்ப்பம் வரும்! ஒரு ஆபத்து ஒரு அவசரம்!...

—அதுக்கு ஏதாவது கருவி இருக்கா?

—கருவி நம்ப கைதான். இதப் பாரு. கைக் கட்டை விரலை மேலே நோக்கிக் காண்பிச்சா மேலே போப்போறேன்னு அர்த்தம். கீழே நோக்கிக் காண்பிச்சா கீழே! கட்டை விரலை மட்டும் அகற்றி மணிக்கட்டையை அப்படியும் இப்படியும் ஆட்டினு ஏதோ சரியில்லேன்னு அர்த்தம். முஷ்டி மடக்கி புஜத்தை ஆட்டினு எனக்கு உதவி தேவைன்னு அர்த்தம்...

சிக்னல் செய்து பழகிய பிறகு, சரி, இறங்க வேண்டியதுதான் என்றான் ராம்சந்த்.

கடவுளைத் தியானித்து, டைவிங் பிளாட்பாரத்துக்குச் சென்று ஏணியில் இறங்கி நீருள் அமிழ்ந்தான். அவன் மேலே கொப்புளங்களாக வந்து சிதறின.

மல்லிக் அந்தப் பரந்த சமுத்திரத்தை ஒரு முறை பார்த்தான். நரம்புகளில் சில்லிடும் உணர்ச்சி பரவியது.

அலைகளின் நீல ஒளிகள் அவனை அழைப்பதாக இருந்தாலும், அவற்றின் ஆழங்களுக்குள் எண்ணற்ற ஆபத்துக்கள் மலிந்திருக்கும் என்று யோசித்தான் அவன்.

வானம் ஒரு வெண் பச்சை விரிப்பு. கடலோ பரந்து போய் பூமி விளிம்புகளைக் காட்டுவது போல் வட்டம் போடுகிறது. அதில் ஒரு சின்ன நீர் வாத்துப் போல் படகு மிதப்பது, மனித இனத்தின் பலவீனத்தையும், இயற்கையின் மகத்தான சக்தியையும் எவ்வளவு தெளிவாகக் காட்டியது.

—இறங்கலியா? என்றாள் சம்பகா.

மல்லிக் திரும்பியபோது அவள் அவனைப் பார்த்து புன்னகை செய்தாள்.

ஆச்சரியத்தில் —ஏது, நீயே இறங்கிடுவே போல இருக்கே! என்றான் மல்லிக்.

—நிச்சயம் இறங்குவேன். கடலுக்குள்ளே வந்து பார்க்கணும் போல இருக்கு! கடலுக்குள் ஜாலியை நானே முதலில் பார்க்கணும் போல இருக்கு. நீங்கதான் என்னை வரவேண்டாம் என்கிறீங்க!

மல்லிக்கிற்கு அவள் ஊக்கமான பேச்சு மகிழ்ச்சி அளித்தது. —அடுத்த முறை நீயும் வரலாம், சம்பகா! என்று சொல்லி, பிளாட்பாரம் சென்று இரும்பு ஏணி வழியாகக் கீழே இறங்கினன்.

அமிழு முன் படகின் விலாப்புறத்தைப் பிடித்து மீண்டும் ஒரு முறை சம்பகாவைப் பார்த்தான்.

—குட்லக் என்றாள் அவள்.

நீருள் அந்தக் கணமே அமிழ்ந்தான் அவன்.

சில அடிகள் தூரம் வரை சம்பகாவின் முகம் அவனுடன் மிதந்து வந்தது.

பிறகு எல்லாம் பச்சை நிறமாக மாறியது.

அந்தத் திடீர் நிசப்தம் அவனைப் பிரமிக்க வைத்தது. கிட்டத்தட்ட சமுத்திரம் ஒரு மௌனக் கடல் என்பது தெரிந்தது.

ஓசைகள் சீக்கிரம் ஒடுங்கிவிடுகின்றன.

---

''அடுத்தபடியாகக் குடும்ப நலம் பற்றி கு. க. அதிகாரி குசேலர் அவர்கள் இரண்டொரு வார்த்தை சொல்வார். ஒரிரு வார்த்தைகளே போதுமே என்று நிறுத்திக் கொள்வார். இரண்டு வார்த்தைகளுக்குமேல் பேசவே மாட்டார் என்று கூறி அவரைப் பேச அழைக்கிறேன்!''



## நேர்மையைப் பருமை செய்த...



நுண்மையான ஒன்றே பருமனாக முடியுமா?

முடியும் என்கிறான் கம்பன்!

'நேர்மையைப் பருமை செய்த நிறை நறுங் கூந்தல் நீத்தம்' என்று சீதையின் அளக பாரத்தை அனுமனுக்கு வர்ணிக்கிறான் ராமன். அது மட்டுமா?

அடாடா! இப்படி யெல்லாமும் பெண்களின் கேசத்தை வர்ணிக்க முடியுமா என்று அதிசயிக்க வைக்கும் விதமாக நிறையவே சொல்கிறான்!

காரினைக் கழித்துக் கட்டி, கள்ளினோடு ஆவி காட்டி
பேர் இருட் பிழம்பு தோய்த்து, நெறி உறீஇ, பிறங்கு கற்றைச்
சோர்குழல் தொகுதி என்று சும்மை செய்தனையது அம்மா!—
நேர்மையைப் பருமை செய்த நிறைநறுங் கூந்தல் நீத்தம்!

[கழித்து - வெட்டி; ஆவி - நறும்புகை; நெறிவு - வளைவு; நேர்மை - நுண்மை]

தலைக்கு ஊற்றிக் குளித்துவிட்டு, மங்கலகரமான மஞ்சள்நிறத்தில் எடுப்பான சேலை உடுத்தி, கூந்தலை ஆற்றியபடி அமர்ந்திருக்கும் குமாரி ஸ்ரீகிதாவை இவ்விதழ் மேலட்டையில் பார்க்கும்போது, கம்பனை அறிந்தோர்க்கு மேற்படி கவிதை நினைவு வருவது இயல்பேயல்லவா?

வண்ணப்படம் எடுத்தவர்: என். பிரபாகர்

---

வெளி உலக வெளிச்சம் கூட நீரில் வடிகட்டப்பட்டு, சன்னமான கனவுகள் போல் உள்ளே ஆடின.

அது அதிசயமாக இருந்தது.

பத்தாவது அடியில் அவனுக்காக ராம்சந்த் காத்திருந்தான்.

—ஓ.கே. என்பதற்காகச் சமிக்ஞை செய்தான் ராம்சந்த்.

விரலில் ஓ வடிவம் காட்டி ஒகே என்றான் மல்லிக்.

இறங்க இறங்கத் திகில். உடம்பில் பரபரப்பு. செதிலை மெள்ளத் துழாவி ராம்சந்த் சொன்ன பாடத்தை நினைவில் வைத்தவாறே இறங்கினான்.

கடல் இப்போது கரும் பச்சையாகத் தெரிந்தது. கடல் பாசிகள், மெல்லிய சவ்வு போன்ற உயிரினங்கள் எங்கும் மிதந்தன. பார்வையின் தூரம் பல அடிகளுக்கு மேல் தெரியவில்லை.

ராம்சந்த் நின்றபோது, மல்லிக் தன் கையில் கட்டியிருந்த டெப்த் காஜைப் பார்த்தான். 20 அடி காண்பித்தது. மெள்ள கடல் ஆழத்தின் அழுத்தம் அவன் உடலை லேசாகத் துவட்டி விடுவதை உணர்ந்தான். அண்டர் வாட்டர் வாட்சைப்பார்த்தபோது, பத்தே கால் மணியை மினு மினுத்துக் காட்டியது.

ராம்சந்த் யோசிப்பது போல் நின்றான்.

பிறகு டார்ச் அவன் கையில் மின்ன, நாலா திசைகளையும் வெளிச்சம் பாய்ச்சிப் பார்த்தான்.

அங்கே என்று கையைக் காட்டி இருவரும் செதிலடித்துக் கீழே சென்றார்கள்.

முதுகில் கட்டிய 1800 லிட்டர் ஸிலிண்டர் காற்றை அவர்களுக்குத் தகுந்த அழுத்தத்தில் வழங்கிக் கொண்டிருக்க வாயால் மூச்சு விட்டு, நிறையக் கொப்புளங்களை விடுதலை செய்தவாறே இறங்கினான்.

நாற்பதாவது அடி தாண்டும் போது, உள்ளே மேலும் இருட்டாகியது.

தூக்கத்துள், அல்லது சொப்பனத்துள் இறங்குவது போல் இருந்தது.

மஞ்சள் தலை மீன்கள் கூட்டங்களாக அவர்களைக் கடந்து போயின.

ஆக்டோபஸ்கள் கையில் துழாவிச் சென்றன.

பிளாங்க்டன் உயிரினங்கள் எங்கும் பரவியிருந்தன.

இப்போதுதான் மல்லிக்கிற்குப் பயம் ஏற்பட்டது. அறுபத்திரண்டு அடி ஆழம் என்றானே, ராம்சந்த்! அதள பாதாளத்துக்குப் போவது போல் இருக்கிறதே! தரையே வராதா? ஒருவேளை கடல் களுக்குத் தரையே கிடையாதா?

திடீரென்று ராம்சந்த் பிடித்து வந்த டார்ச் அணைய, அதை அடுத்து அதிர்ச்சியான ஒரு அலை அவனை வந்து முட்டுவது தெரிந்தது.

என்னதாக இருக்கும் என்று நினைக்கும் போது,

அவன் தோள்புறத்தில் அடி ஒன்று விழுந்தது.

**ச**ம்பந்தசாமி அந்த லாஞ்சில் ஏறியதும் அது புறப்பட்டது. கனிநாகலாபுரம் உப்பங் கழியின் வாய்க்கால் ஒன்றில், கவிந்து விழும் மரக் கிளைகளின் மறைவில் இருந்தது அந்தப் படகு.

பட பட என்று சத்தத்துடன் கால்வாயில் பெரிய வரிகளை இட்டுக் கொண்டு அது செல்ல,

—எங்கேடா, எங்கே பார்த்தீங்க? என்று அதட்டலைப் போட்டார் சம்பந்தசாமி.

—கடல்லே ஸார், காலைலே பார்த்தோம். லாஞ்ச்தான். இப்படி நம்ப கரைப் பக்கம் வந்து போச்சு.

—யாரு? என்று நெற்றியில் கையை வைத்தார் சம்பந்தசாமி. —மஸ்காட் ஆளா இருப்பானா? சொல்லாமப் புரியாம வர மாட்டானே! வேறே எவனா இருக்கும்?

அவரது லாஞ்ச் சின்னது. கடத்தலுக்கு அதிகம் உபயோகப்படுவது. கரையில் ஏற்றி, படுதாவால் மூடினால், அது மறைந்துவிடும்.

கால்வாய் உப்பங்கழியில் கொண்டு சேர்த்தது. கழியின் கிழக்குப்புறம் வெள்ளிச் செதில்களாகத் தகதகத்தது.

சம்பந்தசாமி ஒயின் பிரியர். ஷம்பைன் கையில் வைத்துக் கொண்டு அந்த உப்பங்கழியில் கோடு கிழித்தவாறு பிரயாணமானார்.

லாஞ்ச் போன வழி வெள்ளை மினுப்புடன் கொந்தளித்தது.

சீக்கிரம் கடலை அணுகினார்கள். வடக்கே திரும்பினார்கள். இரண்டு மைல் போனதும் அவருக்குப் பொறுமை போதவில்லை. —எங்கேடா, தடி ராமன்களா? என்றார்.

அவர்கள் இதோ, இதோ என்று சமாதானம் சொல்ல,

அவரும் திட்டிக் கொண்டே ஷம்பைனைக் குடிக்க,

கடைசியில் அதோ என்று ஒரு அடியாள் பரபரத்துச் சுட்டிக் காட்டினான்.

கிழக்கு தூரத்தில் தெரிவது என்ன? வெள்ளைப் பறவை போலே! படகா! வேறு ஏதாவது?

சம்பந்தசாமி டம்ளரைக் கீழே வைத்தார். தோளில் தொங்கிய பைனாகுலர்ஸை எடுத்தார். கண்களில் அழுத்தமாகப் பொருத்திக் கீழ்த் திசையைப் பார்த்தார்.

பைனாகுலர்ஸை வைத்தவர் வைத்தவர் தான். அவர் பார்வையை அது உறிஞ்சி விட்டது போல் தோன்றியது. ஏகாக்கிரமாய் அப்படியே நிலைகுத்தி நின்றார்.

பிறகு திடீரென்று கருவியைக் கையில் எடுத்து, —நம்ப அர்ச்சகர் பொண்ணு நிற்கிறாப் போல இருக்கு! என்றார்.

—எங்கே, என்றான் அடியாள்.

—அந்த லாஞ்சிலே.

—லாஞ்ச்தானா?

—ஆமாம், யாட்!

—அதுலே எப்படி அந்தப் பொண்ணு?

—அந்தப் பெண்தானா?

திரும்பவும் கருவியைக் கண்ணில் பொருத்திய சம்பந்தசாமி —நிச்சயம் அவள்தான் என்றார்.

—எவனாவது தள்ளிக்கிட்டுப் போய்ட்டானா?

—அந்தப் பொண்ணுக்கு எப்படி இவ்வளவு நாகரிகம் வந்துச்சு?

—அதானே கேக்கறேன்!

—நேரே அங்கே விடு.

அலைகள் நுனிகளில் ஏறி இறங்கி லாஞ்ச் ஒரு ஜந்துபோல் தத்தளித்துச் சென்றது.

(தொடரும்)

---

# பூமி ஒரு மினி!

நட்சத்திர மண்டலம்-அம்புக்குறி சூரிய மண்டலம் இருக்கும் இடத்தைச் சுட்டுகிறது.



- சின்ன வடிவத்தை மினி என்கிறோம்.
- விரிந்து பரந்த இந்த உலகமே ஒரு மினிதான், நவகிரகங்களை உள்ளடக்கிய சூரிய மண்டலத்துடன் ஒப்பிடும் போது.
- சூரிய மண்டலமே மினிதான், சூரியமண்டலத்தை உள்ளடக்கிய நட்சத்திர மண்டலத்தை நோக்கும் போது.
- சூரியனைப் போன்று சிறிதும் பெரிதுமான சுமார் 100,000 மிலியன் நட்சத்திரங்கள் நட்சத்திர மண்டலத்தில் உள்ளன.
- சூரியனை மையமாகக் கொண்டு கிரகங்கள் அதனைச் சுற்றி வருவது போல் நட்சத்திர மண்டலத்தின் ஒரு மையத்தைச் சூரியன் உள்பட எல்லா நட்சத்திரங்களும் சுற்றி வருகின்றன.
- பூமியின் விட்டம் 7926 மைல்; சூரியனின் விட்டம் 860,000 மைல். நட்சத்திர மண்டலத்தின் விட்டம் 100,000 ஒளி ஆண்டுகள். ஓர் ஒளி ஆண்டு என்பது 5,880,000 மிலியன் மைல்கள்!
- இந்த நட்சத்திர மண்டலம் தவிர இதற்கும் அப்பால் வெளிப்புற நட்சத்திர மண்டலங்கள் உள்ளன. சூரியனைக் கிரகங்கள் சுற்றி வருவது போல நமது உள் நட்சத்திர மண்டலத்தை வெளி நட்சத்திர மண்டலங்கள் சுற்றி வருவதாகக் கருதலாம். இவை சுமார் 200,000 ஒளி ஆண்டுகளுக்கு அப்பால் உள்ளன.
- இதற்கும் அப்பால் 2 மிலியன் ஒளியாண்டு தூரத்தில் உள்ள நட்சத்திர மண்டலங்களை விஞ்ஞானிகள் அறிவர்.
- விஞ்ஞானம் கண்டுபிடித்துள்ள மிகத் தொலைவில் உள்ள பொருள் 3C-295 என்ற குறியீட்டை பெற்றுள்ளது. இது 5000 மிலியன் ஒளி யாண்டுகளுக்கு அப்பால் உள்ளது!
- இவ்வளவையும் ஒரு நியதியுடன் இயங்கச் செய்கிற இறைவன் சிருஷ்டியில் உலகம் ஒரு மினிதானே?

மே 18
மின்மினி
கல்கி சிறப்பிதழ்
ஏராளமான சுவையான மினி செய்திகள், கதைகள், கட்டுரைகள், நகைச்சுவை அம்சங்களைத் தாங்கி வெளிவருகிறது!



# கடலுக்குள் ஜூலி

புஷ்பா தங்கதுரை

*சுறுமீன்கள் ஆபத்தானவை. அவை பெரும்பாலும் முக்குளிப்பவர்களைப் புறக் கணிக்கின்றன. ஆனால் இதை நம்பி யாரும் ஏமாறக் கூடாது.*

*'மீனின் நண்பர்களும் விரோதிகளும்' கட்டுரையில்*
*—ரிச்சர்ட் போவுட்*

## 19

எலிசா நிம்மதியாக கண் மூடியிருந்தாள், அருமை மகன் காஃபினில் உறங்கிக் கொண்டிருந்தான். ஒரு அன்னிய பூமியின் இயற்கை இன்னும் சீற்றம் தணியாது விரோதமாக இருந்தது.

பால்மர்ஸனின் உடல் அநியாயமாகச் சோர்ந்து விட்டது.

கண்களில் நூல்கள் பறந்தன. செவிகளில் எத்தனையோ வித ஊதல்கள் கேட்டன.

இனி அவரால் ஒரு அடி எடுத்து வைக்க முடியாது.

உதவி இங்கே, இந்த இடத்தில் அவரைத் தேடி வந்தால் உண்டு. வராவிடினும் பரவாயில்லை.

அவரது ஜூலி போய்விட்டாள். அவர் அருமையாக நேசித்த மாலுமிகள் மறைந்து விட்டார்கள். ஒரே நண்பர் எஸ்டன் போய்விட்டார்.

உயிர் மைந்தன் போய்விட்டான். அவனைத் தொடர்ந்து உயிர் மனைவி போய் விட்டாள்.

இனி... இவர்கள் எல்லோரையும் துறந்து அபகீர்த்தியோடு இங்கிலாந்து திரும்ப முடியுமா?

ஒரே ஒரு விஷயம்!

கப்பலில் என்ன சரக்கு வருகிறது என்பதை உயிர் நண்பன் எஸ்டனுக்குக் கூட சொல்லாது இருந்து விட்டார்.

அவர் மட்டும் தினம் ஸீல் இருக்கிறதா என்று அந்த செஸ்ட்களைத் தினமும் பார்வையிட்டு வந்தார்.

எஸ்டனோ, மற்றவர்களோ உயரிய ஒழுக்கம் படைத்தவர்கள். அவரிடம் அந்த செஸ்டில் என்ன இருக்கிறது, கப்பல் ஏன் இவ்வளவு கனக்கிறது என்று கேட்கவே இல்லை.

இப்போது விலையுயர்ந்த பொன் வெள்ளிகளோடு ஜூலி கடலுக்குள் போய் விட்டாள்.

இதை உலகுக்கு எப்படித் தெரிவிப்பது?

அப்படித் தெரிவிக்கும் வரை அவருக்கு உயிர் இருக்குமா?

ஹோ ஹோ ஹோய் என்று கத்தினார். யாராவது குரல் கேட்டு வருவார்களா?

முதல் பல விநாடிகளுக்கு மல்லிக்கிற்கு எதுவும் தோன்றவில்லை. கடலில் எண்ணிக்கையில்லா ஆபத்துக்கள் வரும் என்று ராம்சந்த் எச்சரித்திருந்தான்.

அநேகமாக அவைகளை வரிசைப்படுத்தி, விவரமாகக் கூறியிருந்தான்.

அங்கு நடந்த திடீர் இயக்கங்களைப் பார்த்தால், அது சுறுவாக இருக்கும் என்று நினைத்தான்.

வலது காலில் சொருகியிருந்த கத்தியை உருவினான்.

எச்சரிக்கையோடு பல திசைகளையும் பார்த்தான்.

சுறுவைக் கத்தியால் கொன்றுவிட முடியாது என்று நிச்சயம் தெரியும்.

ஒரு தாற்காலிகப் பாதுகாப்புக்கு அது என்று கத்தி அவனிடம் கொடுக்கப்பட்டிருந்தது.

கடல் அடியிலிருந்து அப்போது தூசியும், புழுதியும் கிளம்பின. ஒரு தூசிக் காற்று வீசினாற்போல.

பார்வை தெரியாது.

கடல் தரையில் நூற்றாண்டு காலமாக வந்து சேரும் புழுதிகள் அவை!

லேசுக் கொந்தலில் கூட எங்கும் தொங்குவது போல் நிறைந்துவிடும்.

சீராவதற்கு நாழியாகும். நாள் கணக்குகள் கூட ஆகும்.

தனது கருவிகள் எல்லாம் பழுதில்லாமல் இருக்கிறதா என்று பார்த்து,

மல்லிக் ஒரே இடத்திலேயே நிலைத்து நிற்க, மனம் பதைத்தது.

மீன் இனங்கள் வழுவி ஓடின. சில அவன் யார் என்று வேடிக்கை பார்த்தன. சில அவன் முன்னால் கொஞ்சம் விளையாடி அப்பாற் போயின. மிகச் சில பயந்து தூரத்தில் ஒதுங்கியே ஓடின.

சப்தமில்லை. சில அடி கூட வெளிச்சம் இல்லை.

இருட்டால் ஏற்படும் நிக்டோஃபோபியா ஏற்பட மெள்ள அவன் முதுகுத்தண்டில் பீதி ஊறத் தொடங்கியது.

அதே நேரம் எந்த இயக்கமும் செய்யாததால், அவனை அறியாமல் அவன் உடல் நீருக்குள் மெள்ள மெள்ள அமிழ்ந்து தரை தட்டுவதைப் பார்த்ததும் திடுக்கிட்டான்.

கடல் தரையா இது?

கடலின் அடிப் பாகமா?

மனம் சிலிர்ப்புக் கொள்ள, அதே அளவு பீதியும் கொண்டது. காலை அழுத்த அது மணல் போல இருந்தது.

அறுபதடி நீர் வழியாக சூரிய கிரணம் வடிக்கப்பட்டுவிட,

கீழே மெள்ள ஒரு ஐந்து நெளிவது போன்ற வெளிச்சம் கண்கட்டிவிளையாடியது.

மணியைப் பார்த்தான். இன்னும் 15 நிமிடம் கீழே தங்கலாம். பிறகு மேலே ஏற வேண்டியதுதான். அக்வாலங்கில் காற்று அரவாகிவிடும்.

அது என்ன பிசாசா? நீள அங்கி தரித்து யாரோ எழுந்திருப்பது போல் எழுந்திருக்கிறார்களே; அது யார்? அக்டோபஸ்ஸா!

மெள்ள தனது பல திசைக் கால்களையும் நீட்டி, அது நகர அக்டோபஸ் என்று உறுதியாகியது.

அண்டர் வாட்டர் டார்ச்சை எடுத்துப் பளிச்சிட,

அக்டோபஸ் வழுவி ஓடியது.

அதே நேரம் நீரில் பெரும் அசைவு. மீண்டும் சுறுவாக இருக்குமோ என்று நினைக்கும்போது, நீர்க் கருமையிலிருந்து ராம்சந்த் உற்பத்தியானான். ஓகே சைகை காண்பிக்க, மல்லிக்கும் ஓகே காண்பித்தான்.

மேலே போவோம் என்று அடுத்த சைகை ராம்சந்த் கொடுத்தான்.

50, 40, 30, 20, 10 அடிகளில் வெவ்வேறு கால அளவு நின்று 45 நிமிடத்தில் மேல்பரப்பை அடைந்தார்கள்.

படகில் ஏறி ஆசுவாசமாகிய பிறகு அவர்கள் அந்தச் சுறுவைப் பற்றியும் அதனிடமிருந்து தப்பியது பற்றியும் ஆச்சரியமோடு பேசினார்கள்.

**ச**ம்பந்தசாமியின்' லாஞ்ச அப்போது தூரத்தில் நின்றது.

பைனகுலர்ஸை மாட்டிப் பார்க்க — டே, டே, டே இந்தப் பிள்ளையாண்டான் என்று சொல்ல —யாரு? யாரு! என்று அடியாட்கஅ வினவினார்கள்.

—மல்லிக்குன்னு ஒருத்தன் நம்பகிட்டே வந்து பிரிட்டிஷ் கப்பலைப் பற்றிக் கேட்டானே!...

—அவனா?

—ஆமாம்!

—என்ன செய்யறான்?

—அவனும் இன்னொருத்தனும் தண்ணிக்குள்ளே போய்ட்டு வந்திருக்காங்க! —இந்தாப்பா! ஸௌத் வெஸ்ட் போ! ஸ்டெடியா ஃபிஷ்ஷிங் போறாப்பலே இருக்கணும். அவங்க சந்தேகப்படக் கூடாது.

படகைக் கண்ணுக்குத் தெரியாத தூரத்தில் தவிர்த்துவிட்ட பிறகு,

சம்பந்தசாமி, பைலட்டை நோக்கி—இடத்தைக் குறிச்சுக்கிட்டீங்களா மகாதேவ்! என்றார்.

மகாதேவ் கடற் படையிலிருந்து கழன்று வந்தவர். —பண்ணிக்கிட்டேன். 10.00 அட்சம் இருக்கும். 79.00 தீர்க்கம் இருக்கும்.

—ஓகே என்றார் சம்பந்தசாமி.

தென் கிழக்கில் வெகு தூரம் போய், பிறகு கரையோரமாக வடக்கு வந்து உப்பங்கழியில் கலந்து கரை சேர்ந்தார்கள்.

சம்பந்தசாமி தலை முழுவதும் திட்டங்களாக இருந்தன.

வீட்டுக்குப் போனதும் பீடாவை அழைத்து அந்தச் சார்ட்டை எடுத்து வரச் சொன்னார்.

பெரிய மேஜையில் விரித்து விளக்கைப் போட, ஹியர் லைஸ் என்ற எழுத்துக்களோடு சார்ட்டின் எல்லைகள் விரிவாகத் தெரிந்தன.

மட்கிய தாள். மட்கிய ரேகைகள். பொடிசான எழுத்துக்கள்.

10 டிகிரி அட்சத்தைத் தேடினார். கண்டுபிடித்தார். 79 தீர்க்கம் எங்கிருக்கிறது? இதுதானே!.... —மகாதேவ்! என்று இரைந்தார் அவர்.



மகாதேவ் வெள்ளைத் தொப்பியுடன் ஓடி வந்தார்.

—இதப் பார்த்தியா? 10.00 டிகிரியும் 79.51 டிகிரியும் வெட்டற எடத்திலேதான் பொத்தல்! இங்கேதான் அவங்க தேடிக்கிட்டிருக்காங்க! ஆமா... இந்த இடம் எப்படித் தெரிஞ்சுது!

கேள்வியை இழுத்த அவர் திரும்பி ரீடாவைப் பார்க்க, —ரீடா, இந்தச் சார்ட்டை யாராவது எடுத்தாங்களா?

(எடுக்கவில்லை)

—வேலைக்காரங்க யாராவது திருடி..

(வழியில்லை)

—நிச்சயமாச் சொல்றியா?

(நிச்சயமாக)

—அப்போ இந்தப் பசங்களுக்கு எப்படி இடம் தெரிஞ்சுது?

யோசித்தவாறே உட்கார்ந்து —மிஸ்டர் மகாதேவ்! என்றார்.

—எஸ் ஸார்!

—நிச்சயம் அந்த மூழ்கின கப்பலுக்குள்ளே என்னவோ இருக்கணும்!

—ஆமா, ஸார்!

—நாம்பளும் ரெண்டு நாள்லே தேடறோம்.

—ஓகே, ஸார்!

மகாதேவ் விடைபெற்றுப் போனார்.

**வொ**ய்ட் மீண்டும் அந்த மயிலாப்பூர் மாட வீதியில் புகுந்து, சந்துகளைத் தாண்டி, மல்லிக்கின் அறையைத் தேடி விசாரிக்க,

அந்தப் பக்கத்து அறை நண்பன் —மல்லிக் கனிநாகலாபுரம் போயிருக்கான், ஸார்! என்று ரேடியோ மாதிரி கூவினான்.

—கெனி நாக்லாபூர்? என்றார் வொய்ட்.

—நாகலாபுரம் என்றான் நண்பன் பாதி ஹாஸ்யமாக.

வொய்ட் ஒரு தேசப் படத்தை எடுத்து விரித்து வைக்க நண்பன் சாங்கோபாங்கமாகக் கனிநாகலாபுரத்தைக் காட்ட,

அடுத்த நாள் அந்தக் குக்கிராமத்தில் தூசி படிந்த முகத்தோடு நின்றார் வொய்ட்.

மல்லிக், மல்லிக் என்று கேட்டதும், ஊரில் ஆங்கிலம் தெரிந்தவர்கள் அதிகம் இல்லாததால் சம்பந்தசாமி பங்களாவைக் காண்பித்து விட்டார்கள்.

சம்பந்தசாமியைச் சந்தித்துப் பேசத் தொடங்கியதும் ஒருவருக்கொருவர் ஒரு முக்கிய விஷயத்தை மறைத்துப் பேசுகிறோம் என்பது இருவர்க்கும் தெளிவாகி விட்டது.

இருந்தாலும் ஏற்பட்ட நட்பு நெருக்கத்தில் ஒரு ஷம்பைன் மாலையைத் துவங்க விரும்பி இருவரும் விஸ்தாரமான தோட்டத்தில் உட்கார்ந்தார்கள்.

வொய்ட்டின் மூளை கிறுகிறு என்று வேலை செய்தது. பேச்சுவாக்கில் டைம்ஸுக்கு எஸ். எஸ். சாமி என்ற பெயரில் எழுதியவர் சம்பந்தசாமிதான் என்று புரிந்து கொண்டார் வொய்ட்.

கப்பலின் இருப்பிடம், சம்பந்தசாமிக்கு நிச்சயம் தெரியும் என்று புரிந்துகொண்டார்.

அதை அடைவதற்கு என்ன வழி?

கிடைப்பதில் பாதிப் பாதி எனலாமா? அல்லது லட்ச ரூபாய் என்று விலை பேசி...

இரவு அவர்கள் வெகுநேரம் பேசி ஒருவர்க்கொருவர் போதையில் கொஞ்சம் கொஞ்சமாக விட்டுக் கொடுக்க முன்வர,

சம்பந்தசாமி அந்தத் தள்ளாட்டத்திலும் நிபந்தனையில் தளரவில்லை.

சார்ட்டில் குறிப்பிட்ட இடத்திலிருந்து சுற்றிவர ஐந்து மைல் வட்டாரத்துள் ஜூலி கிடைத்தால், அதிலிருந்து கிடைக்கும் பொருளைப் பாதி பாதியாகப் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

ஐந்து மைலுள் கிடைக்காவிட்டால் சம்பந்தசாமிக்கு இரண்டு லட்சம் கொடுத்து விட்டு வொய்ட் அதற்கு அப்பால் உள்ள பிரதேசங்களைத் தாமே தேடிக்கொள்ளலாம், கிடைக்கும் பொருளை அவரே வைத்துக் கொள்ளலாம்.

கிட்டத்தட்ட ஒரு ராத்திரி வேளையில் இந்த முடிவுக்கு வந்ததும், மறுநாள் காலையில், விரிவாகக் காகிதத்தில் எழுதி இருவரும் கையெழுத்துப் போட்டார்கள்.

அடுத்த நாள் மாலையில் வொய்ட்டின் நெப்ட்யூன் லாஞ்ச் கனிநாகலாபுரத்தை நோக்கிப் பயணம் செய்துகொண்டிருந்தது.

**ம**ல்லிக் குழுவினர் நான்கு நாட்கள் அந்த 79,51 தீர்க்கத்தைத் தேடி விட்டார்கள்.

டர்ன் போட்டு இருவர் இருவராகத் தண்ணீரில் புகுந்து தரையைத் தேடினார்கள்.

சில நாட்கள் அனுபவத்தில் மல்லிக்கும், சம்பகாவும் தேர்ந்த டைவர்கள் ஆகிவிட்டார்கள். ஆரம்ப பீதிகளும், பயங்களும் அவர்களை விட்டு விலகிவிட்டன.

ஒவ்வொரு நாள் தேடலையும் ராம்சந்த் ஒரு வரை படத்தில் தெளிவாகக் குறித்து வைத்துக் கொண்டு, தினம் தினம் படகை நகர்த்திப் புதிய இடங்களை நோக்கிப் போய்க் கொண்டிருந்தான்.

அன்று காலை மல்லிக், சம்பகாக்களின் டர்ன் வந்தபோது,

இருவரும் அக்வாலங் தரித்துத் தண்ணீரில் அமிழ, முப்பதடி ஆழத்தைத் தாண்டியதும் அந்த வெளிச்சம் சம்பகாவை இழுத்தது.

இருவரும் அதை நோக்கி நீந்தினார்கள்.

(தொடரும்)

---

அவன்: நேற்று தெருவில் ஒரு பெண்ணைப் பார்த்ததும் தலையைக் குனியவேண்டி வந்து விட்டது...

இவன்: அடடா....ஏன்?

அவன்: நான் மாடியில் நின்றுகொண்டிருந்தேன்....!

- ராஜேஸ்வரி





புஷ்பா தங்கதுரை

# கடலுக்குள் ஜூலி



*ஸ்குவிட்-சிகரெட் போன்ற உடம்பு. பத்து கால்கள். அவற்றின் நீளம் எண்பதடி வரை-பாண் டம் டிக்ஷனரி.*

## 20

பால்மர்ஸன் ஹோ ஹோய் என்று கத்திப் பார்த்தார்.

,யாரும் வரவில்லை.

இது என்ன வஞந்தரமா?

அவரால் நகர முடியவில்லை. ஒருஜ~ரமும், ஸ்கர்வியும் அவரைக் கீழே தள்ளி இருந்தன.

அப்போதுதான் அந்தத் தங்கமும் வெள்ளியும் கடலுக்குள் வீணுக மறைந்து விட்டதே என்று தோன்றியது.

கடவுளே! நான் என்ன தப்பிதம் செய்தேன்! என்று நினைத்தார்.

கப்பல் இருக்கும் இடம் யாருக்கும் தெரியாது.

கப்பல் இந்தியாவை அடைந்து விட்டதா என்றுகூட யாருக்கும் தெரியாது.

மோரீஷியஸ் ஸில் தங்கி இருந்தால் கப்பலின் திசை ஓட்டம் மற்றவர்களுக்குத் தெரிந்திருக்கும். ஸெய்ன்ட் ஹெலினுவை விட்டபிறகு எந்தத் துறைமுகத்திலும் நுழையாதது எவ்வளவு தப்பு!

யாருக்குமே கப்பல் எங்கே போயிற்று என்று தெரியாதே!

கடவுளே நான் என்ன தப்பு செய்துவிட்டேன்! என்று நினைத்தார் பால்மர்ஸன்.

அதென்ன சத்தம்?

**அ**ந்த வெளிச்சம் குழப்பமாக மினுக்கியது. ஒரு தீபஸ்தம்பம் போல அடிக்கொரு முறை சிமிட்டியது.

முன்னுல் போன சம்பகா ஒரு யோசனையில் நின்ருள்.



மல்லிக்கும் நின்றான்.

வெளிச்சம் மினுக்கும் காரணம் என்ன? அது ஒரு உலோகத் துண்டாக இருக்கும். ஆனால் ஏன் விட்டு விட்டு மின்னுகிறது?

சம்பகா அவன் யோசிப்பதைக் கவனித்தாள். அதோ என்று கை காட்டினாள்.

ஆழத்தில் என்ன நிகழ்கிறது?

ஏன் வெளிச்சம் வித்தியாசம் காட்டுகிறது?

இரண்டு விநாடியில் விஷயம் பளிச்சிட்டது. ராம்சந்த் அதை ஏற்கனவே விளக்கியிருந்தான்.

மேலே அலையின் இயக்கம் தண்ணீருக்குள்ளும் ஒரு சுழற்சியான இயக்கத்தை ஏற்படுத்துகிறது.

இந்தச் சுழல்கள் தண்ணீருக்குள் பிரயாணித்துக் கொண்டே போகும் போது சிறிது சிறிதாகப் பலவீனம் அடைந்து முடிவில் முற்றிலுமாக மறைந்து விடுகின்றன.

இங்கே ஆழங்கள் 60 அடி அளவே இருந்ததால், அலை இயக்கம் கீழே தரை மட்டம் வரைகூட சுழன்று போய்க் கொண்டிருந்தது.

அந்த இயக்கங்களினால் வெளிச்சமும் அலைபடுவதால், கீழே அந்த உலோகத் துண்டு மாயா ஜாலம் காட்டிக் கொண்டிருந்தது.

விஷயம் புரிந்ததும் சம்பகாவிடம் ஓகே, என,

இருவரும் செதிலடித்துக் கீழே இறங்கினார்கள்.

காற்றுக் குமிழிகளைப் பின்னால் குழாய் வழியாக விட்டுக் கொண்டு,

இருவரும் மீன் போல் நழுவிச் சீக்கிரம் அந்தத் தரை மட்டத்தை அடைந்தார்கள்.

சில அடிகளுக்கு அப்பால் அம்பாரம் போல் இருப்பது என்ன?

சம்பகா தனது டார்சை எடுத்து ஒரு பளிச் கொடுக்க, நிறையப் பவழக் கொடிகளும், இனம் புரியாத வேறு வர்க்கங்களும் கலந்திருந்தன.

ராம்சந்த் கூறியிருக்கிறான், கடலுக்கடியில் உள்ள எந்தப் பொருளும் பழைய முழுமையில் இருக்காது. பவழ வளர்ச்சி அதைப் பெரும்பாலும் மூடிவிடும். பல்லாண்டுகளுக்குப் பிறகு பவளப் பாறையாகவே மாறி விடும்.

---

**கேதார் நாத்தில், தரிசனம் செய்யும் காலம் போக மற்ற நேரங்களில் அந்தப் பகுதியைக் காவல் காத்துப் பார்த்துக் கொள்பவர் ஒரு முஸ்லீம். இந்த உரிமை பரம்பரை பரம்பரையாக வருகிறதாம். இதற்காக அவருக்குக் கணிசமான வருமானமும் உண்டாம். -குமிலி**



இருவரும் அந்தப் பவழக் கொடிகளில் ஏறினார்கள்.

பவழக் கிளைகள் சதுரங்களாகவும், நீண்ட சதுரங்களாகவும் இடைவெளி விட்டிருப்பதை அறிந்தார்கள்.

மல்லிக்கிற்கு யோசனை பளிச்சிட, சம்பகா இது ஒரு கப்பலின் இடிபாடு என்று சமிக்ஞை செய்தான்.

ஜாலியாக இருக்குமா?

பார்த்தால் அவ்வளவு பெரிசில்லையே!

சம்பகா மெள்ளப் பவழ விளிம்புகளில் நடந்தாள். கிட்டத்தட்ட அந்தப் பவழ வளர்ச்சி ஒரு கூண்டு போல் இருந்தது.

அதோ, அதோ, அதுதானே அந்த வெளிச்சம் அடித்த உலோகம்? அது என்ன உலோகம்?

உள்ளே கூண்டுக்குள் போக யத்தனித்தாள். மல்லிக் அவள் பக்கத்தில் வந்து நின்றான்.

பல முறை முயன்றும் அவளால் நுழைய முடியவில்லை.

ஒரு வாக்கான இடத்தில் அவள் பவழப்பாறையைத் தட்டித்தட்டி உடைத்துக் கடைசியில் மெள்ள உள்ளே நழுவினாள்.

வெளிச்சம் பற்றவில்லை.

மல்லிக்கும் இறங்க முயற்சி செய்வதைப் பார்த்து வேண்டாம் என்று டார்ச்சினால் சமிக்ஞை செய்தாள். இருவருக்கும் இடம் பற்றாது.

நல்ல இருட்டு. நிசப்தம்.

அடிப்பகுதியை அடைந்து தடவிப் பார்க்க வழவழப்பான பொருள் கையில் வழுக்கியது.

அதை எடுக்க முயலும்போது அது மண்ணுக்குள் அகப்பட்டிருப்பது புரிந்தது. கைகளினால் கெல்லி எடுக்க, தூசிகள் நிறையக் கிளம்பி வெளிச்சத்தை மறைத்தன.

அவள் தொடர்ந்து முயற்சி செய்து, பொருளை இழுக்க அது ஒரு தட்டு போலிருந்தது.

திரும்பினாள்.

ஆனால் தூசு நிரம்பி அவள் பார்வையை மூடிவிட்டது. மாஸ்க் கண்ணாடி மீது மண்டுகள் நிறையப் பிடித்துவிட்டன. அங்குமிங்கும் நகர்ந்து பார்க்க, போகும் வழி தெரியவில்லை. எப்படி வந்தோம்? ஒரே இருட்டாக இருக்கிறதே, மல்லிக் எங்கே?

டார்ச்சை அடித்தாள். முன்னால் இரண்டு அடிகூடத் தெரியவில்லை. ஒரே கலக்கம். சகதிக்குள் அகப்பட்டது போல இருந்தது.

சுற்றிலும் தடவிப் பார்க்க எங்கும் தடைகள் தென்பட்டன. அவள் வந்த இடைவெளி தெரியவில்லை.

மல்லிக் அதே நேரம் வெளியே காத்திருந்தான். மனம் பட படத்தது. உள்ளே போன சம்பகா வரவில்லை.

திடீரென்று அந்தத் தூசிப் புயல் எப்படி ஏற்பட்டது?

அது எவ்வளவு மோசமாக இருந்தது? அந்த ஆழத்தில் நீரோட்டம் இல்லாததால் தூசிகள் அமிழவில்லை. அந்தரத்தில் நின்றன. பார்வையை மறைத்தன.

பலமுறை மல்லிக் தன் டார்ச்சை அடித்துப் பார்த்தான். கடைசியில்தான் அந்த ஜந்து புலனாயிற்று. அது ஜந்துவா? ஆழ்கடல்

நத்தையா? ராட்சத ஸ்க்விட் அது. ஆக்டோபஸ் இனத்தைச் சேர்ந்தது. எங்கிருந்தோ நகர்ந்து வந்து அந்த அம்பாரத்தின் மீது சப்பளிக்காக உட்கார்ந்து விட்டது.

பலமுறை மல்லிக் டார்ச் அடித்தான்.

அது நகரவில்லை. பயப்படவுமில்லை.

நிமிடங்கள் டிக் ஆக, அவனுக்குப் பயம் வந்தது. உள்ளே சம்பகா என்ன ஆவாள்? அவள் வருவதற்கு வேறு வழி இருக்குமா? உள்ளே வெளிச்சம் வராமல் அவள் திணறிக் கொண்டிருப்பாளே!

கத்தியை உபயோகிக்கலாமா? அந்த ஜந்துவின் பலத்தைக் கேள்விப்பட்டிருக்கிறான். அவன் கழுத்தைச் சுற்றி வளைத்துக் கொண்டு. . .

அந்தச் சந்தர்ப்பத்தை நினைக்கப் பயம் பிறியது. விரல்கள் உதறின.

அம்பாரத்தின் மறு பக்கம் சென்றான். ஓரங்களில் அந்த நீண்ட சதுர சட்டங்கள் தெரிந்தன. நுழைய முடியாது. அவ்வளவு சின்னவை. தட்டலாமா?

உள் நோக்கி டார்ச் அடித்தான். ஏதோ தெரிந்தது, மங்கலாக. சம்பகாவின் உடலா?

சம்பகா!

உணர்ச்சிகள் அவன் தொண்டையை மூடின. கண்களில் நீர் சுரந்தது. அடக்கப் பார்த்தான் முடியவில்லை.

இறந்துவிட்டாளா?

கையை அந்த இடிபாடுகளுக்குள் நீட்டினான். உடலைத் தொட்டது போலிருந்தது. அடுத்த கணம் அது கூண்டுக்குள் வழுவி விட்டது.

பிறகு பல முறை விளக்கை அடித்துப் பார்த்தும் அவள் தென்படவில்லை.

அவனுக்கு ஆத்திரம் பற்றியது. டூல் கிட்டைத் திறந்தான். சுத்தியை எடுத்தான். சட்டங்களைத் தட்டத் தொடங்கினான். அந்த ஆழத்தில் அவனுக்கு வலு இல்லை. இருந்தும் முயற்சியை விடவில்லை.

சிறிது நேரத்தில் சட்டம் ஒன்று வழி விட்டது. கை தாராளமாக உள்ளே சென்றது.

சம்பகா அகப்படுவாளா?

கையை உள்ளே துழாவினான். அதே நேரம் மேலே மறுபுறத்தில் உட்கார்ந்திருந்தஸ்க்விட் இடம் மாறுகிறதா என்பதையும் கவனித்தான்.

முதல் துழாவல்களில் சம்பகா கிடைக்கவில்லை. பிறகு மெள்ள, தோளை வளைத்துக் கையை இன்னும் உள்ளே செலுத்திப் பார்க்க,

இது என்ன?

சம்பகாவின் கால்களா?

வெளியே இழுக்க, உடம்பு படபடத்தது. அது சம்பகாதான்.

வெளியே அவசரமாக இழுத்தான்.

மூச்சு இருக்கிறதா?

நல்ல வேளை, காற்றுக் கொப்புளங்கள் வெளியே வருகின்றன மெல்லிதாக.

முகத்தில் டார்ச் அடித்தான். கண்கள் மூடியிருந்தன. மயக்கமா?

உடனே மேலே கொண்டு போக வேண்டியதுதான்.

அவளது இடுப்பில் இருந்த வெயிட் பெல்டைக் கழற்றிக் கீழே போட்டான்.



**❋ சராசரி பெண்ணின் இடை இருபத்தெட்டு அங்குலம், சராசரி மனிதன் கையின் நீளமும் 28 அங்குலம் தான்! — சிக்கி**

உடனே அவள் தேகம் மேலே எம்பப் பார்க்க, அதைத் தன் ஆதிக்கத்தில் வைத்துக்கொண்டு மெள்ள மெள்ள மேலே ஏற ஆரம்பித்தான்.

45 நிமிடம் கழித்த பிறகு மேலே வந்தான்.

ராம்சந்த் ஆவலுடன் தவித்துக் கொண்டிருந்தான்.

சம்பகாவைப் பார்த்ததும் திடுக்கிட்டு அவளை மேலே தூக்கினான்.

முதல் சிகிச்சை உடனே துவங்கியது.

—அதிர்ச்சி! மயங்கிவிட்டாள் என்றான் ராம்சந்த்.

மல்லிக் விவரங்களைக் கூறினான்.

—மல்லிக்! கடலுக்குள்ளே நிறைய உடைஞ்ச பொருளுங்க இருக்கும். கப்பலா இருக்கும், படகா இருக்கும், கப்பல்லே ஏத்திக் கிட்டுப் போன ஏதாவது சாமானு இருக்கும். இந்த உடைஞ்ச இடிபாடுக்குள்ளே யாரும் எச்சரிக்கை இல்லாம நுழையக் கூடாது. எத்தனையோ எக்ஸ்பர்ட்டுங்க இதிலே செத்திருக்காங்க. நீங்க எதைப் பார்த்தீங்களோ, இடிபாட்டுக் குள்ளே போக முயற்சி செய்தது தப்பிதம். இனிமே செய்யாதீங்க. என்றார்.

சம்பகா அப்போது புலம்பும் சப்தம் கேட்டது.

**வொ**யிட் கோஷ்டியினர் கனிநாகலாபுரம் வந்து சேர்ந்தார்கள். ரங்கூன் பங்களாவில் அவர்களுக்குத் தடபுடலாக வரவேற்பு அளிக்கப்பட்டது. சம்பந்தசாமி விஸ்தாரமாகச் சிரித்து ஷாம்பைன்களை நுரைக்க வைத்தார். ஸ்விம் சூட்களில் சில வெள்ளைப் பெண்கள் அவர் மாளிகையில் அனுவசியமாக உலாவினார்கள்.

ஒரு உல்லாசம் அந்தப் பங்களாவுள் வெடித்துவிட்டது போலிருந்தது.

கடலில் போகும் நாள் குறித்துவிட்டு, ஏராள தயார்களைச் செய்து கொண்டு, அவர் கோஷ்டி புறப்பட்டார்கள்.

அது ஒரு காலை நேரம்.

—மிஸ்டர் வொயிட்! நாம்ப அந்த ஆளுங்களைத் தவிர்க்கிறோம் என்றார் சம்பந்தசாமி.

—மல்லிக் கோஷ்டியைத்தானே? என்றார் வொயிட்.

—ஆமா.

—நிச்சயம் தவிர்ப்போம். தூர இருந்தே நம்மாலே கடலைத் தேட முடியும். எல்லா

எக்விப்மெண்டும் நம்பகிட்டே இருக்கு. கவலைப்படாதீங்க.

—மீன் பிடிக்கப் போறாப்பலே தூர இருப் போம்.

—ஓகே!

—மகாதேவ்!

—எஸ் ஸார்!

—மல்லிக் கோஷ்டியோட லாஞ்ச் எங்கே நின்னுது?

—10 டிகிரி வடக்கே 79 டிகிரி கிழக்கே.

—வொயிட்! இதை நோட் பண்ணிக்குங்க.

—பண்ணியாச்சு!

நெப்ட்யூன் அழகாகக் கடலை வகுத்து ஓடியது.

இரண்டு மணி நேரத்தில் 10/79 களில் இருக்க,

காப்டன் வெளியே வந்து, —இதுதான் இடம் என்றார்.

—ரெண்டு ஆங்கர் போடுங்க, என்றார் வொயிட்.

—எஸ் ஸார்.

—போதுமில்லே?

—இந்தக் கடலுக்குப் போதும். அலை அதிகமில்லே.

வொயிட் டைவிங் சூட் போட்டுக்கொண்டு வர, சம்பந்தசாமி ரீடாவை நீச்சல் உடை யில் அழைத்து வந்தார்.

—மிஸ்டர் வொயிட்! என் பெண்ணும் இந்த முயற்சியிலே சேர்ந்துக்கறா! என்றார் சம்பந்தசாமி.

—வெரி வெரி க்ளாட்! ரீடா! டைவிங் சூட் போட்டுக்க. உங்க அப்பாவுக்கு நீ ஒரு சாட்சி ஆச்சு! கெட்டிக்காரத்தனமா உன்னை யும் சேர்த்து என்னோட அனுப்பறார். கடலுக்குள்ளே ஒண்ணுமில்லைன்னு எங்கே நான் பொய் சொல்லிடுவேனோன்னு பயப் படறார். அதுவும் நல்லதுக்குத்தான். வா கீழே இறங்கு... முதல்லே டைவிங் சூட் போட்டுக்கோ!

சம்பந்தசாமி அதைக் கேட்டு ஓஓ என்று சிரித்தார்.

பிறகு பைனாகுலர்ஸை வைத்துக் கிழக்கே பார்க்க, கிட்டத்தட்ட நாலு மைல் தொலை வில் மல்லிக் கோஷ்டியின் லாஞ்ச் இருந்தது.

—இந்த இடத்தை விட்டு ஏமாந்து எங்கே போயிட்டாங்க பாரு! என்று நினைத்தார் அவர்.

ரீடாவும் வொயட்டும் தண்ணீருக்குள் மூழ்கினார்கள். (தொடரும்)

**திருக்குறளிலிருந்து சில:**

தினைத்துணை நன்றி செயினும்
பனைத்துணையாக்
கொள்வர் பயன் தெரிவார்





சிறுமை பல செய்து சீரழிக்கும் சூதின்
வறுமை தருவது ஒன்று இல்.

சிறு படையான் செல்லிடம் சேரின்
உறுபடையான்
ஊக்கம் அழிந்து விடும்.





சிற்றின்பம் வெஃகி அறனல்ல
செய்யாரே
மற்றின்பம் வேண்டுபவர்,

# கடலுக்குள் ஜூலி



## புஷ்பா தங்கதுரை

**ஒவ்வொரு டிகிரியும் 60 நிமிடங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. ஒரு நிமிடம் ஒரு நாட்டிகல் மைலுக்குச் சமானம் - கப்பல் கணிதங்கள்.**

### 21

பால்மர்ஸன் கூர்ந்து பார்த்ததில் யாரும் தென்படவில்லை.

அது பிரமை என்று தெரிந்தது

திரும்பினார். அது என்ன? கழுகா?

ஆமாம்! கழுகுதான்! ஓகோ, சடலத்தைப் பார்த்து விட்டதா?

எலிசாவின் உடல் கறுத்திருந்தது துவண்டிருந்தது.

மெள்ளச் சிலும்பினார்.

மணற்பாங்கான இடத்தில் குழி பறித்தார். முதலில் எலிசாவைப் படுக்க விட்டார். ஆண்டவனிடம் பிரார்த்தனை செய்து குழியை மூடினார்.

அதன் பக்கத்திலேயே மற்றொரு குழி பறித்து அருமைப் பிள்ளையின் பெட்டியை அமிழ்த்தினார்.

பிறகு வெறுப்போடு சிரிப்பு வந்தது.

-எனக்கு ஒரு குழி. என்றார்

அதற்குள் ஜூலியைப் பற்றிய நினைவு. அவளுக்குள் இருக்கும் ஏராளத் தங்கத்தைப் பற்றிய நினைப்பு.

ஜூலி மூழ்கிய இடத்தைக் குறிக்க வேண்டுமே!

வருங்காலத்தில் யாராவது அவளைத் தேட நேர்ந்தால்... ..

பால்மர்ஸன் அவசரமாக மற்றொரு பெட்டியை எடுத்தார்.

---

### அரசியல் வேசிகள்

யானைச் சின்னத்திற்கு
நிச்சயதார்த்தம் செய்தால்
கழுதைச் சின்னத்திற்கு
கழுத்தை நீட்டிவிட்டு
முதலைச் சின்னத்தோடு
முதலிரவு கொண்டாடுபவர்கள்;

-எழிலன்



சம்பகாவின் முனகல் கேட்டது. மல்லிக் ஓடினான். அருகில் மண்டி இட்டான். படகோடு சேர்ந்து காபின் மெல்ல ஆடியது. உள்ளே பட்டு வெளிச்சம். கண்களை மூடியிருந்தாள் சம்பகா.

—சம்பகா!

மெல்லிதாய் அழைத்தான்.

பல முறை அழைத்தான்.

அவள் கண் திறக்கவில்லை. அம்மா, அப்பா என்றாள். நாகலாபுரீஸ்வரீ என்றாள்.

ஜுரம் வீசியது.

இவளைக் கடலுக்குள் கொண்டு போனது தப்போ என்று நினைத்தான்.

ராம்சந்த் பளீரென்று அவன் எண்ணத்தில் அறைந்தான். - எந்தக் காலத்தில் உங்களுக்கெல்லாம் தைரியம் வரப் போகிறது? மேனாட்டிலே பெண்கள் எப்படி இருக்காங்க தெரியாதா? என்று கூச்சல் போட்டான்.

ராம்சந்த்தான் சம்பகாவைக் கடலுள் அழைத்துப்போனதற்குப் பெரிய தூண்டுகோல்.

போர்வையை இழுத்து அவள் மீது போர்த்தி வெளியே வந்தான்.

டிரைவிங் காபினில் ராம்சந்த் இருந்தான். அஸ்டிக்கில் ஈடுபட்டிருந்தான். மல்லிக் வருவதைக் கவனித்து —எப்படி இருக்கா என்றான் ஸ்கிரீனில் பார்த்துக் கொண்டே.

—முனகறா.

—அப்படித்தான் இருப்பா. ட்ரக் கொடுத்திருக்கேன். சரியாயிடும். பயந்திருக்கா. சைகலாஜிகல்....

விநோத விசைகளை ஏற்றி, அணைத்து, சோதனைகள் நிகழ்த்தி, கடைசியில் தலை நிமிர்ந்தான். உதட்டைப் பிதுக்கினான்.

-மல்லிக் என்றார் பெருமூச்சு விட்டு.

மல்லிக் கண்களால் வினவினான்.

—வெறும் கானல் நீரைத்தேடற மாதிரி தான், என்றான் ராம்சந்த்.

-எதைச் சொல்றீங்க?

—ஜூலியைத் தேடறது.

கைகளைத் துடையில் தட்டி அப்பா என்று சோபாவில் வழிந்தான்.

பெரிய ஆயாசமான மூச்சை வழுவ விட்டான்.

மல்லிக்கிற்கு கலக்கம். அவன் ஜீவன் முழுதும் ஜூலியில் இருந்தது. வாழ்க்கையின்

ஜாக்பாட் அது! இத்தனை நாளில் ஏமாற்றங்கள் எத்தனையோ அடைந்து விட்டான். பழங்காலப் புதையல்களைத் தேடி, ஆயிரக் கணக்கில் செலவழித்து விட்டான், எல்லாம் வீண்! வியர்த்தம்! காலனுவுக்குப் பிரயோசனம் இல்லை.

ஜூலியைப் பற்றி அறிந்ததே அதிர்ஷ்டம் என்று நினைத்தான். குருட்டு அதிர்ஷ்டம். கடவுள் அவன் பங்கில் அந்த அதிர்ஷ்டத்தைத் திறக்கிறுர் என்று நினைத்தான்.

இல்லாவிடில் உலகில் வேறு யாராவது அறிவதற்கு முன் அவனுக்கு மட்டும் ஜூலியின் இருப்பிடம் தெரிய வருமா?

இப்போது ஜூலியும் கிடைக்க மாட்டாளா?

—ராம்சந்த்! என்ன சொல்றீங்க! ஜூலி கிடைக்க மாட்டாளா?

கிட்டத்தட்ட அழுகையில் கேட்டான்.

ராம்சந்த் கையை வழிய விட்டான்.

—நமக்கும் அதிர்ஷ்டம் வேணும். ஜூலிக்கும் வேணும். கப்பலும் மனுஷங்களை மாதிரித்தான். அதன் கீலே வைக்கிற நேரத்தில் அதன் ஜாதகமும் பிறந்துடுது. ..

மல்லிக் கண்களில் ஈரம் தொக்கியது.

....ஜூலியின் ஜாதகம் சரியாக இருந்திருக்காது, மல்லிக்! நாம்ப என்ன செய்ய முடியும்?

மல்லிக் பிரமித்து நின்றுன்.

—ஜூலி கிடைக்க மாட்டான்னு சொல்றீங்களா? என்றுன் ஆதங்கமுடன்.

—அநேகமா அப்படித்தான்.

கம் என்று அடைப்பு மல்லிக்கின் மனத்தில். தனியே இருந்தால் அழுதிருப்பான். இன்னெருத்தர் முன்னுல் ஒழுக்கம் காட்டவேண்டியிருந்தது.

-எப்படிச் சொல்றீங்க? என்றுன்.

—எட்டுச் சதுர மைல் தேடிட்டோம். கிடைக்கல்லே!

—எட்டு சதுர மைலா?

—ஆமாம். நான் சார்ட் பண்ணிட்டு வந்திருக்கேன். 10.00 டிகிரி வடக்கு, 49.21 டிகிரி கிழக்கு மையமாக வச்சு எட்டு மைல் சுற்றளவு தேடியாச்சு! பதினெட்டு நாள் செலவழிச்சிட்டோம். இனிமே என்ன செய்யறது?

—இன்னும் தேடிப் பார்க்கிறது!

—இன்னுமா? என்று ஆயாசப் புன்னகை காட்டினுன் ராம்சந்த். —இனிமே ஜூலியைத் தேடறது வைக்கப் போரில் ஊசியைத் தேடற மாதிரி... ஏராளமாச் செலவழிக்கணும்... நிறைய நாள் எடுக்கணும். முடியுமா?

ராம்சந்த் தன் கால்களைத் தூக்கி சோபாவில் வைத்தான். நீட்டமாகப் படுத்துக் கொண்டான்.

அது முற்றுப்புள்ளியின் அறிகுறி என்று தோன்றியது.

—ராம்சந்த்! என்றுன் மல்லிக் கலக்கமாக —ஜூலி நாம்ப தேடின இடத்திலே மூழ்கியிருக்காதா?

—இப்ப தேடிட்டோம். அந்த இடத்திலே ஜூலி இல்லை.

—அப்போ பால்மர்ஸன் குறிச்சது தப்பிதமா?

—அநேகமா அப்படித்தான் இருக்கணும். 140 வருஷத்துக்கு முன்னுலே குறிச்சிருக்கார். அப்போ நுண்ணிய கருவிங்க கிடையாது. வானத்தையும் பூமியையும் வச்சுக் கணக்கிடுவாங்க. அதுவும் வானத்திலே சூரியன், நட்சத்திரம் தெரியலேனு.... அதோ கதி!

—மல்லிக் யோசித்தான். — அப்படியே பால்மர்ஸன் தப்பிதம் பண்ணினுலும் சின்ன தப்பிதமாத்தானே இருக்கணும்?

—யூ ஆர் ரைட்! சார்ட்லே சின்னத் தப்பிதமா இருக்கலாம். ஆனு கடல்லே அது மைல்கணக்கிலே வித்தியாசம் உண்டாக்கிடும். ஒரு மைல் வித்தியாசம் கடலிலே எவ்வளவு பெரிய நீளம் தெரியுமா? கற்பனை பண்ணிப் பாரு.

மல்லிக் திகைத்தான்.

—ராம்சந்த்! என்றுன். —அஸ்டிக்கை வச்சு தேடிட்டே போலாம் இல்லையா?

—சொல்றது உண்மைதான். அஸ்டிக் இரண்டு மைல் தூரம் வரை சோதித்துப் பார்க்கும். ஆனு இப்போ உஷ்ணமான நாட்கள். கடல் தண்ணி மேலே சூடா



கும். கீழே குளிர்ச்சியா இருக்கும். இந்த வித்தியாசமான நீர்ப்பரப்பு அஸ்டிக்கிலே தப்பிதமான சிக்னல் கொடுத்து ஏமாத்திடும். அல்லது ஒரு சின்ன மீன் கூட்டம் போச்சுன்னுக்கூட அஸ்டிக் நமக்குத் தவருன சிக்னல் காட்டிடும். இந்தக் காரணத்திலே தான் நான் இதை நம்பறதில்லே!

—அப்போ என்னதான் செய்யலாம்?

ராம்சந்த் கைகளை நீட்டி அரைச் சோம்பல் முறித்தான்.

—எதுவும் செய்யறதுக்கில்லே. இன்னும் இரண்டு நாள் தேடுவோம். அப்புறம் மூட்டையைக் கட்டுவோம்.

இரண்டு நாட்கள் தேடினர்கள்.

அதிக சக்தியுள்ள டார்ச்சுடன் ராம்சந்த் கடலில் மூழ்கி, தரைப் பிரதேசங்களில் தேடினன்

அஸ்டிக்கையும், எக்கோ ஸவுண்டரையும் அடிக்கடி உபயோகித்தான்.



''உங்களிடம் நான் கடைசியாக வேண்டிக் கொள்வதெல்லாம் தயவுசெய்து எனக்கு டெப்பாஸிட் தொகையாவது திரும்பி வரும்படி ஏற்பாடு செய்யுங்கள்...!'' -ராஜேஸ்வரி

உத்தேச இடங்களுக்குப் படகை நகர்த்தி இரண்டு கருவிகளையும் இயக்கி மேடுகளைத் தேடினன்.

சமயங்களில் நீள கேபிள்களைக் கீழே செலுத்தி, பாதாளக் கரண்டி முறையில் தரைகளைச் சுரண்டி எடுத்தான்.

எதற்கும் பலன் கிடைக்கவில்லே. மூன்ரும் நாள் விடிந்ததும், படகை ஒரு கடைசி உத்தேசத்துக்கு எடுத்துச் சென்று நங்கூரம் பாய்ச்சி, அஸ்டிக்கை இயக்கி, மேடு ஒன்றைக் கண்டுபிடித்து, டைவிங் சூட்டில் இறங்கினன் ராம்சந்த்.

—ஆண்டவனைப் பிரார்த்திச்சுக்க, மல்லிக். இந்த முறை 30 நிமிஷம் உள்ளே தேடப் போறேன். ஒரு பெரிய விஸ்தீரணத்தைப் பார்க்கப் போறேன். இதில் ஜூலி இல்லேன்ன நாம்ப கிளம்பறோம். அதோட நம்ப தேடல் ஓவர்! என்ருன்.

கைகளை அசைத்துக் கீழே ஆழ்ந்தான்.

மல்லிக்கிற்கு இதயம் துடித்தது. மனசுக்குள் பெரிய தவிப்பு- கடவுளை நினைத்தவாறு காபினுக்குள் நுழைந்தான்.

சம்பகா தேறியிருந்தாள். சாய்மானமாகத் தலைகாணி.

—சம்பகா! என்ருன்.

மெலிந்த புன்னகையுடன் திரும்பினுள். -உங்களுக்கெல்லாம் என்னலே கஷ்டம்! என்ருள்.

—இல்லே, சம்பகா! நீ இருப்பதே எங்களுக்கு இன்ஸ்பிரஷேன். என்று சொல்லி அவள் கண்ணுக்குள் விழித்தான்.

—எங்களுக்குன்னு?..... என்று சொல்லிச் சின்ன வாயைத் திறந்தாள்.

—எனக்கும், ராம்சந்துக்கும்.

அவள் வெறுமையாகத் திரும்பினுள்.

எனக்கு மட்டும் என்று சொல்லி யிருந்தால் மகிழ்ந்திருப்பாளா என்று மல்லிக் நினைத்தான்.

அவள் வெறுமை அவன் மனத்தைக் குழைத்தது.

சம்பகா மெள்ள எழ முயன்ருள். —ஜூலி கிடைச்சாளா?

மல்லிக் பேசவில்லே. நிசப்தமாக நின்ருன்.

அவள் அவன் கண்களை வாசித்துவிட்டாள்

—நான் அதிர்ஷ்டம் கெட்டவள்! என்ருள்.

—உன் அதிர்ஷ்டம் இதுலே ஒண்ணும் செய்யாது; என்ருன் மல்லிக்.

அவள் காலைக் கீழே ஊன்றி நின்ருள். —நிச்சயம் செய்யும் மல்லிக்! பிறந்ததிலேந்து நான் துரதிர்ஷ்டசாலி. இங்கேயும் அது என்னைத் துரத்தியிருக்கு! ஒருவேளை நான் இல்லாம இருந்தா உங்களுக்கு ஜூலி கிடைச்சிருக்கலாம்.

காபின் சுவரைப் பிடித்து நின்ருள். பாலன்ஸ் வந்துவிட்டது.

—சம்பகா! இதில் என் அதிர்ஷ்டமும் இருக்கு. நானும் ஒரு துரதிர்ஷ்டக்காரன். வாழ்க்கையில் எதை எதையோ தேடி அலுத்துவிட்டேன். இதுதான் என் கடைசி முயற்சி! இதிலே வெற்றி பெருட்டா திரும்ப என் பேப்பர் விக்கிற தொழிலுக்குப் போயிடுவேன்.

சம்பகா அவனை நேர்த்தியாகப் பார்த்தாள். கண்ணில் சோகம் பற்றி இருந்தது. ராம்சந்த் எங்கே? என்ருள்.

—கடைசி முக்குளிப்புன்னு போயிருக்கார்! வெற்றிக்காகப் பிரார்த்திச்சுக்கோ-

கண்ணை மூடித் திறந்தாள். —பிரார்த்திச்சுட்டேன். இதிலே பலன் கிடைக்கணும்.

—கிடைக்காட்டி திரும்பிப் போருேம்.

—அப்புறம்? என்ருள் கலவரத்துடன்.

—எல்லோரும் பிரியறோம்.

அவன்குரல் கலங்க, அவள்கண் கலங்கியது.

வெளியே அலேகளின் மெல்லிய வார்ப்பு ஓசைகள். படகின் இனம் தெரியாத சிணுப்புகள்.

அவள் நடந்தாள். —நான் வெளியே போய்ப் பார்க்கணும்.

தடுமாறிப் படகு ஆட்டத்தில் விழ, மல்லிக் ஒரு தாவலில் தாவி அவளைப் பிடித்தான்,

மெள்ளப் பூப்போல அணைத்துக் கீழே கார்ப்பெட்டில் அமர்த்தி, ஆசுவாசப் பட விட,

அவள் அவன் கைகளிலிருந்து விடுபட இயலாமல் திடீரென்று அவன் மடிமீது விழுந்தாள்.

விழுந்தவள் குலுங்கி அழ ஆரம்பித்தாள்.

ஒரு குழந்தை போலத் தேம்பல்களில் ஆழ்ந்தாள்.

—சம்பகா, என்றான் அவன். அவள் கூந்தலை மெள்ள வருடினான். சின்ன மெலிந்த கைகளைத் தன் கைகளில் ஏந்தினான். —ஏன் அழறே, அழாதே! என்று பல முறை ஆத்திரத்துடன் கூறிச் சமாதானப் படுத்த முயன்றான்.

அவள் நீண்டு விசித்தாள். அடங்க வில்லை. தேம்பிக் கொண்டே கண்ணீர் உகுத்தாள்.

மெள்ள விசிப்புக்கள் குறைந்ததும் அவள் குரல் தெளிவாயிற்று. —மல்லிக்! நான் திரும்ப அனாதையாகிடுவேனோன்னு பயமா இருக்கு! எனக்கு நீங்கள் எல்லாம் திடீர்னு கிடைச்சீங்க. நீங்க பிரிஞ்சுட்டா மீண்டும் தனியா, நான் அந்தக் கடல் ஆழத்திலே கூண்டுக்குள்ளே அகப்பட்டது போல அகப்பட்டுடுவேனோ? என்னாலே அதை நினைக்க முடியல்லே, மல்லிக்... என்று விசித்தாள்.

மல்லிக் திகைத்தான்.

-சம்பகா, ஏன் அந்த பயம்? நீ கீழே அகப் பட்டபோது பாதுகாக்க நான் வரல்லியா? உன்னை நாங்க விட்டுட்டோமா? நிச்சயமா இல்லே. அதுவும் நான் உனக்குப் பாதுகாப் பாவே இருப்பேன் சம்பகா! ஏன் பயப்படறே?

அவள் கண்களைச் சிலிர்த்துக்கொண்டு அவ னைப் பார்த்தாள். முகம் பளிச்சென்று இருந்தது.

—நிச்சயமா மல்லிக்? என்றாள்.

—நிச்சயம்.

அவள் அதை அடுத்து ஏதோ சொல்ல வாயெடுத்தாள், சொல்லவில்லை.

அவள் முகக் குறிப்பை அவன் உணர்ந்த தாக நினைத்தான். மெள்ளக் குனிந்தான். கண்களில் கனிந்தான். —கடல்லே மட்டு மில்லே. கரையிலேயும் தான். இப்போ மட்டு மில்லே. எப்பவும்தான். சரித்தானா சம்பக்!

அங்குலங்களாகக் குனிந்து கேட்க அவள் பதில் சொல்லவில்லை. ஒரு புன்னகை சின்ன ஒளியாக அவள் முகத்தில் ஓடியது.

சிறிது நேரத்தில் அவர்கள் இருவரும் வெளித் தளத்திற்கு வந்தார்கள்.

மேலே கொப்புளங்களைச் சிதற விட்டு ராம்சந்த் நீர் மட்டத்திற்கு வந்தான்.

சொட்டச் சொட்ட ஏணியில் ஏறித் தளத் தில் உட்கார்ந்து அவர்களைப் பார்த்து நீள மூச்சுக்களை விட்டான்.

மல்லிக் திகிலோடு அவனைப் பார்த்ததும்,

ராம்சந்த் இளைத்துக் கொண்டு —ஜூலி இல்லே. நாளை திரும்பறோம் என்றான்.

அதிர்ச்சி. (தொடரும்)

# அரசியல்வாதி அருமைராஜன்



''நீங்க அடிக்கடி கட்சி மாறுவதற்கு, சொந்தமா ஒரு புது கட்சியே ஆரம்பிச்சிடலாமே?...''

''ஆரம்பிச்சிடலாம்தான். பழக்க தோஷத்திலே அப்பவும் கட்சி மாறிட்டேனா...?!''

''நீங்க இவ்வளவு பெரிய அரசியல்வாதியா வருவதற்கு உங்க தந்தையின் ஆசீர்வாதம்தான் காரணமா...?''

''ஆமாம். சின்னவயசிலிருந்தே அவர் என்னை உருப்படாம போவேன்னு திட்டிட்டிருப்பார்...!''

''ஒரு அரசியல் வாதியைப் பார்த்து 'நீங்க எந்தக் கட்சின்னு' கேட்கக் கூடாது!...''

பின்னே எப்படி கேட்கணும்.....

''இப்ப நீங்க எந்தக் கட்சின்னு கேட்கணும்.!''

நீங்க குடி இருக்கிற தெருவை 'அண்ணா வழி'ன்னு பெயர் மாற்றி வெக்கச் சொல்றீங் களே, ஏன்?''

''என்னை யாரும் அண்ணா 'வழி'யில் நடப்ப தில்லேன்னு குறை சொல்ல முடியாது பாருங்க...!''

கட்சித் தலைவர்: ''உங்களுக்குத் தேர்தலில் வோட்டுப் போடுவது குறித்து ஆட்சேபணை இல்லே... ஆனால் ஜெயித்தபின் கட்சி தாவ மாட்டீங்களே...?''

அ. ராஜன்: ''என்னுடைய இவ்வளவு பெரிய உடம்பைப் பார்த்துட்டும் இந்தக்கேள்வி கேட்கறீங் களே, நியாயமா?''

- கிணத்துக்கடவு ரவி



# கடலுக்குள் ஜூலி

புஷ்பா தங்கதுரை

Courage my hearts for a fresh charge --
Captain Smith (1627)

## 22

பால்மர்ஸன் சீக்கிரம் ஜூலியின் இருப்பிடத்தைக் குறிக்க விழைந்தார்.

கைப்பெட்டியிலிருந்து நீளக் காகிதத்தை எடுத்தார். கீழே விரித்தார்.

நல்லவேளை புயலும் மழையும் முற்றிலும் நின்று விட்டிருந்தன.

காகிதத்தில் சிரமப்பட்டுக் கோடுகளையும், குறியீடுகளையும் வரைந்தார்.

பிறகு Here lives JulieaGlante என்று கொட்டையாக எழுதினார்.

அந்தச் சார்ட்டை முடித்ததும் தனியே ஒரு கடிதம் எழுதினார்.

ஆண்டவனின் பெயரைச் சொல்லி இரண்டையும் கண்களில் ஒத்திக் கொண்டார்.

ஒரு காலி பாட்டிலை எடுத்து அதனுள் கடிதத்தை நுழைத்தார்.

பிறகு சார்ட்டையும் அதனுள் நுழைக்க முயல, அது உள்ளே போக மறுத்தது.

மீண்டும் அவர் தம் பெட்டியைத் திறந்து மற்றொரு காலி புட்டியை எடுத்தார்.

(அந் நாளில் கடல் பயணத்தில் எதிர்பாராத ஆபத்து நேரிடும் என்பதற்காக, மாலுமிகள் எடுத்து சென்ற உபகரணங்களில் காலி புட்டியும் ஒன்று.)

சார்ட்டை இரண்டாம் காலி புட்டியில் செலுத்தினார்.

இரண்டையும் கார்க் போட்டு அடைத்தார்.

அவைகளையும் தோத்திரம் செய்து முத்தமிட்டார்.

இரண்டையும் சேர்த்து ஒன்றாகக் கட்டினார்.

தம் பக்கத்தில் மண்ணில் தெரிந்தும் தெரியாமலும் புதைத்து வைத்தார்.

பிறகு ஒரு மணி நேரத்தில் ஆயாசம் மிகுந்து வர, கண்களை மெதுவாக மூடினார்.

அதுவே அவரது மீளா உறக்கமாகப் போய்விட்டது.

பால்மர்ஸனின் கதை அந்தக் கனிநாகலாபுரத்தின் கரையில் முடிந்து விட்டது.

நிசப்தம் நிலவ, மல்லிக் கல் ஆனான்.

—மிஸ்டர் ராம்சந்த்! என்றாள் சம்பகா. —ரொம்ப அதைரியப் படுத்துறீங்க!

ராம்சந்த் வெய்ட் பெல்டைக் கழற்றி அக்வாலங்கைத் தூர வைத்தான். — நீ சொல்றது சரி சம்பகா! அதைரியம் உண்டாக்க விரும்பலே! ஆனா நான் என்ன செய்ய முடியும்! எல்லா முயற்சியும் செஞ்சாச்சு. நம்ப சக்திக்கு மேலயே செஞ்சாச்சு. ஜூலி கிடைக்கலே. இனிமே.....

எழுந்தான்.

சம்பகாவின் முகம் கறுத்தது. கடலை நோக்கித் திரும்பினாள். பரந்த நீல வெளி. அலைகளின் எண்ணிலா மடிப்புகள்.

தூரத்தில் இரண்டு கொத்து குமுலஸ் மேகங்கள்.

திரும்பும் போது கண்களில் இரண்டு முத்துக்கள்.

அதை ராம்சந்திடம் காண்பிக்க விரும்பாமல் மெள்ள நழுவி காபினுக்குள் போனாள்.

திரும்பவும் அழுகை.

கைக்குட்டையைப் புதைத்துச் சிறிது விம்மினாள்.

அவளைப் பொறுத்தவரை ஜூலி உயிருள்ள ஜீவன். அதை அடிக்கடி நினைத்து, அதைப் பற்றியே பேசியதில் அதனுடன் ஒரு சிநேக பாவம் வளர்ந்து விட்டது. ஒரு அசப்பில் ஜூலி அவளது தோழி போல் தோன்றினாள். கடலுக்குள் அவள் விடுதலை இல்லாமல் இருக்கிறாள். அவளை வெளியேற்றி ...

ராம்சந்த் காபினுக்குள் வந்த போது சம்பகா அந்தச் சார்ட்டில் பார்வையைப் பெய்து கொண்டிருந்தாள்.

ஜூலியைத் தேடிய இடங்களை எல்லாம் ராம்சந்த் அதில் குறித்திருந்தான்.

-ஓ! என்று ஆச்சரியப்பட்டு அவள் அருகில் வந்தான் ராம்சந்த். — பார் சம்பகா அஞ்சும் அஞ்சும் பத்து சதுர மைல் பார்த்தாச்சு. நுணுக்கமாகப் பார்த்தாச்சு. எதுவும் கிடைக்கலே!

மல்லிக்கும் அப்போது உள்ளே வந்தான்.

அவன் நிழல் கண்டு இருவரும் திரும்பினார்கள். இவன் யார் மல்லிக்கா? நோயில் விழுந்தவன் போல் பாதி ஆகி யிருந்தான். சில மணி நேரங்களுக்குள்.

—மல்லிக்! உன் துக்கம் எனக்குப் புரிகிறது? நாம் என்ன செய்ய முடியும்?

ராம்சந்த் மன்னிப்புக் கேட்பது போல் பேசினான். அவனுக்கும் துயரம் தோன்றி இருந்தது. மூன்று பேரும் சிறிது நேரம் பேசவில்லை.

—ராம்சந்த்! இன்னும் கொஞ்சம் கிழக்காலே தேடினால் என்ன? என்றாள் சம்பகா.

—இவ்வளவு தூரம் கிழக்க வந்தாச்சு.. இனியும் போய்க்கிட்டே இருக்க முடியுமா!

—அப்போ ஜூலி எங்கேதான் போயிருப்பா?

—மண் மூடி இருக்கும்.

—மண்?

—ஆமாம்; தூசியும் மண்ணும் இந்த 140 வருடத்திலே அவளை மூடி இருக்கும்.

—நிச்சயம் நம்புறீங்களா!

—நிச்சயமாகத்தான் சம்பகா. இல்லாட்டி ஒரு சின்னத் தடயமாவது கிடைச்சிருக்கும். உள்ளே தரை வழுவழுன்னு எந்தவித வித்தியாசமும் இல்லாம ஒரே சீராக இருக்கு. மருந்துக்கு ஒரு மாறுதல் இருக்கணுமே? ஊஹூம்.

மல்லிக் நெஞ்சிலிருந்து இனமில்லாத விக்கல். இருவரும் பார்க்க அவன் கண்களில் நீர்.

—ராம்சந்த்! என்றான் துக்கமுடன் —மண்ணைக் கிளறிப் பார்க்க முடியுமா!

ராம்சந்த்துக்கு விரக்திப் புன்னகை. —அது முடியுமா மல்லிக்! நம்ப கிட்ட அதுக்கு எக்விப்மெண்ட் இல்லை! அப்புறம் அது எவ்வளவு கஷ்டமான வேலை!

காபினில் ராம்சந்த் உட்கார்ந்து விசைகளைத் தட்டிய போது,

ரூபாவின் அடி வயிற்றில் மெல்லிதாகச் சலனம் எழுந்தது. அவளது அடித்தளத்தின் டீசல் எஞ்சின் ஜுரூராக உசும்பியது.

விஞ்ச் ஸ்விட்ச் போட, நங்கூரத்தின் நீண்ட சங்கிலிகள் கடலுக்குள்ளிருந்து மெள்ள எழும்பி வந்து வரி வரியாக விஞ்ச்சில் படிந்து கொண்டன.

காம்பஸைப் பார்த்துப் பிடிகளை இழுக்க ரூபா மெள்ள அன்னம் போல் திரும்பினாள்.

சம்பகா அடுத்த அறையுள் நுழைந்தாள். கண்களில் மழை! கண்ணாடி வழியே வெளியே பார்க்க கடல் பெரிய விஸ்தாரமாக மெள்ள ஆடியது. அந்தக் கடலையும் அந்த இடத்தையும் விட்டுப் போகவே மனம் எவ்வளவு வெதும்புகிறது!

மல்லிக் தன் உடமைகளை எடுத்துக் கொண்டிருந்தான். மேலே கப்—போர்டிலிருந்து கம்பளி, போர்வை, பெட்ஷீட், பாண்ட், ஷர்ட்கள் எல்லாம் எடுத்து லெதர்ப் பையில் சொருகும் போது,

பளிங் என்று சத்தம்.

சம்பகா திரும்பிப் பார்த்தாள்.

பிறகு ஒரு சின்னத்தனமான ஆவலுடன் கீழே இறங்கி வந்து பார்க்க மேலே கப்-போர்டிலிருந்து அந்த கான்வாஸ் பை விழுந்திருந்தது.

முக்குளிப்பின் போது அவள் எடுத்துச் சென்றிருந்த பை.

அதை எடுத்தாள். உள்ளே உலோக சப்தத்தை ஏற்படுத்திய பொருள் துருத்திக் கொண்டு இருந்தது.

வெளியே அதை எடுத்தாள். கையில் வைத்துப் பார்க்க, களிம்பு ஏறிய தட்டு, வெள்ளித்தட்டு, அதை எடுக்கப் போய்த்தான் அவள் கடலுக்குள் மாட்டிக் கொண்டது.

விரைவாக விளக்கடிக்குப் போய் அதைச் சோதித்தாள்.

நெளிவுகள் நிறைய உள்ள விளிம்பு. உள்ளே மங்கிய பூவேலை. இடியான தட்டு. வெள்ளித் தட்டு.

பரபரப்புடன் மேலும் ஆராய, ஒரு கணம் குபீர் என்று எழுந்து — மல்லிக் என்று கத்தினாள்.

மல்லிக் திடுக்கிட்டான்.

—இங்கே வாங்க மல்லிக்!

மல்லிக் ஓடி வந்தான்.

—இதைப் பார்த்தீங்களா?

—தட்டு! இது ஏது?

—நான் முக்குளிச்சு எடுத்துட்டு வரல்லே!

—ஓ, மைகாட்! இதை அப்படியே போட்டு வச்சுட்டோம். உன் ஜுரத்தைக் கவனிக்கும் அவசரத்திலே கவனிக்கவேயில்லை.

—இதிலே என்ன எழுதியிருக்கு, பாருங்க மல்லிக்!

பார்த்தான்.

கண்கள் கொப்பளித்தன.

—சம்பகா, என்று ஒரு துள்ளுத் துள்ளினான். ஸீலிங்கில் கை இடித்தது. முகத்தில் ஆனந்தம் அளவு கொள்ளவில்லை. பழைய ஜீவன் துள்ளி வந்திருந்தது.

—சம்பகா! இதைப் பார்த்தியா! ...

Birthday present to L. Eston Esq., From Edward M. Palmerson, Captain Julie Galante.

சம்பகா விருட்டென்று எழுந்தாள். இருவரும் சேர்ந்து காபினுக்குள் பிரவேசித்தார்கள்.

தட்டைப் பார்த்ததும் ராம்சந்த் திக்குமுக்காடினான். படகை உடனே நிறுத்தினான், பரபரப்புடன் எழுந்தான்.

''ஒட்டுப் போடும்போது தபாலில் முத்திரை குத்துகிற நினைவு வந்து தொலைச்சிட்டுது சார்!''
''அதனால என்ன இப்போ?''
''ஒட்டுச் சீட்டில் இருந்த எல்லா சின்னத்தின் பேரிலும் குத்திட்டேன்....''



—இது எங்கே கிடைச்சது?

—தண்ணிக்குள்ளே நான் போனேனே, உள்ளே மாட்டிக்கிடல்லே? என்று நினைவுப் படுத்தினாள் சம்பகா.

—ஆமாம், இதை யாரும் முன்னாலேயே பார்க்கலையா?

—சம்பகாவுக்கு உடம்பு சரியில்லாத அவசரத்திலே எதையுமே கவனிக்கலே! இந்தக் கான்வஸ் பையை கப்-போர்டிலே நான்தான் தூக்கி எறிஞ்சேன். உள்ளே எதுவோ இருக்குன்னு கூட யோசிக்கல்லே!

சம்பகா இடை மறித்தாள். — நீங்க ரெண்டு பேரும் தட்டைப் பார்த்திருப்பீங்கன்னு நினைச்சுட்டேன்! பார்த்திருக்க வேண்டாமா? என்று ஆதங்கத்துடன் கேட்டாள் அவள்.

ராம்சந்த் ஒரு விநாடியில் அந்த இடத்தின் ஆழத்தைக் கண்டு பிடித்து, நங்கூரத்தைப் பாய்ச்சினான்.

பிறகு, சம்பகாவை உட்காரச் சொல்லி, அவளிடம் அந்த முக்குளிப்பு பற்றிய விவரங்கள் முழுவதையும் கேட்டான்.

அவள் கடலுள் போனது, சட்டம் போட்ட அமைப்பில் மாட்டிக் கொண்டது. உள்ளே அந்தத் தட்டு மின்னியது, அதை எடுக்கப் போய் வகையாக மாட்டிக் கொண்டது, தட்டை எடுத்த பிறகு நினைவு இழந்தது, எல்லாம் கூறினாள் அவள்.

ராம்சந்த் யோசனையில் ஆழ்ந்தான். —இது காப்டன் பால்மர்ஸன் எஸ்டனுக்குக் கொடுத்த பரிசு இல்லையா?

—ஆமாம் என்றான் மல்லிக்.

—எஸ்டன் யாரு?

—ஜூலியிலே டெபுடி கேப்டன்.

—அப்போ நீ பார்த்த உடைசல்தான் ஜூலியா?

—அப்படித்தான் இருக்கும்; என்று பெருமிதத்தில் சொன்னாள் சம்பகா!

—எவ்வளவு உயரம் இருந்தது? எவ்வளவு அகலம்.

—உயரம் எட்டு பத்தடி இருக்கும்! அகலம் அதிகமில்லே.

—படகு சைஸ்தான் என்றான் மல்லிக்.

—ஓ! என்று சொல்லி ராம்சந்த் யோசித்தான். இரண்டு நிமிடத்தில் பளிச்சென்று நிமிர்ந்தான்.

—மல்லிக்! அந்த இடிபாடு என்ன தெரியுமா!

—சொல்லுங்க!

—ஜூலி மூழ்கின போது எஸ்டன் ஒரு படகிலே தப்பிக்கப் பார்த்திருக்கான். ஆனா அலையிலே அகப்பட்டுப் படகு மூழ்கியிருக்கணும்.

மல்லிக் பிரகாசித்தான்.

—யு ஆர் ரைட் ராம்சந்த்!

-என் தியரி சரின்னா ஜூலி அந்தப்படகுக்கு நிச்சயம் கிழக்கிலேதான் மூழ்கி இருக்கணும்.

—எப்படிச் சொல்றீங்க'

—ஜூலி மூழ்கும் போது படகிலே யாராவது கிளம்பினா மேற்கேதான் போவாங்க! மேற்கேதான் கரையிருக்கு. அதனாலே படகு இருந்த இடத்துக்குக் கிழக்காலதான் ஜூலி இருக்கணும்.

—கிரேட்.



**கோடை கொளுத்தாதது வெய்யில் வதைக்காது!**

''ஜிமிக்கி இப்போது 'அவுட் ஆஃப் ஃபாஷன்' அல்ல; அதுதான் இன்று ரொம்ப பாபுலர்'' என்று வாதாடுகிறார் மேலட்டையில் காட்சி தரும் **மேனகா**.

''ஃபாஷன் மாறி எந்த நகை மவுசு இழந்தால் என்ன, பெற்றால் என்ன? புன்னகை மட்டும் என்றும் தன் மதிப்பிழக்காது'' என்கிறோம் நாம். ''ஆனால் ஒன்று, அது அலட்சியப் புன்னகையாயிராமல் அன்புப் புன்னகையாக மலர வேண்டும்!''

''அத்தகைய புன்னகைக்குச் சென்னையின் வரலாறு காணாத 112 டிகிரி வெய்யிலைக் கூட மறந்து விடச் செய்யும் ஆற்றல் உண்டு'' என்கிறார்—

வண்ணப்படம் எடுத்த **ராதிகா**

●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●

மேலும் இரண்டு நிமிடம் ராம்சந்த் யோசிப்பு.

—இப்போ நாம்ப திரும்பறோம். மறுபடியும் தேட ஆரம்பிக்கிறோம்.

சம்பகாவும் மல்லிக்கும் பொத்துக்கொண்டு புன்னகை யிட்டார்கள்.

ரூபா மெள்ள ஒரு நீர்ப்பறவை போல் வட்டமிட்டுத் திரும்பினாள்.

**ம**றுநாள் தேடல் ஆரம்பித்தது.

ராம்சந்த் அதிகமாக எக்கோ ஸவுண்டரையும் அஸ்டிக்கையும் உபயோகித்தான்.

கிழக்கால் சென்றபோது ஆழம் நூறு அடியை எட்டியிருந்தது.

ஒருவாரம் முழுதும் முதல் முயற்சியைத் தொடர்ந்ததில் பலன் ஏதும் கிடைக்கவில்லை.

அது அவர்களுக்குச் சோர்வை அளித்தது.

ஆனால் ராம்சந்த் தளரவில்லை.

அவனுடைய யோசனையில் ஜூலியின் இடிபாடு லேசாக மணலில் புதைந்திருக்கும் என்று உறுதியாகத் தோன்றியது.

ஒன்று; தண்ணீருக்குள் மூழ்கி அதைக் கண்டு பிடிக்க வேண்டும்.

அல்லது....

அந்த இரண்டாவது வழி அவன் மனத்தில் உடனே ஜனித்து விட்டது.

கடல்தரையை அடி அடியாகப் பெருக்க நினைத்தான் அவன்.

அரை பர்லாங் தூரத்தில் இரு படகுகளை நிறுத்தி நடுவில் நீளமான கேபிளைத் தொங்க விட்டு கடல் ஆழத்தில் அதை அமிழ்த்தி இரு படகுகளை மெல்ல நகரச் செய்வதன் மூலம் தரையை கேபிள் உதவியால் அப்படியே பெருக்கிவிட வேண்டும்.

உடனே காரியங்கள் மளமள என்று நடந்தன. இரண்டாம் படகை ஒரு வாரத்தில் வரவழைத்தான்.

அந்தப் படகு மல்லிக்கின் நண்பன் கோபியையும் அழைத்து வந்தது.

நண்பர்களும் ராம்சந்த்தும் கூடி யோசித்து ஒரு பிரும்மாண்ட தேடலுக்குத் தயார் ஆனார்கள்.

ராம்சந்த்துக்கு வெறியே பிடித்திருந்தது.

ஒவ்வொரு நாளும் கடலின் அடியைக் கேபிள் புரட்டிக் கொண்டே வந்தது. சின்னத் தடங்கல் தெரிந்தால்கூட உடனே முக்குளித்து காரணத்தைத் தெரிந்து கொண்டான் ராம்சந்த். தேடிய பகுதிகளைக் குறிக்கும் வண்ணம் இரும்பு மிதப்புகளைநீரில் மிதக்கவிட்டார்கள்.

அந்த மிதப்புகள் கடலில் ஒரு ரன்வே போல் புள்ளிகளாகத் தெரிந்தன.

ஒவ்வொரு மிதப்பும் நீளச் சங்கிலியில் பிணைக்கப்பட்டுக் கீழே சின்ன கனமான இரும்புக்குண்டோடு கோக்கப் பட்டிருந்தது.

Buoyகள் மிதப்பன போல் இவை மிதந்தன.

இந்த மிதப்புப் புள்ளிகளைக் கவனித்துக் கொண்டு ஒரு இடத்தை இருமுறை தேடாமல் மேலே மேலே தேடிக்கொண்டே போக, மேலும் இரு வாரங்கள் ஓடி விட்டன.

அநேகமாக எல்லாருக்கும் களைப்பு ஏற்பட்டது. முயற்சிகள் மீது ஒரு அவநம்பிக்கை ஏற்பட்டது.

நம்பிக்கை சிறிதும் குறையாமல் இருந்த ஜீவன்கள் மல்லிக்கும் சம்பகாவுந்தான்.

ஒருவரை ஒருவர் உற்சாகப்படுத்தி, ராம்சந்த்தையும் அவர்கள் உற்சாகப்படுத்தினார்கள்.

இருபது நாள் சென்றதும் கோபி மிகவும் அலுத்துப் போனான்.

—மல்லிக்! கடைசியில் இவ்வளவு செலவு பண்ணியும் நமக்கு....

—மூடு கோபி! அபஸ்வரம் போடாதே. ராம்சந்த் ரொம்ப தீவிரத்திலே இருக்கான். கண்டு பிடிக்காம விடப்போறதில்லே.

முதல் ஸ்பெல் முடிந்ததும், எல்லோரும் பூந்தளம் ஊரில் இரண்டு நாள் ரெஸ்ட் எடுத்தார்கள்.

படகுகளையும் ஒழுங்குபடுத்தி, மேலும் உபகரணங்களையும் சேர்த்துக் கொண்டு, இரு வாரத்துக்கான கடல் பயணத்தில் கிளம்பினார்கள்.

கடல் வெளியை அடைந்து முதல் முறை கேபிளைக் கீழே விட்டவுடன் அது அறுந்தது. ராம்சந்த்துக்கு ஆத்திரமாக இருந்தது.

மீண்டும் இரு படகுகளை ஒன்று சேர்த்துத் தான் கேபிளை ஒக்கிட முடியும்.

அதை நினைக்கும் போது, அந்தக் கடல் வெளிப் பாதையில் கடைசியாக நிறுத்தியிருந்த மிதப்பு எங்கே?

அதைக் காணவில்லை.

அறுத்துக் கொண்டு ஓடி விட்டிருந்தது.

எங்கே போயிருக்கும்?

ராம்சந்த் அதை விட்டுவிட மனம் இல்லாமல்,

பைனகுலர்ஸ் மூலம் பார்க்க, கிட்டத்தட்ட அரை மைல் தாண்டி அந்த மிதப்பு தெரிவது போலிருந்தது.

—அதைப் போய் இழுத்துட்டு வருவோம், என்றான் ராம்சந்த்.

—வேண்டாம் ராம்சந்த்! விட்டுடலாம், என்றான் மல்லிக்.

—நோ நோ! நம்ப பொருள் ஒரு துரும்பைக்கூட விட்டுடக் கூடாது! இழுத்துட்டு வருவோம்.

படகு அதை நோக்கிச் சென்றது.

அரை மைலில் தென்பட்ட அது அவர்களது மிதப்புத்தான்.

கீழே உள்ள குண்டை அறுத்துக் கொண்டு அது பிரயாணித்திருந்தது.!

ராம்சந்த் படகை அதன் அருகில் நிறுத்திச் சங்கிலியால் கொக்கி மாட்டி இழுக்க,

என்ன இது?

அது எளிதாக வரவில்லை.

சங்கிலியின் பலம் கூடியது.

இழுக்க இழுக்க வர மறுத்தது மிதப்பு!

அதைப் பார்த்த ராம்சந்த்துக்கு அதிசயம் கூடியது.

ஓடிப் போய் எக்கோ ஸவுண்டரில் ஆழம் பார்க்க,

அது முப்பதடி உயரத்தில் பெரிய மேடு இருப்பதைக் காட்டியது.

ஜூலியா அது?

உள்ளே படுத்திருக்கிறாளா?

பக்கவாட்டத்தில் சாய்ந்திருக்கிறாளா?

(தொடரும்)

## சினி மினி



சமீபத்தில் மூக்குக் குத்திக் கொண்டார் லதா, ரொம்ப நாளைக்கு முன்பு செய்து வைத்திருந்த ஒரு வைர மூக்குத்தியைப் போட்டுக் கொள்ள. ரொம்பவும் தான் வலிக்கிறது என்றார்.



காலையில் எதை வேண்டுமானாலும் மறப்பார் நடிகர் சுமன். ஆனால் உடற்பயிற்சியை மட்டும் மறக்கமாட்டார். எல்லாவிதமான உடற்பயிற்சி சாதனங்களும் இவர் வீட்டிலிருக்கின்றன என்று சொல்ல முடியாவிட்டாலும் ஒவ்வொன்றாக இப்பொழுது சேர்க்க ஆரம்பித்திருக்கிறார்! இவர் வீட்டில் நுழைந்தவுடன் காட்சி தருவது ஷீரடி சாய் பாபாவின் சிலை. அதனடியில் இவரது முதல் படமான 'நீச்சல் குள'த்தில் இவர் பேசிய முதல் வசனத்தை எழுதி வைத்திருக்கிறார்! தகவல்: குமார்




கடலில் அதிகப்பட்ச ஆழம் ஆறேமுக்கால் மைல, 'மரியனஸ் ட்ரெஞ்ச்' என்று சொல்லப்படும் இந்தக் குழி பஸிபிக் கடலில் இருக்கிறது.
ஜியார்ஜ் பில் எழுதிய 'தி ஸீ'

## 23

ராம்சந்துக்கு ஆச்சரியம் மிகையாக, கிரேனின் சக்தியை அதிகமாக்கினன். முதல் சில நிமிடம் அந்த மிதப்பு அசரவில்லை. பிடிவாதம் பிடித்தது. கிரேனின் உக்கிரம் அதிகமாக்கப் பட்டதும் மெள்ள ஓர் அசைவு. பிறகு ஒரு டக்—ஆம்ப்— வார்! சங்கிலி விறைக்க, அது அறுபடுமோ என்று ராம் சந்த் கவலை. தண்ணீரின் மேற்பரப்பை பார்த்துக்கொண்டே இருந்தான்.

கிரேனின் இழு சக்தியைச்சிறிது தளர்த்தி பிறகு மீண்டும் படிப்படியாக மேலே கொண்டு செல்ல மிதப்பு மெல்ல மேலே எழும்பியது.

ராம்சந்த் ஊகித்தான். மிதப்பு எப்போதோ அறுபட்டிருக்கிறது. அதன் சங்கிலியோடு நகர்ந்து கொண்டே போயிருக்கிறது. இவ்வளவு தூரம் வந்த பிறகு சங்கிலியின் நுனி ஏதோ ஒரு பொருளில் மாட்டிவிட்டது. அந்தப் பொருளுடன் சங்கிலி இப்போது மேலே வந்து கொண்டிருக்கிறது. கிட்டத்தட்ட ஒரு பாதாளக் கரண்டியின் வேலையை இந்தச் சங்கிலி செய்கிறது.

ஹேரா ஹேரா

எல்லோரும் உற்சாகமாகக் கத்தினர்கள்.

---

19.5.80 திங்கள் மாலை திருச்சி நகரில் விவசாயிகள் பேரணி நடந்தது. அவர்களுடைய நியாயமான கோரிக்கைகளை வற்புறுத்துவதில் தவறில்லை. ஆனல் அவர்கள் எழுப்பிய கோஷங்கள் பொது மக்களை புண்படுத்தி விட்டன.

1. காரோட்டம் நின்றுபோனல்....உங்கள் தேரோட்டம் ஏதடா?
   சோறு போடுவது யாரடா? சோறு போடும் உங்கப்பண்டா!
3. கோழி வளர்ப்பது நாங்கடா! முட்டை தின்பது நீங்கடா!
4. ஆடு வளர்ப்பது நாங்கடா. அறுத்துத் தின்பது நீங்கடா!

இப்படியே 'டா' போட்ட கோஷங்கள் -முகுந்தன்

---

இரண்டு மூன்று நிமிடங்களில் சங்கிலி பூராவும் மேலே வர, அதன் அடியில் கொக்கி போல் மாட்டிக் கொண்டு இருப்பது என்ன?

தளத்தில் வைத்தார்கள்.

ஒரு நீண்ட சதுரப் பொருள். மேலே களிம்பும், பவழப் படிவங்களும்.

சங்கிலியின் கண்ணியில் அந்தப் பொருளின் கொக்கி போன்ற பிடிப்பு வசமாக மாட்டியிருந்தது. அதனல் சங்கிலியோடு இழுபட்டு மேலே வந்து விட்டது.

சுத்தியலையும், உளியையும் கொண்டு வேலை செய்ய, சீக்கிரம் ஒரு துரு ஏறிய பெட்டகம் தோற்றமாகியது. பழங்காலப் பெட்டகம்.

மூடி எங்கே என்று கண்டுபிடிக்க முடியவில்லை. உத்தேசமான ஒரு இடத்தை உடைத்தா[illegible] உள்ளே ஈரக் களிமண்ணும் களிம்புமாக ஏதோ பொருள்களை வெளியே எடுத்தார்கள்.

மண்ணைக் கழுவி, களிம்புகளை வழிக்க, ரொகோகோ கலையுடன் கூடிய டின்னர் பிளேட்டுகள்! மட்கி யிருந்தன. பிளேட் நடுவில் இனமில்லாக் கறை. அதன் அடியில் மட்கிய எழுத்துக்கள்.

என்ன எழுத்துக்கள் அவை?

ராம்சந்திடம் சக்தியான அமிலங்கள் இருந்தன. பிளேட்டுக்களை ஒரு ஸிங்கில் வைத்து அமிலத்தை லேசாகப் பூசிவிட்டு, தண்ணீரில் கழுவி எடுக்க—

—மல்லிக்!

உற்சாகம் பீறிய குரல்.

மல்லிக் துள்ளி வந்தான்.

—பாரு! ஜூலி காலண்ட்.

மல்லிக் மூச்சை நிறுத்திப் பார்த்தான். அந்தப் படம் ஒரு கப்பலின் படம். அதன் அடியில் அந்த வார்த்தைகள். எச். எம். எஸ். ஜூலி காலண்ட்!

உய்யோ என்று விசில் அடித்தான் மல்லிக். ராம்சந்தின் முகத்தில் மகிழ்ச்சி மயம். சம்பகா இருவரையும் பார்த்துப் பிரமித்து நின்றாள்.

—சம்பகா! ஜூலி கிடைச்சுட்டா! ஜூலி கிடைச்சுட்டா! என்று கத்தினன் ராம்சந்த்.

கப்பல் பெயர் தரித்த பிளேட்டுகளை விசேஷமாகத் தருவித்து டின்னர் உபயோகத்துக்காக அந்நாளில் வைத்திருப்பார்கள். பிரசித்தி பெற்ற நிறுவனங்கள்தான் இந்தப் பிளேட்களைத் தயார் செய்வது வழக்கம்.

மூவரும் ஆளுக்கொரு பிளேட்டைத் தூக்கிக் கொண்டார்கள். வட்டமாக ஒரு ஆட்டமே ஆடினார்கள்.

ஆரவாரம் பெருகி வழிந்த பிறகு,

—நாம்ப உடனே கீழே போறோம். கம் ஆன்! டைவிங் சூட் போட்டுக்குங்க.

மூன்று பேரும் போட்டுக் கொள்ள ரூபாவை அம்போ என்று விட்டு விட்டு மூவரும் நீருக்குள் குதித்தார்கள்.

மூன்று வீரர்கள் போல் இணையாக நீருள் சொருகினார்கள்.

படிப்படியாகக் கீழே இறங்கி, அறுபதடி தாண்டியதும் மேலே இருந்து வந்துகொண்டிருந்த மெல்லிய வயலட் வெளிச்சமும் ஒரு மனோகர ட்விலைட் காட்டியது. ராம்சந்த் டார்ச்சை அழுத்தினான்.

சைகை காட்டி இன்னும் இறங்கிக் கொண்டே போனான்.

கீழே, கீழே, கீழே.

தரையை அடைந்தபோது எல்லாம் நிசப்த மயம். தாயின் கர்ப்பம் இப்படித் தான் இருந்திருக்கும்.

கையில் உள்ள காம்பஸ் கடிகாரத்தைப் பார்த்துத் திசை அறிந்து ராம்சந்த் மெள்ள நீந்த இருவரும் தொடர்ந்தார்கள்.

கடைசியில்.....

ஒரு இடத்தில் நின்று ராம்சந்த் சுற்றிவர வெளிச்சம் பீச்சினான். எங்கே அந்த மேடு?

ஒவ்வொரு திசையாக அடித்து வர, வடகிழக்கே வந்ததும், ஆகா, அது என்ன?

அற்புதமான காட்சி! திரைக்குள் ஓர் அரச குமாரி போல் இருக்கும் பெரிய உருவம் என்ன?

ஜூலியா?

டார்ச்சின் வெளிச்சம் நீரைத் துளைத்துக்கொண்டு பாய, எங்கும் லேசான மினுமினுப்பு.

ஒரு பவழப் படிவமான வடிவத்துடன் தரையில் ஒருக்கணித்துப் படுத்துக் கொண்டிருந்தது ஒரு கப்பல்!

ஜூலிதானா?

பவழப் படிவங்கள் கிட்டத்தட்ட ஒரு முழுக் கப்பல் உருவத்தையும் காட்டியது.

எல்லோரும் சிலிர்த்தார்கள் திகிலும் அதிசயமும் கலக்க அந்த உருவத்தைப் பார்த்தார்கள். முகங்களில் தெய்வத்தைக் கண்டது போல் பிரமிப்பு!

ராம்சந்த் சுற்றியும் டார்ச்சை அடித்தான். ஒரு விஷயம் ஆச்சரியமாக அவர்கள் கண்ணில் பட்டது.

ஜூலி (ஜூலிதானா?) இருந்த இடம் ஒரு சாய்மானப் பள்ளமாக இருந்தது.

அந்தப் பள்ளத்து விளிம்பில் அது ஒட்டி நின்று கொண்டிருந்தது.

பள்ளத்தில் டார்ச் அடித்துப் பார்த்தால் வெளிச்சம் சிறிது தூரத்தில் மறைந்து விட்டது. ஆழம் தெரியவில்லை.

ராம்சந்த் கப்பலைச் சுற்றி வந்தான். ஒரு பவழ முகட்டில் கப்பல் படுத்திருந்தது. கப்பலின் ஏராள கனம் அதைப் பள்ளத்தில் உருள விடாமல் செய்திருந்தது.

கப்பல் சாய்ந்திருக்கும் பக்கம் போக வேண்டாம் என்று ராம்சந்த் எச்சரிக்கை காட்டவும்,

எல்லோரும் பக்கவாட்டில் சென்று ஆய்ந்தார்கள்.

கீழே தரையில் அநேக இடிபாடுகள் சிதறிக் கிடந்தன.

அவைகளைப் பார்த்தால் சின்னச் சின்ன ஜந்துகள் போல் தெரிந்தன.

ராம்சந்தின் டார்ச் எல்லா இடங்களையும் வெளிச்சமாக்கியது.



ஜூலியின் போர்ட் ஸைடில் பெரிய துவாரம் விழுந்திருப்பதும், அதன் மூலமே இந்த இடிபாடுகள் சிதறி இருப்பதும் தெரிந்தது.

மூவரும் இடிபாடுகளைக் கோத ஆரம்பித்தார்கள். வெவ்வேறு நீட்டங்களில் இனமில்லாப் பொருட்கள் கிடைத்தன. பவழப் படிவங்கள் அவற்றை மூடியிருந்தன.

ராம்சந்த் ஒரு குறிப்பிட்ட இடிபாட்டைத் தோண்ட ஆரம்பித்தான்.

அது ஒரு சின்ன மேடு. தோண்டும்போது ஒரு கூடுபோல் அமைந்திருப்பது தெரிந்தது.

அதை மூவருமாக உடைத்து எடுக்க, உள்ளிருந்து பல ஜவ்வு ஜந்துக்கள் பீறிக்கொண்டு ஓட,

இதென்ன கட்டிகள்?

ஒரு கட்டியை ராம்சந்த் எடுத்தான்.

என்ன கனம்?

மேலே களிம்பு மூடி அதன் சுயஉருவம் தெரியவில்லை.

அதற்குள் இரண்டாவதைச் சம்பகா எடுத்தாள்.

அது நடுக்கட்டியாக இருந்ததால் ஆச்சரியமாகக் களிம்பு அதிகம் பற்றவில்லை.

சம்பகா வெளியில் அதைத் தூக்க, அது மெல்லிதாகப் பளிச் பளிச் என்று ஒளி காட்டியது.

மாஸ்க்கினுள் அவள் கண்கள் பெரிதாகத் தெரிந்தன.

மல்லிக் அதைப் பார்க்க, தங்கம் என்று உணர்ச்சியில் ஒரு தந்தி பறந்தது.

ராம்சந்த் பார்த்தான்.

துள்ளி, கையை உயரே தூக்கினான்.

சம்பகாவை நோக்கி வெற்றிச் சைகை காட்டினான்.

ஐந்து கட்டிகளையும் ஸ்லிங்கில் கட்டி விட்டு,

---

## கட்டுப்பாடு!

ரஜினிகாந்த் தமது பழக்க வழக்கங்களைப் பற்றிக் கூறுகிறார் ''ஒரு காலத்தில் எல்லாமே அதிகமாக இருந்தது. இப்பொழுது எல்லாவற்றையும் குறைத்து விட்டேன். இது ஒன்று தான் பாக்கி! இதையும் விட்டுவிட முயற்சி செய்கிறேன்.'' அவர் குறிப்பிட்டது தம் கையிலிருந்த சிகரெட்டை! ஒரு நாளைக்கு ஐந்துக்குமேல் குடிப்பதில்லை என்று கட்டுப் படுத்திக் கொண்டிருக்கிறார் அவர்.

**–ருக்மிணி ராமச்சந்திரன்**



மூவரும் கப்பலை நெருங்கினார்கள். என்ன பயபக்தி! என்ன விசுவாசம்! பொத்தல் வழியே உள்ளே எட்டிப் பார்த்தார்கள்.

ராம்சந்த் டார்ச்சை அடித்தான். உள்ளே அந்த ஹல் பகுதியில் ஏகப்பட்ட குவிபாடுகள். ஓர் அம்பாரமாக அவை தெரிந்தன.

மெள்ள உள்ளே போக ஆச்சரியமாக ஒரு கப்பலின் ஹல் கிட்டத்தட்ட முழுசாகத் தெரிந்தது.

நடைபாதைகள், உடைந்த ஏணிகள், கொக்கிகள், செப்பு ஃபிட்டிங்கள், நொறுங்கிய காபின்கள், பாதி தெரியும் வீல், மாஸ்டின் அடிப் பாகங்கள், சில முழுமையான அறைகள், சாப்பாட்டுப் பாத்திரங்கள், தட்டுகள், இரண்டு மண்டை ஓடுகள், அங்கங்கே இரும்புப் படிகள், மருப் பாட்டில்கள் எல்லாம் தெரிய வந்தன.

வழியில் உள்ள இடிபாடுகளை அவ்வப்போது எடுத்துச் சோதித்துக் கொண்டே ராம்சந்த் மேலே போனான். ஒரு இடத்தில் நீண்ட சதுர பிளேட் போல ஏதோ கிடைக்க, கையில் எடுத்துப் பார்த்தான்.

செம்புப் பிளேட். மண்ணைக் கையில் வழித்துப் பார்க்க, டெபுடி காப்டன், 'எச். எம். எஸ். ஜூலி காலண்ட் என்று எழுத்துக்கள் பள்ளம் பறித்தலாகத் தெரிந்தன.

கப்பல் ஜூலிதான் என்று இருந்த கொஞ்ச நஞ்ச சந்தேகமும் இப்போது தீர்ந்து விட்டது.

மல்லிக்கிடம் அதைக் காட்ட, அவன் உணர்ச்சியுடன், அந்தப் பிளேட்டைத் தொட்டு மாஸ்கில் ஒத்திக்கொண்டான்.

பத்து நிமிடத்தில் அந்தக் கப்பல் முழுதையும் ஆய்ந்தார்கள்.

மேல் தளங்கள் யாவும் உடைந்து விட்டன. கீழ்த் தளம் இரண்டும் பாதி இடிபாடுகளில் கிடந்தது.

கடைசித் தளத்தில் வெள்ளி, தங்கம் வைத்திருக்கும் பொக்கிஷ அறை அம்பாரமான இடிபாடுகளில் கிடந்தது.

அந்தத் தளத்துள் இறங்க ஆவல் இருந்தும் ஆபத்து என்று நினைத்து அதைத் தவிர்த்தான்.

கடலுக்குள் எந்த இடிபாடும் திடீரென்று மேலே சரிந்துவிடத் தயாராக இருக்கலாம்.

ஆய்வை ஒருவாறு முடித்ததும் போகலாம் என்று ராம்சந்த் சைகை காட்டினான். மனமில்லாமல் மேலே ஏறத் தொடங்கினார்கள்.

**ஒ**ரு மணி நேரத்துக்குப் பிறகு ரூபாவில் ஏறி அமர்ந்து ஆசுவாசப்பட்டு, டைவிங் சூட்களைக் களைந்துவிட்டு, அந்த ஸ்லிங் கயிற்றை மேலே இழுத்தார்கள்.

ஐந்து நிமிடங்களில் ஸ்லிங் மேலே வர, தளத்தில் அதைப் பரத்திப் பார்த்தார்கள். ஐந்தும் தங்கப் பாளங்கள். செங்கல் போல நீள அகலம். பாங்க் ஆஃப் இங்கிலாந்து என்று அதில் முத்திரைகள்.

மல்லிக் கண்கள் தழுதழுத்தன. கீழே குனிந்தான். அவைகளை முத்தமிட்டான்.

பின்னர் ராம்சந்த் ஒரு பாப் இசையைப் போட, மூவரும் எழுந்து கை கொட்டித்

தான்தோன்றித் தனமாக ஆட்டம் போட்டார்கள்.

மல்லிக்கிற்கு இமய உச்சியை அடைந்த உணர்ச்சி. வாழ்க்கையில் எதிர் பாராத அதிர்ஷ்டம் முத்தமிட்டு விட்டது. அவன் செய்த முயற்சிகளுக்கெல்லாம் கடைசியில் பலன் கிட்டிவிட்டது.

சம்புகாவை அடிக்கடி பார்த்தான். அவள் எப்போதும் புன்னகை வீசிக் கொண்டிருந்தாள்.

வாழ்க்கையில் ஒரு விநோத அனுபவம் அவளை ஆட்டி வைப்பது போலிருந்தது.

அவள் வாழ்க்கை முறை மாறுவதற்கே ஒரு வழி திறக்கிறது என்று நினைத்தாள்.

மல்லிக்கின் மீது அவளுக்கு இப்போது எவ்வளவு நம்பிக்கை பிறந்தது!

உலகத்திலேயே ஹீரோ அவன் என்று தோன்றியது. அடிக்கடி அவனைக் கடைக் கண்ணால் பார்த்தாள்.

தனக்குள் நிறையச் சிரித்துக் கொண்டாள்.

ராம்சந்த் இதற்குள் ஒரு நினைவுடன் காபினுள் உட்கார்ந்து, யந்திரத்தை முடுக்கி வைத்து, ரூபாவைச் சிறிது நகர்த்திக் கொண்டு போனான்.

பிறகு எக்கோ சவுண்டரில் ரீடிங் வந்ததும் 'ஆ' என்று துள்ளினான்.

மல்லிக் ஓடிவந்து என்ன என்றான்.

—ஜூலி உட்கார்ந்திருக்கும் சரிவு பக்கத்தில் ஒரு பள்ளம் இருக்கிறதே!....

—ஆமாம்! டார்ச் அடித்துப் பார்த்தேனே!

—அதன் ஆழம் மூன்று மைல்!

மல்லிக் திடுக்கிட்டான்.

—மூணு மைல்?

—ஆமாம்! உலகத்திலேயே இந்த ஆழம் மூணாவதாகவோ நாலாவதாகவோ இருக்கணும். இதுவரையும் எந்த சர்வேயிலும் சார்ட் ஆனதில்லே! இது நம்ப கண்டு பிடிப்பு!

-'ஜூலி'ஸ் டிரென்ச்'னு நாம்ப பெயர் சூட்டலாம்.

—ஓ! பொருத்தம். ஜியாகரபிகல் சொஸைட்டிக்குத் தெரியப்படுத்துவோம். ஆனா அதுக்கு முன்னாலே தங்கத்தை எல்லாம் எடுத்துடணும். பிறகுதான் மற்றதெல்லாம்....

எல்லோரும் ஒரு அவசர விருந்து தயாரித்து அவசரமாகச் சாப்பிட்டார்கள்.

பின்னர் இரண்டாவது படகுக்கும் வயர்லெஸ் அனுப்பி, கோபியை, வரவழைக்க அவனும் அவர்கள் சந்தோஷத்தில் கலந்து கொண்டான்.

இரவு நால்வரும் காபின் விளக்கை எரித்துக் கொண்டு, ஜூலியின் அனைத்துப் பொக்கிஷத்தையும் மேலே கொணர்வது பற்றித் திட்டங்கள் போட்டார்கள்.

வேறு யாருக்கும் மூச்சுகூட விடாமல், இரண்டு படகுகளை வைத்தே பல மாதம் கஷ்டப்பட்டாலும் பொக்கிஷங்கள் முழுவதையும் எடுப்பது என்று தீர்மானித்தார்கள்.

எளிதில் எடுக்கும் முறைகளை அலசிவிட்டுப் படுக்கப் போனார்கள்.

நடு நிசி! அலைகளின் உலைப்புகள். மற்றப்படி நிசப்தம்.



**புதுமைப் பழக்கம்**

ஏ. வி. எம். தயாரிப்பாக ''முரட்டுக் காளை'' திரைப்படம் உருவாக்கி வரும் சகோதரர்கள், சரவணன், குமரன், பாலசுப்பிரமணியம் ஆகியோரில், ஏ. வி. எம். சரவணனுக்குப் புதுமையான ஒரு பழக்கம் இருக்கிறது. அவருடைய அறைக்குள் யார் நுழைந்தாலும் அவரைப் புகைப்படமெடுத்து' வைத்துக் கொள்வார். இதற்காகவே கேமிரா ஒன்று எப்போதும் அவரது மேஜையின் வலப்புற இழுப்பறையில் தயாராயிருக்கும். கிட்டத்தட்ட மூவாயிரத்துக்கு மேற்பட்ட படங்கள் அடங்கிய ஆல்பமும் அதே மேஜை இழுப்பறையில் இருக்கிறது. - குமார்

---

மல்லிக் விழித்திருந்தான்.

தூக்கம் வரவில்லை.

எவ்வளவு பெரிய கண்டுபிடிப்பு அது?

அவன் வாழ்க்கையைப் பொறுத்தவரையில் அது மகத்தானது.

சிந்தனைகள் மாறி மாறி வர, அதன் மகிழ்ச்சியில் அவனுக்குத் தூக்கம் கொள்ளவில்லை.

அது என்ன சத்தம்? யாரோ தண்ணீருக்கு வெளியே சிலிர்ப்பது போல!

கூர்ந்து கேட்டான்.

தொடர்ந்து தண்ணீர் அலைபடும் சத்தம். சில அசைவுகளின் சத்தம்.

மல்லிக் உஷாரானான்.

நுனிக் காலில் எழுந்திருந்து நின்றான்.

காபின் சன்னல் பக்கம் வந்தான்.

அந்த வெளித்தளத்தைப் பார்க்க மின் சுடர்கள் எங்கும்! கடலில் ஃபாஸ்பரஸ் நீலம். கிராதிக்கு மேல் வரும் உருவம் என்ன?

அதை நிச்சயிக்கு முன் திடீரென்று அலார சப்தமும், வெளித் தளத்தில் ஆட்டோமாடிக் வெளிச்சங்களும்.

ராம்சந்த் யமகாதகன். படகைச் சுற்றிப் பாதுகாப்பு வேலி வைத்திருந்தான்.

டமீர்!

ராம்சந்தின் காபினிலிருந்து துப்பாக்கி போல் சத்தம்.

அந்த உருவம் ஆ! என்று வீறலுடன் விழ, அது பெண்ணா? - மல்லிக் திடுக்கிட்டான்.

(அடுத்த இதழில் முடியும்)

# கடலுக்குள் ஜூலி



புஷ்பா தங்கதுரை

**வருங்காலத்தில் தீரமுள்ள இளைஞர்கள் இது போன்ற கடல் சாகசங்களில் இறங்க வேண்டும். இந்தியாவின் கடற்பிரதேசம் ஒரு விலை மதிக்க முடியா பொக்கிஷம். - புஷ்பா தங்கதுரை**

## 24

மல்லிக் அந்தச் சந்தர்ப்பத்தை அவசரமாக ஆராய்ந்தான். அவன் மூளையில் ஒரு பரிச்சய உணர்வு சுள் என்றது. மேலே வந்திருக்கும் பெண் ரீடா! அதுதான் அவனது திடீர் உணர்ச்சி.

தெரிந்ததும் கதவைத் திறந்து வெளியே றினன். —ராம்சந்த் ப்ளீஸ் ஸ்டாப்! என்று கத்தினன். ஓடிப்போய் அந்தப் பெண் அருகில் மண்டியிட்டு அமர்ந்தான்.

அவள் ரீடா!

முகம் சுருண்டிருந்தது. கண்கள் துடித்திருந்தன. உடலில் நடுக்கம் தெரிந்தது. —ரீடா, ஆர் யூ ஆல் ரைட்? என்றான்.

அலங்க மலங்கப் பார்த்தாள். உதட்டு ஓரத்தில் நிச்சயமில்லாத புன்னகை வந்தது. —நான் மல்லிக்தான். என்று அவன் உறுதி கூற அந்தப் புன்னகை அழகாக காலை சூரியனுயிற்று.

இதற்குள் ராம்சந்த் அவசரமாக போர்வையுடன் வந்தான். கையில் வைத்திருந்த 1.38 அப்படியே இருந்தது. எந்த நிலையும் திடீரென்று உருவாகலாம் என்று நினைத்தான் அவன்.

—இந்தப் பெண் எனக்குத் தெரியும்! என்றான் மல்லிக்.

—யார் இவ?

—சொல்றேன்.

ரீடா ஈரத்துடன் எழ; மல்லிக் ராம்சந்தின் போர்வையை வாங்கிப் போர்த்தினன்.

இருவரும் அவளை அழைத்து காபினுக்குள்ளே போனார்கள். சம்பகா விஷயம் அறிந்து ஓடிவந்து, தன் ஸாரி ஒன்றை அவளிடம் கொடுத்தாள்.

தன்னைத் துடைத்து உடை மாற்றி வந்த ரீடா சிறிது ஆசுவாசமாகி இருந்தாள். காபினின் திரை பூரா இழுத்து விட்டாள். வெளி விளக்குகளை அணைக்கச் சைகை காட்டினள்.

அவள் ஸாரி உடுத்தி வருவதற்கு முன் ராம்சந்திடம் மல்லிக் சுருக்கமாக அவளைப் பற்றிக் கூறினன்.

—அது சரி மல்லிக், இவ நம்பகமானவளா?

—நிச்சயமா! இவதான் சார்ட் எடுத்துக் கொடுத்தா; அப்பாவுக்குத் தெரியாம.

—எதுக்கு இங்கே வந்திருக்கா?

—விசாரிக்கணும்.

—இந்த இருட்டிலே எப்படி வந்தா?

—அதையும் கேட்கணும்.

—உளவு பார்க்க வந்திருக்காளா?

—இருக்காது.

—நிச்சயமா எப்படிச் சொல்ல முடியும்?

—விசாரிக்கலாம்.

இருவரும் குழம்பிக் கொண்டு உள்ளே வர, ரீடா அவர்களுக்காகக் காத்திருந்தது போல் எழுந்து, எழுதுவதற்கு பேப்பரும் பென்சிலும் கேட்டாள்.

கொடுக்கப்பட்டதும் எழுதஆரம்பித்தாள்: (மல்லிக்! ஆபத்து. நீங்க இங்கே தங்கியிருப்பதை வொய்ட்டும் அப்பாவும் கவனிச்சுட்டாங்க! ஜூலியைக் கண்டு பிடிச்சாச்சுன்னு நினைக்கிறாங்க! நாளைக்கு Bathys Caphe கொண்டு வராங்க.

ராம்சந்த் புருவத்தைச் சுருக்கினன். பேதிஸ்காஃப் ஒரு சின்ன அளவு ஸப்மரீன். தண்ணீருக்குள் இயங்கி, கடல் உட்புறங்களை ஆராய வசதி பெற்றது. அதை அவர்கள் இங்கே கொணர்ந்தால் ஜூலியைக் கண்டு பிடித்து விடுவார்கள்.

—பேதிஸ்காஃப் அவங்க கிட்டே இருக்கா? (ஸிலோன்லேர்ந்து வரவழைக்கிறாங்க.)

—நீ எப்படி இங்கே வந்தே? (மல்லிக்.)

(எட்டிப் பாருங்க!)

மல்லிக்கும் ராம்சந்தும் எட்டிப் பார்க்க, வெளியே நங்கூரச் சங்கிலி கடல் நீரைத் தொடும் இடத்தில் ஒரு ஸிலிண்டர் போன்ற யந்திரம் ஒட்டியிருந்தது.

—அண்டர் வாட்டர் ஸ்கூட்டர்தானே? என்றான் ராம்சந்த்.

ரீடா தலையசைத்தாள்.

அதை இயக்கிவிட்டு அதன் பின்புறத்தைப் பிடித்துக் கொண்டால் தண்ணீரை ஊடுருவி

இழுத்துச் செல்லும் ராம்சந்த் அறிந்திருந்தான்.
நீ இங்கே வரவேண்டிய காரணம்?
(ஆபத்தைப் பற்றி எச்சரிக்கத்தான்!)
—நாங்க இன்னும் ஜூலியைக் கண்டு பிடிக்கவில்லே என்ருன் ராம்சந்த் சாதாரணமாக.
அதைத் தொடர்ந்து நிசப்தம்.
(நீங்க தொடர்ந்து இங்கே தங்கியிருக்கிற தாலேயே அவங்க சந்தேகிக்கிருங்க. மேலே நகர்ந்து போனீங்கன்னு சந்தேகிக்கமாட்டாங்க. நான் எச்சரிக்கை கொடுக்க வந்தேன்.)
—ரொம்ப நன்றி, ரீடா! யோசிக்கிருேம்.
(நான் வரேன்.)
—காலேலே போகலாமே.
(என்னைக் கண்டுபிடிச்சுடுவாங்க. இப்பவே போகணும்.)
சட்டென்று அங்கேயே ஸாரியைக் களைந்து டைவிங் சூட்டில் தோற்றமாளுள். அச்வாலங்கை எடுத்து மாட்டிளுள். மல்லிக் தயக்கத்துடன் பார்த்திருக்க எல்லோரிடமும் விடை பெற்ருள். வெளியே போளுள்.
மல்லிக் அவளைத் தொடர, ஒரே ஒரு கணம் தயங்கி நின்ருள். விருட்டென்று ஏதோ எழுதி, அவசரமாக நீருள் குதித்தாள். ஸ்கூட்டரைப் பிடித்துத் தண்ணீரைக் கிழித்து ஓடத் தொடங்கிளுள்.
—நீங்க என்னைச் சந்தேகிக்கிறீங்க, நீங்களுமா மல்லிக்?



என்று அந்தத் துணுக்குக் காகிதத்தில் எழுதியிருந்தது. மல்லிக் துணுக்கை இறுக்கினான். கடல் வெறுமையை நோக்கினான். நுணுக்கமாகக் கண்ணில் நீர் வந்தது. துடைத்துக் கொண்டு உள்ளே போனான்.

ராம்சந்த் அந்த இரவிலும் பைனாகுலரைத் தூக்கிச் சுற்றும் ஆராய்ந்தான். அஸ்டிக்கை இயக்கிச் சுற்றுப்புறத்தில் எந்தப் படகோ வேறு எதுவுமோ இல்லை என்று நிச்சயித்துக் கொண்டான். பிறகுதான் படுக்கைக்குப் போனான்.

காலையில் எல்லோரும் எழுந்து காப்பியுடன் அதை விவாதிக்கத் தொடங்கினார்கள்.

அந்தப் பெண் சொல்வது உண்மையா?

வொய்ட்டைப் பற்றிய விவரங்களைக் கூறினான் மல்லிக். சம்பந்தசாமியைப் பற்றியும் விவரித்தான். வொய்ட்டுக்கு ஜாலியைப் பற்றித்தெரியும். சம்பந்தசாமிக்கு அதன் சார்ட்டைப் பற்றித் தெரியும். இருவரும் சேர்ந்ததில் எல்லா விஷயமும் அவர்களுக்குத் தெரிந்திருக்கும். எனவே ரீடா சொன்னதில் ஆச்சரியமில்லை. வொய்ட் வந்திருந்தால் கடலை ஆராயும் எல்லா உபகரணங்களுடனும் வந்திருப்பான். யமகாதகன்.

கோபி இந்த இடத்தில் இடைமறித்தான்.

—மல்லிக் எனக்கு ஒரு விஷயம் தெரியும், வொய்ட் தன்னைப் பெரிய எழுத்தாளர் என்று சொன்னானே, அது பொய். டில்லான் வொய்ட் என்கிற எழுத்தாளர் வேறே! அவன் போட்டோவை நான் பார்த்தாச்சு. இவன் நம்மை ஏமாத்தறான்.

—அவன் பெரிய எத்துவாளின்னு அப்பவே சொல்லிட்டேனே என்றான் மல்லிக்.

விவரங்களை ஒவ்வொரு கோணத்தில் ஆராய்ந்து விட்டு மேலும் பொறுத்துப்பார்ப்பது என்று தீர்மானித்தார்கள்.

காலை ஒன்பது மணி ஆனதும் மல்லிக்,

—நாம்ப வேணும்னு தள்ளிப் போயிடலாமா? என்றான்.

—வேண்டாம், மல்லிக். அதுதான் சந்தேகத்தை அதிகம் உண்டாக்கும். இன்னொரு விஷயம். அவங்க தூரத்திலிருந்தே நம்மைக் கவனிச்சிருக்காங்கன்னு இதுக்குள்ளே நாம்ப இருக்கிற இடத்தைக் கரெக்டா அளந்து கணக்குப் போட்டிருப்பாங்க. நாம்ப நகர்றதுனாலே பிரயோசனம் இல்லை.

எனினும் ராம்சந்த் சகஜ நிலையில் இல்லை. அடிக்கடி வெளியே வந்து சுற்றுப்புறங்களை ஆராய்ந்து கொண்டிருந்தார்.

பத்து அடித்துப் பத்து நிமிஷத்தில் அஸ்டிக் ஒரு கலக்கம் தென்பட்டது. யாரோ நெருங்கிக் கொண்டிருந்தார்கள், தண்ணீருக்குள் வழியாக!

ராம்சந்த் எச்சரிக்கை கொடுக்க எல்லோரும் உஷாரானார்கள்.

சில நிமிடங்களுக்கு எதுவும் தென்படவில்லை. பிறகு போர்ட் சைட் பக்கம் மெல்ல நீர் விம்ம, கறுப்பு உருவமாக மீண்டும் ரீடா வெளியே தலை தூக்கினாள்.

கையை அவள் உயர்த்த, ராம்சந்த் சந்தேகமுடன் பார்த்திருக்க, அவள் தயக்கமுடன் ஏணியைப் பிடித்து மேலே ஏறினாள். அவள் ஸ்கூட்டர் ஒரு நாயைப் போல் சங்கிலியில் கட்டுண்டு தண்ணீரோடு நின்றது.

ரீடா தளத்தில் குனிந்து ஏறி, பிறகு ஒரு பிராணி போல் நடந்து காபினுக்குள் போய் எல்லோரையும் அழைத்தாள்.

மீண்டும் சாரி உடுத்திக் காகிதம் பென்சில் கேட்டு வாங்கினாள்.

(மல்லிக்! அவங்க புறப்பட்டுட்டாங்க. இன்னும் ஒரு மணி நேரத்திலே இங்கே இருப்பாங்க. என்னை நீங்க நம்பலேன்னு தோணுது. ரெண்டாம் முறை சொல்லிட்டுப் போகணும்னு வந்தேன். இனிமே உங்க பாடு.)

ராம்சந்த் திகைத்தான்.

இப்போ எங்கே இருக்காங்க.

(ஆறுவது மைலிலே)

ராம்சந்த் இன்ஸ்ட்ருமெண்ட் போர்டை நோக்கி ஓடினான்.

ராடாரை இயக்கினான்.

நிஜந்தான். ஆறுவது மைலில் ஏதோ ஒன்றின் இயக்கத்தைக் காட்டியது ராடார்.

ராம்சந்த் கலக்கமுடன் திரும்பினான்.

மல்லிக், கோபி அவன் மூவரும் அடுத்த காபினுக்குள் நுழைந்தனர்.

விவாதம் தொடங்கியது. ஜாலியை அவர்கள் கண்டுபிடித்து விட்டால் என்ன செய்வது?

—கண்டுபிடிக்க முடியுமா? என்றான் மல்லிக்.

—பேதிஸ்காஃப் வந்தால் போச்சு. சுலபத்தில் கண்டு பிடிச்சுடுவாங்க!

—அநியாயம்! என்றான் மல்லிக். —ராம்சந்த்! நீங்க கிட்டத்தட்ட நாற்பதினாயிரம் செலவழித்து விட்டீங்க. அவ்வளவு கஷ்டப்பட்டுக் கண்டுபிடிச்சதை மற்றவங்களுக்கு லேசில் காட்டிக் கொடுக்கவா?

—நிச்சயம் கூடாது. ஆனா இப்போ என்ன செய்ய?

ஜாலியை மூட முடியுமா? ஜாலியை மறைக்க முடியுமா? அல்லது ஜாலியை உடனே எடுத்துப் போக முடியுமா?

பைத்தியக்கார நினைவுகளாக வந்தன.

மூவரும் நிச்சயம் எதுவும் இல்லாமல் பிரதான காபினுக்குள் வந்தார்கள்.

---

## சிறுவனின் அடம்!



நடிகர் சிவாஜியின் மகன் எம். ஜி. ஆர். ரசிகர் என்பது பழைய செய்தி. நடிகர் சிவகுமாரின் மகன் ரஜனிகாந்தின் விசிறி என்பது இன்றைய செய்தி. 'பில்லா' படத்திலுள்ள ''மை நேம் இஸ் பில்லா'' என்ற பாடலைக் கேட்டால் போதும், உடனே தனது அரைநிஜாரைக் கழற்றிவிட்டு முழு பேண்ட் அணிந்து கொண்டு ஆடித் தீரவேண்டும் என்று அடம் பிடிக்கிறான். 'இவனை என்னதான் பண்ணுவது?' என்கிறார் சிவகுமார்!

- ருக்மிணி ராமச்சந்திரன்

ரீ... ஆவலாகக் காத்துக் கொண்டிருந் தாள். அவர்கள் வந்ததும் ஒரு சீட்டை நீட்டினுள்.

(நீங்கள் என்னைச் சநதேகிப்பதாக ஊகிக் கிறேர். மீண்டும் உறுதி சொல்ல நினைக் கிறேன். மல்லிக்! என்னை நம்புங்கள். நான் உதவி புரிய முடியலாம்.)

மல்லிக் ரீடாவைப் பார்த்தான். அவள் கண் ஒரு வானவெளி. வெகு தூரம் வரை நிர்மலமாக இருந்தது. ஸ்படிகமான தெளிவு. நிச்சயம் இவளிடம் கள்ளம் இல்லை.

—ரீடா! என்ருன் மல்லிக் தழைந்து. —உன்னை நம்பறேன். நாங்க ஜூலியைக் கண்டு பிடிச்சுட்டோம்.

(தங்கம் வெள்ளி இருந்ததா?

—இருந்தது. இது அநியாயமா அந்நிய நாட்டான் கையிலே போகக் கூடாது. கப்பல் பிரிட்டிஷ் கப்பல். தங்கத்தில் பாங்க் ஆப் இங்கிலாண்ட் முத்திரை இருக்கு. இந்த விஷயங்கள் வெளியிலே தெரிஞ்சா அது ஒரு சர்வ தேச விவகாரமாகப் போயிடும். இங்கிலாந்தே அந்தத் தங்கம் முழுக்கையும் தன் சொத்துன்னு உரிமை கொண்டாடும். அதனுலே ரகசியமா இதை நாமே, இந்தி யர்களேதான் அடைந்து கொள்ள வேண் டும். அதுக்கு நீ உதவி செஞ்சா உபகாரமா இருக்கும். உங்க அப்பா கிட்டப் பேசி....

(அந்த நிலை கடந்தாச்சு. இப்போ அப்பாவுக்குக் கூட அந்தத் தங்கம் கிடைக் காது. அக்ரிமெண்ட் எழுதிக் கொடுத் திருக்கார். லட்ச ருபாய்தான் கிடைக்கும்.)

—அப்போ வேறெ என்ன செய்யலாம், ரீடா!

ரீடா யோசித்தாள்.

(ஜூலி எங்கே இருக்கா? எப்படி இருக் கான்னு சொல்ல முடியுமா?)

ராம்சந்த் இது வரை உரையாடலைப் பேசாமல் கேட்டுக் கொண்டிருந்தான்.

மல்லிக்கிற்குப் பயம். ராம்சந்தின் அனு மதி இல்லாமல் ரீடாவிடம் எல்லாம் கூறி விட்டோமே என்று நினைத்தான்.

இப்போது அவன் என்ன சொல்லப் போகி ருன் என்று ராம்சந்தை ஏறிட்டுப் பார்த் தான்.

ராம்சந்த் மௌனமாக இருந்தான். பிறகு அவன் ஒரு முடிவுக்கு வந்து விட்டது போல் ரீடாவுக்குச் சமிக்ஞை காட்டினுன்.

எல்லோரும் எழுந்தார்கள்.

முப்பு காபினுக்குள் நுழைந்தார்கள்.

தான் தயார் பண்ணியிருந்த வரை படத்தை ராம்சந்த் அவளுக்குக் காண் பித்தான்.

ஜூலி கிடக்கும் இடத்தின் வரைபடம் அது.

அவள் ஸ்டார்போர்ட் ஸைடில் சாய்ந் திருப்பதையும், அந்த இடம் ஒரு பள்ளத் தின் சரிவில் இருப்பதையும் அந்தப் படம் காட்டியது.

(கடல் தரை இங்கே எப்படி இருக்கு? தூசியா, பவழப் பாறையா?)

தூசி! சில இடங்களில் பவழப் பாறை!

(அப்போ காரியம் எளிசு!)

—எப்படி?



**கார் ஓட்ட.**

கதை வசனகர்த்த நடிகர் பாக்யராஜுக்கு கார் ஓட்டத் தெரி யாது. இப்பொழுதுதான், கற்றுக் கொண்டு வருகிருர். யாரிடம் தெரி யுமா? தம் வருங்கால மனைவி பிரவீணுவிடம்! - அசோக்

(நான் எக்ஸ்ப்ளோஸிவ் கொண்டு வந் திருக்கேன்.)

ராம்சந்த் ஆச்சரியத்துடன் கண்ணை உயர்த்தினுர்.

(நெருக்கடி. எதிர்பார்த்துக் கொண்டுவந் திருக்கேன். வெள்ளைக்காரங்க சொத்து இது!)

—அத வச்சு என்ன செய்ய முடியும்?

(ஜூலிக்கு முன்னுலே எக்ஸ்ப்ளோஸிவ்வை வெடிச்சிடுவோம். தூசி எழும்பிடும். ஒரு நாள் முழுதும் அப்படியே மிதந்துக்கிட்டே நிற்கும். யாரும் எதையும் பார்க்க முடி யாது. எவ்வளவு பெரிய வெளிச்சமும் உதவி செய்யாது.)

ராம்சந்த் ஆச்சரியப்பட்டான். அவள் திட்டம் சரியானதாகத் தோன்றியது. தூசி யைக் கிளப்பி ஜூலியை மறைத்துவிட வேண்டியது.

—ஓகே. என்ருன் அவன்

வொய்ட்டின் நெப்ட்யூன் படகு நான் காவது மைலில் தட்டுப்படும் வரை காத் திருந்தார்கள்.

பிறகு ரீடாவே ஸ்கூட்டரில் ஏறிச் சென்று முதல் எக்ஸ்ப்போஸிவ்வை வைத்துவிட்டு வந்தாள்.

அவள் வந்த சில நிமிடங்களில் எக்கோ ஸவுண்டரில் வெடிக்கும் சப்தம் கேட்டது.

பிறகு ராம்சந்தும் மல்லிக்கும் தண்ணீரில் மூழ்கிப் போய்ப் பார்க்க,

அந்த வெடிகுண்டு வெகு தூரத்துக்குக் கடலைக் கலக்கி யிருந்தது. எங்கும் தூசி எழுந்து திரை போட்டாற் போல் நின்றது.

அவர்கள் திரும்பி வந்த பிறகு நெப்ட்டி யூனும் மற்ருெரு படகும் மூன்று மைல் தொலைவில் வந்துவிட்டதை அறிந்தார்கள்.

ரீடா பரபரப்பாகி இருந்தாள்.

(வெடி குண்டுன்னு புரிஞ்சிருப்பாங்க. இனி பக்கத்தில் வர யோசிப்பாங்க. ஆனு வேறே முறைகளை உபயோகிப்பாங்க.)

என்ன முறை?

(பேதிஸ்காஃப் உபயோகிப்பாங்க. இல் லாட்டி ஸ்கூட்டர்லே இதுவரை வந்து ஆராய்ச்சி செய்வாங்க.)

—தூசி இருக்கும்போது முடியுமா?

(இருக்கிறவரை முடியாது.)

பிறகு ரீடா எழுந்து ஆராய்கிறேன் என்று சைகை காட்டிவிட்டுக் கீழே இறங்கினுள். நீருள் மறைந்தாள்.

அரை மணிக்குப் பிறகு திரும்பி வந்தாள்.

(அவங்க பேதிஸ்காஃப்லேதான் தேட ருங்க. சக்தி வாய்ந்த வெளிச்சம் போட ருங்க. அரை மைலுக்கு அந்த வெளிச்சம் வருது!)

மல்லிக்கும் ராம்சந்தும் திடுக்கிட்டார்கள்.

மல்லிக்கிற்கு உடனே ஒரு சந்தேகம்.

—ரீடா! தூசி மறைக்கும்னு சொன்னியே!

(சொன்னேன். ஆனு அதை ஊடுருவி அப்படி வருவாங்கன்னு எதிர்பார்க்கல்லே தூசியினுேட பரவலைக் குறைக்க ஏதோ கெமிகல் உபயோகிக்கிருப்போல இருக்கு. எம்மேலே ஏதோ எரிச்சல் தெரியுது)

மல்லிக்கிற்கு முதலில் அந்தப் பதற்றம் பற்றியது. அதனுடன் அந்தச் சந்தேகம். ரீடா சொல்வது மெய்தானு? அல்லது அவள் ஒரு உளவு எண்ணத்துடன் ஒத்துழைக்கிருளா? இப்போது ஏதாவது சூது செய்கிருளா?

(மல்லிக்! நீங்க ஏன் அப்படிப் பார்க்கிறீங்க? நான் சொல்வது நிஜம். நம்புங்க.)

—ரீடா! என்று கத்தினுன் அவன். நீ குழந்தையையும் கிள்ளித் தொட்டிலையும் ஆட்டறியா? நீ உண்மையில் ஒரு பெண்ணு?

கூச்சலிட்டு அவன் ரீடாவை நோக்கிப் பாய்ந்தான். அவள் கழுத்தில் கையை வைத்து வெறியுடன் அமிழ்த்தினுன்.

அவள் வலியால் கத்த, ராம்சந்தும் கோபியும் ஓடி வந்தார்கள். மல்லிக்கைப் பலவந்தமாக வெளியே இழுத்தார்கள்.

ரீடா விம்மிய மூச்சுக்களை விட்டாள். கண்கள் கலங்கியிருந்தன. நீர் தாரை தாரையாக வழிந்தது.

பேச முடியாததால் எக்கியவாறு இடைவெளியில்லாத சத்தங்களை எழுப்பினுள். தேம்பிக் கொண்டு அவள் தாபங்கள் வெளி வருகின்றன என்று நன்ருகத் தெரிந்தது. முகம் குனிந்து அருவியாக அழுதாள்.

அவளது உடல் குலுங்கிப் போடுவதும், மூச்சு முட்டிக் கேவுவதும் எல்லோரையும் உருக்கிவிட்டன.

ராம்சந்த் அஸ்டிக்கை இயக்கிப் பார்க்க ஒரு மைல் தூரத்தில் கடல் அடியில் பல 'ஏதோக்கள்' சஞ்சாரம் இடுவதைக் கண்டான்.

மல்லிச்கிடம் வந்து, — மல்லிக் நீ செய்தது தவறு. பெரிய தவறு. அவள் கபடில்லாதவள்னு நிச்சயம் தெரியறது. அவள் சொன்னதை நிரூபணம் பண்ணிப் பார்த்துட்டேன் என்ருன்.

மல்லிக்கிற்கு அந்தச் சோகம் எப்படி வந்தது தெரியவில்லை.

குற்றத்தை உணர்ந்தவன் போல் ரீடா அருகில் உட்கார்ந்து, —ரீடா, ரீடா! என்ருன். அவளைச் சமாதானப்படுத்த முயன்ருன்.

அரை மணிக்குப் பிறகு அவள் ஆசுவாசமானுள். மல்லிக் அவளிடம் —மன்னித்து விடு என்று பலமுறை கூறினுன்.

ராம்சந்த், அஸ்டிக்கில் ஈடுபட்டிருந்தவன், —மல்லிக்! நாம் இருக்கும் திசை நோக்கித் தண்ணீர் அடி வழியாகச் சில இயக்கங்கள் வருகின்றன என்ருன்.

ரீடாதான் துள்ளி எழுந்தாள்.

நேராக அஸ்டிக்கை நோக்கி ஓடினுள். அந்த கிராப் படத்தைப் பார்த்ததும் திடுக்கிட்டாள்.

மல்லிக்கை நோக்கித் திரும்பினுள். -என்னை நம்புவீர்களா? என்ருள் சைகை செய்து.

—நிச்சயம் என்ருன் மல்லிக், இரங்கிய குரலுடன்.

(ஜூலியின் வரை படம் எங்கே?)

வரைபடத்தை மீண்டும் கொண்டு வந்தார்கள்.

(ஜூலி இந்தப் பள்ளத்தின் அருகில் இருக்கிறது என்றீர்களே, பள்ளத்தின் ஆழம் என்ன?)

—மூணு மைல்.

ரீடாவின் பார்வை விரிந்தது.

யோசித்தாள்.

(ஒரே ஒரு வழி! எக்ஸ்ப்ளோஸிவ் வைத்து ஜூலியை அந்தப் பள்ளத்தில் தள்ளி விடவேண்டும்.)

மல்லிக் திகைப்புடன் பார்த்தான்.

—பிரயோசனம்?

(ஜூலி அவர்களுக்குக் கிடைக்க மாட்டாள்.)

—நமக்கும் கிடைக்காதே!

(மல்லிக்! முதலில் நம்ம நோக்கம் அவர்களுக்குக் கிடைக்கக் கூடாது என்பதுதான்.)

எல்லோரும் ஒருவரை யொருவர் பார்த்தார்கள்.

அஸ்டிக் பீப் பீப் என்று குரல் கொடுத்தது; இரண்டு மைலில் அந்த 'ஏதோக்கள்' வந்து விட்டதை உணர்த்தியது.

—மல்லிக்! என்ன செய்யச் சொல்றே! அவங்க வந்துடுவாங்க. பார்த்துடுவாங்க!

அவன் ரீடாவைப் பார்த்தான்.

(கம் ஆன் மல்லிக்! அதுதான் வழி. ஜூலியைப் பள்ளத்துள் தள்ளிவிடுவோம்.)

—பள்ளத்துள் மட்டும் அவர்கள் போய்ப் பார்க்க மாட்டார்களா?

—போதிஸ்காஃப் அவ்வளவு ஆழத்தில் இறங்க முடியாது. அப்படி இறங்க ஸ்பெஷல் எக்விப்மெண்ட் வேணும்.

எல்லோரும் திகைத்தார்கள்.

அடுத்து அஸ்டிக் பீப் பீப் என்றதும் மல்லிக் ஓகே என்க, ராம்சந்தும் ஓகே என்ருன்.

(நான் எட்டு எக்ஸ்ப்ளோஸிவ் வைக்கிறேன். நீங்க அதுக்குள்ளே ரூபாவை ஒரு பர்லாங் கிழக்கே கொண்டு போங்க.)

—ஓகே.

ரீடா கடலுக்குள் இறங்கினுள்.

கிட்டத்தட்ட 40 நிமிடங்களுக்குப் பிறகு திரும்பி வந்தாள்.

அதற்குள் ரூபா ஒரு பர்லாங் தூரம் போயிருந்தது.

அவள் ஓ.கே என்று சைகை காட்ட சில நிமிடங்களுக்குப் பிறகு கடல் நீர் மேலே எழும்பி அருவி போல் கீழே குதித்தது.

அது ஒரு கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. ஒரே பிரளயமாகக் கடல் கொந்தளித்தது.

மேலும் அரை மணி நழுவ விட்டு, பிறகு ரூபாவை முதலில் இருந்த இடத்துக்குக் கொணர்ந்தார்கள்.

அஸ்டிக்கை ராம்சந்த் இயக்கிப் பார்க்க ஒரே நிர்மலம். பள்ளம் தெரிந்ததே தவிர, ஜூலி இருந்த இடம் நிர்மலமாக இருந்தது.

பவழப் பாறை நுனியிலிருந்து அது முழுதுமாக அந்தப் பள்ளத்தில் கவிழ்ந்

திருக்க வேண்டும். அங்கிருந்த மூவரும் கண்ணீர் சிந்தினுர்கள். மல்லிக்தான் அதிகம் தேம்பிக் கொண்டிருந்தான்.

—மல்லிக்! அழாதே! ஜூலி இப்போது மூணு மைல் கீழே போயிட்டாள். சீக்கிரம் அமெரிக்கா போயி இவ்வளவு ஆழத்திலிருந்து அவளை எடுக்க வேண்டியதற்கு உண்டான டெக்னிக்குகளைக் கத்துக்கிட்டு வருவோம். எக்விப்மெண்ட்களையும் கொண்டு வருவோம். அப்புறம் சாவகாசமாக ஜூலியை எடுப்போம். பயப்படாதே!

அவன் சொன்னது ஒரு நம்பிக்கை போலத் தோன்றியது.

ஒரே நம்பிக்கை அதுதான்.

மல்லிக் கண்ணீரைத் துடைத்தான்.

ராம்சந்த் அதற்குள் கேபினில் உட்கார்ந்தான். விசைகளை ஒவ்வொன்ருக இயக்க, ரூபா நங்கூரங்களைக் கழற்றிக் கொண்டு, மெள்ள நகர்ந்தது. பரந்த கடல் வெளியில் நுரைக் கிழிசலை ஏற்படுத்திக் கொண்டு ஓட ஆரம்பித்தது.

கரையில் இறங்கும்போது ரீடா இறங்கினுள். ஸ்கூட்டரை ராம்சந்திடம் மகிழ்ச்சியுடன் வெகுமதி அளித்துவிட்டு மல்லிக்கிடம் வந்தாள். அவசரமாகத் தன் இடுப்பிலிருந்து துணுக்குப் பேப்பரை எடுத்துக் கொடுத்தாள்.

(உங்களுக்கு எப்போது முழு நம்பிக்கையும் விசுவாசமும் என்மீது பிறக்கிறதோ அப்போது என்னைப் பார்க்க வாருங்கள்.)

கொடுத்துவிட்டு நிற்காமலே போனுள்.

மல்லிக், சம்பகா, கோபி ஆகியோரின் விசுவாசம் ராம்சந்துக்குத் தெரிந்து விட்டதால், அவர்களைத் தனது பரந்த நிறுவனத்தில் நிரந்தரமாக ஏற்றுக்கொண்டான்.

அவர்கள் தங்கக் கண்டுபிடிப்புகளை அவன் தனக்குப் பங்கு முதலீடாகச் சேர்த்துக் கொண்டான்.

விரைவில் ராம்சந்த் அவர்களை அமெரிக்காவுக்கு அழைத்துப் போய் வெகு ஆழமீட்சிக்கான டெக்னிக்குகளைக் கற்று வருவான். அதுவரை ஜூலி கடலுக்குள்தான் இருப்பாள்.

சம்பகாவும் மல்லிக்கும் இயல்பான வெட்கத்தால் ஒருவரிடம் ஒருவர் பேசாமல் முதலில் பிரிய,

மறு வாரமே மல்லிக் மனம் பொறுமல் கனிநாகலாபுரம் கடற்கரைக்கு வந்தான்.

அவன் வருகை அவளுக்கு எவ்வளவு மகிழ்ச்சி கொடுத்தது!

அவன் எதற்காக அங்கே வந்திருக்கிருன் என்பதை அவள் ஊகித்துவிட,

அவள் ஏன் அந்த கடற்கரைக்கு வந்திருக்கிருள் என்பதை அவனும் ஊகித்துவிட்டான்.

இருவரும் ஒருவரை யொருவர் தேடித்தான்.

—சம்பகா! என்று அவன் அழைத்து அவளை நெருங்க,

அவள் வெட்கத்துடன் மேலும் மேலும் நடந்து கொண்டே போக,

முடிவில் கனிநாகலாபுரீசுவரர் கோவிலில் ஏறியபோது அவன் அவள் கையைப் பிடிக்க,

அது என்ன சுவர்க்கமாக மாறியது அவர்களுக்கு!

**(முற்றும்)**

# நட்சத்திர வடிவம் பரிசுத்திட்டம்-3 போட்டி முடிவு



ரஜனிகாந்தின் முழு உருவத்தையும் சரியானபடி ஒட்டி அனுப்பியவர்கள் இரண்டே பேர்கள் தான்.

1. குமாரி விஜயலக்ஷ்மி, மே. பா. திரு வி. கண்ணன், 12, காசி விசுவநாதர் கோயில் தெரு, மேற்கு மாம்பலம் சென்னை-33.

2. க. திலகுமார், 4/25 அள. அரு. அரு. வீதி, காளையார் கோயில் 623551

மிஞ்சும் தொகை ரூ. 200/-

ஜாக்பாட்டுக்கு (11வது போட்டி) சேர்ந்துள்ள மொத்த தொகை ரூ. 475/-

ஜாக்பாட்டுக்கு சேர்ந்துள்ள புகைப் படங்கள் 19.

ஆசிரியர்: **கல்கி**

புகைப்படம்: **ஏ. சுந்தரம்**